# கர்ணனின் கதை



பாலகுமாரன்

GOODWILL'S

# கர்ணனின் கதை

## பாலகுமாரன்

**விசா பப்ளிகேஷன்ஸ்**

**சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்**

பழைய எண் : 28 புது எண்.13, சிவப்பிரகாசம் சாலை,

தி.நகர், சென்னை–600 017.

தொலைபேசி : 2434 2899, 24327696

பேக்ஸ் எண் : 91–44–24341559

| | |
|---|---|
| முதற் பதிப்பு | டிசம்பர், 2002 |
| இரண்டாம் பதிப்பு | டிசம்பர், 2006 |
| மூன்றாம் பதிப்பு | பிப்ரவரி, 2011 |
| நான்காம் பதிப்பு | ஏப்ரல், 2013 |


உரிமை : ஆசிரியருக்கு

**விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

---

**விலை ரூ.100/-**

*சமர்ப்பணம்*

டால்மியாபுரம்
ஈஸ்வரிக்கும்
ராமசந்திரனுக்கும்

**KARNANIN KADHAI : by BALAKUMARAN**

| | | |
|---|---|---|
| Fourth Edition | : | April, 2013 |
| Paper used | : | 11.6 Cream Wove |
| Pages | : | 224 |
| Typeset by | : | Adyar Students Xerox, Bookwork Division |
| Printed at | | Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166 |

Available at : **THIRUMAGAL NILAYAM**
Sucons Appartments,
First Floor, No.13, Sivaprakasam treet,
T.nagar, Chennai - 600 017.
Phone : 044 - 24342899, 24327696
Fax : 91 - 44 - 24341559
E-mail : enquiry@thirumagalnilayam.com
website : www.thirumagalnilayam.com

Chennai
21.05.2002.

அன்புள்ள அப்பாவிற்கு,

நமஸ்காரம். நான் ஸ்ரீராம் S. நான் தற்போது C.A. படித்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறது. முன்பிற்கு இப்போது தேவலையா.

சகோதரிக்கு திருமணம் முடிந்தது பற்றி செய்தி தாளிலும், நாவல் வாயிலாகவும் தெரிந்து கொண்டேன். மிகுந்த சந்தோஷம். அவர்களுக்கு என்னுடைய பணிவான, அன்பான வாழ்த்துக்கள்.

அப்பா, நீண்ட நாட்களாக கடிதம் தங்களுக்கு எழுதவேண்டும் என்று ஆசை. ஆயினும் முன் அனுபவம் இல்லாததாலும், கூச்சமாகவும் சிறிது பயமாகவும் இருந்ததால் இதுவரை முடியவில்லை. இப்போது தங்களால் நான் பெற்ற நன்மைகளை எப்படியாவது தங்களுக்கு தெரிவித்துவிடவேண்டும் என்கிற பெரும் ஆவலில் இக்கடிதம் எழுதுகிறேன்.

தங்கள் எழுத்துக்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக வாசித்து வருகிறேன். அவை என்னுள் ஒவ்வொரு முறையும் வெகு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. வாழ்க்கையில் தெளிவு இல்லாமல், goals இருந்தும் அதை அடைய முடியாமல் இருந்த எனக்கு உங்கள் எழுத்துக்கள் ஒரு Boon வரப்பிரசாதம்.

பொதுவாக நான் எந்தவொரு எழுத்துக்களையும் விரும்பி படித்ததில்லை. ஓரிருமுறை அவ்வாறு வாய்ப்பு ஏற்பட்டும் அதை நான் விரும்பி தொடர்ந்ததில்லை.

ஆனால் அப்பா, உங்கள் எழுத்துக்கள், என்னுள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. என் யௌவன திமிரை அடக்கின. என் சிறிய கோபங்களையும் கட்டுப்படுத்தின. எனக்குள் வாழ்க்கை, வெற்றி இவை பற்றிய தெளிவும், தோழமை, காதல், அன்பு இவை பற்றிய உண்மைகளையும், கடவுள் பற்றியும், வேதம், வேதாந்தம், மந்திர

21st MAR 2002
DOHA-QATAR

உயர்திரு. பாலகுமாரன் அவர்களுக்கு.

வணக்கம். என்னுடைய பெயர் T.SUJATHA. நான் ஒரு Computer Engineer. எனது கணவர் T. SUDHAKAR, Planning Engineerஆக Qatar-Snamprogettiல் வேலை பார்த்து வருகிறார். எங்களுக்கு திருமணம் ஆகி 1 1/2 வருடங்கள் ஆகிறது. குழந்தை இல்லை. நானும் இப்போது என் கணவருடன் Qatarல் தங்கி உள்ளேன். எனது கணவருக்கு October-2002ல் இந்த Contractமுடிகிறது. ஆனால் July-2002-ல், 20 நாட்கள் விடுமுறையில் இந்தியா வருகிறார்.

திருமணத்திற்கு முன் நான் மிகவும் busyயாக இருந்தேன். நான் கல்லூரியில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தேன். நிறைய Question banks-computer science studentsக்காக எழுதியுள்ளேன்.

அதனால் எனக்கு தெரிந்தவர்கள் பலர், பாலகுமாரன் அவர்களின் கதைகள் படிக்க நிறைய அறிவு + பொறுமை வேண்டும் என்பார்கள். அறிவு உண்டு. ஆனால் பொறுமை இல்லையே... மற்றும் நேரமும் இல்லை. நாங்கள் திருச்சியில் வசிக்கிறோம். தாய் வீடு சென்னை.

ஆனால் திருமணத்திற்குப் பின் நேர் எதிர். எனது கணவர் உங்களின் ரசிகன் என்பதை விட காதலன் என்றே சொல்லலாம். பாலைவனங்களிலும் (Saudi Arabia), குளிர்ப் பிரதேசங்களிலும் (Uzbekistan) உங்களுடைய கதைகள் தான் அவருக்கு சுவாசம்... உயிர்நாடி... வாழ்க்கை... வாரத்தில் ஒருநாள் தான் விடுமுறை. அந்த விடுமுறைக்காக காத்திருப்பாராம்... தங்களின் கதைகளைப் படிப்பதற்காக He is a tender-hearted person.சோர்ந்திருக்கும் போதெல்லாம் தங்களின் கதைகள் தான் அவருக்கு Tonic.கேள்வி பதில்கள் பிடிக்கும்.

திருமணத்திற்குப் பின் நானும் தங்களின் பரம ரசிகையாகி விட்டேன். எனது கணவரிடம் தங்களின் புத்தகங்கள் ஓரளவிற்கு

உண்டு. அதையெல்லாம் படிக்க ஆரம்பித்தேன். அதில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு கதை "பந்தயப்புறா." நானும் அதில் வரும் அந்தப் பெண்ணின் character-ம் கிட்டத்தட்ட ஒன்றே. எனக்குள் சாதிக்க வேண்டும்... படித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே இருக்கிறது. ஆனால் எனக்கு கோவம் + ஆத்திரம் + அழுகை அதிகம்... மிக அதிகம்... தங்களுடைய கதைகள் என்னை மாற்றிக் கொண்டுள்ளது. மனிதன் என்றால் மாற்றம் ஒரு நேரத்தில் அவசியமாகிறது. என்னைப் பொருத்தவரை மாற்றங்கள், சாதாரண மானுடர்களை மண்ணின் மாபெரும் சக்திகளாக, மைந்தர்களாக மாற்றிவிடும்.

March 2002 முதல் வாரத்தில் துபாய் சென்று வந்தேன். அங்கே என்னுடைய அண்ணன், தம்பி இருவரும் உள்ளனர். எனது அண்ணன் தங்களின் கதைகளை விரும்பிப்படிப்பான். அவன் தங்களுடைய "கல்லூரிப்பூக்கள்" நாவலை எனது கணவருக்கு பரிசாக அளித்தான். அதுவும் தமிழ்ப் புத்தகங்கள் கிடைப்பது அரிது. ஆனால் Dubai அப்படியல்ல. நம் இந்தியாவைப் போன்றே உள்ளது. Dubai வீதிகளில் எனது கணவருக்காக... தங்களின் books தேடி அலைந்தது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. இப்படியொரு பாசமா??? என வினவினர்...

ஆனால் புத்தகங்கள் தான் கிடைக்கவில்லை. மிகவும் மன வருத்தமடைந்தேன். எனது அண்ணன் இந்தியாவிலிருந்து வரும் தனது நண்பனிடம் கூறி, புத்தகங்கள் வாங்கித் தருகிறேன் என்றான். மனம் ஏனோ ஒப்பவில்லை. ஒருநாள் எனது அண்ணன் Roomக்கு சென்ற போது எனக்கு ஒரு புதையல் கிடைத்தது. ஆம்... தங்களின் "முந்தானை ஆயுதம்" புத்தகம் கிடைத்தது. என்னுடைய மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. கண்ணீரே வந்து விட்டது. அந்த புத்தகத்தை படித்த போது முதலிரண்டு பக்கங்கள்... நான் அழுதுவிட்டேன். புன்னை நல்லூர் மாரியம்மனின் பரம பக்தை. அவளை நாடினால், நாடிய காரியம் கைகூடிய பிறகு தான் தன்னிடம்

மீண்டும் அழைப்பாள். நானும் அப்படியொரு வேண்டுதலுக்காக காத்திருக்கிறேன்...

திருமணத்திற்குப்பின் எங்கு சென்றாலும். புத்தகக்கடைக்குதான் எனது கண்கள் அலைபாயும்... தங்களின் புத்தகங்களுக்காக... எனது கணவர் July 2002ல் இந்தியா வருகிறார். அப்போது தங்களைப் பார்க்க அனுமதி கிடைக்குமா? எனது கணவருக்காக நான் ஏதேனும் செய்ய வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை. தங்களின் Appointment கிடைக்குமா??? தங்களைப் பார்த்துவிட்டால் போதும். எனது கணவர் மறைந்த திரு. நடிகர்திலகம் சிவாஜிகணேசனின் தீவிர பக்தன் என்றே சொல்லலாம். இறப்பதற்குள் ஒரு முறையாவது அவரைப்பார்த்து விடவேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் போய்விட்டது. அப்போது அவர் Qatar-ல் இருந்தார். Phone-ல் கிட்டத்தட்ட 10minutes அழுதார். எனது கணவருக்கு கலாரசனை மிகவும் அதிகம்...

தங்களை ஒரு முறை பார்க்க அனுமதி அளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு தங்களின் விலாசம் தெரியாததால் திருமகள் நிலைய முகவரிக்கு எழுதுகிறேன். முகவரி என்றதும், எனக்கு தங்களின் முகவரி பட வசனங்கள் தான் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தப் படத்தை 10முறை பார்த்துவிட்டேன். கிட்டத்தட்ட எனது கணவரும், அஜித் போலத்தான். குடும்பத்தின் மேல் அப்படியொரு பாசம். எனது மாமன், மாமி எனது கணவருக்காக தங்களுடைய புத்தகங்களுக்காக கடை கடையாக ஏறி இறங்கியிருக் கிறார்கள்... இப்போது நான்... எனது கணவர் காட்சிகளை சித்தரிப்பதில் புத்திசாலி...

நான் May 2002 இந்தியா திரும்புகிறேன். அப்போது தங்களை பார்க்க எனக்கு அனுமதி கிடைக்குமா? தங்களுடைய முகவரியை எனக்கு எழுத முடியுமா? நான் தங்களை ஓரிருமுறை T.Nagar, Venkatnarayana கோவிலில் பார்த்துள்ளேன். எனக்கும் Narayananக்கும் சண்டை போடும் அளவிற்கு நெருங்கிய நட்பு. உரிமையுள்ளவர்களிடம் தானே சண்டை போட முடியும்... தங்களின்

மகள். எனது தோழியுடன் (Anitha) Computers class-ORCHID-ல் படித்ததாக கூறியுள்ளாள். தங்களைக் காணும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறேன். எனது கணவர் Qatarல் தங்களின் புத்தகங்களை படிக்க கூட மாட்டார்... பார்த்துக் கொண்டேயிருப்பார்... கேட்டால்... படித்தால் முடிந்துவிடும். பிறகு புத்தகத்திற்கு எங்கே செல்வது என ஒரு நாளைக்கு ஒரு பக்கத்திற்கு மேல் படிக்க மாட்டார்.

எனது கணவர் தங்களின் சக்ரவாஹம் கதையில் வரும் துக்காராம் Character-ன் 100% பிரதி பிம்பம். தங்களின் பதில் மடல் கிடைக்கும் என்ற பேராசை + நம்பிக்கையுடன் இக்கடிதத்தை முடிக்கிறேன். கோவிலுக்கு சென்று வரம் வேண்டினால், கடவுளுக்கு தெரியுமல்லவா... நம்மை எப்போது அருள் பாலிக்க வேண்டுமென்று... கிடைக்கும் வரை வேண்டுவது தவம் என்றால்... என்னுடைய கடிதமும் ஒரு தவம்தான். மாத நாவல்களும் நிறைய படித்துள்ளேன்.

* * *

ஜபம், தியானம் இவை பற்றிய ஒரு முழுமையான வேற்று பாதையையும் உருவாக்கின.

அப்பா, இன்று என் வாழ்க்கை செம்மையானதாக மாற நீங்கள் காரணம், உங்கள் மேலான எழுத்துக்கள் காரணம். Spiritual ஆகவும், ஒரு தனி மனிதனுக்கும் வேணும்ங்கிற (லௌகீக வாழ்க்கையில் அத்தனை வாழ்க்கை முறைகளையும்), ஒழுக்கங்களையும் கற்றுக் கொடுத்துள்ளன.

நான் இப்போது நல்ல மகனாக, நல்ல சகோதரனாக, நல்ல தோழனாக, நல்ல மாணவனாக, மிக நல்ல மனிதனாக வாழ நீங்களும் தங்கள் எழுத்துக்களுமே காரணம். இவை எனக்குள் மண்டிக்கிடந்த அழுக்குகளை சுத்தம் செய்துவிட்டன. இன்னும் நான் செம்மையடைய இவைகளை தொடர்ந்து வாசிப்பேன்.

அப்பா, இன்னுமொரு விஷயம், நீங்கள் கூறியபடி, திரு. ஜெயகோபால் மாஸ்டர் அவர்களிடம் Poorna Yoga கற்றுக் கொண்டேன். இதில் பிரதம ஸிபரம் (Prathma Shibaram) என்கிற முதல் நிலை யோகா கற்று, தினமும் பயிற்சி செய்து வருகிறேன். இதில் குறிப்பாக Surya namshkar, Pranayama (nadi sudhi and kapalapathi), yoga nidhra போன்றவை மிக, மிக அற்புதமான பயனளிப்பதாக உள்ளன. நீங்கள் கூறியதுபோல் இதை தினமும் பிராக்டீஸ் செய்து வர மிக அற்புதமான பலன்களை தருகின்றன. உடம்பும், மனதும் inter-related என்று நீங்கள் கூறுவது, இந்த கோர்ஸில் (Course) தெள்ளத் தெளிவாக திரு. ஜெயகோபால் மாஸ்டர் புரிய வைத்துவிட்டார். Practical ஆக இதை தினமும் செய்ய உடம்பு புத்துணர்ச்சி பெற்று, மனதும் லேசாகி, Mindம் fresh ஆக உள்ளது. செயலாற்றும் திறன் அதிகரிக்கிறது. இவை நான் என்னுள் கண்ட மாறுதல்கள்.

அதுபோல், அப்பா, நான் சில மந்திர ஜபம் செய்து வருகிறேன். ஆனால் முறையாக யாரிடமும் கற்றுக் கொள்ளவில்லை. காயத்ரி ஜபம்

மட்டும் எனது நண்பர் ஒருவர் கற்றுக்கொடுத்தார். நீங்கள் அடிக்கடி Mention செய்யும் ஸ்ரீமஹாகணபதி மந்திரம், ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி மந்திரம், ஸ்ரீவித்யா கணபதி மந்திரம் இவைகளை கற்றுக்கொள்ளவும், தினமும் பிராக்டீஸ் செய்யவும் ஆசை. நான் எனக்கு தெரிந்தவரை முயற்சி செய்து பார்த்தேன். யாரிடம் கற்றுக்கொள்வது என்பது தெரியவில்லை. இன்னும் கூட யார் கற்றுக் கொடுக்கிறார்கள் என்று தேடிப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தங்களை நேரில் பார்க்கவும், தங்களின் மேலான ஆஸிர்வாதம் பெறவும் மிகுந்த ஆசையாக உள்ளது.

My love filled humble pranams to you.

With love<br>
Your son<br>
S. Sriram

## திரு . பாலகுமாரன் அவர்களுக்கு...

உங்கள் கால்களில் விழுந்து மானசீகமாக நமஸ்கரிக்க வேண்டும். சிலிர்த்துப் போகிறது. உங்கள் எழுத்துக்களில் மிகப்பெரிய தெய்வீகத்தன்மை வந்துவிட்டது. மந்திரம் போல் இருக்கிறது வார்த்தைகள்

கூடு... படித்தவுடன் இப்படியெல்லாம் தோன்றுகிறது. தியானத்தில் நீண்ட நேரம் உட்காரும் போது ஏற்படும் பரவசமும் அமைதியும் கூடு படித்த போதும் ஏற்பட்டது.

எவ்வளவு பெரிய பொறுப்போடு எழுதப்பட்ட நாவல் அது. இந்த தேசத்தின் மீது உங்களுக்கு உள்ள மிகப்பெரிய அக்கறையை ஆதங்கத்தோடு எழுதியிருக்கிறீர்கள். சங்கரர் போல ஏதாவது ஒரு ஆன்மா இங்கும் கூடு பாயாதா என நீங்கள் ஏங்கியிருப்பது புரிகிறது.

நல்லவனாகவே எல்லோரையும் இருக்கச் சொல்கிறீர்கள். கெஞ்சுகிறீர்கள். கட்டளை இடுகிறீர்கள். கருணையோடு கேட்கிறீர்கள். பெருமையாக இருக்கிறது இப்படியொரு அக்கறையான, பொறுப்பான எழுத்தாளர் இந்த சமூகத்திற்கு கிடைத்திருப்பது எங்கள் பாக்கியம். கூடு... படித்துவிட்டு குறைந்தபட்சம் ஒரு 48 மணி நேரமாவது ஒருவன் நல்லவனாக இருக்க ஆசைப்படுவான். இதுவே உங்கள் எழுத்திற்கு கிடைத்த வெற்றி.

கூடு போல இன்னும் பல நீங்கள் படைக்கவேண்டும்......

சந்தோஷமாக இருக்கிறது. ஒரு மகான் போன்ற எழுத்தாளர் என் அருகே இருப்பது எனக்கு கிடைத்த ஒப்பற்ற வரம்.

அன்புடன்
உங்கள் நீண்டகால ரசிகன்
ரவிராதா

# 1

பூமாதேவி கைகூப்பி சூரியனை வணங்கினாள். சூரியன் தன் மெல்லிய காலைக் கதிர்களால் அவள் தலையை வருடிவிட்டு என்ன வேண்டும் என்பதுபோல் நோக்கினான். பூமாதேவி சூரியனின் கண்கள் கேட்ட கேள்விக்கு, தன் கண்களாலேயே பதில் சொன்னாள்.

''பாரம் அதிகமாகிவிட்டது. தாங்க முடியவில்லை. உங்களைப் போன்றோர் உதவி செய்தால்தான் நான் நிம்மதியாய்ச் சுழல முடியும்'' என்று மெல்லிய வேதனையோடு பேசினாள்.

''என்ன பாரம்? ஜனத்தொகை அதிகமாவதா?''

''ஜனத்தொகை அதிகமாவது ஒரு விஷயமே அல்ல. இதுபோன்ற மூன்று மடங்கு ஜனங்களை என்னால் தாங்க முடியும். ஆனால், ஜனங்கள் செய்கின்ற பாவ பாரத்தைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.''

''ஜனங்கள் பாவம் செய்வதற்கு என்ன காரணம்?''

''ஜனத்தொகைப் பெருக்கம் காரணம். ஒருவரை ஒருவர் முந்த வேண்டும் என்ற வெறி. ஜனத்தொகை பெருக்கத்தால் ஏற்பட்டு வருகிறது. தன்னை முன்னிறுத்திக் கொள்ளுகின்ற ஆசை. பேராவல் ஜனத்தொகைப் பெருக்கத்தால் அதிகமாகிறது. எனவே பாபங்களும் அதிகமாகின்றன.''

''முன்னேற்றத்திற்குத் தவிப்பது பாபத்தைச் சேர்க்குமா பூமாதேவி?''

சூரியன் அன்பொழுகக் கேட்டான்.

''ஆமாம். வெற்றி என்பது எளிதில் கிடைக்கக் கூடிய விஷயமில்லை. வெற்றி என்பது ஒரு வேளை கிடைக்க முடியாது

போனால் என்ன செய்வது என்கிற ஏக்கம், தாபம், குறுக்கு வழியைத்தேட முயற்சி செய்கிறது. அந்தத் தாபத்தால் குறுக்கு வழியை முயற்சி செய்ய பாபங்கள் அதிகமாகின்றன. அது மட்டுமில்லை. சூர்யதேவா'' சூரியனை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே பூமாதேவி பேசினாள்.

''வெற்றி பெற்ற பிறகும் ஒருவகை ஆனந்தம் ஏற்பட்டு அந்த ஆனந்தத்தால் என்ன செய்வது என்று தெரியாமல் பலரின் மனத்தைப் புண்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனாலும் பாபங்கள் அதிகமாகின்றன.''

''பூமாதேவி உலகத்திலுள்ள அத்தனை உயிர்களும் இப்படிச் செய்கின்றன என்றா சொல்கிறாய்?''

''இல்லை. உலகத்தில் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் இந்த விதமான வேகத்தில் இருக்கிறது. அப்படி ஒரு வேகத்தில் அவர்கள் இருப்பதற்காக வெற்றியை நோக்கிப் போவதற்காக மற்றவர்களை அவர்கள் விரட்டுகிறார்கள். மற்றவர்கள் விரட்டப்படுவதால் பூமியில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டு பாவத்தின் வேகமும் அதிகமாகிறது.''

''சரி. நான் என்ன செய்ய வேண்டும்? காத்தலும், அழித்தலும், உருவாக்கலும் என்னைப் போன்ற தேவதைகளின் வேலை இல்லையே. அவை பரம்பொருளின் மூன்று சக்திகள் அல்லவா செய்கின்றன?''

''உண்மை. சூர்யதேவா ஆனால் அந்தப் பரம்பொருள் வேலை செய்வதற்குண்டான கருவியாய் நீங்களும், நானும் இருக்கலா மல்லவா? என்னுடைய வேதனையைத் தீர்ப்பதற்கு பரம்பொருள் ஒப்புக்கொண்டிருக்கிறார். இங்கே வந்து பிறப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். இந்தப் பூபாரத்தைக் குறைப்பதற்காக அவர் பிறந்து, வளர்ந்து மிகப் பெரிய யுத்தம் நடத்தப் போகிறார். நீங்களும் இங்கு வந்திருந்து உங்கள் சக்தியை இங்கு நிலைநாட்டி என்னுடைய வேதனையைத் தீர்க்க வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.''

''நான் மட்டும் இங்கே பிறந்து விட்டால் போதுமா? பரம்பொருளின் இருப்பும், என் இருப்பும் பூபாரத்தைத் தீர்த்துவிடுமா.''

''இல்லை ஐயனே. நீங்கள் மட்டும் இங்கு பிறக்கப் போவதில்லை. உங்களைப் போன்ற பல்வேறு தேவதைகள் பூமியில் அவதரிக்கப் போகிறார்கள். விதம் விதமான சக்திகள் பூமிக்கு வந்து மனித ரூபம் எடுத்து தங்களுடைய பராக்கிரமத்தைக் காட்டுகின்ற விஷயங்கள் நடக்கப்போகின்றன. பராக்கிரமம் வெளிப்படுகிற பொழுது வெகுநிச்சயம் அழிவும் ஏற்படும்.

''அப்பொழுது பூபாரம் குறையும். பராக்கிரமம் வெளிப்படுவது என்பது யுத்தத்திற்குக் காரணமாக இருக்கும். யுத்தம் நடந்தால் ஜனத்தொகை குறையும். ஜனத்தொகை குறைந்தால் வெகு நிச்சயமாய் பாவச்சுமையும் குறையும். நான் சற்று சந்தோஷமாக இருப்பேன்.''

''கவலைப்படாதே பூமாதேவி. எங்களுடைய பாதுகாப்பிலே இருக்கின்ற நீ, சந்தோஷமாகவும், திடமாகவும் இருக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். பரம்பொருள் இங்கு வந்து பிறந்திருப்பின் நானும் வந்து பிறந்துதான் ஆக வேண்டும். பரம்பொருள் இந்த பூமியில் பிறந்து விட்டதா?''

''ஆயிற்று சூரிய பகவானே. பிறந்து சில அசுரர்களை வதமும் செய்தாகி விட்டது. தான் யார் என்பதை, தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிரூபித்தும் விட்டார்.''

''ஆஹா... பார்க்க வேண்டுமே.'' சூர்யதேவன் பரபரத்தான்.

''பார்க்கத்தானே போகிறீர்கள்? மனிதனாகப் பிறந்து இங்கே வாழ்ந்து அவரை அனுபவிக்கத்தானே போகிறீர்கள்? வெறும் சூர்ய சக்தியாக அவர் இருக்கும் இடத்தில் நீங்கள் போனால் அவர் தாங்குவார். அவருக்கு அருகே இருக்கும் மனிதர்கள் தாங்குவார் களா? மற்ற உயிரினங்கள் தாங்குமா? எனவே மிகக் கவனமாய் நீங்கள் செயல்பட வேண்டும். இங்கே மனித ரூபம் எடுத்து அவரை

நமஸ்கரித்து பிரியத்துடன் கொண்டாட வேண்டும். இடையறாது அவருக்கருகே இருப்பது உங்களைச் சந்தோஷப்படுத்தும்.''

''அப்படியா சொல்கிறாய் பூமாதேவி?''

''ஏன். இதிலென்ன சந்தேகம் சூர்யதேவா''

''அவருக்கு அருகிலே இருந்தால் அவரை அனுபவிக்க முடியாதோ என்று கருதுகிறேன்.''

''இதென்ன குதர்க்கப் பேச்சு? கடவுளுக்கு நண்பனாக அவதரிப்பதில் நல்ல சந்தோஷம் இருக்கிறதே. கடவுளை தேவதையாக இருந்து உணர்ந்தீர். இப்பொழுது மனிதனாகப் பிறந்து அவரை உணர்கிறபோது அவருக்கு அருகே அவர் பக்கம் இருப்பது தானே சிறப்பு? தீயவற்றை எதிர்த்து அவர் போராடுகிறபோது அவருக்குத் துணையிருப்பது தானே நல்லது.''

''கடவுள் தீயவையோடு எப்படிப் போராடுகிறார் என்று பார்க்க வேண்டாமா பூமாதேவி?''

''ஆமாம். அவரோடு இருந்தால்தானே பார்க்க முடியும்?''

''இல்லை பூமாதேவி. அவருக்கு எதிரே இருந்தால்தான் பார்க்க முடியும்.''

''சூர்யதேவனே. ஏதோ தவறாகப் பேசுகிறீர்கள். மிகக் கவனமாகப் பேசுங்கள். நீங்கள் தெய்வவாக்கு உடையவர். பேச்சு தவறி வந்தால் செயலும் தவறாகப் போகும் வாய்ப்பு இருக்கிறது.''

''நான் தவறாகப் பேசவில்லை பூமாதேவி தெளிந்து பேசுகிறேன். வேறொரு விதமான அனுபவத்தை நான் அறிய வேண்டி ஆவலாக இருக்கிறேன். கடவுள் தீயவற்றை அழித்து நல்லவற்றைக் காப்பாற்ற இங்கு வந்து விட்டார். நான் தீயவர்கள் பக்கம் நிற்க வேண்டும். கடவுள் தீயவற்றை எப்படி அழிக்கிறார் என்பதை பதறிப்பதறிப் பார்க்க வேண்டும். கடவுளின் முழு வேகத்தை, பலத்தை, ஆற்றலை அந்த விஸ்வரூபத்தை நான் உணர வேண்டும்.''

''சூர்யதேவா. என்ன இது? எவ்வளவோ தெளிவாக கம்பீரமாகப் பேசுகின்ற நீங்கள் இன்று ஏன் இவ்விதம் தவறாகப் பேசுகிறீர்கள்? தீயவர்கள் பக்கம் சூரியன் போய் நின்றால் பூமி தாங்குமா? பிரபஞ்சத்திற்குக் கெடுதல் அல்லவா? நீங்கள் எப்பொழுதுமே நல்லவர் பக்கம் இருக்க வேண்டியவரல்லவா?

''அந்தணர் குலமல்லவா? ஞானச் சுடரல்லவா? நீங்கள் எப்படித் தீயவர்கள் பக்கம் போய்த் தீயவராக இருப்பது.''

''அடடே.... பூமாதேவி தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய்.''

''என்ன தவறாகப் புரிந்து கொண்டு விட்டேன்.''

''தீயவர்கள் பக்கம்தான் இருப்பேன் என்று சொன்னேனே தவிர தீயவனாக இருப்பேன் என்று நான் ஒரு போதும் சொன்னதில்லை.''

''எப்படித் தீயவர்கள் பக்கம் தீயவனாக இல்லாமல் இருக்க முடியும்? தீயவர்கள் பக்கம் சேர்ந்தவர்கள் அனைவரும் தீயவர்தானே?''

''இல்லை. நான் நல்லவனாக இருக்க விரும்புகின்றேன். கடவுளைப் பார்ப்பதற்காக அனுபவிப்பதற்காக எதிரே நின்று அந்த அம்சத்தை கண்குளிரப் பருகுவதற்காக சக்தியினுடைய ஒவ்வோர் அம்சத்திலும் அவர் எதிரே நின்று அவரை ஸ்வீகரிப்பதற்காக நான் அவருக்கு எதிரே நிற்க விரும்புகின்றேன்.''

''இந்த முடிவை, நீங்கள் இறுதி செய்து விட்டீர்களா சூர்யதேவா?''

''இல்லை ஆசைப்பட்டிருக்கிறேன். உன் மடியில் தவழவும் அந்தக் கடவுளைக் கைகூப்பி வேண்டுகிறேன்.

ஐயனே. பரந்தாமா, பரமபுருஷா. பிரபஞ்சத்தின் முதுகெலும்பே, ஆணிவேரே. பிரபஞ்ச சக்தியே, உன்னை உணர்வதற்காக, உன்னை அனுபவிப்பதற்காக, உன்னை அதிகம் அறிவதற்காக உனக்கெதிரே

நான் பிறக்க விரும்புகின்றேன். ஐயனே. எனக்கு வரம் கொடு. பூமியில் உன்னை அதிகம் அனுபவிக்கும் ஒரு மனிதனாக என்னை பிறக்கச் செய். இந்தப் பிறப்பின் மூலம் இந்த பூமாதேவியின் பாரத்தைக் குறைக்கின்ற மகத்தான பணியையும் நீயே செய்வாயாக'' என்று கைகூப்பிக் கேட்டார்.

பூமாதேவி பிரியத்துடன் சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூரியனிலிருந்து ஒரு ஜ்வாலை கிளம்பி பூமியை நோக்கி மெல்ல நகர்ந்து வந்தது. பூமா தேவி சுழலச் சுழல பருவங்கள் மாறின.

பூமியில் உயிரினங்கள் அந்தக் கோடை காலத்தின் வெப்பம் தாங்காமல் தவித்தார்கள். நீர் நிலைகள் வறண்டன. புற்கள் கருகின.

காந்தார தேசத்தின் மாளிகை ஒன்றின் மேல் தளத்தில் யாரும் எளிதில் போக முடியாத ஒரு வெட்ட வெளியில் அந்தப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

''இந்தப் பூலோகத்தைத் தேவதைகள் ஆட்சி செய்கின்றனவாம். அந்த தேவதைகள் மனிதர்களை கண்ணும், கருத்துமாய் கவனித்துக் கொள்கின்றனவாம். அந்த தேவதைகளை விழுந்து வணங்கினால் எது வேண்டுமானாலும் கிடைக்குமாம்.

ஒரு பெண்ணுக்கு எது முக்கியமான தேவை?

செல்வமா, மிகுந்த அழகா, பலமா, நீண்ட ஆயுளா... இவை மட்டும் இருந்தால் போதாது.

பிறகு...?

''நல்ல புருஷன் வேண்டும்.''

''அப்படியா?'' நல்ல புருஷன் மட்டும் கிடைத்தால் போதுமா மனம் நிறைவாகிவிடுமா?''

துர்வாச மகரிஷி அவளைப் பார்த்து புன்னகையோடு கேள்வி கேட்டார்.

அவள் அவருக்கு விசிறிக் கொண்டே ''தெரியவில்லையே'' என்று பதில் சொன்னாள்.

''யோசனை செய் குந்தி. ஒரு பெண்ணுக்கு எது முக்கியமான தேவை? செல்வமா, நீண்ட ஆயுளா, உடல் ஆரோக்கியமா, அபரிதமான அழகா அல்லது அற்புதமான புருஷனா? எது அவளை சீரும் சிறப்புமாக வைக்கிறது?'' துர்வாச மகரிஷி குந்தியைக் கேட்டார்.

''இவை எல்லாமும்தான்.''

''நல்லது. இவை எல்லாமும் பெற்றால் போதுமா? பெண்ணுக்கு பூரண திருப்தி ஏற்பட்டு விடுமா? பெரும் மரியாதை கிடைத்துவிடுமா?''

''இல்லை ஏதோவொன்று குறைவது போல் இருக்கிறது.''

'என்ன அது குந்தி?''

ரிஷி கண்களை மூடிக்கொண்டு உடம்பைத் துணியால் துடைத்துக் கொண்டார்.

குந்தி இன்னும் பலமாக விசிறினாள். குளிர்ந்த காற்று அவர் மீது பட்டது. வெளியே அனல் தகித்துக் கொண்டிருந்தது.

''எனக்குச் சொல்லத் தெரியவில்லை ஐயனே.'' துர்வாசரைப் பார்த்து குந்திதேவி கைகூப்பினாள்.

மறுபடியும் விசிறினாள்.

'நல்ல குழந்தைகளைப் பெற்ற பெண்தான் பரிபூரணமடைகிறாள். அவள் அழகுக் குறைவோ, செல்வமற்று இருப்பதோ, புருஷன் முன்பின்னாக இருப்பதோ, ஆயுளில் குறைபாடோ சகலமும் அவள் மூலம் கிடைக்கும் பிள்ளைகளின் மூலம் நிறைவு செய்யப்படுகின்றன.

அவள் போற்றப்படுகிறாள். பூமியில் அவளுடைய இருப்பு அர்த்தமாகிறது. அவள் பிறந்தது பல பேருக்குப் பயனுள்ளவாறு நல்ல குழந்தைகள் பெறுமாறு ஒரு வரம் அவள் வாங்கி வந்துவிட்டால் அதைவிட அற்புதமான விஷயம் இந்த உலகத்தில் எதுவுமில்லை. இந்த பூமியில் இருக்கிற ஒவ்வொரு பெண்ணும் புருஷனுக்காக பிரார்த்திக்கும்போதே எனக்கு ஏன் புருஷன் வேண்டுமென்று தெரியுமா? என்னுடைய சுகத்திற்காக அன்று. இந்த பூமியில் நன் மக்களைப் பெற்றெடுப்பதற்காக எனக்கு நல்ல புருஷன் வேண்டுமென்று வேண்டிக் கொள்ளவேண்டும்.''

''யாரை வேண்டிக்கொள்ள வேண்டும் மகரிஷி?''

''தேவதைகளை வேண்டிக்கொள்ள வேண்டும்.''

''எந்த மாதிரி தேவதைகளை வேண்டிக் கொள்ள வேண்டும் ஐயா?''

''சூரியன். யமன். வாயு. இந்திரன் என்று எத்தனை தேவதைகள் இருக்கிறார்கள். அவர்கள் அருளினால் அவர்கள் அம்சங்களோடு நல்ல குழந்தை பூமியில் பிறக்க வேண்டும். அப்போது அந்த நல்ல குழந்தை பெற்றெடுத்த தாய் பூமியில் கடைசி வரை சந்திர சூரியர்கள் உள்ளவரை போற்றப்பட்டுப் பேசப்படுகிறார்கள்.''

''எனக்குப் புரிந்தது மகரிஷி.''

அவள் கைகூப்பி **வணங்கி**விட்டு மறுபடியும் விசிறத் தொடங்கினாள்.

அவர் சந்தோஷமானார்.

நமஸ்கரிப்பதும் விடவில்லை. விசிறுவதையும் நிறுத்தவில்லை. இந்தப்பெண் எவ்வளவு பாந்தமாக தனக்குப் பணிவிடை செய்கிறாள் என்பதைப் பார்த்து அவர் புன்னகை செய்தார்.

''உனக்கு அம்மாதிரி தேவதைகளை வணங்குகின்ற முறையைச் சொல்லித் தரட்டுமா? மந்திரங்களை என்னிடம் கற்றுக் கொள்கிறாயா?''

''நீங்கள் விரும்பினால் கற்றுக் கொள்கிறேன் ஐயனே'' அந்தப் பெண் மறுபடியும் கை கூப்பினாள்.

மீண்டும் விசிறத் தொடங்கினாள்.

''உனக்கு வேண்டும் என்று தோன்றவில்லையா?''

''எனக்கு என்ன வேண்டும் என்று எனக்குத் தெரியவே இல்லை. நீங்கள் எனக்கு என்ன வேண்டுமென்று எது கொடுக்க வேண்டுமென்று தோன்றுகிறதோ, எது எனக்கு சரியாக இருக்கும் என்று நினைக்கிறீர்களோ அவற்றைக் கொடுங்கள். அவற்றின் மூலம் எனக்கு நன்மைகள் தான் விளையும்.''

துர்வாசர் அவள் பேச்சுக்கு வாய்விட்டுச் சிரித்தார்.

''சரி. உனக்குச் சில மந்திரங்கள் சொல்லித் தருகிறேன். முதலாவதாக சூரியனை, சூரியனுடைய சக்தியை எப்படி அருகே வரவழைப்பது என்ற ஒன்றைச் சொல்லித் தருகிறேன். சூரியனுடைய சக்தியை எப்படி உள்ளே தாங்குவது என்று உனக்குச் சொல்லித் தருகிறேன். சூரியனுடைய சக்தியை உள்ளே தாங்குவதன் மூலம் ஒரு நல்ல மகனை நீ பெற்றெடுத்துக் கொள்ள முடியும்.''

''ஐயனே. புருஷன் இல்லாமல் இது நடக்குமா?''

''புருஷன் இல்லாமலும் இது நடக்கும். ஆனால் இதை நீ புருஷன் இல்லாமல் செய்யாதே. உனக்கு காலாகாலத்தில் திருமணம் ஆகுமல்லவா? உனக்கு புருஷன் ஒருவன் வாய்ப்பான் அல்லவா? மிகவும் நல்லவனாகவும், ஞானியாகவும் அந்தப் புருஷன் இருப்பான் அல்லவா? அப்பொழுது அவனிடம் இம்மாதிரியான வரத்தை நான் பெற்றிருக்கிறேன் என சொல்லி அவன் அனுமதியோடு இந்த மந்திர ஜபங்களைச் சொல்லி பிரபஞ்சத்தின் சக்தியை உன் கருவில் இழுத்துக் கொண்டு திடமான குழந்தைகளைப் பெறுவாய். நீ இத்தனை எனக்குச் செய்திருக்கிற இந்தப் பணிக்கு உபசாரத்திற்கு என் பரிசாக இதை அளிக்கிறேன். வாழ்வாங்கு வாழ்வாயாக. வா. காது கொடு'' என்று அவளைத் தன் அருகே வரவழைத்தார்.

காதில் விதம் விதமான மந்திரங்களை ஓதினார். அவள் அவற்றை மனத்தில் தேக்கி வைத்துக் கொண்டாள்.

''போய் உணவெடுத்துக் கொண்டு உறங்கப்போ. களைப்பாக இருக்கிறாய்'' என்று சொன்னார்.

கண் மூடி உறங்கிப் போனார். மெல்ல அவரை வலமாக வந்த குந்திதேவி தன் அந்தப்புரத்திற்குப் போனாள்.

இந்த மந்திரத்தைச் சொன்னால் சூரியனுடைய சக்தி தனக்குள் வந்து தன் கருப்பையில் தங்கிவளர்ந்து குழந்தையாகி.. அடேயப்பா... சூரியனுடைய சக்தி என் கருப்பையில் வந்து தங்குமா?சூரியனுடைய சக்தி எனக்கு மகனாக மாறுமானால் சூரியனுடைய சக்தி என்னுள் குடியேறுமா? சூரியனைத் தாங்குகின்ற வலிமை எனக்கு வந்து விடுமா? அதேபோல வாயு, யமன், இந்திரன் என்று எல்லாரையும் நான் தாங்கப் போகிறேனா? எவ்வளவு எளிதாகச் சொல்லிவிட்டார். எவ்வளவு பெரிய வரம் கொடுத்துவிட்டார். இது வரம்தானா அல்லது விளையாட்டிற்காக எனக்குச் சொன்ன வார்த்தைகளா? சிறு பெண்ணாயிற்றே ஏதேனும் கதை சொல்வோம் என்று துர்வாச மகரிஷி என்னைச் சந்தோஷப்படுத்தச் சொல்லியிருக்கக் கூடுமோ?

அவள் முகம் கழுவிக் கொண்டாள். மாளிகையின் மேற்பகுதிக்குப் போனாள். வெட்ட வெளியில் நின்றாள். மேலே சூரியன் தகித்துக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்துக் கைவிரித்தாள். சிரித்தாள். வருக என்று அழைத்தாள்.

''எனக்குள் என் கருவுக்குள் நீங்கள் மகனாகப் பிறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். என்ன தெளிவு. எவ்வளவு சக்தி. எத்தனை வெப்பம். மொத்த காந்தார தேசமும் வெப்பத்தில் அலை மோதிக் கிடக்கிறதே.

இங்குள்ள சக்தி முழுவதும் திரண்டு என்னுடைய வயிற்றுக்குள் அமர்ந்தால் என்னால் தாங்க முடியுமா? தாங்குமாறு வருக. என்னைப் பலப்படுத்திவிட்டு என்னில் புகுந்து கொள்ளுங்கள்."

மந்திரம் சொன்னாள்.

சட்டென்று தொலைவிலிருந்து நகர்ந்து வந்து கொண்டிருந்த தழல் திசைமாறி அவளை நோக்கி விரைவாக வந்தது.

பூமியில் தனக்கு இடம் கிடைத்து விட்டதென்று சூர்யதேவன் மகிழ்ந்தான். அவளின் விரித்த கரங்களுக்கு நடுவே போய் நின்று கொண்டான்.

அவள் திகைத்தாள்.

"யாரது ஆணா?"

பயந்தாள். அச்சமுடன் தன்னுடைய உடம்பைக் குறுக்கிக் கொண்டாள். இது என்ன என்று திமிறினாள்.

சூரியன் இறுக்க அணைத்தான். கண்ணுக்குத் தெரியுமாறு அங்கு யாருமில்லை. ஆனால் யாரோ இருந்தார்கள். அங்கு மனித உருவமில்லை. ஆனால் ஏதோ ஒரு மகத்தான சக்தி இருந்தது.

"விடு என்னை" அவள் திமிறினாள்.

"நானல்லவா இதைச் சொல்ல வேண்டும்? அழைத்துவிட்டு அனுமதி தர மறுத்தால் எப்படி? விடு என்னை. என்னை உள்ளே அனுமதி" என்று சூரிய சக்தி அவளை இறுக்கப் பற்றி இழுத்து நிறுத்திக் கொண்டது.

அவள் திகைத்துப் போய் அசையாது நின்றாள். உடம்பிலுள்ள அத்தனை துவாரங்களின் மூலமாகவும் சூரிய சக்தி அவளுக்குள் பாய்ந்து அவளை சுத்தம் செய்து அவளது நாடி நரம்புகளில் ஓடி அவளுடைய கருப்பைக்குப் போய் அமர்ந்து, குளிர்ந்து உட்கார்ந்து கொண்டது.

''அம்மா'' என்று அவள் அலறினாள்.

பூமி லேசாய்க் குலுங்குவதுபோல் இருந்தது.

தனக்காக இந்தப் பெண் வேதனைப்படுகிறாள் என்று தெரிந்து பூமாதேவி பரம்பொருளை வேண்டினாள். குளிரட்டும் என்றாள்.

வெயில் தணிந்தது. மெல்ல மேகங்கள் நகர்ந்தன. இந்திரன் மழை மேகங்களை வேகமாக அனுப்பினான். வாயு காற்றை அற்புதமாய்ச் செலுத்தினான்.

இந்திரனின் ஸ்பரிசம் அங்குபட பூக்கள் நன்கு பூத்தன. வாசனைகள் புல்லில் இருந்தும், மரங்களில் இருந்தும், மண்ணிலிருந்தும், நீரிலிருந்தும் கிளம்பி வாயுவை நிறைத்தன.

வாயு, அது பூமி முழுவதும் நீரோடு கலந்து தெளிக்க மக்கள் ''அப்பாடா. கோடைக்காலம் போயிற்று. இனிமேல் மழை பெய்யும்'' என்று சொன்னார்கள்.

அவள் தடுமாறி மயங்கிக் கீழே சரிந்தாள். 'சோ' என்று மிகப் பெரிய வெயிலினூடே மழை அட்டகாசமாகப் பெய்து காந்தார தேசத்தை நனைத்தது.

அவள் குளிரக் குளிர நனைந்தாள். மயங்கிய வண்ணமே மேல் மாடத்தில் கிடந்தாள்.

பல இடங்களில் சேடிப் பெண்கள் அவளைத் தேடிப் பார்த்தார்கள். எங்கும் கிடைக்காமல் கவலையானார்கள்.

மழை நின்றதும் அவள் எழுந்தாள். வயிற்றில் கனம் உணர்ந்தாள். கவலையானாள். கவலையில் தனிமையானாள்.

''எங்கேயடி போயிருந்தாய்?'' தோழிகள் கேட்டார்கள். தாய் கேட்டாள். தத்து எடுத்துக் கொண்ட தந்தை கேட்டார்.

அவள் பதில் சொல்லவில்லை.

அந்த அறைக்குப் போய் கட்டிலில் அமர்ந்து சுவரோடு சாய்ந்து கொண்டாள். அவளுடைய கனவுகளில் யானைகள் வந்தன. கந்தர்வர்கள் வீணை வாசித்தார்கள். கின்னரப் பெண்கள் பாட்டுப் பாடினார்கள். பூக்கள் அவள் மீது சொரிந்த வண்ணம் இருந்தன.

அவள் படகில் போவது போன்ற கனவும், வானத்தில் பறப்பதுபோன்ற கனவும் அடிக்கடி ஏற்பட்டன.

துர்வாச மகரிஷியைச் சந்திக்க முடியுமா என்று முயற்சி செய்தாள்.

அவளுக்கு உபதேசம் செய்த அடுத்த நாழிகையிலேயே முனிவர் அவசரமாக அந்த மாளிகையை விட்டு அந்த ஊர்விட்டே வெளியே போய்விட்டாராம். எப்பொழுது வருவார் என்று தெரியாதாம். எங்கே போயிருக்கிறார் என்றும் சொல்லவில்லையாம்.

அவர்களெல்லாம் அவ்விதம்தான் போவதும், வருவதும் இறைவனுக்குக் கூடத் தெரியாது என்று சொன்னார்கள்.

அவள் திகைத்துப் போய் என்ன செய்வது என்று தெரியாமல் மெல்ல தன் வயிற்றைத் தடவியபடி உட்கார்ந்திருந்தாள்.

சந்தோஷமாக இருக்க வேண்டிய ஒரு விஷயத்தை, பெரிய சடங்குகள் செய்து நிறைவாக இருக்க வேண்டிய ஒரு விஷயத்தை இவ்விதம் செய்து விட்டேனே. இந்தக் கவலை உன்னை பாதிக்காதா, இந்தத் தனிமை உன்னைத் தொடராதா? கடவுளே. நான் எனக்கு மட்டும் தீங்கு செய்யவில்லை. வயிற்றிலே இருக்கின்ற இந்தக் குழந்தைக்கும் தீங்கு செய்து விட்டேனே, என்ன செய்வது?

''பரந்தாமா பிரபஞ்ச சக்தியே. ஆதிமூலனே ஆபத்பாந்தவனே. எனக்கு உதவி செய். எனக்கு உதவி செய்... எனக்கு உதவி செய்'' என்று அவள் வேத வரிகளிலிருந்து வாக்கியங்களை எடுத்து கடவுளை நோக்கி வணங்கினாள்.

அரண்மனையில் எல்லாருக்கும் வேலை இருந்தது. அவள் எப்படி இருக்கிறாள் என்பதை யாரும் தெரிந்துகொள்ள முற்படவில்லை. அவளும் தெரியும் வண்ணம் வலம் வரவில்லை. வயிறு அதிகம் தெரியாத கர்ப்பிணியாக அவள் வளைய வந்தாள். பல நேரங்களில் தனிமையில் இருந்து இடையறாது கடவுள் நாமம் சொன்னாள்.

அந்தரங்கமான ஒரு தோழியோடு மூன்று காவற்காரர்களோடு காட்டிற்கு வன பூஜைக்குப் போகிறேன் என்று போனாள்.

வனபூஜைக்கு துணையோடு தானே போயிருக்கிறாள் என்று அரண்மனையிலுள்ளவர்கள் அலட்சியமாக இருந்தார்கள்.

போகிற வழியில் அவள் கர்ப்ப விவரம் சொல்ல வேலையாட்களும், தோழிகளும் பயத்தில் முகம் பொத்திக் கொண்டார்கள்.

''என்ன இது?'' என்று திகைத்தார்கள்.

அவள் மரப்பெட்டி வாங்கி வரச் சொன்னாள். அதைத் தடவிக் கொடுத்தாள்.

நதி தீரத்தில் நாணல் புதர்களுக்கு நடுவே அமர்ந்து கொண்டு சற்று முதுகைச் சாய்த்த வண்ணம் குழந்தையை ஈன்றெடுத்தாள்.

குழந்தையை நதியில் தோழி குளிப்பாட்டி விட்டுக் கொண்டு வந்து காட்டினாள். குழந்தையின் நெஞ்சு முழுவதும் ஓடு போன்ற பொருள் கனமாக இருந்தது. காதுகளில் குண்டலங்கள் ஒளி பெற்று விளங்கின.

பிறந்த நேரம் சூரியன் பிரகாசமாக இருந்தான். வானம் ஒரு மேகம்கூட இல்லாமல் நிர்மலமாக இருந்தது. தாமரைகள் பெரிதாகப் பூத்திருந்தன. கொக்குகள் பறந்த வண்ணம் இருந்தன. குழந்தை சூரியனைப் பார்த்துப் பெரிதாய் சிரித்து, அவளைக் கண்டதும் முகம் இறுக்கியது.

அவள் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். நெற்றியில் முத்தமிட்டாள். கன்னங்களில் கன்னம் வைத்துக் கொண்டாள். நெஞ்சில் வைத்துச் சீராட்டினாள்.

உனக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவில்லை. உனக்கு அளிக்கவேண்டிய உணவை அளிக்கவில்லை. உனக்குக் காட்ட வேண்டிய ஆதரவைக் காட்டவில்லை.

ஆனால், என்ன? கடவுள் உன்னோடு இருக்கிறார். உனக்கு எந்த நேரத்தில் எவர் ஆதரவு தரவேண்டுமோ எந்த நேரத்தில் எவர் உன்னைக் காக்க வேண்டுமோ அவர் வந்து நிச்சயம் உன்னைக் காப்பாற்றுவார்.

சூரியனே.. சூரியனே... இதோ உமக்கும், எனக்கும் பிறந்த இந்தக் குழந்தையை உன் பாதுகாப்பிலேயே விடுகிறேன். அவனைக் காத்தருளும்.''

தன்னுடைய சால்வையைப் பெட்டிக்குள் மடித்து மெத்தென்று வைத்து அதில் குழந்தையைப் படுக்கக் கிடத்தினாள். பெட்டியை நீரில் கொண்டு போய் மிதக்க விட்டாள். மூடியில்லா அந்தப் பெட்டி நதியில் வேகமாக அடித்துக் கொண்டு போயிற்று.

குந்தி தேவி இடுப்பளவு தண்ணீரில் இறங்கினாள். சூரியனைப் பார்த்தாள்.

''மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று கரம் கூப்பினாள்.

பளிச்சென்று நீரில் மூழ்கி எழுந்தாள்.

சூரியதேவன் குந்தியைப் பார்த்துச் சிரித்தான். ''மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது? நான் விரும்பிய வண்ணம் பிறந்தேன். உன்னை உபயோகப்படுத்திக் கொண்டேன். நீதான் என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு மனவேதனை கொடுத்ததற்காக வருத்தப் படுகிறேன். பிறப்பு இப்பொழுது ரகசியமாக இருப்பதால்தான்

கடவுளை நன்கு தேடிப் பார்க்க முடியும். எங்கே இருக்கிறார் என்று பிறந்திருக்கிறார் என்று அலைய முடியும். இதுவொரு சுகம். கடவுளைத் தேடுகின்ற மிகுந்த ஆனந்தத்தை மனிதனாக இருந்து நான் அனுபவிப்பேன். இனி கவலை வேண்டாம். மறுபடியும் கன்னியாகவே இந்த பூமியில் இரு'' என்று ஆசிர்வதிக்க அவள் கரையேறுவதற்கு முன்பு கன்னித் தன்மையை அடைந்தாள்.

தன்னைப் பார்த்துக் கொண்டாள். வேலைக்காரியும் அவளை அருகே வந்து அணைத்துக் கொண்டாள்.

''உங்களைப் பார்த்தால் பிள்ளை பெற்றவள் என்று சொல்லவே முடியாது. முன்பு இருந்ததைவிட இன்னும் பொலிவோடு இருக்கிறீர்கள்'' என்று வர்ணித்தாள்.

படைவீரர்கள் மூன்று பேரும் பின் தொடர தோழியோடு அவள் காந்தார தேசம் நோக்கி நடந்தாள்.

பெட்டி அதற்குள் வெகுதூரம் போய்விட்டது.

# 2

**ரா**தை அவள் புருஷன் அதிரதனுக்காக வீட்டு வாசலில் நின்றபடி காத்திருந்தாள்.

அதிரதன் தேரோட்டி. வெகு தொலைவு போய் மறுபடியும் ஊருக்குத் திரும்பி வந்து விட்டான். அன்று காலையில் தகவல் வந்தது. மூன்று நாளைக்குண்டான மாற்றுடைகளோடு, உணவுத் தட்டோடு, குவளையோடு – இருபது நாட்களுக்கு முன்பு ஏதோ ஓர் அரசகுமாரனோடு கங்கை கரையோரம் பயணப்பட்டுவிட்டு இப்பொழுதுதான் ஊர் மீண்டிருக்கிறான். மறுபடியும் நீண்ட பயணத்திற்கு எவரும் கூப்பிடாமல் இருக்க வேண்டும்; அல்லது அழைத்துப் போனவரே அதிரதன் சேவை கருதி அதிரதனை

தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கட்டளையிட்டு மூன்று நாள் ஓய்வு எடுத்துக்கொள் என்று சொல்ல வேண்டும்.

இப்படி எவரும் சொல்லாது போனால் அதிரதன் தேரோடு கொட்டிலுக்குத் திரும்புகையில் “கிளம்பு இப்பொழுது. யமுனையை நோக்கி நாம் போக வேண்டியிருக்கிறது. காந்தாரம் நோக்கி பயணப்பட வேண்டியிருக்கிறது” என்று உடனே அழைத்துக் கொண்டு போகலாம். அப்படி மாதக் கணக்கில் போனதும் உண்டு.

இந்த முறை கங்கைக் கரை பயணம் என்பதால் முகம் அதிகம் வாடியிருக்காது. பசிக்கு ஏதாவது உணவு கிடைத்திருக்கும். போன இளவரசன் இளைஞன் என்பதாலும் கூடவே பயணப்பட்ட அவன் தாயும் சேடிகளும் நல்ல குடும்பத்துப் பெண்கள் என்பதாலும் பெரிய தொந்தரவு இருக்காது.

அதிரதன் இளைஞனாக இருந்தபோது இளவரசர்கள் அவனை வரச்சொல்லி, திறமையாக குதிரையை ஓட்டுவான் என்பதால் அவர்களோடு படையெடுப்புக்கு அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள். பல போர்களுக்கு இளவரசர்களோடு அதிரதன் போயிருக்கிறான். பல இளவரசர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றி யிருக்கிறான். இப்பொழுது சற்று வயது அதிகமானதால் வாலிபம் தளர்ந்து நடுவயது நோக்கி நடப்பதால் நெடுந்தூரப் பயணத்திற்குத் தான் அழைத்துப் போகிறார்களே தவிர, யுத்தத்திற்கு அழைத்துப் போவதில்லை.

திருமணமான முதல் வருடம் உடம்பெல்லாம் அம்புபட்ட புண்ணோடு ஜுர வேகத்தோடு அதிரதன் திரும்பி வந்தது ராதைக்கு ஞாபகம் இருக்கிறது. அப்பொழுது ராதைக்கு – பதினைந்து வயது. அதிரதனுக்கு முப்பது வயது. உடம்பு குணமாகட்டும் என்று மூன்று மாதம் ஓய்வு கொடுத்து அதிரதனை அவனது வீட்டிலேயே விட்டுவிட்டுப் போனார்கள். அந்த மூன்று மாதங்கள்தான் ராதை தன் வாழ்நாளில் அனுபவித்த சொர்க்கம்.

அதிரதனுக்கும் இளம் மனைவியைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் கட்டிக் கொண்டால் கை வலிக்கும். இறுக்கிக் கொண்டால் நெஞ்சில் நோவு எடுக்கும். முத்தமிட்டால் கழுத்து வலிக்கும்.

ஆனால் ராதை மெல்லக் கட்டிக் கொள்வாள். நோகாமல் முத்தமிடுவாள். உடம்பெல்லாம் வருடிக் கொடுப்பாள். மருந்து போடுவாள். ராதை கேள்விகள் உடையவள். அதிரதன் விவரம் அறிந்தவன். விவேகி.

புருஷனும், மனைவியும் உலகம் பற்றிய பல்வேறு விஷயங்களை அப்பொழுது பேசத் தொடங்கினார்கள். வாழ்க்கை என்பது என்ன என்று கேள்வி கேட்கத் தொடங்கினார்கள். பல ஊர்களை, பல மக்களை, பல்வேறு பழக்க வழக்கங்களை, பல்வேறு கடவுள்களை அதிரதன் ராதைக்குச் சொல்ல அவள் வியந்து கேட்டுக் கொண்டிருப்பாள். கங்கைக்கரை சாதுக்களைப் பற்றிச் சொல்ல "அப்படியா? என் பொருட்டும் அவர்களை நமஸ்கரித்தீர்களா?" என ஆவலோடு கேட்பாள்.

அதிரதன் ஒருமுறை மட்டும் பெரியோர்களையோ, சாதுக்களையோ நமஸ்கரிப்பதில்லை. முதல் முறை தனக்காகவும், இரண்டாம் முறை தன் மனைவிக்காகவும், நமஸ்கரிக்கிற பழக்கத்தை மேற்கொண்டிருந்தான். நான் உனக்காகவும் நமஸ்கரித்தேன் என்று ராதையிடம் சொல்லி அவளைச் சந்தோஷப்படுத்துவான்.

''கங்கைக்கரை முழுவதும் உங்களோடு தேரில் போக வேண்டுமென்று ஆசை. பல்வேறு கோயில்களுக்கும் க்ஷேத்திரங் களுக்கும் உங்களோடு ஊர் சுற்ற வேண்டும் என்பது என் விருப்பம். இது நிறைவேறுமா? வயதாகி உடல் தளர்வதற்கு முன்பு, உடம்பில் வலு இருக்கும்போதே நீங்களும் நானும் பல க்ஷேத்திரங்கள் போக வேண்டும்.

தெற்கு குமரிக்கடல் வரை போக வேண்டும் என்பது என்னுடைய ஆசை. இராமேஸ்வரத்திற்குப் போய் சிவபூஜை செய்ய வேண்டும் என்பதும் என் எண்ணம்.''

இரவு கணவனை வலி நீக்க வருடிக்கொண்டே அவள் பேசுவாள்.

''போகலாம். அப்படி ஒரு நாள் வரும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் என்னோடு ஊர் சுற்றலாம் என்று சொல்கிறாயே தவிர வீடு வாங்க வேண்டும். நமக்கென்று ஒரு நல்ல தேர் வாங்க வேண்டும். இடம் வாங்க வேண்டும். தோப்பு வாங்க வேண்டும், ஆடு மாடுகள் வாங்க வேண்டும் என்று உனக்குத் தெரியவில்லையா?''

''எதற்கு நிலமும், வீடும், ஆடும், மாடும்? இவை அழியக் கூடியவை. அழியாதது க்ஷேத்திராடன அனுபவங்கள், இறையுணர்வு. இந்த மாதிரி ஊர் சுற்றிப் பார்க்க, சாதுக்களை தரிசிக்க இறையுணர்வு அதிகப்பட்டு உள்ளுக்குள் இருக்கின்ற நம்முடைய பொலிவு இன்னும் வெளியே வந்து நம்மை நல்வழி காட்டி அழைத்துப் போகும். உங்களை விட்டு நான் தனியே போவது என்பது சரியாக இராது. உங்களுடைய பார்வையில், உங்களோடு கைகோத்து இந்த கங்கைக்கரை சாதுக்கள் தரிசனமும், பரத கண்டம் முழுக்க இருக்கும் க்ஷேத்திராடன தரிசனமும் கிடைத்தால் அது போதுமானது. வேறெந்த விஷயங்களிலும் எனக்கு நாட்டமில்லை.''

''வயது சிறிதாக இருந்தாலும் உனக்கு இப்படி ஓர் எண்ணம் தோன்றக் காரணமென்ன?''

''என் புருஷனான நீங்கள்தான் காரணம். நீங்கள் போய்ச் சொல்லுகின்ற அனுபவங்களை நான் கேட்டுக்கேட்டு எனக்கு ஊர் சுற்ற வேண்டும் என்றுதான் தோன்றுகிறதே தவிர, உங்களோடு போக வேண்டுமென்று தான் ஆசை வருகிறதே தவிர வேறெந்த ஆசையும் இல்லை'' என்று ராதை சொன்னாள்.

அதிரதன் மெல்ல அவளை அணைத்துக் கொண்டான்.

உடல் நலம் தேறியதும் மறுபடியும் அவனுக்கு வேலை வந்துவிட்டது. இடையறாது இடதும், வலதும் அலைய வேண்டி வந்துவிட்டது. போருக்கு மறுபடியும் அழைக்கவில்லையே தவிர அரச குமாரர்கள் போகவும், அரசிளங்குமரிகள் ஊர்விட்டு ஊர் பயணப்படவும் அவனுடைய தேரை உபயோகித்தார்கள். அவனைத் தேரோட்டியாக வரச் சொன்னார்கள். அது மட்டுமில்லாமல் அவன் கெட்டிக்காரத்தேரோட்டியாக இருப்பதால் அவனை நூதனமான தேர்களை ஓட்டவும் அனுப்பினார்கள்.

எப்படி இருக்கிறது என்று அரசர்கள் கூப்பிட்டுப் பேசினார்கள்.

நல்ல குதிரைகளை வாங்குகிற பொழுது அவனை அருகே வைத்துக் கொண்டார்கள். அபிப்பிராயம் கேட்டார்கள். நல்ல குதிரையைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க சந்தோஷத்தில் கட்டி அணைத்துக் கொண்டார்கள்.

குதிரையை எப்படி பழக்குவது என்று கேட்டுக் கொண்டார்கள். உணவிடுதல் பற்றி மேற்பார்வை பார்க்கச் சொன்னார்கள்.

யுத்தத்திற்குப் போவது என்பது அறவே நின்று போயிற்று. ராதை மிகுந்த சந்தோஷமடைந்தாள்.

ஒவ்வொரு முறையும் யுத்தத்திற்குப் போய்விட்டு வந்தால் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிற வேதனை இனி இல்லை.

ராதைக்கு முப்பது வயதாகியது. அதிரதனுக்கு நாற்பத்தைந்து வயதாகியது. ஆனால் குழந்தைப்பேறு கிடைக்கவில்லை.

''எப்படி குழந்தை பிறக்கும்?'' அதிரதனின் தாய் அலுத்துக் கொண்டாள்.

''எந்நேரமும் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறாய். வெப்பத்தில் அலைகிறாய். குதிரையோடு பழகுவதே சூடு. நீ பயணப்பட்டு

வெயிலிலும், மழையிலும் நனைந்து உடம்புச் சூட்டை அதிகரித்துக் கொண்டால் உயிரணுக்கள் உன்னிடம் எப்படி உற்சாகமாக இருக்கும்?'' என்று மனம் நொந்தார்.

பழரசங்களும்,வெண்ணெயும், மூலிகைகளும் கலந்து அவனுக்கு உண்ணக் கொடுத்தாள். ''ஓய்வு எடுத்துக்கொள். நல்ல ஓய்வுக்குப்பிறகு மனைவியோடு சந்தோஷமாக இரு. அது அவளையும் சந்தோஷப்படுத்தும். புத்திர சந்தானத்தையும் கொடுக்கும்'' என்று சொன்னாள்.

அதிரதனும், ராதையும் உட்கார்ந்து கொள்ளும்பொழுது அவர்கள் தங்களை உடம்பால் சந்தோஷப்படுத்திக் கொள்ள முயன்றதில்லை. மாறாய் நிறையப் பேசி சந்தோஷப்பட்டார்கள்.

பதவியிலிருக்கும் ஓர் அமைச்சரின் தாயார் இமய மலைப் பக்கம் போய் சாதுக்களுக்கு கம்பளி ஆடை கொடுக்க விரும்புகிறார் என்று கேள்விப்பட்டதும் அதிரதன் தானே வலியப் போய் வண்டி ஓட்டி வருவதாகச் சொன்னான்.

அந்த அரச வம்சத்துப் பெண்மணி மிகவும் சந்தோஷமானார்.

''அதிரதன் வந்து நான் அழைத்துப் போகிறேன் என்று தானாகச் சொன்னதே நல்ல சகுனமாகப் படுகிறது. என்னுடைய தீர்த்த யாத்திரை நல்ல படியாக முடியும் என்று தோன்றுகிறது. வெகு சீக்கிரம் நாம் தீர்த்த யாத்திரைக்குப் போகப் போகிறோம்'' என்று குதூகலமடைந்தாள்.

அவளிடம் அதிரதன் மெல்ல தன் மனைவியையும் அழைத்து வரட்டுமா என்று கேட்டபோது தன்னுடைய சேடி ஒருவரை நிறுத்திவிட்டு அதிரதன் மனைவியை குழுவிலே சேர்த்துக் கொண்டாள்.

ராதையும்,அதிரதனும் தேரின் முன்பக்கம் உட்கார்ந்துகொள்ள நான்கு சக்கரங்களும், நான்கு குதிரைகளும் உள்ள அந்தத் தேர் மெல்ல வடக்கு நோக்கி நகர்ந்தது.

வீட்டை விட்டே அதிகம் வெளிவராத ராதை கணவனோடு தேன் நிலவுக்குப் போவதுபோல முப்பது வயதில் இமயமலைச் சாரல் நோக்கிப் பயணப்பட்டாள்.

அமைச்சரின் மனைவிக்கு உணவு தயாரித்து, கால் அழுத்தி விட்டு தூங்கச் செய்ததும் புருஷனோடு உணவு பகிர்ந்து கொள்வாள். அவனுக்கருகே நெருங்கிப்படுத்துக் கொள்வாள். அவனுடைய பயணக்களைப்பை நீக்கவும் ஓடி ஓடி உதவிகள் செய்தாள்.

''ராதை. நீ வருவது என்றால் நான் மறுபடியும் யுத்த களத்திற்குக்கூடப் போகத் தயார்'' என்று அதிரதன் சொல்ல, ராதை வேகமாக அவன் வாயைப் பொத்தினாள்.

''தீர்த்த யாத்திரை போகும் போது யுத்தம் பற்றிய பேச்சு எதற்கு? கேலிப் பேச்சை நாம் ஏன் பேச வேண்டும்? கேலி பேச்சினால் மனம் மயங்கி மஹான்களை சரியாக பார்க்க முடியாமல் போய்விடப் போகிறது. எனவே மஹான்கள் வரும்போது எனக்கு முறையான வகையில் அறிமுகப்படுத்துங்கள். யார் யார் இன்னார் என்று சொல்லுங்கள். அவர்களை உற்று கவனிக்க இது வசதியாக இருக்கும்.''

''எதற்காக மஹான்களைப் பார்க்க வேண்டும் ராதை?'' அதிரதன் அன்பொழுகக் கேட்டார்.

''நமக்குக் குழந்தைகள் பிறக்க வேண்டுமே. அதற்கான ஆசீர்வாதம் வாங்க வேண்டும். அவர்கள் வாய் திறந்து 'உனக்குக் குழந்தைகள் உண்டு' என்று சொன்னால் நிச்சயமாகக் குழந்தைகள் உண்டு. ''நல்ல மகன் பிறப்பான்'' என்று சொன்னால் நிச்சயமாக நல்ல மகன் பிறப்பான்.''

''ராதை. அவர்கள் ஆசிர்வாதத்தைவிட உன்னுடைய நம்பிக்கை தான் உனக்கு நல்ல குழந்தையைத் தரப்போகிறது'' என்று அதிரதன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டான்.

புருஷனும், மனைவியும் சந்தோஷமாக தங்களோடு பயணப்பட்டு வருவதைக் கண்டு அந்த அமைச்சரின் மனைவியும் சந்தோஷமடைந்தாள்.

அவளும் தன் பங்குக்கு கடவுளின் கதைகளை சொல்லிக் கொண்டு வந்தாள்.

கயிலாய பர்வதம் தங்கம் போல் தகதகத்தது.

தேரை வெகுதூரத்தில் நிறுத்தி வைத்துவிட்டு மூட்டைகளைச் சுமந்து கொண்டு சேடிகள் அமைச்சரின் மனைவியை அழைத்துவர மிகுந்த கடினத்துடன் முதுகும், இடுப்பும் வலிக்க அதிரதனும் ராதையும் நடந்து கொண்டிருந்தார்கள்.

மிக அருகே போய் கயிலாயத்தைத் தரிசனம் செய்தார்கள்.

தங்கம் வெள்ளியாகி வெள்ளி வெள்ளையாகி மிகப்பெரிய ஓர் ஒளிமாற்றம் தெரியும்பொழுது இறைவனே... இறைவனே... என்று கைகூப்பினார்கள். பூமிக்கு விளக்கான சூரியனே என்று வணக்கம் சொன்னார்கள். கயிலாயத்தை கண் வழியே காண்பித்த பெருஞ்சுடரே வாழி என்று கதிரவனுக்கு நன்றி சொன்னார்கள்.

வெப்பமுள்ள கரங்களால் பனிமலையை உருக்கி கங்கை என்கிற அற்புதமான புண்ணிய நீரைப் பரத கண்டத்திற்கு அனுப்புகின்ற பாஸ்கரா போற்றி என்று நமஸ்கரித்தார்கள்.

எங்கும் வெளிச்சமாக இருந்த நேரத்தில் அதிரதன் அர்க்யம் விட அவன் தோளைத் தொட்டுக் கொண்டு ராதை நின்றாள்.

''நான் செய்த இந்த பூஜையின் பலன்கள் நல்லோர் அனைவருக்கும் போகக்கடவது. உலகத்தில் நல்ல விஷயங்கள் நடக்கக்கடவது. உலகத்தினுடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கி உத்தமமானவர்கள் தோன்றக் கடவது'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

பகலவன் நெகிழ்ந்து போனான். மனம் குளிர அவர்களை ஆசிர்வதித்தான். ''உங்களுக்கு நோயே வராது'' என்று உச்சி தொட்டான்.

கயிலாய பூமியில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தபொழுது அவர்கள் கனவில் அந்தண வடிவில் அவர்களிடம் ஒரு மரக்கன்றைக் கொடுத்தான்.

கனவு கண்ட கணவனும், மனைவியும் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

''என்ன இது? யாரோ ஓர் அந்தணன் வந்து பசு மரக்கன்றைக் கையிலே கொடுக்கிறார். என்ன அர்த்தம் இதற்கு?'' என்று வியந்து கேட்டார்கள்.

''எதையோ நீ வளர்க்க வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு உனக்குத் தரப்பட்டிருக்கிறது'' என்று அமைச்சரின் மனைவி பதில் சொன்னாள்.

என்ன பொறுப்பு என்று தெரியவில்லையே என்று கேள்வியோடு கணவனும் மனைவியும் ஊர் திரும்பினார்கள்.

ராதை அவளுடைய ஜனங்களுக்கு நடுவே உயர்வாகப் பேசப்பட்டாள். அவளுடைய கயிலாய யாத்திரை பற்றி எல்லாரும் கேள்வி கேட்டார்கள்.

அவளைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுப் போனார்கள். குழந்தை இல்லையே என்று குறை சொன்னவர்கள்கூட அவளிடமிருந்து சாளக்ராமம் வாங்கிக் கொண்டு போனார்கள்.

கணவனின் மீது இருக்கிற பிடிப்பும், அதனால் ஏற்படுகிற யாத்திரையும், அந்த யாத்திரைக்குப் பிறகு ஏற்படுகின்ற நிறைவும் வாழ்க்கையில் என்ன குறைகள் இருந்தாலும் அதைத் தகர்த்து விடுகின்றன என்பதை புருஷனும், மனைவியும் உணர்ந்தார்கள்.

மறுபடியும் யாத்திரை போக வேண்டுமென்று விரும்பினார்கள். இன்னும் மென்மையாகவும், அமைதியாகவும், கூர்மையாகவும்

நடந்து கொண்டார்கள். எல்லாரையும் உற்றுப் பார்க்கக் கற்றுக் கொண்டார்கள்.

எல்லார் நெஞ்சுக்குள்ளும் கடவுள் இருப்பதைத் தெளிவாய் உணர்ந்தார்கள். மலையை மட்டுமன்று, கதிரவனை மட்டுமன்று எல்லா பூதங்களையும் வணங்கி பணிவோடு இருக்க வேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

நடக்கும்போது காற்றையும், வெளியையும் வணங்கினார்கள். நதியில் இறங்கியவுடன் நதியை மனதார நேசித்து ஆசீர்வாதம் கேட்டார்கள். கரையேறியதும் பூமியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். 'என்ன கருணையடி உனக்கு' என்று நிலமகளைக் கொஞ்சினார்கள்.

நெருப்பில் உணவு போடும்போது ''இது உனக்கு உணவாகட்டும்', என்று உலர்ந்த கட்டைகளை நெருப்பிலிட்டு வளர்வாயாக என்று வணங்கினார்கள். வாழ்த்துவாயாக என்று பணிந்தார்கள்.

தங்கத்தகடு போல் மனமும் உடலும் பிரகாசிக்க ஓர் உச்சகட்ட சந்தோஷத்தில் இடையறாது இருந்தார்கள்.

கைகோத்தபடி புருஷனும், மனைவியும் நதியில் மூழ்கி சாளக்ராம பூஜைக்காக ஆயத்தம் செய்ய தொலைவில் பெட்டி ஒன்று வருவதைக் கண்டார்கள். எதேச்சையாய்த் திரும்பிப் பார்த்தார்கள்.

பெட்டிக்குள் என்ன இருக்கிற தென்று தெரியவில்லை. ஆனால் ஏதோ அற்புதமான விஷயம் இருக்கிறது என்று இரண்டு பேருக்கும் பட்டது.

நதிநீரில் பலதும் அடித்துச் செல்லும். எல்லாவற்றையும் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதுதான் அவர்களுக்குச் சொல்லப்பட்ட விஷயம்.

ஆனால், அந்தப் பெட்டியின் இருப்பு பார்த்ததும் அதன் அசைவு பார்த்ததும் அதற்குள் அரிய பொருள் இருப்பதாய்த் தெரிந்தது.

அதிரதன் நீரில் பாய்ந்தான். பெட்டியை நோக்கி நீந்தினான். நெஞ்சளவு நீரில் ராதையும் நின்று கொண்டு கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

அதிரதன் பெட்டியைத் திசை திருப்பினான். ராதையை நோக்கி நகர்த்தினான். பெட்டி அதிரதனிடமிருந்து நகர்ந்து வேகமாக கயிற்றால் இழுக்கப்பட்டது போல் ராதையிடம் போயிற்று. போய் அவள் நெஞ்சை முட்டியது.

அவள் பெட்டியை இழுத்துக் கொண்டு கரையேறினாள். அதிரதன் வந்து பெட்டியைப் பிடித்தான். மெல்ல மேலே மூடியிருந்த துணியை விலக்கிப் பார்க்க உள்ளே தங்க விக்ரஹம் போல் குழந்தை இருந்தது.

முகத்தில் சூரிய ஒளி பட்டதும் வாய் விட்டுச் சிரித்தது. மேலே போட்டிருந்த துணியை விலக்கி அள்ளி எடுத்துக் கொண்டதும் உடம்பெல்லாம் சூரிய ஒளி படப்பட இன்னும் குதூகலித்தது. சுறுசுறுப்பாயிற்று. அதன் முகம் அநேக ஒளிபட ஒளிபட அதிகம் பிரகாசமாவதை அதிரதன் உணர்ந்தான்.

குழந்தைக்கு அதிரதனும், ராதையும் வசுசேனன் என்று பெயரிட்டார்கள். வசு என்றால் செல்வம். சேனன் என்றால் கொண்டு வந்து சேர்த்தவன்.

செல்வத்தைக் கொண்டு வந்து சேர்த்தவன் என்று அவனைக் கொண்டாடினார்கள்.

பெட்டி நிறைய நவரத்தினங்களும், தங்க நாணயங்களும் இருந்தன. ஒரே நாளில் அதிரதன் பணக்காரனானான். இனிமேல் வேலைக்குப் போக வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. அரசு ஊழியம் தேவையில்லாமல் போயிற்று.

குழந்தையோடு கிடைத்த காசுக்கு தன்னுடைய கிராமத்தை சரி செய்தான். தெருக்களை ஒழுங்குபடுத்தினான். எல்லார் வீட்டிற்கும் கூரை வேய்ந்து கொடுத்தான். உண்ண உணவும், நல்ல உடையும் ஏற்பாடு செய்தான். குழந்தைகள் படிப்பதற்கு ஆசிரியர்களை நியமித்தான்.

குந்தியின் மகன் வசுசேனன் மூலம் கிடைத்த செல்வத்தால் அந்தக் கிராமம் பிரமாதமாய்த் திகழலாயிற்று.

கூடையோடு குழந்தை கொண்டு வந்த செல்வத்தால் ஊர் மாறிற்று. மாறிய ஊரில் வசுசேனன் என்ற கர்ணன் மிகச் செழிப்போடு சந்தோஷத்தோடு வளர்ந்து வந்தான்.

குழந்தைக்கு இரண்டு வருடம் ஆனபோது அவனைத் தூக்கிக் கொண்டு கோயிலுக்கு ராதை போக, உடம்பெல்லாம் நகைகள் போட்டு அலங்கரித்திருக்க, எதிரே வந்த முனிவர்கள் குழந்தையின் ஒளி கண்டு, நின்று அவன் தலையைத் தடவினார்கள். ஆசீர்வாதம் செய்ததை குழந்தை வியப்போடு பார்த்தது.

நெற்றியிலிருக்கும் சுட்டியை இடக்கையால் பிடுங்கி வலக்கைக்கு மாற்றி இந்தாருங்கள் என்று முனிவருக்குக் கொடுத்தது. முனிவர் அதிர்ந்தார்.

''இவன் வள்ளல். மிகப் பெரிய வள்ளல். சூரிய சந்திரர்கள் இருக்கும்வரை அழியாத பெயர் கொண்ட வள்ளல்'' என்று அந்த முனிவர் கூவினார்.

குழந்தையின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

ராதையும், மற்றவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

க்ஷத்திரிய குலத்தின் அட்டகாசங்கள் மெல்ல மெல்ல அதிகமாகி வந்தன. அவர்களின் வேகத்திற்கு நான்காவது வர்ணம் ஈடுகொடுக்க முடியாமல் தவித்தது.

இடையறாது போர்களும், பயணங்களும் அதற்காக தேரோட்டிகளைத் துன்புறுத்துவதும், தேரோட்டிகள் பயந்து ஊரைவிட்டு ஓடுவதும், ஊரைவிட்டு ஓடிய தேரோட்டிகளைத் தேடி அரசகுமாரர்கள் வீட்டிற்கு வருவதும், வீட்டிலுள்ள பெண்களை மிரட்டுவதும், அடிப்பதும் தினந்தோறும் நடந்து வந்தன.

குதிரைசத்தம் தொலைதூரத்தில் கேட்டாலே அந்தப் பகுதி மக்கள் பயந்து அலறத் தொடங்கினார்கள். கதவு தட்டினாலே என்ன அது என்று கிலியோடு பார்த்தார்கள். இது பற்றி அந்தணர்களிடம் முறையிட்ட போது வேறு வழி என்ன? அரசன் சொல்படி அடங்கியிருத்தல்தான் உங்களுடைய கடமை. நீங்கள் தப்புவது இயலாது. இது தலைவிதி'' என்று பதில் வந்தது.

வசுசேனன் என்று அழைக்கப்பட்ட கர்ணன் மனம் புழுங்கினான். நான்காவது வர்ணத்தின் அவல நிலையைப் பார்த்துத் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டான்.

''வாருங்கள் நாமும் க்ஷத்திரியர் ஆவோம். நாமும் வில்வித்தை பழகுவோம். நாமும் மற்போர் செய்வோம். நாமும் யானை யேற்றமும், குதிரையேற்றமும் கற்போம்'' என்று அழைத்தபோது அவர்கள் வர மறுத்து விட்டார்கள்.

''இதையெல்லாம் எங்களால் கற்கமுடியாது'' என்றார்கள். நாலு எழுத்து படிக்கலாம் என்று சொன்னாலும் ஆர்வம் காட்டாமல் இருந்தார்கள்.

''நான் வில் வித்தை படிப்பதற்கு வெளிதேசம் போகிறேன். என்னோடு வருபவர் உண்டா?'' என்று அழைத்தபோது அவர்கள் பின் தொடராமல் மௌனமாய் நின்றார்கள்.

''யார் நமக்குக் கற்றுக் கொடுப்பார்கள்'' என்று கேட்டார்கள்.

''பரசுராமர் என்கிற மிகப்பெரிய ஆசிரியர் இருக்கிறார் அற்புதமானவர். அவரிடம் கற்றுக் கொள்ளலாம்'' என்று கர்ணன் சொன்னான்.

''இல்லை. பரசுராமர் நம்மையெல்லாம் மதிக்கவே மாட்டார்'' என்று சொன்னார்கள். நம்மோடு பேசுவதற்கே விருப்பப்படமாட்டார் என்று விலகி நின்றார்கள்.

''இல்லை. எப்பாடுபட்டாவது ஏதேனும் ஒரு விதத்தில் வில்வித்தை கற்றுத்தான் ஆகவேண்டும். கற்றுத்தர மாட்டேன் என்றால் கற்றுத் தருவதற்கு எல்லாவிதமான உபாயங்களையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.'' அதன்படி நடக்க வேண்டும் என்று கர்ணன் வேகமாகச் சொல்ல அவனைப் பின் தொடர எவருக்கும் மனமில்லை. மறுத்து விட, கர்ணன் மட்டும் தனியே பரசுராமரை நோக்கி நடந்து போனான்.

இவர்கள் வரமாட்டார்கள். இவர்களை அழைத்துப் போவது என்பது இப்போது முடியாத காரியம். ஆனால் ஒன்று செய்யலாம். இவர்களுக்கு பாதுகாப்பான ஆளாக மாறலாம். வில்வித்தை கற்று வந்து சகல வித்தைகளையும் கற்று இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து க்ஷத்திரியர்கள் இவர்கள் மீது கைவைத்தால் அந்தக் கைகளைத் துண்டிக்கும் வண்ணம் துணிவு நாம் பெறலாம். நம்மைக் கண்டு க்ஷத்திரியர்கள் மிரண்டு போகும் படியான தகுதியை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம். இவர்களிலிருந்து ஒருவர் கிளம்பினால் கூடப் போதும். இவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துப் போகலாம். சரியான தலைமையில்லாமல் தான் இவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். உறுதியான அரசன் இல்லாமல்தான் இவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கென்று ஒரு தலைமை ஏற்பட்டால் வெகுநிச்சயமாய் இவர்கள் முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைப்பார்கள்.

எல்லாவித பயங்களையும் ஒதுக்கிவிட்டு தங்களை வலிவு ஏற்படுத்திக் கொள்ளும் வகையைத் தேடுவார்கள். நான் அதற்குண்டான தகுதியை முதலில் பெறவேண்டும். என் வழியை இவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று வேகமாய் பரசுராமரை நோக்கி நடந்தான்.

''முகம் சூரியனைப் போல் பிரகாசிக்கிறது. நெற்றி மேடாக இருக்கின்றது. மூக்குக் கூர்மையாக இருக்கிறது. கைகள் நீண்டு இருக்கின்றன. உடம்பு வில் போல் வளைகின்றது. உறுதி இருக்கின்றது. ''எப்படி பதினைந்து வயது இருக்குமா உனக்கு? நீ அங்க லட்சணங்களில் மிக நேர்த்தியாக இருக்கிறாய். உன் பெயர் என்ன?'' பரசுராமர் அமர்ந்தபடி அவனுடன் பேசினார்.

அவன் வசுசேனன் என்னு பெயர் சொன்னான்.

''எதற்கு இங்கே வந்திருக்கிறாய்?'' என்று கேட்டபோது ''வில்வித்தை கற்க வந்திருக்கிறேன்'' என்று பதிலிறுத்தான்.

''அப்படியா? நான் அந்தணர்களுக்கு அல்லாது வேறு எவருக்கும் வில்வித்தை கற்றுத் தருவதில்லை. குறிப்பாய் க்ஷத்திரியர்களுக்குக் கற்றுத் தருவதேயில்லை. க்ஷத்திரியர்களைப் பழிவாங்க வேண்டுமென்பது என் விருப்பம். க்ஷத்திரியர்களை அடக்கி வைக்க வேண்டுமென்பது என்னுடைய அவா. க்ஷத்திரியர்களின் கொட்டத்தை வேரறுக்கவே நான் பிறந்திருக்கிறேன். எனவே க்ஷத்திரியர்களுக்கு நான் வில்வித்தை கற்றுத்தர இயலாது.''

''ஐயனே. நான் க்ஷத்திரியன் அல்லன்.''

''அதைப் பார்த்தாலே தெரிகிறது. உன் முகத்தில் சாந்தம் இருக்கிறது. மெல்லிய பயம் இருக்கிறது. உன் உடம்புகளில் பெரிய தழும்புகளும் ஏதுமில்லை. தோளில் அம்பறாத்தூணி மாட்டிய தடம் இல்லை. கைகளில் வில் பிடித்த தழும்புகள் இல்லை. குதிரை மட்டும் ஓட்டப் பழகியிருக்கிறாய் என்று நினைக்கிறேன். நீ எந்தக் குலம்?'' என்று கேட்டபோது 'அந்தணன்' என்று அவன் தயங்காது பதில் சொன்னான். அவன் சார்ந்த தேரோட்டி குலத்திற்காகப் பொய் சொன்னான்.

''குதிரை ஓட்டப் பழகினாயா?''

"ஆமாம். பல க்ஷேத்திரங்களுக்குப் போய் பல சாதுக்களையும் தரிசனம் செய்ய விரும்பினேன். அதற்காக குதிரை ஏற்றம் பழகினேன்" என்று கர்ணன் பொய் சொன்னான்.

"நல்லது. உனக்கு நான் வித்தை சொல்லித் தருகிறேன். அந்தணர்களிலிருந்து ஒருவன் க்ஷத்திரியர்களை அழிக்க கிளம்பினான் என்ற நற்பெயர் என்னால் உனக்கு வரட்டும்" என்று ஆசிர்வாதம் செய்தார்.

அவனுக்கு வித்தை கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். வில்பிடிக்கவும், அம்பு தொடுக்கவும்,இழுத்து நிற்கவும், அசையாது விடவும் கற்றுக் கொடுத்தார்.

அவன் சூரியனுடைய பிள்ளை. கதிரவன் வித்து. நெருப்புபோல் சகலமும் அறிந்து கொண்டான். அவர் சொல்லும் முன்பு புரிந்து கொண்டான். அவர் விடுவதைப் பார்த்து அவரை விட நேர்த்தியாக அம்பை எய்தான்.

அவர் வாள் பிடித்ததைப் பார்த்ததும் அவருக்கெதிரே வாள் பிடித்து நின்றான். அவர் எப்படி வீசுகிறார் என்ற கணக்கு அவனுக்குள் வந்தது. ஓடிய குதிரையில் அந்த அந்தணர் தாவி ஏறியதும், யானையின் பெயர் சொல்லி அழைத்து அதன் கன்னத்தில் அறைந்து நிறுத்தியதும் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

அந்த மந்திரங்களை அவர் காதில் சொல்ல அவன் கற்றுக் கொண்டான்.

கெட்டிக்காரத்தனமான ஓர் அந்தணரைப் பார்த்து அவர் சந்தோஷப்பட்டார்.

இவ்வளவு சுறுசுறுப்பான, கூர்மையான புத்தியையுடைய அந்தணனை நான் பார்த்ததே இல்லை. ஆனால் பகல் நேரம் இருக்கிற சுறுசுறுப்பு இரவு நேரம் இல்லையே ஏன்?" என்று கேட்டார்.

''கதிரவனைப் பார்த்தாலன்றி எனக்கு வலு வரவுமில்லை. கதிரவன் இல்லையெனில் நான் சோர்ந்து போய் விடுகிறேன்'' என்று அவன் பதில் சொன்னான்.

''ஆமாம். இருட்டு உனக்குப் பிடிக்கவில்லை என்பதை அறிந்தேன். கோடை காலங்களில் மற்ற எல்லா உயிரினங்களும் சுருண்டு கிடக்க நீ மட்டும் துள்ளித் திரிந்து கொண்டிருக்கிறாய். சூரியனோடு சிநேகமாக இருக்கிறாய். நீ அந்தணன் என்பதில் சந்தேகமேயில்லை. அந்தணனைத் தவிர வேறு யார் சூரியனோடு இவ்வளவு சிநேகமாக இருக்க முடியும்'' என்று புன்னகை செய்தார்.

வசுசேனன் என்கிற கர்ணன் மௌனமாய் அவரைப் பார்த்தபடி நின்றான்.

அவனுக்கு அவன் பொய் உறுத்தவில்லை. எந்தக் குற்ற உணர்வும் ஏற்படவில்லை.

மாறாய் க்ஷத்திரியர்களின் அட்டகாசத்தால் தாக்கப்படும் தன் குலத்தோரின் முகங்களே நினைவில் நின்றன.

'நான் அந்தணனல்லன். அந்தணனாகவும் விருப்பமில்லை. நான் தேரோட்டி. நான்காவது வர்ணம். வேரில் பழுத்த பலா. அரணியில் உள்ள நெருப்பு. மனத்துள் பல் கடித்தான்.

## 3

தேவலோகத்தின் விளிம்பில் இந்திரனும், சூரியனும் சந்தித்துக் கொண்டார்கள். தேவர்களின் அதிபதியான இந்திரன் சூரியனைச் சொடுக்கி அருகே வருமாறு சொன்னான்.

சூரியன், அந்த அழைப்பிலுள்ள கர்வத்தைப் பார்த்துவிட்டு ஏளனமாய்ச் சிரித்தான். இந்திரனின் அருகே போனான்.

''ஏன். நான் உன்னைச் சொடுக்கி அழைக்கக் கூடாதா? எதற்கு முகம் சுளிக்கிறாய்?''

இந்திரன் மறுபடியும் கர்வத்தோடு கேட்டான்.

''ஞானமுள்ளவன் மற்றவரை அப்படி அழைக்கமாட்டான். எனவே உங்களுக்கு எப்போது ஞானம் வரும் என்று தெரியவில்லையே என்ற அலுப்போடுதான் முகம் சுளித்தேன்'' என்று சூரியனின் நேர்முகமாகத் தாக்கினான்.

''என்னைவிட நீங்கள் அதிக ஞானம் மிக்கவரோ?''

இந்திரன் சூரியனை விசாரித்தான்.

''உங்களுக்கு இதில் சந்தேகம் இருப்பதே நீங்கள் ஞான மில்லாதவர் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.''

''உன்னைப் பற்றிப் பேசுவது இருக்கட்டும். உன்னுடைய பிள் ளையை ஏன் சரியாக வளர்க்கவில்லை? ஒரு வேளை ஞானமுள்ள வர்களின் பிள்ளைகள் தறுதலைகளாகத்தான் இருப்பார்களோ?''

இந்திரன் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''உன் சக்தியாய், உன் அம்சமாய்ப் பிறந்த கர்ணன் அநாதையாய் வாழ்கிறான். அவன் தேரோட்டியாக வளர்கிறான். குருவிடம் கூட ஏன் பொய் சொல்லித் திரிகிறான்?'' என்று கேட்டான்.

சூரியனுக்கு, தன் அம்சமான வசுசேனன் என்று அழைக்கப்படும் கர்ணனின் வளர்ச்சி முன்பின்னாக இருப்பது கவலையாகத்தான் இருந்தது.

''என்ன, திடீரென்று நான் சொன்னதும் கவலை வந்துவிட்டதா ஞானியே? என்னுடைய மகன் எப்படி வளர்கிறான் என்று பார்க்கிறாயா? பார்.''

இந்திரன் கைவீசிக் காட்ட பூமியில் அர்ஜுனனுக்குக் கிடைத்த எல்லாச் சௌகரியங்களும் சூரியனுக்குப் புலப்பட்டன.

''அரச குமாரனாக வளர்வதைப் பார்க்காதே. அவன் ஆச்சார்யனைப் பார். எவ்வளவு அற்புதமான ஓர் ஆச்சார்யன் அர்ஜுனனுக்குக் கிடைத்திருக்கிறான் பார். இந்திரனுடைய அம்சத்திற்கு, இந்திரனுடைய பிள்ளைக்கு எதுவும் சாதாரணமாகக் கிடைக்காது. உலகில் மிக உயர்ந்த விஷயங்கள்தான் கிடைக்கும். நாடோடியாகத் திரிகின்ற பரசுராமருக்கு இன்னொரு நாடோடி சிஷ்யனாகப் போய்ச் சேர்ந்திருக்கிறான். அதுவும் மிகப்பெரிய பொய் சொல்லிச் சேர்ந்திருக்கிறான்'' சொல்லிவிட்டுச் சிரித்தான் இந்திரன்.

சூரியன் தலைகுனிந்தான்.

அந்த இடம்விட்டு நகர்ந்து தன் பாதையில் அமர்ந்து கொண்டான். சட்டென்று உருமாறி ஓர் அந்தணனாக இறங்கினான். அங்கே கர்ணன் வெயிலில் படும்படி படுத்துக் கொண்டிருந்தான்.

கர்ணனை அணுகினான்.

''கர்ணா'' என்று கூப்பிட்டான்.

கர்ணன் விழித்தான்.

''நிதானமாய் எழுந்திரு'' என்று பரிவுடன் சொன்னான்.

கர்ணன் அந்த அந்தணனை உற்றுப் பார்த்தான். அவனுக்கு சூரியன் ஞாபகம் வந்தது. கைகூப்பினான்.

''சுடர்போல ஒளி வீசுகின்ற ஞானியே. உன்னை நமஸ்கரிக் கிறேன்'' என்று ஸ்தோத்திரம் செய்தான்.

அவன் புகழ்ச்சியால் சூரியனின் மனம் விம்மிற்று.

இந்திரன் செய்த அவமானங்கள் மறைந்து போயின.

''நான் யார் தெரியுமா, கர்ணா?''

''தெரியும். நீங்கள் என் தேவதை, என் அதிபதி. என் தந்தைக்கு ஒப்பானவர். என் சிருஷ்டி கர்த்தா. நீங்களே எனக்கு எல்லாம். என்னை

நேரே வந்து ஆசிர்வாதம் செய்த சூரியனே. உம்மை நமஸ்கரிக்கிறேன்.''

வலம் வந்து நமஸ்கரித்தான்.

சூரியன் மிகுந்த சந்தோஷமடைந்தான். கர்ணனை ஆரத்தழுவிக் கொண்டான்.

''கர்ணா எல்லாம் சரி. ஏன் பரசுராமரிடம் பொய் சொல்லி வித்தை கற்கிறாய்? பரசுராமருக்குத் தெரிந்தால் என்ன ஆகும் என்று புரியவில்லையா? அவர் கோபம் உலகப் பிரசித்தம் பெற்றது. கோபமுள்ள குருவிடம் போய்ப் பொய் சொல்லி ஒரு சீடன் பாடம் கேட்டால் அந்தச் சீடன் கதி என்றேனும் ஒரு நாள் நிர்மூலம் ஆகிவிடாதா? தவறு செய்கிறாயே கர்ணா'' கவலைப்பட்டார்.

''அதிபதியே பரசுராமர் நான்காவது வருணத்திற்குப் பாடம் சொல்லித் தருவதில்லையே. அவர் பார்க்கக்கூட மறுத்து, திருப்பி அனுப்பி விடுவாரே.''

''இல்லை கர்ணா. பரசுராமரைப் போன்றவர்கள் அவ்விதம் செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு க்ஷத்திரியர்கள் மீதுதான் கடுங்கோபம். க்ஷத்திரியர்களை அழிக்க எவர் முன் வந்தாலும் அவருக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்வார்கள். க்ஷத்திரியரை அழிக்க அவர் அந்தணரைத் தேர்ந்தெடுத்தார். அகம்பாவத்திலும், அட்டகாசத்திலும் வரைமுறையற்றுப் போன க்ஷத்திரியர்களால் உலக அமைதி கெடுகிறது என்று அவர்களைத் தண்டிப்பதற்குத் தான் இடையறாது முயற்சி செய்து கொண்டிருக்கிறார். எங்கு எவன் பலசாலியாகத் தலை தூக்கினாலும் அங்கு அவர் போய் அவன் கர்வத்தை அழித்து ஒடுக்குகிறார். எனவே நீ க்ஷத்திரியர்களுக்கு எதிராகத் துணிந்து விட்டாய் என்று தெரிந்தால் உனக்கு முழுமூச்சோடு மற்ற எல்லாருக்கும் சொல்லிக் கொடுப்பதைவிட அதிக கவனத்தோடும், அக்கறையோடும் வில்வித்தை கற்றுத் தருவார். எனவே உடனடியாய் உன் குற்றத்தை ஒப்புக்கொண்டு உன்னுடைய

குலத்தைச் சொல்லி க்ஷத்திரியர்களுக்கு எதிராக நீ போர் செய்ய விரும்புகிறாய் என்ற காரணத்தையும் அவருக்குக் கூறு.''

''இல்லை அதிபதி. நான் ஒரு பொய்யைச் சொல்லத் தொடங்கிவிட்டேன். அதைத் தொடர்ந்து சொல்வது நல்லதென்றே நினைக்கிறேன். அது மட்டுமல்லாது ஒரு வேளை இந்தப் பொய்யை நான் சொன்னதற்காகவே என்னைப் பரசுராமர் தண்டிக்கலாம். பாடத்தைப் பாதியில் நிறுத்தித் துரத்திவிடலாம். பரசுராமருடைய ஆசாரம் பற்றி நான் நன்றாக அறிவேன். அந்தணர்களை மேம்பாடு செய்வதுதான் அவருடைய குறிக்கோள். அந்தணர்களுக்கு எதிராக எவர் நின்றாலும் அவர்களை அழிப்பதுதான் அவருடைய பணி. அதற்காக வேறு குலத்தவரை அவர் கைதூக்கி விடமாட்டார். க்ஷத்திரியர்களை அழிக்க அந்தணர்களைப் பயன்படுத்துவாரே தவிர நான்காவது வருணத்தினரை மேலே கொண்டு வந்து விடமாட்டார். அப்படி கொண்டு வந்தால் அந்தணர்களை அழிக்க அவர்களும் துணிந்து விடுவார்கள் என்று பயப்படுவார்.

விவேகமுள்ள அந்தணருக்குத்தான் வீரம் கைவர வேண்டும் என்று அடிக்கடி சொல்வார். விவேகமற்ற க்ஷத்திரியர்களுக்கு இருக்கின்ற வீரம் நசுக்கப்பட வேண்டும் என்றும் கூறுவார். எனவே இனிமேல் போய் என்னுடைய குலத்தைச் சொன்னால் அங்கு எனக்குப் பாடம் தொடரப்பட மாட்டாது.

நான் நல்ல பக்குவத்திற்கு வந்து விட்டேன். என் மீது முழு நம்பிக்கை வைத்து பல விஷயங்களை அவர் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் அதைக் கெடுக்க விரும்பவில்லை அதிபதியே. என்னை மன்னிக்க வேண்டும்'' என்று பணிவோடு கூறினான்.

சூரியன் அந்தப் பேச்சிலுள்ள உண்மையைப் புரிந்து கொண்டு மௌனமாய் இருந்தான். சூரியனை, கர்ணன் பலவாறு ஸ்தோத்திரம் செய்தான்.

''எது குறித்து இந்தக் கவலை? ஏன் என்னைப் பற்றிய வாட்டம்? நான் நன்றாகத் தேறி வரமாட்டேன் என்ற பயமாயிருக்கிறதா? பரசுராமரிடமிருந்து எவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டுமோ அத்தனையும் நான் கற்றுக் கொள்வேன். அஞ்ச வேண்டாம்.''

''இல்லை கர்ணா. என் கவலை உன்னைப் பற்றி மட்டுமல்ல. க்ஷத்திரிய குலத்தில் இந்திரனுடைய அம்சம் வளர்கிறான். அவனுக்கு அர்ஜுனன் என்று பெயர். அவன் வளர்ச்சி பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது. அவனைப் பற்றி இந்திரன் என்னிடம் காட்டி கர்வப்படுகிறான்.''

''நானும் கேள்விப்பட்டேன். வில்வித்தையில் மிகப்பெரும் திறமைசாலியாக இருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். ஆனால் இந்திரனைப் போலவே அலட்டலாகவும், அசூயை மிக்கவனாகவும் இருக்கிறான். இருந்துவிட்டுப் போகட்டும். அரசன். அதுவும் இந்திரனுடைய அம்சம் என்றால் அது தலை விரித்துத்தான் ஆடும்.

அதிபதியே... என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள். நான் இருட்டிலும் பலமுள்ளவனாக இருக்க வேண்டும். உங்கள் ஒளி உள்ளுக்குள்ளிருந்து என்னை வளர்க்க வேண்டுமென்று என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள்.''

சூரியன் அவனை ஆசிர்வதித்துவிட்டு ''கவனமாய் இரு'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

சூரியன் தழுவலால் கர்ணன் மிகுந்த தேஜஸ்வியாக விளங்கினான். சில சமயம் பரசுராமரே வியக்கும் வண்ணம் அவன் வித்தைகளைக் கற்றுக் கொண்டான். அவரை விடத் திறம்பட அம்பை எய்தான். அவரைவிடத் திறம்பட குதிரை ஓட்டினான்.

அவன் கண் இமைத்தால் யானைகளும், மற்ற மிருகங்களும் நின்றன. விலகிப் போயின. பூரிப்போடு இருந்த சீடனைப் பார்த்து பரசுராமர் பெருமிதம் கொண்டார்.

சீடன் என்ற இடத்திலிருந்து அவனை மாற்றி, அவனை மகனைப்போல் நடத்தினார். அவன் தோளில் கை போட்டுக் கொண்டு நடந்தார். அவனை முதுகு தேய்த்து விடச் சொன்னார். உணவு பரிமாறச் சொன்னார். அப்படி நடக்கும்போதும், குளிக்கும்போதும், உணவு பரிமாறும்போதும் அவனுக்கு ரகசியமான பல வித்தைகளைச் சொல்லிக் கொடுத்தார். உறங்கும்போது கால் பிடித்து விடச் சொன்னார்.

உலக வாழ்க்கையின் சூட்சுமங்களை விவரித்தார்.

ஒரு நாள் பகல் உச்சி வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. புல்வெளியில் கர்ணன் திரிந்து கொண்டிருந்தான். அவன் உடம்பின் பளபளப்பு அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் உணவு முடித்துவிட்டு திண்ணையில் உட்கார்ந்தார். உடம்பு சாய்த்தால் நல்லது என்று தோன்றியது. தலை வைப்பதற்குக் கல் தேடினார். கல்லைக் காணோம். கர்ணனைக் கூப்பிட்டார். கர்ணன் வந்ததும் ''இங்கு உட்கார். உன் மடியில் படுத்துத் தூங்குகிறேன்'' என்று சொன்னார்.

கர்ணன் அமர்ந்து கொண்டு கையில் விசிறியால் மெல்ல அவருக்கு விசிற, அவர் அவன் மடியில் தலை வைத்து ஒருக்களித்துப் படுத்தார். கர்ணனின் சீரான விசிறல் அவரை உறங்க வைத்தது.

கர்ணன் உடம்பிலிருந்து வந்த நறுமணம் அவரை மெல்லிய மயக்கத்தில் ஆழ்த்தியது. மிக அற்புதமான சீடனை நாம் கொண்டு விட்டோம் என்ற சந்தோஷம் அவரை நல்ல தூக்கத்தில் ஆழ்த்தியது.

துரோணருக்கும் அர்ஜுனனுக்கும் உள்ள நெருக்கத்தை, பரசுராமருக்கும் கர்ணனுக்கும் உள்ள நெருக்கத்தோடு இந்திரன் ஒப்பிட்டுப் பார்த்தான்.

பரசுராமருக்கும், கர்ணனுக்கும் உள்ள நெருக்கம் மிகப்பலமாக இருந்தது.

அறிவுத்திறனை எடை போட்டுப் பார்த்தான். கர்ணனுடைய அறிவுத் திறன் மிக உயர்ந்த நிலையில் இருந்தது.

வலுவை ஒப்பிட்டுப் பார்த்தான். அர்ஜுனனால் கர்ணனை தாக்குபிடிக்க முடியாது என்று தோன்றியது.

கர்ணனுடைய பலத்தை குறைக்க வேண்டும். அர்ஜுனனை அழிவிலிருந்து தப்ப வைக்க வேண்டும் என்று இந்திரன் எண்ணினான்.

ஓர் அரக்கனை அழைத்து அவனை வண்டாக உருமாற்றி மறுபடியும் அரக்க ரூபம் வேண்டுமென்றால் கர்ணனுடைய தொடையைத் துளைத்துவிடு என்று கட்டளையிட்டான்.

வண்டு மெல்லப் பறந்து சட்டென்று கர்ணனுடைய தொடையின் அடியில் போயிற்று. மரத்துப்போகும் உமிழ்நீரை உமிழ்ந்தது. மெல்ல ஓட்டை போட்டது. உள்ளுக்குள் போயிற்று. நகர்ந்தது.

மரத்துப் போனதால் முதலில் தெரியவில்லை. பிறகு உடம்பில் ஏதோ மாற்றம் ஏற்படுவதை அறிந்து தொடையில் கை வைக்க ரத்தம் வழிவது தெரிந்தது. வலி ஏற்பட்டது. வண்டு குடைந்து கொண்டு உள்ளே போவதைக் கர்ணன் அறிந்தான். வண்டு மேலேறுவதை உணர்ந்தான். மேல் தொடை வழியாக வண்டு கிழித்துக் கொண்டு வருவதையும் மறுபடியும் துளையைப் பெரிதாக்குவதையும் பார்த்தான்.

தொடையைத் தூக்கினால் குருதேவருடைய தூக்கம் கெடும் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தான். ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. மெல்ல தரையெல்லாம் படர்ந்தது. கர்ணனின் காலெல்லாம் ரத்தமாகியது. வளைந்து முதுகுப் பக்கம் போய், பரசுராமருடைய முதுகைத் தொட்டது.

ஏதோ ஒரு சூடும், குளுமையுமான ஒரு திரவம் முதுகில் படுவதைப் பார்த்து பரசுராமர் மெல்லப் புலன்களை நினைவிற்குக் கொண்டு வந்தார். கண் விழிக்கும் முன்பு நாசி விழித்துக் கொண்டது. அருகே ரத்தவாடை அடிப்பதைப் பார்த்தார்.

சட்டென்று கண் விழித்தார்.

'யார், ஏன் ரத்தம்? யாராவது எதிரிகள் வருகிறார்களா?' கண் மூடித் தேடினார். யாரோ அரக்கன் அருகே இருப்பதை மனம் உணர்ந்தது. சட்டென்று ஆயுதத்தை எடுத்துக்கொண்டு கர்ணன் மடியிலிருந்து துள்ளி விலகி நின்றார். சுற்றும் முற்றும் பார்த்தார்.

வண்டாக இருந்த அரக்கன் சடேரென்று ஓடி மறைந்தான். ஓர் அரக்கன் ஓடி ஒளிவதை பரசுராமரால் உணர முடிந்தது. திரும்பிக் கர்ணனைப் பார்த்தார். அவன் கால், தொடையெல்லாம் ரத்தமாக இருந்ததைப் பார்த்தார். தன்னைச் சுற்றி தன் முதுகெல்லாம் ரத்தம் படர்ந்திருப்பதையும் தன் முதுகும் வேட்டியும், ரத்தத்தில் நனைந்திருப்பதையும் பார்த்தார்.

''இத்தனை ரத்தம் கொட்டிக் கிடக்க நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்று கேட்டார்.

''தலையை அசைத்தால், காலை அசைத்தால் உங்கள் உறக்கம் கெட்டுவிடுமே என்று நினைத்து அமைதியாக இருந்தேன்.''

''எப்படி உன்னால் இருக்க முடிந்தது? காலைக் காட்டு'' என்று சொன்னார்.

வண்டு கீழ்த் தொடையில் துளைத்து மேல் தொடைக்கு வந்திருந்ததைப் பார்த்து திகைத்து நின்றார்.

''யார் நீ?'' என்று ஊடுருவிக் கேட்டார்.

''உங்கள் சீடன்.''

''இல்லை. நீ என் சீடன் இல்லை. என் சீடன் அந்தணனாகத்தான் இருக்க முடியும். எந்த அந்தணனுக்கும் இப்படி வலி தாங்க முடியாது. அந்தணர்கள் வலி தாங்க முடியாதவர்கள். கொலை வெறி இல்லாதவர்கள். கொலை வெறி உள்ளவனுக்குத்தான் இப்படிப்பட்ட கொடுமையைச் சகித்துக் கொள்ள முடியும். வலியை ஏற்றுக்கொள்

முடியும். உயிரே போகும்படி வலித்தாலும் உதடு பிரிக்காமல் உட்கார்ந்திருக்க முடியும். எந்த அந்தணனாலும் இப்படி வலியைத் தாங்கிக்கொண்டு உட்கார முடியாது. சொல், நீ யார்?''

''நான் நான்காவது வருணத்தினன். தேரோட்டி. என் பெயர் வசுசேனன் என்கிற கர்ணன்.''

பரசுராமர் கண் மூடினார். அருகே போய் நின்றார்.

''நான்காவது வருணமா? நீயா? இல்லை. அந்த லட்சணங்கள் உன்னிடம் இல்லை. நீ க்ஷத்திரியன். உன் முகம் இப்பொழுது எனக்குப் புரிகிறது. உன் கை, கால்களிலுள்ள உறுதி என்னவென்று நான் உணர்ந்துவிட்டேன். உனக்கு அதி தேவதை சூரியன். நீ ஒரு க்ஷத்திரியப் பெண்ணின் வயிற்றில் பிறந்தவன். எந்தக் குலத்தை வேரறுக்க நான் தவித்துக் கொண்டிருந்தேனோ, எந்தக் குலம் என் தந்தையைக் கொன்றதோ அந்தக் குலத்திலிருந்து ஒருவன் வந்து என்னிடம் பொய் சொல்லி வித்தையைக் கற்றுக் கொள்வதை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

ஆனால், நீ சூரியனின் அம்சம். க்ஷத்திரிய வம்சம். என்னிடமிருந்து நீ நிறையத் தெரிந்துகொண்டு விட்டாய். அநேகமாய் சகலமும் புரிந்து கொண்டுவிட்டாய். க்ஷத்திரியர்களை அழிப்பாய் என்ற ஆவலில் நான் உனக்கு அதிகம் சொல்லிக் கொடுத்துவிட்டேன் கர்ணா. நான் என்ன சொல்லிக் கொடுத்தேனோ அவையெல்லாம் உனக்கு சரியான சந்தர்ப்பத்தில் மறந்து போகும். உனக்கு உபயோகப்படாமல் போகும். அஸ்திரம் கையில் இருக்கும். வில் கையில் இருக்கும். ஆனால் என்ன மந்திரம் சொல்ல வேண்டும் என்பது உன் நினைவுக்கு வராது. எத்தனை முறை ஞாபகப் படுத்திக் கொண்டாலும் அது உன்னைவிட்டு நகர்ந்து கொண்டே இருக்கும். போ... போ... ஆனால் ஒன்று கர்ணா. நீ சூரியனின் அம்சம். சூரியனின் அம்சம் அந்தணன் என்று சொல்லப்படுகிறது.

என்னிடம் நீ பொய் சொல்லாமல் இருந்தால் வெகு நிச்சயமாக நான்காவது வருணத்தினராக இருந்தாலும் நான் உன்னை ஆசிர்வதித்து

க்ஷத்திரியனுக்கு எதிராகத் திருப்பி விட்டிருப்பேன். உனக்குள் ஓர் அந்தண குணம் இருக்கிறது என்று தெரிந்து அந்த அந்தண குணத்தை வளர்த்து க்ஷத்திரியனை அலற விட்டிருப்பேன். என்னிடம் பொய் சொல்லி நீயும் ஏமாந்து, என்னையும் ஏமாற்றி விட்டாய். மிகப்பெரிய ஆயுதமாக பயன்படுத்த வேண்டிய உன்னை சபிக்க வேண்டிய நேரம், காலம், நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டு விட்டது.

கர்ணா. ஆனால் நான் என்ன நினைத்தேனோ அது நிறைவேறப் போகிறது. உன் வருகையால் க்ஷத்திரியர்கள் ஒருவருக்கொருவர் அடித்துச் கொண்டு சாகப்போகிறார்கள். உன் வருகை தான் மிகப்பெரிய யுத்தத்திற்கு காரணமாகப் போகிறது. உன் வருகையால் க்ஷத்திரிய குலம் அழியப் போகிறது.

தங்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டிருக்கின்ற அண்ணன், தம்பிகளான க்ஷத்திரியர்கள் உன்னைத் தன் பக்கம் இழுக்க முயற்சி செய்வார்கள். எந்தப் பக்கம் இருந்தாலும் அதற்கு எதிர்ப்பக்கம் உன்னைக் கண்டு பயப்படும். நீ இருக்கிறாய் என்பதாலேயே போர் செய்யும் ஆசை உன் பக்கம் இருப்பவருக்கும் உன் எதிர்ப்பக்கம் இருப்பவருக்கும் ஏற்படும்.

க்ஷத்திரியகுலம் அழியப் பிறந்தவனே. போய் வா'' என்று விடை கொடுத்தார்.

தன் அதிபதியான சூரியன் சொல்லையும் தான் கேட்கவில்லையே. தான் குருவிடம் பொய் சொன்னோமே என்று மயங்கி மெல்ல அந்த இடம் விட்டு கர்ணன் திரும்பி வந்தான்.

வித்தை மறந்து விட்டதா? வில்லில் நாண் ஏற்றி அம்பு தொடுத்து அக்னி அஸ்திரத்தால் எதிரே தெரிகின்ற மரத்தை அடித்தான். மரம் தீப்பற்றி எரிந்தது.

வித்தை மறந்து விட்டதா? மறுபடியும் வருணஜபம் சொல்லி அம்புவிட அந்த மரம் நெருப்புப் பிடித்த மரம் நீரால் அணைந்து மறுபடி செழித்தது.

மறக்கவில்லை. மறக்காது. என் அதிபதியான சூரியன் கடைசி நேரத்தில் என்னைக் காப்பாற்றுவார் என்று சொல்லி வேகமாக நம்பிக்கையோடு தன் தாயான ராதையைத் தேடி நடந்தான்.

தன் கிராமத்திற்குப் போய் ''அம்மா'' என்று கூப்பிட்டான்.

இடுப்பில் வாளும், தோளில் அம்பறாத் தூளியும், கையில் வில்லும், முகம் நிறையப் பூரிப்பும், விரிந்த மார்பும், குறுகிய இடையும், கண்ணில் புத்திசாலிகளுக்கே உண்டான துறுதுறுப்புமாய் அங்கே கர்ணன் நிற்கக் கண்டு ராதை ஓடிப்போய் அவனைத் தழுவிக் கொண்டாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

தந்தையும் ஓடி வந்தான். அணைத்துக் கொண்டான். ஊர் அவனைப் பார்க்கத் திரண்டது.

அடேயப்பா. என்னவெல்லாம் கற்றுக் கொண்டு வந்திருக்கிறாய்? நீ ஒருவன் போதுமடா. நம்முடைய குலம் உயர்ந்துவிடும். நம்முடைய குலம் மிகப்பெரிய நிலைக்கு வந்துவிடும்'' என்று தந்தை பாராட்டினான்.

ஊர் அவனைக் கைகூப்பிப் பணிந்தது.

''நீ என்ன சொல்கிறாயோ அதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம்'' என்று அவனைச் சுற்றி நின்றது.

அப்பொழுது ஓர் இளைஞன் ஓடி வந்தான்.

''வசுசேனா... வசுசேனா... உனக்கொரு நல்ல செய்தி... உனக்கொரு நல்ல செய்தி'' என்று கூவினான்.

கூட்டம் அவனுக்கு வழிவிட்டது. அந்த இளைஞன் அருகே வந்து நின்றான்.

''ஏகலைவன் என்றொரு பையன் இருக்கிறான். அவன் வேடர் வகுப்பைச் சேர்ந்தவன். அவனும் நான்காவது வருணம்தான். ஆனால்

மிகப்பெரிய வில்லாளியாக மிகச் சிறந்த வில் வீரனாக அவன் விளங்குகிறான். தன்னுடைய குருவான துரோணரைச் சிலை செய்து வழிபட்டு அந்தச் சிலை மூலமே வித்தைகளைக் கற்றுக் கொள்கிறான். எப்படியென்று கேட்டால் 'இந்தச் சிலை எனக்கு வித்தை கற்றுக் கொடுக்கிறது. உள்ளுக்குள் பேசுகிறது. எப்படி நாணேற்ற வேண்டும், எப்படி அம்பு தொடுக்க வேண்டும் என்றெல்லாம் குரு சூட்சுமமாக எனக்குச் சொல்லித் தருகிறார்' என்று ஏகலைவன் சொல்கிறான்.

ஒரே அம்பால் பல மரங்களைத் துளைக்கிறான். அவன் அம்பிலிருந்து நீர் பொழிகிறது. அவன் அம்பிலிருந்து அக்னி வருகிறது. ஒரே அம்பு பல நூற்றுக்கணக்கான அம்புகளாகப் பிரிந்து பறந்து வருகின்றன. எல்லோரது தலைப்பாகைகளையும் கொத்திக் கொண்டு போகின்றன. பல்வேறு விதமான வித்தைகளை அவன் சர்வ சாதாரணமாய் செய்கிறான்.

படுத்துக்கொண்டு அம்பு தொடுத்து, குறி பார்த்து எறிகிறான். கால்களால் வில்லைப் பிடித்து காட்டு யானையை விரட்டுகிறான். ஏகலைவனுக்கு உன்னைப் பற்றிச் சொன்னேன். உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவனிடம் உன்னை அழைத்து வரும்படியாகவும் சொல்லியிருக்கிறான்."

"எங்கே அந்த ஏகலைவன்?"

"வா. நான் அழைத்துப் போகிறேன். காட்டின் நடுவிலே அவர்களின் குடிசைகள் இருக்கின்றன. வா போகலாம்" என்று சொல்ல, கர்ணன் ஊராரிடம் விடை பெற்றுக் கொண்டு அந்த இளைஞனோடு கிளம்பினான்.

"இளைஞனே. எடுத்தவுடனேயே ஏகலைவனுக்கு என்னை அறிமுகம் செய்து விடாதே. அவன் திறமைகளை நான் மறைந்து பார்க்க விரும்புகிறேன். நானும் அவனைப்போல் ஒரு வில் வீரன் என்பதால் தன் திறமைகளை வெளிக்காட்ட அவன் தயங்கலாம், பயப்படலாம். கூச்சப்படலாம். எனவே நான் வெறுமே வழிப்போக்கன் போல் உட்கார்ந்து கொள்ளுகிறேன்."

அம்பறாத் தூளிகளையும், வில்லையும், வாளையும் ஒரு மரத்தின் உச்சியில் கட்டிவிட்டு சாதாரண வழிப்போக்கர்களாக நான்காம் வருணத்து ஆட்களாக நாம் நடந்து கொள்ளலாம் என்று வெறும் கோலோடும் ஆடுகளோடும் அவர்கள் ஏகலைவன் வீட்டிற்கு அருகே போனார்கள்.

ஏகலைவன் வீட்டில் இல்லை. துரோணர் சிலை மட்டும் இருந்தது. பூக்களைப் பறித்து வந்து சிலையின் காலில் பொழிந்தார்கள். விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். ''சத்குருவே வணக்கம்'' என்று சொன்னார்கள். விலகி காட்டு விளிம்பில் அமர்ந்து கொண்டார்கள்.

வேட்டை நாய்கள் நாலாபுறமும் ஓடி வர சட்டென்று மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். வந்த நாய்களில் ஒரு கறுப்பு நாய் மிகத் தடிமனாக, திமிரோடு காணப்பட்டது. மற்ற நாய்களை நாலாபுறமும் ஏவியது. இவர்கள் உட்கார்ந்த இடத்தை முகர்ந்து பார்த்து பல் தெரிய ஊளையிட்டது. மரம் பார்த்துக் கத்தியது. அவர்கள் மரத்துக்கு நடுவே, தங்களை மறைத்துக் கொண்டார்கள்.

''மரத்தில் நாய் ஏறிவிடுமா'' என்று அந்த இளைஞன் பயத்தோடு கேட்க ''கீழே இறங்கி நாலு சாத்தினால் இந்த நாய் என்ன கதியாகும்? ஏன் பயப்படுகிறாய்? நான் இருக்கும் வரையில் உனக்கு எந்தத் தீங்கும் நேராது'' என்று உறுதியாய் கிளையைப் பிடித்துக் கொண்டே நாயை உற்றுப் பார்த்தபடி கர்ணன் பதில் சொன்னான்.

நாய் குடிசைக்குள் ஓடியது.

''அடடே. கோயிலுக்குள் நாய் போய்விட்டதே'' என்று இளைஞன் கத்தினான்.

சுவரில்லாத நாலு புறமும் அந்தக் கோயிலில் நாய் முன்னும் பின்னும் அலைவதும் கால் தூக்கி சிலையில் சிறுநீர் கழிப்பதும் தெரிந்தது.

''ச்சே... ஓர் அடி போட்டுவிட்டு வருகிறேன்'' என்று கர்ணன் இறங்கும்போது நாய் வலி தாங்காமல் ஊளையிட்டது.

எங்கிருந்தோ வந்த அம்பு நாயினுடைய முன்னங்காலில் அடித்து நிறுத்தியது. இன்னோர் அம்பு வாயில் அடித்தது. மற்றோர் அம்பு வலக்காலில் அடித்தது. வேறோர் அம்பு அருகே வந்து சட்டென்று விரிய நூற்றுக்கணக்கான அம்புகள் ஊசிகள் போல் நாயின் முகத்தில் தைத்து மேல் வாயையும், கீழ் வாயையும் இணைத்தன. இன்னோர் அம்பு மூக்கின் வழியாய் உள்ளே போய் சட்டென்று ஆசனவாய் வழியாக வெளிவந்தது. நாய் வலி தாங்காமல் தவித்தது. முன்னும் பின்னும் அலைந்தது.

எஜமானனைத் தேடி ஓடியது. நீண்டதாய் வாய் திறக்காமல் ஊளையிட்டது. அந்த ஊளைச் சத்தம் கேட்டு ஐந்து இளைஞர்கள் ஓடி வந்தார்கள்.

கர்ணன் அவர்களை ஆவலோடு பார்த்தான். ''அதோ... அதோ... அவன்தான் அர்ஜுனன்'' அருகே வந்த இளைஞன் கைநீட்டிக் காட்டினான்.

''யார்?''

''அந்த நீண்ட சிகையோடு கட்டுமஸ்தான உடலோடு கையில் வில்லோடு இருப்பவன் அர்ஜுனன்.''

''கதையோடு இருப்பவன்?''

''பீமன்.''

''வாளோடு இருப்பவர்?''

''யுதிஷ்டிரன் அதாவது தருமர்.''

''அந்த இரண்டு இளைஞர்கள்?''

''கையிலே சவுக்கு வைத்திருப்பவன் நகுலன். கயிறு வைத்திருப்பன் சகாதேவன்.''

''இவர்கள்தான் பஞ்ச பாண்டவர்களா? இவர்களைத்தான் க்ஷத்திரியகுலம் கொண்டாடிக் கொண்டிருக்கிறதா?''

''ஆமாம். மிகப்பெரும் வீரர்கள்.''

''ஹ...'' கர்ணன் வாயிலிருந்து ஓர் அலட்சியமான சப்தம் வந்தது.

நாய் அர்ஜுனன் காலில் விழுந்து கண் செருகிக் கிடக்க அர்ஜுனன் இந்த அம்புகளைப் பார்த்துவிட்டு துரோணரை நோக்கிக் கத்துவது தெரிந்தது.

துரோணர் ஓடிவந்தார். துரோணரும் நாய் மீதுள்ள அம்பு வரிசையைப் பார்த்தார்.

''யார்... யாரது.. யாரது?'' என்று துரோணரும் உரக்கக் கத்தினார்.

''எவ்வளவு அற்புதமாக அம்பு விட்டிருக்கிறான். எனக்கு மட்டும்தான் பாடம் சொல்லித் தருவதாகவும் எனக்கு மட்டும்தான் ரகசியமாக எல்லா வித்தைகளையும் சொல்லித் தருவதாகவும் சொல்கிறீர்களே. ஆனால் நீங்கள் சொல்லுகின்ற இந்த வித்தைகளை வேறு யாரோ கற்றுக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கோ நீங்கள் ரகசியமாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள். குரு துரோகம் தவறு என்று சொல்கிறார்கள். சிஷ்ய துரோகம் சரியா?''

பெரிய மனிதன்போல் அர்ஜுனன் கூவ, பீமன் பல் கடிக்க, தருமர் கோபமாகப் பார்க்க அந்த அந்தணர் துரோணர் பதற்றமடைந்து நாலாபுறமும் போய் யார், யார் என்பது கூவுவது கேட்டது.

அந்த இளைஞன் மெல்லியதாய், களையாய், பெரிய கண்களாய், சிவந்த உதடுகளாய், நீண்ட முடி உள்ளவனாய், உள்ளங்கை சிவந்தவனாய், விரல்கள் நீண்டு உள்ளவனாய், நகங்கள் திருத்தமாய் அமைந்தவனாய், வயிறு ஒட்டியவனாய், மார்பு அகன்றவனாய், உறுதியோடு கூடிய பாதம் உள்ளவனாய், நடையில் கம்பீரம் உள்ளவனாய் ஓர் இளைஞன் வந்தான். கைகூப்பினான். விழுந்து துரோணரை நமஸ்கரித்தான்.

''சத்குரு'' என்று அழைத்தான்.

''யாரை அழைக்கிறாய்?'' துரோணர் படபடப்பாகக் கேட்டார்.

''உங்களைத்தான் சத்குரு.'' என்று அவன் பதில் சொன்னான்.

துரோணர் பயத்தோடு திரும்பி அர்ஜுனனைப் பார்த்தார். அர்ஜுனன் பல் கடித்தான். கையிலுள்ள வில்லை ஓங்கித் தரையில் அடித்தான். துரோணர் பதற்றமானார்.

''நான் உனக்கு எதுவும் சொல்லித் தரவில்லையே. உன்னைப் பார்த்ததுகூட இல்லையே. ஏன் என்னை சத்குரு என்று அழைக்கிறாய்?''

''நீங்கள் ஒரேயொரு முறை என்னைப் பார்த்திருக்கிறீர்கள். உங்களிடம் நான் வந்து வில்வித்தை சொல்லித் தரும்படி கேட்டேன். நீங்கள் என்னை 'நீ நான்காவது வருணம். உனக்குச் சொல்லித்தர இயலாது' என்று ஒதுக்கினீர்கள். ஆனாலும் உங்களை குருவாக மனத்தில் நிலை நிறுத்தி உங்களைப் போலவே ஒரு சிலை செய்து அதை தினமும் தொழுது உங்களையே நினைத்து வில்லெடுக்க எனக்கு சகல வித்தைகளும் கை வருகின்றன. எல்லாச் சந்தேகங்களும் தீருகின்றன. ஒவ்வொரு பாடமாக நீங்கள் எனக்கு நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். சகல அஸ்திரத்தையும் எனக்கு நீங்கள் கற்பித்தீர்கள். இதோ நான் செய்து காட்டட்டுமா?''

இரண்டு மூன்று அஸ்திரங்களை அவன் செய்ய தருமரும், பீமனும், தவித்துப் போனார்கள். அவர்களைவிட அதிகமாய் துரோணர் தவித்துப் போனார். மரத்திலிருந்த இளைஞனும், கர்ணனும் வியந்தார்கள்.

இன்னோர் அர்ஜுனன் இங்கு வந்துவிட்டான் என்று மனதார கர்ணன் கூவினான்.

''நீ என்னை குரு என்று ஏற்றுக் கொள்கிறாயா?''

''நிச்சயமாக.''

''இதெல்லாம் என்னால்தான் கிடைத்தது என்று நம்புகிறாயா?''

"நிச்சயமாக."

"நான் இல்லாவிட்டால் உனக்கு வில்வித்தை கிடைத்திருக்காது என்று நிச்சயமாக உணருகிறாயா?"

"நிச்சயமாக."

"அப்படியானால் நீ எனக்கு தட்சிணை தர வேண்டுமே."

"நிச்சயமாக."

"தருவாயா?"

"நிச்சயமாக."

"உன்னுடைய வலக்கைக் கட்டை விரலை எனக்கு குரு தட்சிணையாகக் கொடு."

துரோணர் கூச்சமின்றிக் கேட்டார். கர்ணன் கைப்பிடி நழுவியது. மரத்திலிருந்து கீழே நாலடி இறங்கினான். அந்த இளைஞன் கர்ணனை அணைத்து இறுக்கப் பிடித்துக் கொண்டான்.

'கட்டை விரல்... வலக்கை கட்டை விரலையா கேட்கிறார் துரோணர்?' கர்ணன் மனத்துக்குள் வெறுப்பு மண்டியது.

எந்தக் கட்டை விரல் வில் விடுவதற்கு உபயோகப்படுமோ அந்தக் கட்டை விரலை குரு தட்சிணையாகக் கேட்கிறார். அர்ஜுனனைத் தவிர வேறு யாரும் இங்கு சிறந்து விடக் கூடாது என்பதற்காக இந்த ஏகலைவனை, கொல்லாமல் கொல்லுகிறார்.

'ஏய் அந்தணனே. உனக்கு நல்ல மரணம் கிடைக்கப் போவதில்லை' மனம் குமுறிச் சாபமிட்டது.

ஏகலைவன் என்ன செய்வான் என்று ஆவல் பொங்க அவனைப் பார்த்தபொழுது ஏகலைவன் கண்மூடி நிற்பது தெரிந்தது. அவனுக்குப் துரோணருடைய சூழ்ச்சி புரிந்தது.

துரோணருக்குப் பின்னால் நின்றிருந்த அர்ஜுனனை ஏறிட்டுப் பார்த்தான். சிரித்தான். பீமனையும், தருமரையும் பார்த்தான். சிரித்தான்.

''நல்லது. குருவின் விருப்பப்படி நான் காணிக்கை தருகிறேன்.''

உடைவாளை உருவினான்.

''அடேய்...'' கர்ணன் கூவுவதற்குள் அவன் இடக்கையில் சுழன்ற வாள் அவனுடைய வலக்கை கட்டை விரலைத் துண்டாக்கி எறிந்தது. அவன் ரத்தம் பெருக குளத்தின் கரையை நோக்கி ஓடினான்.

துரோணர் காலடியில் கட்டை விரல் இருந்தது. துரோணர் அதைப் பார்க்காமல் அர்ஜுனனை நோக்கி நடந்தார்.

துரோணர் அந்த இடம்விட்டு நகர்ந்ததும் கிராமத்து விளிம்பில் நின்று கொண்டிருந்த அந்த வேடுவ குலத்தினர் வேகமாகக் கதறியபடி ஓடிவந்தார்கள். கட்டை விரலை எடுத்துக் கொண்டார்கள். குளம் நோக்கி ஓடினார்கள். பிள்ளையைத் தேடினார்கள்.

அர்ஜுனனும், பீமனும்,தருமனும், துரோணரை வலம் வந்து நமஸ்கரித்தார்கள். இந்த நன்றி எந்த நாளும் நெஞ்சில் இருக்கும் என்று சத்தியம் சொன்னார்கள்.

நகுலனும், சகாதேவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு எதுவும் சொல்லாமல் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

கர்ணன் மரம் விட்டுக் கீழிறங்கினான்.

''நாம் போய் ஏதேனும் உதவி செய்யலாமா. வாருங்கள் குளக்கரைக்குப் போகலாம்.'' அந்த இளைஞன் பரபரத்தான்.

''இல்லை. தேவையில்லை. எல்லாம் முடிந்து விட்டது. முடிகின்ற காட்சியைப் பார்க்கத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். ஒரு வேளை இந்தக் கர்ணன் வந்ததனால்தான் இந்த முடிவு இவனுக்கு ஏற்பட்டதோ என்னவோ? நான் மறுபடியும் அவனைச் சந்தித்து துரதிருஷ்டத்தில் ஆழ்த்த விருப்பமில்லை. அவனுக்கு எந்த சமாதானமும் சொல்ல என்னால் முடியாது.

என் வேலை, என் பொறுப்பு அதிகமாகி விட்டதை நான் உணர்கிறேன். தன்னந்தனியாய் நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உணருகிறேன். வா. நாம் நம் ஊருக்குப் போவோம். இந்த அர்ஜுனனை இந்த துரோணனை என்ன செய்வது என்று எனக்குத் தெரியும். இது நெடும்பகை. வெகு காலப்பகை. இந்தப் பகை சாதாரணமாக முடியாது.

மிகப்பெரிய யுத்தம் ஏற்படும்.

கோடிக்கணக்கில் மனிதர்கள் சாவார்கள். பூபாரம் குறையும். இதோ கண் முன்னே பார்த்த இந்தச் சம்பவம் எனக்குள் வெறுப்பாக மண்டிக் கிடக்கிறது. க்ஷத்திரிய வம்சத்தை எப்படி அழிப்பது என்பது எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டுவிட்டது. நான் எங்கே நிற்க வேண்டும் என்றும் எவர் பக்கம் சாய வேண்டும் என்பதும் புரிந்து விட்டது. பகலவனே, பாஸ்கரா, பரிதியே, பிரபாகரா உனக்கு நமஸ்காரம்'' கர்ணன் சூரியனை நோக்கிக் கைகூப்பிக் குனிந்தான்.

# 4

''**க்ஷ**த்திரிய குலம் என்னால் அழியும். நான் அழிப்பேன்.'' கர்ணன் பூமியில் ஓங்கி அறைந்தான். ரத்தம் சிந்திய அந்த மண்ணை எடுத்து உடம்பெல்லாம் பூசிக் கொண்டான்.

அவனுடைய ஆயுதங்களை எடுத்துக் கொண்டான். அவன் கிராமம் நோக்கி கர்ணன், அந்த இளைஞனோடு நடந்தான்.

அதற்குப் பிறகு கர்ணன் அதிகமாய் யாரோடும் பேசவே இல்லை. செயற்கரிய செயலைச் செய்ய நினைப்பவர்கள், உள்ளுக்குள் உறுதிமிக்கவர்கள், மிகப்பெரிய லட்சியத்தை நெஞ்சுக்குள் ஏற்றிக் கொண்டவர்கள், தான் எதற்காகப் பிறந்திருக்கிறோம் என்று புரிந்தவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். அதிகம் பேசுபவர்கள் எதுவும் புரியாதவர்கள்.

அவனை எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அழகனாகத் தெரிந்தான். என்ன செய்தாலும் அதை அற்புதமாகச் செய்தான். தூங்கி எழுந்து உள்ளங்கை தேய்த்து, முகம் பார்த்து நிமிர்ந்து, புன்சிரிப்பு செய்கிற பொழுது பேரழகனாக அவன் காட்சியளித்தான்.

தன்னுடைய துணிகளை தானே துவைத்து கரையில் உலர்த்தி, ஆற்றில் நீராடி, எழுந்து கரையேறுகிறபொழுது அவனிடம் ஒரு கவர்ச்சி இருந்தது. தலைமுடி நீரால் நனைக்கப்பட்டு கபாலத்தோடு ஒட்டி ஜலம் முதுகெல்லாம் வழிந்து நடந்து வரும்போதும் அந்த முகத்தின் களை குறையவேயில்லை.

தினமும் வெறும் வயிற்றில் நூற்றியெட்டு முறை பிராணாயாமம் செய்ய வேண்டும் என்று சகலருக்கும் கட்டளையிட இவன் மட்டும் ஒவ்வொரு மூச்சிழுத்தலையும் மிகச் சிரத்தையோடு செய்தான். ஆழ்ந்து காற்றை சுவாசித்தான். நிதானமாக வெளியே விட்டான். மூச்சின் ஒவ்வோர் அசைவையும் அனுபவித்தான். மூச்சு விடுகின்ற சுகத்தில் போதையேறி கண் கிறங்க அமைதியாக இருந்தான்.

உற்றுப் பார்க்கின்ற குருவைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

எத்தனை சுகம். பிராணாயாமம் என்று சொல்லாமல் சொன்னான். மற்ற எல்லா இளைஞர்களையும் விட இவன் வித்தியாசமானவனாகவும், உறுதியானவனாகவும் இருந்தான்.

அவருக்கும் க்ஷத்திரியர்களைப் பிடிக்காது. அவரும் ஒரு க்ஷத்திரியனால் அவமானப்படுத்தப்பட்டார். அவர் கல்வி கேள்வியும் வில்வித்தை ஞானமும் அவனால் கேலி செய்யப்பட்டன. எவ்வளவு இதமாக எடுத்துரைத்தும் அவன் காது கொடுத்துக் கேட்க மறுத்தான்.

''உன்னுடைய குலம் என்ன. என்னுடைய குலம் என்ன? யார் யாருக்கு நட்பு? எங்கே வந்து நட்பு பாராட்டுகிறாய்? படித்தவன்தானா? பண்புள்ளவன்தானா? ஒரு சபையில் ஏறி ஓர் அரசனை ஸ்நேகிதனாக ஒருவன் அழைக்கலாமா? குனிந்

உன்னுடைய உடைகளைப் பார்த்திருக்கிறாயா? உன் முகத்தை எப்பொழுதேனும் நிலைக் கண்ணாடியில் கண்டதுண்டா? அடுத்த வேளை சோற்றுக்கு அவஸ்தைப்படுகிற நீயும், இந்த தேசத்தையே கட்டி ஆளுகிற நானும் ஒன்றா? மூதேவிக்கும், ஸ்ரீதேவிக்கும் சம்பந்தம் இருக்கிறதா?'' என்றெல்லாம் கேட்டதும் அவர் துடிதுடித்துப் போனார்.

''இந்த உன் செயலுக்குப் பழி வாங்காமல் போகமாட்டேன்'' என்று அவன் வீட்டுப் படியிறங்கி வெளியே வந்தார்.

''குலம் பற்றிப் பேசுகிறாயா. உயர்வு, தாழ்வு காட்டுகிறாயா? அதிகார மமதையும், சிறிதளவு செல்வமும் சேர்ந்துவிட்டால் உங்களைக் கையில் பிடிக்க முடியாதா? என்னைவிட எந்த விதத்தில் நீ உயர்வு? உன்னால் என்னை என்ன செய்ய முடியும்? நான் கோபப்பட்டுக் காலை உதைத்தால் உன் நாடு தாங்குமா? உனக்கு செல்வம் சேருமா?

இல்லை. உன்னை வெறுமே அடித்து உதைத்து விடப் போவதில்லை. ஓடஓட விரட்டி அடிக்கப் போகிறேன். உன் ஒவ்வொரு சொல்லுக்கும் மன்னிப்பு கேட்கும் வண்ணம், கதறுகிற வண்ணம், உன்னை நான் அவமானப்படுத்தப் போகிறேன், நீயும், நானும் இணையாகுமா என்றல்லவா கேட்டாய்? இல்லை. என் கோபத்திற்கு கால் தூசு சமமாக மாட்டாய், நீ எனக்கு இணை இல்லை என்று நிரூபிக்க நான் எனக்குக் கீழே இருக்கிறவனை உன்னிடம் அனுப்பி உன் தலைமயிரைப் பிடித்து இழுத்து வரச் சொல்வேன். உன்னைத் தொட்டால் அது எனக்கு அவமானம்.

நட்பு என்ற பெயருக்கு களங்கம் விளைவித்த உனக்கு அருகே வந்தால் உடம்பு எரியும். ரோமம் பொழித்து தலையே உதிரும். எனவே நான் உன்னைத் தீண்டாது, உனக்கு அருகே வராது, ஆள் வைத்து உன்னை அவமானப் படுத்துவேன். இது நிச்சயம்'' என்று அவன் கோட்டை வாசலில் சபதமிட்டார்.

துருபதன் என்கிற அந்த அரசனும், துரோணர் என்கிற அந்த அந்தணனும் காலத்தின் கோலத்தால் எதிரும் புதிருமாய் நின்றார்கள்.

அகங்காரம்தான் மனிதனின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய சத்ரு. ஆணவம் என்பது ஆலகால விஷம். அந்த விஷம் நட்பை உடனே கொன்று போட்டது. எத்தனையோ வருடங்கள். எத்தனையோ காடு மேடுகளில் ஒன்றாய் கை கோத்துத் திரிந்த அந்த நண்பர்கள் உதறி விலகி நின்றார்கள். ஒருவரையொருவர் வெறுப்போடு பார்த்தார்கள். தரையில் உமிழ்ந்தார்கள். கால் உதைத்து 'சீ'' என்று அலட்சியம் காட்டினார்கள்.

அதிகாரம் கொடுத்த மமதையில் துருபதன் தான் அகில உலகத்திற்கும் அதிபதி என்பதாய் நினைத்துக் கொண்டான். புலவர்களும், பண்டிதர்களும் அவ்விதம் வாழ்த்து சொல்ல உண்மையிலேயே நாம் புவனத்திற்கு அதிபதி என்று கண் கிறங்கினான்.

வாழ்த்து சொன்னதும் அவனுக்கு கூடவே கம்பீரம் வந்துவிட்டது.

உறையில் வாளும், அந்தப்புரத்தில் பெண்களும், சபையில் சான்றோர்களும், கண்ணுக்கெட்டிய வரை கடல் அலைபோல் மக்களும் சுற்றியிருக்க, தன் காலின் கீழ்தான் உலகம் இயங்குகிறது, தான் நினைத்தபடிதான் எல்லாம் நடக்கிறது என்று ஏமாந்து போனான். இது மிகப்பெரிய மயக்கமென்று அவனுக்கு எடுத்துச் சொல்வார் எவருமில்லை. இவற்றைப் பார்த்து அலட்டியவர்கள் எல்லாரும் அழிந்து போனார்கள் என்பது புரியவில்லை.

ஏதோ பால் கொடுக்கும் பசு ஒன்றை கன்றோடு கொடு என்று கேட்பதற்கு வந்த வல்லமை மிக்க ஒரு நண்பனை விரோதித்துக் கொண்டான்.

சபையில் ஏறிப் பேசத் தெரியும் என்பதற்காக ஏதேதோ பேசி பாவத்தைச் சம்பாதித்துக் கொண்டான்.

தன்னைவிட எல்லா வகையிலும் வல்லவன் என்று தெரிந்திருந்தும் வீணாக விரோதம் சம்பாதித்துக் கொண்டான். எத்தனை பெரிய படைக்கு தான் அதிபதி என்று நினைத்துக் கொண்டு, இவன் ஒற்றை பிராமணன்தானே என்று உதாசீனப்படுத்தினான். செல்வம் என்பது இன்று வரும். நாளை போகும் என்று புரியாமல், முத்தோர் சம்பாதித்து வைத்ததை தன்னுடைய உழைப்பால் கிடைத்தது என்று கர்வம் கொண்டு தானும் கெட்டு நீட்டிய கையைத் தட்டி விட்டுப் பேசினான்.

நடுப்பந்தியில் எவர் உட்கார்ந்தாலும் எழுப்பக்கூடாது. சான்றோர்கள் தானம் கேட்கும்பொழுது மறுக்கக்கூடாது. பத்தினிப் பெண்டிர் கைகூப்பி அழுகிற பொழுது அவர்களைக் கலவரப்படுத்தக் கூடாது. குழந்தைகள் பசியால் ஏங்கி அழுகிறபொழுது பார்த்துவிட்டுப் போகக்கூடாது என்று அவனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தன.

நியாய தர்மங்கள் தெரிந்தவன்தான். இருப்பினும் அரசன் என்பவன் விஷ்ணுவின் அம்சம். அவன் சட்டத்தை அனுசரிக்கலாம். மீறலாம் என்று நினைத்துக் கொண்டான். சட்டம் என்பது சத்தியத்தின் மேற்பட்டு செய்யப்படுவது. சத்தியத்தை மீற அதற்குண்டான பலனை மீறியவன் நிச்சயம் அனுபவிப்பான்.

பால் கொடுக்கின்ற காராம் பசுவை வதைப்பது போலவும், நிழல் கொடுக்கின்ற பச்சை மரத்தை வெட்டுவது போலவும், ஓடிக் கொண்டிருக்கிற நதிநீரை திசை திருப்பி தேக்கி வைத்து வறட்சியை ஏற்படுத்துவது போலவும், நன்கு விளைந்த பயிரை தீயிட்டுப் பொசுக்குவது போலவும் ஒரு நல்ல நட்பை, தேவையில்லாமல் நாசம் செய்தான்.

துரோணர் அவனால் அவமானப்படுத்தப்பட்டு மனம் நொந்து வெளியே வந்தார். ஆத்திரமும் கோபமுமாக அலைகின்ற அவரை இந்திரன் நன்கு கவனித்துக் கொண்டான்.

எப்பொழுதும் அர்ஜுனன் கூடவே இருக்கின்ற இந்திரன் அவரை அர்ஜுனனுக்கு அருகே வழி நடத்தினான். அவர் அர்ஜுனனுக்கு

அருகே வரும்போது அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த பந்தைக் கிணற்றில் எட்டி உதைத்தான்.

இந்திரனால் பந்து கிணற்றில் போய் விழுந்தது.

கிணற்றைச் சுற்றி அந்த அரசகுடும்பத்து இளைஞர்கள் எட்டிப் பார்த்தார்கள். எப்படி பந்தை எடுப்பது என்று யோசித்தார்கள்.

இறங்கலாம் என்று பீமன் தீர்மானம் செய்தபோது அர்ஜுனனும், துரியோதனனும் இடுப்பில் இருக்கின்ற துணியை அவிழ்த்து விட்டு வெறும் துண்டு கட்டிக் கொண்டு குதிக்கத் தயாரானார்கள். அப்பொழுது துரோணர் அங்கு வந்து ''அப்பா என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்.

துரியோதனன் அவருக்கு பதில் சொல்லவில்லை.

பீமனை நோக்கி ''அப்பா என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

பீமன் முழுவதுமாய் அவருக்கு மரியாதை செலுத்தவில்லை, ''குதிக்கப் போகிறேன் அந்தணரே'' என்று சாதாரணமாக பதில் சொன்னான்.

அவர் கிணற்றில் எட்டிப் பார்த்தார்.

''அந்தப் பந்தை எடுப்பதற்கா பிரயத்தனப்படுகிறீர்கள்?'' மெதுவாகக் கேட்டார்.

எல்லாரும் மௌனமாக இருக்க ''ஆமாம்'' என்று ஒரே ஓர் இளைஞன் பதில் சொன்னான். அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவரும் அவனை உற்றுப் பார்த்தார்.

அவன் அழகு அவரைக் கவர்ந்தது.

'துடைப்பம் செய்ய உதவும் குச்சிகளை எடுத்து வாருங்கள். நான் பந்தை எடுத்துத் தருகிறேன்'' என்று சொல்ல எல்லாரும் திகைத்து அவரைப் பார்த்தார்கள்.

அர்ஜுனன் மட்டும் ஓடினான். மடமடவென்று அந்தப் புற்களைப் பறித்தான். கொண்டு வந்து நீட்டினான். மற்றவர்களும் புற்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். துரியோதனனும். பீமனும் வேடிக்கை பார்த்தார்கள்.

துடைப்பக் குச்சிகளைக் கண்களில் ஒற்றியபடி மந்திரம் சொன்னார். அவற்றை உரசிக் கூர்மையாக்கினார். விறைப்பாக்கினார். வேகமாக பந்தின் மீது முதல் குச்சியை வீசினார். குச்சி பந்தில் பொருந்திக் கொண்டது. அடுத்த குச்சியை வீச அது நீட்டிய குச்சியைப் பற்றிக் கொண்டது. மற்றொரு குச்சியை வீச அது இரண்டாவது குச்சியை இறுக்கிக் கொண்டது. அடுத்ததையும் வீச மூன்றாவதுடன் பின்னிப் பிணைந்தது. மடமடவென்று குச்சிகளை வீச அவர் கையெட்டும் வரை குச்சிகள் ஒன்றையொன்று பின்னிக் கொண்டிருந்தன. மெல்ல குச்சிகளை மேலிழுக்க பந்து மேல் எழும்பி வந்தது.

அவர் கைக்குக் கிட்டே வரும்பொழுது பீமன் மகிழ்ச்சி ஆரவாரத்தால் கைதட்டினான். துரியோதனன் வியந்து எப்படி இது சாத்தியம் என்பதுபோல் பார்த்தான். மற்ற எல்லா இளைஞர்களும் விழிவிரித்து ஆஹா.. ஓஹோ என்று சொல்ல அர்ஜுனன் மட்டும் பணிச்சென்று காலில் விழுந்தான்.

இது அற்புதமான வில்வித்தை. அஸ்திரப் பயிற்சி என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

‘ஐயன். நீங்கள் யார்?'' கைகட்டி பணிவோடு கேட்டான்.

அவர் தன் பெயரை அவனுக்குச் சொன்னார். மற்றவர்கள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

‘ஐயன். உங்களை நான் என்னுடைய தாயாருக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன். என் பாட்டனாரிடம் உங்களை அழைத்துப் போய் உங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

என்னோடு தயவு செய்து அரண்மனைக்கு வரவேண்டும். நீங்க யார்?'' அர்ஜுனன் காது பொத்தி கேட்க, மறுபடியும் தான் யார் என்பன அவனுக்கு விளக்கிச் சொன்னார். மறுபடியும் நிலம்படக் காலி விழுந்தான். மற்றவர்கள் வெறுமனே நின்று கொண்டிருந்தார்கள்.

அவன் தோளை அவர் மெல்ல அணைத்துக் கொண்டா அவனுக்கு உள்ளுக்குள் நடுங்கியது. அவருக்குள்ளும் ஓர் இதமா உணர்வு ஏற்பட்டது.

இது மிகப்பெரிய நட்பு. இதுதான் உண்மையான ஸ்நேகம் என் அவருக்குத் தெரிந்தது. அவனுக்காக அவர் எதையும் செய்யத் தயாரா இருந்தார். அவனும் அவருக்காக எதையும் செய்ய அந்த க்ஷண தீர்மானம் செய்தான். அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந் இந்திரனுக்கு மிகப்பெரிய சந்தோஷம் ஏற்பட்டது.

'என் குழந்தைக்கு, என் அம்சத்திற்கு, என்னுடைய பாலகனுக் ஓர் அற்புதமான ஆச்சார்யரைக் கொடுத்து விட்டேன். நெல்லுக் இறைக்கிற நீர் புல்லுக்குப் போவது போல என் அம்சமா அர்ஜுனனுக்காக ஏற்பட்ட ஆச்சார்யர் மற்றவர்களுக்கும் ஆச்சார்யரா விளங்கட்டும்'' என்று உரக்கச் சொன்னான்.

அர்ஜுனனை ஆசிர்வதித்தான்.

அவரோடு பழகப் பழக அர்ஜுனனுடைய முகஒ அதிகமாயிற்று. தேஜஸ் பொங்கிப் பரவியது. மல்லாந்து படுத்தப முதுகை இடதும், வலதுமாக முறுக்கி முதுகிலுள்ள பிராண தடைகளெல்லாம் தாக்கி முதுகெலும்பினுடைய நடு மையத்தி ஊசிமுனை அளவிருக்கும் ஓட்டை வழியே குண்டலினி சக்தியை உச்சி வரை ஏற்றி, இறக்கி நடுமையத்தில் தக்க வைத்துக் கொண் மூச்சு இழுக்கிற போதெல்லாம் அந்தக் குண்டலினி சக்தி அர்ஜுனனி உடம்பிலிருந்து வெளியே பரவி மூச்சு விடுகிறபொழுது மறுபடியு உள்ளுக்குள் ஒடுங்கி, மறுபடியும் இழுக்கிறபொழுது வெளியே பர

மறுபடியும் விடுகிற பொழுது உள்ளுக்குள் ஒடுங்கி அற்புதம் காட்டிக் கொண்டிருந்தது.

எல்லா நாடிகளும் சுத்தமாக இருந்தன. இதனால் கண்களில் ஒளி கூடியிருந்தது. ரத்த ஓட்டம் சீராக இருந்ததால் உதடு கனிவுடன் இருந்தது. கண்களில் ஒரு கனிவு பொங்கியது. கேசம் நீண்டதாய் முதுகுவரை வழிவதாய் இருந்தது. மார்புப் படங்கள் பெரிதாகவும், இடுப்பு இறுகியும், தொடைகள் உறுதியாகவும், முழங்கால்கள் இரும்பு போலவும், பாதங்கள் அகலமாகவும், கட்டை விரலை விட இரண்டாவது விரல் நீண்டதாகவும், சுண்டு விரல் பூமியோடு பதிந்தும், கைகள் முழங்கால் வரை தொங்கியும், அங்க லட்சணங்கள் மிக மிகச் சுத்தமாக இருந்தன.

கள்ளிச் செடியில் காக்கை போன்ற உருவத்தைச் செய்து அதை மரத்தின் உச்சியில் கட்டி எல்லாரையும் வில் வளைத்து கணை தொடுக்கச் செய்து, அந்த காக்கை கண்ணுக்குத் தெரிகிறதா என்றால் தெரிகிறது என்றார்கள். மரம் தெரிகிறதா என்றால் தெரிகிறது என்றார்கள். வானம் தெரிகிறதா என்றால் தெரிகிறது என்றார்கள். வானத்திற்கு மேல் தொலைவில் போய்க் கொண்டிருக்கிற கொக்கும் தெரிகிறது என்று துரியோதனன் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசினான். அவனைப் பார்த்து துரோணர் ஏளனமாகச் சிரித்தார்.

''கொக்கின் கால்கள் சிவந்திருப்பதும் எனக்குத் தெரிகிறது'' என்று பீமன் சொல்ல ''சும்மாயிரு'' என்று அவனைப் பார்த்து துரோணர் அதட்டினார்.

''அர்ஜுனா. சொல். உனக்கு என்ன தெரிகிறது சொல்'' என்று கேட்டார்.

''கள்ளிக் காக்கையின் தலை மட்டும் தெரிகிறது'' என்றார்.

''வேறு என்ன தெரிகிறது?'' என்று கேட்க ''தலையைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.''

''நன்றாக உற்றுப் பார். வேறு என்ன தெரிகிறது?''

''தலையைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை'' என்று மறுபடியும் சொல்ல ''அம்பை விடு'' என்று கட்டளையிட்டார்.

கள்ளிக் காக்கை சிதறி விழுந்தது.

அவர் தன் மாணவர்களின் மனோநிலையைச் சோதிக்க விரும்பினார்.

முதலைகள் இருக்கும் ஆற்றங்கரையில் கரையிறங்கினார். அவர் நீரில் இறங்கியதும் மெல்ல ஒரு முதலை அவரை நோக்கி நகர்ந்து வந்தது. முதலை அருகே வந்ததும் அதன் பிளந்த வாயில் தன் காலை வைத்தார். வலிவுடன் சேற்றில் அழுத்தினார். முதலை அவர் காலைப் பற்றிக் கொண்டது. அவர் மாட்டிக் கொண்டது போல அலறினார். ஆனால் அவர் கால் முதலையை அழுத்திக் கொண்டிருந்தது.

அவர் அலறல் கேட்டு மாணவர்கள் ஓடி வந்தார்கள். ஆற்றில் இறங்கினார்கள்.

முதலை காலைக் கவ்வியிருக்கிறது என்று தெரிந்ததும் வந்த வேகத்தில் பல பேர் கரையேறினார்கள். கரையிலிருந்து கல்லால் முதலையை அடித்தார்கள். நாலைந்து கற்கள் அவர் தலையிலும் முதுகிலும் பலமாக விழுந்தன.

பீமன் ஆற்றில் இறங்கி முதலையின் முதுகைக் குத்த ஆரம்பித்தான். அதை முறுக்க ஆரம்பித்தான். முதலையின் பிடி மேலும் இறுகி அவருக்கு காலில் ரத்தம் வழிந்தது. அவர் கதற பயந்துபோய் முதலையை விட்டு விலகி நின்றான்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். அர்ஜுனா அர்ஜுனா என்று அவர் அலற, தொலை தூரத்தில் மரங்களிலுள்ள இலைகளை அம்பால் பறித்துக் கொண்டிருந்த அர்ஜுனன் வில்லோடு ஓடிவந்தான். க்ஷணநேரத்தில் என்ன நடக்கிறது என்று புரிந்து கொண்டான். அம்பைத் தொடுத்து வேகமாக முதலையின் கழுத்தில்

அடித்தான். முதலையின் உயிர் நாடியில் அம்பு பட்டதும் முதலை வாய் பிளந்தது. அவர் காலை எடுத்துக் கொண்டார்.

முதலை கழுத்தை உதறி அம்பிலிருந்து விடுவித்துக் கொண்டு ஆற்றின் ஆழமான பகுதிக்கு விரைந்து மறைந்தது.

துரோணர் கரையேறினார்.

இவனே தனக்குச் சரியான மாணவன். இவனே தன்னை எல்லாத் துக்கத்திலிருந்தும் காப்பாற்றக்கூடியவன். இவனே தனக்கு நேர்ந்துள்ள அவமானத்தைத் துடைத்தெறிபவன் என்றெண்ணி தனியே கூட்டிக் கொண்டுபோய் பாடங்கள் நடத்தினார்.

பலவிதமான அஸ்திரங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார். பிரம்மாஸ்திரத்தை அவன் காதில் ஓதினார். இதை மனிதர்கள் மீது விட்டு விடாதே என்று சத்தியம் வாங்கிக் கொண்டார்.

இந்திரன் புளகாங்கிதம் அடைந்தான். அர்ஜுனனைச் சுற்றி வந்து பலமுறை ஆசிர்வதித்தான்.

தினமும் காலையும், மாலையும் அர்ஜுனன் விடும் அர்க்கியத்தை வாங்கி உறிஞ்சிக் குடித்துவிட்டு அந்த ஈரக்கையை அவன் தலையில் வைத்தான். அவனை பலமாக்கினான்.

இதே சமயம், பரசுராமர் கற்றுக் கொடுத்த அஸ்திரங்கள் மறந்து போகுமோ?

கர்ணன் சோதித்துப் பார்த்தான்.

வில் வளைக்க முடியாமல் போகுமா? இல்லை வளைக்க முடிந்தது. ஒவ்வொரு நாளும் வில் வளைத்தல் அதிக பக்குவத்தை அடைந்தது. அம்பு நெல் முனையளவுகூட இலக்கு பிசகாமல் பாய்ந்தது. தொலை தூரம் போய் இலக்கு தைத்த அம்பை, கூடவேயிருந்த இளைஞர்கள் போய் எடுத்து வந்தார்கள்.

சிறிய குதிரைகளில் விரைவாக ஏறி ஓடிப்போய் அந்த அம்ட
பிடுங்கி வந்து கர்ணனிடம் நீட்டினார்கள்.

''என்ன அற்புதமாய் வில்வித்தை செய்கிறாய்'' எ
பாராட்டினார்கள்.

மறந்தும் கூட அந்த மாதிரி வில்வித்தை பயிலவேண்டுமெ
எண்ணமில்லாமல் இருந்தார்கள்.

பரசுராமர் கற்றுக் கொடுத்த எதுவும் மறக்கவில்லை என்
அவனுக்குத் தெரிந்தது. அவன் சூரியனை வணங்கினான்.

சூர்ய பகவான் என்ன வேண்டுமென்று கேட்டார்.

''உள்ளுக்குள் ஒரு கோபத்தால் கொதித்துக் கொண்டிருக்கிே
ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தக் கோபம் என் குண
திசை திருப்பாமலிருக்க வேண்டும். கோபத்தால் நான் அழி
போகாதிருக்க வேண்டும். என் கோபத்தால் நல்லனவே வின
வேண்டும். என் கோபத்தை ஒரு கட்டுக்குள் வைத்துக்கொள்ள நீ உ
வேண்டும்'' என்று கைகூப்பிக் கேட்க சூரியனும் ''அவ்வாறே ஆ
என்றார்.

சொன்ன கணம் கர்ணனுக்குள் அமைதி பிறந்தது. மிகப்பெ
சாந்தம் பொங்கி வழிந்தது. எதைப் பார்த்தாலும் மெல்லிய சிரிப்பு
ஏற்பட்டது. தன்னுடைய வல்லமை தன்னைச் சார்ந்த யாரிட
பாய்ந்துவிடக்கூடாது என்று அவன் முக்கியமாக நினைத்த
தன்னைச் சார்ந்த அந்தக் குதிரை ஓட்டும் இளைஞர்களோடு
நெருக்கமாகவும், சந்தோஷமாகவும் பழகினான். அவர்களே
சேர்ந்து தானும் குதிரை ஓட்டினான். தந்தையிடம் ரதம் ஓட்டப் ப
கொண்டான்.

துரோணர் திருதராஷ்டிரரிடம் போய் அரச குல இளை
களுக்குப் பாடம் முடிந்து விட்டது என்றும் இதுவரை தாங்கள்
வித்தையை அரச குலத்தோருக்கும், மக்களுக்கும், அந்த இளைஞ

வெளிப்படுத்திக் காட்டுவார்கள் என்றும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வண்ணம் தங்கள் பராக்கிரமத்தை நிரூபிப்பார்கள் என்றும் சொன்னார்.

அரசன் சம்மதித்தான். கிருபரும், பீஷ்மரும் அந்த இளைஞர்கள் தங்கள் வித்தைகளைக் காட்டுவதற்குண்டான அரங்கத்தை நிர்மாணித்தார்கள்.

மக்கள் ஒரு பக்கமும், அரச குலத்தவர் ஒரு பக்கமும், பெண்கள் ஒரு பக்கமும் இருக்க நுழைவாயில் பெரிதாக இருந்து அந்த நுழைவாயிலுக்கு வெகு தொலைவில் இலக்குகள் வைக்கப் பட்டிருந்தன.

லாட வடிவில் இருந்த அந்த அரங்கத்தில் கௌரவர்களும், பாண்டவர்களும் ஒரு படைபோல ஒரே விதமான உடை உடுத்தி, தலைப்பாகை அணிந்து ஆயுதங்கள் ஏந்தி உள்ளுக்குள் வந்தார்கள். அந்த இளைஞர்களின் சீரான அணிவகுப்பைப் பார்த்து மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

எப்பேர்ப்பட்ட படை என்று வியந்து கூறினார்கள். இது யார். அது யார் என்று சுட்டிக் காட்டினார்கள். அர்ஜுனனை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள்.

நூறு பேரும் கண நேரத்தில் பிரிந்து மூலைக்கொருவராய் நின்று தங்கள் கையிலிருந்த ஆயுதத்தால் வித்தைகள் செய்ய மக்கள் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்கள்.

அர்ஜுனன் சரம் மேகத்தைப் பிளந்து கொண்டு போயிற்று. திரும்பி வந்து குருவே நமஹ என்று மேகத்தைக் கிழித்து எழுதியது.

கூட்டம் ஆச்சரியப்பட்டு கைதட்டியது. அந்த அம்பு திரும்பி அர்ஜுனன் கைக்கே வந்தது. மறுபடியும் அம்புவிட மழை பெய்தது. இன்னோர் அம்புவிட காற்றடித்தது. மீண்டும் ஓர் அம்புவிட அக்னி பிறந்தது. மக்கள் பயந்துபோய் தலைக்கு மேலே கை வைத்துக்

கொண்டார்கள். ஒரு தடையை வைத்துக் கொண்டு மேசே பார்த்தார்கள்.

ஆனால் எதுவும் அவர்களைத் தீண்டவில்லை. எல்லா தரையில் விழுந்தன.

தொலைதூரத்தில் உள்ள இலக்குகளை அர்ஜுனன் குறி தவறாம அடித்தான். சற்றும் குறி தவறவில்லை என்பதற்கான கொடி அங்கிருந் அசைத்துக் காட்டப்பட்டது.

மாலை வெயில் அரசன் திருதராஷ்டிரன் முகத்தைத் தாக் அம்பால் சடசடவென்று ஒரு மறைப்பு ஏற்படுத்தினான். அந்த மறைப் அரசன் முகத்தில் நிழல் கொடுக்க அரசனுக்குத் திடீரென்று இட குளுமையானது தெரிந்தது. காரணம் என்ன என்று கேட் அருகிலுள்ளோர் விவரித்துச் சொல்ல அவன் பலமாக கைதட்டினான். எழுந்து நின்று அர்ஜுனனை ஆசிர்வதித்தான்.

துரியோதனன் என்ன செய்கிறான் என்று கேட்க அவ கதையால் பல்வேறு வித்தைகள் செய்து கொண்டிருப்பது தெரிந்தது

எனக்கு இணை யார் என்று அவன் கொக்கரிக்க பீமன் பதிலுக் கொக்கரிக்க அவர்கள் இரண்டு பேரும் யுத்தம் செய்தார்கள்.

விளையாட்டாக நடந்த போர் உள்ளுக்குள் ஏற்பட்ட இயல்பா பொறாமையால் நிஜமாக உருவெடுத்தது. அவர்கள் பலமாக ஒருவ ஒருவர் தாக்கிக் கொண்டார்கள்.

கதை மோதும் சத்தம் கோட்டையின் சுவரில் எதிரொலித்த தூசு கிளம்பி யார் எங்கே சண்டை போடுகிறார்கள் என்று தெரியாம கண்ணை மறைத்தது. இருவரும் ரத்தம் ஒழுகத் தள்ளாடினார்கள்.

துரோணர் புகுந்து அவர்களைத் தடுத்து நிறுத்தினார். இருவருமே வெற்றி பெற்றவர்கள் என்று அறிவித்தார்.

திருதராஷ்டிரன் கைதட்டி தன் மகனைப் பாராட்டினான் குந்திதேவி பீமனை நோக்கிப் புன்னகை செய்தாள். கை உயர்த்

ஆசிர்வதித்தாள். தருமர் ஓடிவந்து பீமனைத் தழுவிக் கொண்டார். அர்ஜுனன் அருகே வந்து பீமனின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"என்னுடைய வீரர்களிலேயே மிகச் சிறந்தவனான அர்ஜுனன் இப்பொழுது செயற்கரிய செயல்கள் சிலவற்றைச் செய்து காண்பிப்பான். வில் வித்தையில் அவனுக்கு நிகர் வேறு எவருமில்லை. இந்த உலகத்தில் அர்ஜுனனே மிகச் சிறந்த வில்லாளி" என்று துரோணர் உரக்கச் சொன்னார்.

அர்ஜுனன் மேடையேறினான். சபையையும் அரசரையும் வணங்கினான். வில்லை வளைத்து நாணேற்றினான். சரங்கள் மேலே பாய்ந்து தடுப்புச் சுவர் போல மேலே மிகப்பெரிய குடையை உருவாக்கியது.

அரங்கம் இருட்டாகியது.

ஒரே அம்பால் அவற்றை அடித்து நொறுக்க அவை பொடிப் பொடியாகிக் கீழே விழுந்தன. மறுபடியும் வெளிச்சம் ஏற்பட்டது.

இயந்திரத்தில் வைத்த இரும்புப் பன்றி வேகமாகச் சுழல அர்ஜுனன் கண்களைக் கட்டிக் கொண்டான். இரும்புப் பன்றியிலிருந்து வரும் சப்தத்தை உற்றுக் கேட்டு சரமாரியாக அம்புவிட பன்றியின் வாய் முழுவதும் அம்புகள் நிறைந்தன. இன்னோர் அம்புவிட சங்கிலி அறுபட்டு தரையில் விழுந்தது.

எப்பொழுது வில்லை வளைக்கிறான். எப்பொழுது விடுகிறான். எப்பொழுது சரம் பாய்கிறது. எங்கே தைக்கிறது என்று தெரியாமல் ஜனங்கள் திகைத்தார்கள். அறுந்துபோன பிறகுதான் வாய் முழுவதும் அம்பு தைத்திருப்பது பார்த்து கைதட்டவும் மறந்து அர்ஜுனனையே திகைப்போடு பார்த்து நின்றார்கள்.

அர்ஜுனன் வணங்கவும் மகிழ்வோடு கைதட்டினார்கள். அந்தக் கைதட்டலையும் மீறி ஒரு தோள் தட்டல் அந்த அரங்கத்தின் வாசலில் ஒலித்தது.

கர்ணன் உயரமாய் அகலமாய் சிவந்த கண்களும் மெல்லிய மீசையும், நீண்ட புஜங்களும், உறுதியான காலும், செஞ்சடையும், அகன்ற நெற்றியும், விரிந்த மார்புமாய் நின்று கொண்டிருந்தான்.

அவன் கண்கள் மிகப்பெரியனவாய் இருந்தன. உதடுகள் கோபத்தில் துடித்துக் கொண்டிருந்தன.

''யாரது?''

தோள் தட்டியவனைப் பார்த்து துரோணர் உரக்கக் கேட்டார்.

'என் பெயர் கர்ணன். அர்ஜுனன் என்ன வித்தைகள் செய்வானோ அத்தனை வித்தைகளையும் இந்த அரங்கத்தில் என்னால் செய்ய முடியும். இது சத்தியம்'' என்று அவன் உரக்கக் குரல் கொடுத்தான்.

அர்ஜுனன் அவனை உற்றுப் பார்க்க துரோணர் அவனை அருகே வருமாறு சைகை செய்தார்.

பீமனால் கடுமையாகத் தாக்கப்பட்டு சோர்ந்து போய், கண்கள் மூடிக் கொண்டிருந்த துரியோதனனை துச்சாதனன் உலுக்கி எழுப்பினான்.

'யாரோ கர்ணனாம். அரங்கத்தின் வாசலில் தோள் தட்டிக் கொண்டிருக்கிறான். அர்ஜுனனை விட அதிகமாக வில்வித்தை செய்து காண்பிப்பேன் என்று கட்டியம் கூறுகிறான். சத்தியம் என்று உரக்கச் சொல்லுகிறான்'' என்று சொல்ல, துரியோதனன் துள்ளி எழுந்தான்.

தன்னால் ஜெயிக்க முடியாதவர்களை இன்னொருவன் ஜெயிக்கப் போகிறானா. யார் அவன். எங்கேயிருந்து வந்தான்? என்று ஆச்சரியத்துடன் வெளியே வந்து அரங்கத்தின் வாயிலைப் பார்த்தான்.

ஓரமாய் நின்றவனைப் பார்த்தவுடன் அவன் மனத்தில் நட்பு பூத்தது. அப்படி நிற்பவனுக்குப் பின்னே திகிரிபோல் சூரியன் இருப்பது தெரிந்தது இவன் தெய்வாம்சம் என்பது புரிந்தது.

தனக்கு தெய்வத்தின் துணை இப்போது தேவை என்பதை அவன் அறிந்திருந்தான். அடி வாங்கி கடவுளே... கடவுளே ஏன் இப்படி அவமானப்பட வைக்கிறாய் என்று புலம்பியதற்கு கடவுள் செவி சாய்த்து விட்டார் என்று எண்ணினான்.

அங்கிருந்தபடியே கர்ணனை பார்த்து கைகூப்பினான். உள்ளேபோய் அவசரமாக முகம் கழுவிக் கொண்டான். தலைப்பாகை அணிந்துக் கொண்டான். கதையை எடுத்து தோளில் சாய்த்துக் கொண்டான். காயங்களுக்கு மருந்து போட்டுக் கொண்டான்.

சட்டென்று ஓய்வெடுக்கும் அறையை விட்டு வெளியே வந்து அரங்கத்தினுள் வந்து அமர்ந்து கொண்டான்.

ஆச்சார்ய துரோணருக்கு வந்தவன் அம்சமாக இருந்தாலும் அர்ஜுனனுக்கு இணையானவன் என்ற நம்பிக்கை வரவில்லை.

சரி. இவன் ஏதோ துரியோதனனைப் போல ஆத்திரமுள்ள இளைஞனாக இருக்கிறான். பேச்சு இருக்கிற அளவுக்கு செயலில் வேகம் இருக்காது. அர்ஜுனன் செய்கின்ற வித்தையில் பாதியைக் கூட இவனால் செய்ய முடியாது. இவன் விடுத்த குரலுக்கு இவனே அவமானப்படட்டும். இவனைப் பற்றிய தீர்ப்புகளை ஜனங்களே செய்யட்டும். நாம் இப்போது தடுத்தால் அது நன்றாக இராது என்று மனத்தில் நினைத்துக் கொண்டார். ஆரம்பி என்று அவனுக்கு உத்தரவிட்டார்.

கர்ணன் சபையை நமஸ்கரித்தான். வந்து அமர்ந்த துரியோதனனைப் பார்த்து புன்னகை செய்தான். பீமனை ஏளனமாகப் பார்த்தான். வில் வளைத்து ஆகாயத்தில் மனத்தை நிறுத்தினான். சூரியனை நினைத்தான். செய் என்ற கட்டளை கேட்டது.

அம்பு தொடுத்துவிட மேலே பலநூறு சரங்கள் பந்தல் போட்டன. இன்னும் ஓர் அம்பு விட இரண்டாவது பந்தலும் இறுக்கமாகப் பின்னப்பட்டது. வலுவுள்ள எவரேனும் இதனை அடித்து

வீழ்த்தட்டும் என்று சொல்ல, பல பேர் அதன் மீது அம் தொடுத்தார்கள். அது அசையாதிருந்தது.

அர்ஜுனன் அம்பு தொடுக்க முயல துரோணர் அவனைத் தடுத் விட்டார்.

''இத்தனை பேர் அடித்தும் விழாதிருக்கிறது. நீ அடித்து விழா போனால் அது நன்றாக இராது. சும்மாயிரு'' என்றார்.

தான் தொடுத்த அம்புப் பந்தலை கர்ணனே அடித்து வீழ்த்தினா அம்புகள் நொறுங்கி தரையில் விழுந்தன.

இந்த விஷயம் அர்ஜுனன் செய்ததை விட ஒரு படி மேலா இருந்தது.

தொலைதூர இலக்கு நோக்கி கர்ணன் தன் பார்வையை திருப்பினான். ஓர் அம்புக்கு இரண்டு அம்பாகத் தொடுத்தான். இழுத் விட்டான். இரண்டு அம்புகளும் நெல்முனை பிரியாமல் ஒ இடத்தில் தைத்தன என்று கொடி அசைந்து தகவல் சொல்லிற்று. மக்க ஆரவாரம் செய்தார்கள்.

இயந்திரத்தில் இரும்புப் பன்றியை மாற்றிச் சுற்றப்பட்ட கர்ணன் கண்களைக் கட்டிக் கொண்டான். சரம் தொடுத்தான். சரத்தி வேகமும், வில்லின் நாண் அதிர்வும் மக்களுக்குக் கேட்டன. மக்க பயந்து காதைப் பொத்திக் கொண்டார்கள். எங்கே தங்கள் மீது பட் விடுமோ என்று கூனிக் குறுகி நின்றார்கள். திருதராஷ்டிரனும் பயந் ''என்ன இது இவ்வளவு வேகமாக அம்பு விடும் ஒலி கேட்கிறதே என்று கேட்க, என்ன நடக்கிறது என்று சொன்னார்கள்.

இயந்திரம் நின்றது. இயந்திரப் பன்றியின் உடம்பு முழுவது அம்பு செருகிக் கிடந்தது. இயந்திரம் நின்றதும் பன்றி தானே அறுந் அம்பின் கனம் தாங்காமல் தரையில் விழுந்தது.

ஜனங்கள் பித்துப் பிடித்தவர்கள் போல் ஆனார்கள். தங்க ஆடைகளை மேலே உயர்த்தி கர்ணனை வாழ்த்தி கோஷமிட்டார்க

அவன் அடித்த விதமாக தன்னால் அடிக்க முடியாது என்று அர்ஜுனனுக்குத் தெரிந்து போயிற்று. அவன் பொறாமையால் உதடு துடிக்க, கண்கள் சிவக்க துரோணரையே பார்த்துக் கொண்டிந்தான்.

துரோணர் அவன் மனநிலையை அறிந்தார். கர்ணனை அவமானப்படுத்த நினைத்தார்.

'அப்பனே. அருகே வா. நீ யார் என்பதை மக்களுக்குச் சொல்'' என்று உரக்கக் கட்டளையிட்டார்.

அவன் உடுத்தியிருந்த உடையும், நிற்கின்ற நிலையும் அவருக்கு அவன் குதிரைக்காரன் என்பதைத் தெளிவாகக் காட்டின. அதை அவன் சொல்ல வேண்டும் என்று விரும்பினார்.

கர்ணன் மௌனமாக நின்றான்.

''என் பெயர் கர்ணன். வசுசேனன் என்கிற கர்ணன்'' என்று தயங்கிச் சொன்னான்.

''உன் தந்தை யார்? உன் தாய் யார்? உன் குலம் என்ன? அதைச் சொல்லு'' என்று மறுபடியும் துரோணர் கட்டளையிட்டார்.

கர்ணன் தரை பார்த்தான். மெல்ல வானம் பார்த்தான்.

அவன் தயக்கம் துரியோதனனுக்கு நெஞ்சு வலியைக் கொடுத்தது.

தருமனும், பீமனும் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்துத் தெரிந்துகொண்டு தொடை தட்டினான். தோள் தட்டினான். வாழ்க கர்ணன் என்று கர்ஜித்தான்.

நூறு பேரும் எழுந்து கர்ணனை வாழ்த்தினார்கள். கர்ணன் அவர்களை நோக்கிக் கையசைப்பினான். பாண்டவர்கள் இறுகின முகத்துடன் உட்கார்ந்திருப்பதையும் பார்த்துச் சிரித்தான்.

''அப்பனே. சொல். உன் குலம் சொல்.'' துரோணர் மறுபடியும் அவனை நோக்கிக் கட்டளையிட்டார். மீண்டும் கர்ணன் முகம் சிறுத்தான்.

''நான் ஒரு தேரோட்டியின் மகன். என் தந்தையின் பெயர் அதிரதன். என் தாயின் பெயர் ராதை'' என்று சொன்னான்.

கூட்டம் அமைதியாய் அவனை உற்றுப் பார்த்தது. துரோணர் வாய் விட்டுச் சிரித்தார்.

''அப்பனே. நீ தேரோட்டியல்லவா? நான்காவது வருணமல்லவா? எதற்கு இந்தச் சபையில் ஏறினாய்? உன்னுடைய குலத்திற்கேற்ப நீ சவுக்கும், குதிரையுமாய் அலைபவனாயிற்றே. வில்வித்தை உனக்கு யார் கற்றுக் கொடுத்தார்? எவரிடமிருந்து கற்றுக் கொண்டாய்? நேர்மையான முறையில் கற்றுக் கொண்ட வில்வித்தையா இது? அல்லது ஏதேனும் பொய் சொல்லிக் கற்றுக் கொண்டாயா? இப்படிப்பட்ட அஸ்திரப் பயிற்சி யாவும் உங்களைப் போன்ற நான்காவது வருணத்திற்கு உரியனவல்லவே. அரச குலத்திற்கு உண்டான இந்த வில்வித்தையை நீ எங்கோ கற்றுக் கொண்டு இங்கு ஏறுகிறாயே. இது சரியல்லவே. நீ என்ன கற்றுக் கொண்டாலும் உன்னுடைய குலம் என்ன என்பது தான் முன்னால் நிற்கும். எத்தனை உயரே பறந்தாலும் காக்கை காக்கைதான். அது கழுகாக மாறிவிடாது. எனவே எங்கு எதைப் பேச வேண்டும். எப்பொழுது எதைச் செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டு நல்ல இளைஞனாக நடந்துகொள். வில்லையும், அம்பறாத் தூணியையும் இங்கு வைத்துவிட்டு நீ உன் குலத்திற்குரிய சவுக்கை எடுத்துக் கொண்டு போ'' என்று சொல்ல வாசலில் ''கர்ணா'' என்ற அலறல் கேட்டது.

வயதினாலும், கடுமையான உழைப்பினாலும் தட்டுத் தடுமாறி கர்ணனுடைய தந்தை ஓடி வந்து கொண்டிருக்க அரங்கத்தின் எந்தப் பக்கம் ஏறுவது என்று தெரியாமல் சுற்றி வந்து கொண்டிருக்க, கர்ணன் கீழிறங்கி அவரை அணைத்துக் கொண்டு நின்றான்.

''கர்ணா... ஏதோ வில்வித்தைக்குப் போகிறாயாமே? அரச குமாரர்களோடு சண்டையாமே இங்கு வந்து தகவல் சொன்னார்கள். உனக்கு ஏனப்பா இந்த வம்பு? அவர்கள் கோபமானவர்கள். தண்டிக்கக் கூடியவர்கள். நாம் எதற்காக தேவையில்லாமல் தண்டிக்கப்பட வேண்டும்? உன் ஒருவனால் நமது குலம் முழுவதும் தண்டிக்கப்பட்டு விடுமே. ஒன்றுமறியாத அப்பாவி இளைஞர்கள் சவுக்கால் அடிபடுவார்களே. பெண்கள் சிதைக்கப்படுவார்களே. வேண்டாம் கர்ணா. அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வந்து விடு. அவர்கள் காலில் விழுந்து வணங்கி வந்து விடு. நம்முடைய குலம் நாசமாகாமல் தப்பித்துக் கொள்ளட்டும்.''

''மன்னர்களே. அரச குலத்தோரே... உங்களுக்கு இந்தத் தேரோட்டி வணக்கத்தைச் சொல்லுகிறேன். என்னுடைய குழந்தை ஏதேனும் தவறு செய்தால் தயவு செய்து அதை மன்னித்து அவனை என்னோடு வீட்டுக்கு அனுப்புமாறு தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். உங்கள் கோபம் எதன் பொருட்டும் எங்கள் மீது திரும்ப வேண்டாம் என்பதை உங்கள் தாள்பணிந்து கேட்டுக் கொள்கிறேன்'' என்று நிலம்படக் கீழே விழ, கர்ணன் அவரைத் தூக்கி நிறுத்தினான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

தன் பொருட்டு தந்தை அலறி நாலு பக்கமும் அலைந்து கைகூப்பி அழுததைக் காண வருத்தமாக இருந்தது.

கர்ணனுடைய வருத்தம் துரியோதனனின் நெஞ்சை அசைத்தது.

எப்பேர்ப்பட்ட வீரன் கண்ணில் நீர் விடுவதா. தன் குலத்தின் பொருட்டு சிறுத்துப் போவதா? குலம் என்ன குலம்? உயர் கல்வியல்லவா முக்கியம்? என்று சீறி எழுந்தான்.

''கிருபரே. பிதாமகர் பீஷ்மரே, துருபதரே அர்ஜுனனைக் காப்பாற்றுவதற்காக துரோணர் அடாது செய்கிறார். இந்த இளைஞனை இழிவுபடுத்துகிறார். சிப்பிக்குள்தான் முத்து இருக்கிறது. அது இழிவானதாகி விடாது. மரக்கட்டையில்தான் அக்னி இருக்கிறது. அது

காலின் மீது மிதிபடும்படி கிடந்தாலும் அது கேவலமாகி விடாது. கருங்கல்லில் உட்கார்ந்தாலும் கால் வைத்து சிற்பி சிற்பத்தைச் செதுக்குகிறான். ஆனால் அதை நிமிர்த்தும்போது சகலரும் கைகூப்பி கடவுள் என்று தொழுகிறார்கள். சிற்பி ஏறி அமர்ந்ததாலேயே அந்தக் கருங்கல் சிற்பம் தீண்டத்தகாததாக ஆகிவிடவில்லை. அந்தணர்களும் அபிஷேகம் செய்து நிறைவைப் பெறுகிறார்கள்.

எவர் காலின் கீழோ இருந்த இக் கருங்கல்லை அற்புதமான சிற்பத்தை நான் நிமிர்த்தி வைக்கிறேன். அபிஷேகம் செய்கிறேன். இவன் குலம் தாழ்ச்சி என்று தானே துரோணர் சொன்னார்? இவனை அங்க தேசத்தின் அரசனாக்குகிறேன். இவனை மன்னர் குலத்தோனாக மாற்றுகிறேன். இப்படிப்பட்ட வில் வித்தையுடையவனை இந்த சபையில் இழிவு படுத்தக்கூடாது. அர்ஜுனன் மட்டுமே தனக்கு மாணவன். அர்ஜுனன் மட்டுமே இங்கு உயர்வாக இருக்க வேண்டும் என்று துரோணர் நினைப்பது தவறு. அர்ஜுனனைவிட வில் வித்தையில் சிறந்தவன் என்று இந்த அரங்கத்தினுள் அத்தனை பேரும் அறிய கர்ணன் தன்னை நிரூபித்திருக்கிறான். இது பாராட்டப்பட வேண்டும். மறுக்கப்படக்கூடாது'' என்று உரக்கச் சொல்ல, சகலரும் தலையாட்டினார்கள்.

துரியோதனன் சிம்மாசனம் வரவழைத்தான். கங்கை நீர் கொண்டு வரச் செய்தான். கர்ணனுக்கு அருகே போனான். கைகள் விரித்து கட்டித் தழுவிக் கொண்டான். அவன் தலையை வருடினான்.

''என்னையும், என் தம்பிகளின் கௌரவத்தையும் நீ காப்பாற்றினாய். எனக்கு எதிரியான அர்ஜுனனை அவமானப்படுத்தினாய். உன் எதிரிதான் எனக்கும் எதிரி. எனவே நாம் நண்பர்கள். மரணபரியந்தமும் நாம் நண்பர்கள். எது நேர்ந்தாலும் நாம் நண்பர்கள். எங்கு இருந்தாலும் நாம் நண்பர்கள்'' என்று இறுக்கித் தழுவிக் கொண்டான்.

அந்தத் தழுவலில் கர்ணன் சந்தோஷமடைந்தான். பணிந்து துரியோதனனின் கால் தொட முயன்றபோது துரியோதனன் அவனை நிமிர்த்தினான்.

"ஒரு காலும் என்னைப் பணியாதே. நீ எனக்குத் தாழ்ந்தவனல்லன். நீ எனக்கு நண்பன். எனக்கு இணையானவன். இதை நான் மறக்கவே மாட்டேன். ஒரு பொழுதும் உன்னை அவமரியாதையாக நடத்த மாட்டேன். இது சத்தியம்" என்று சொன்னான்.

"இளவரசனே. உன் நட்பை நான் ஏற்றுக் கொண்டேன். இந்த அன்புக்கு சபையில் நான் அவமானப்பட்டபோது துணிந்து நின்று என்னை மன்னனாக்கியதற்கு நான் என்னை கைம்மாறு செய்யப் போகிறேன்? என் உயிர் உள்ளவரை என் கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை அது உனக்குச் சேவை செய்யும்.

நீ என்னை நண்பன் என்று அழைத்தாலும், நான் உன்னை அரசனாகக் கொள்வேன். உனக்கு அடிமையாக இருப்பேன். உன்னை விட்டு ஒரு பொழுதும் அகல மாட்டேன். உனக்கெதிராய் ஒரு பொழுதும் பேச மாட்டேன். நினைக்கவும் மாட்டேன். இது சத்தியம்" என்று அவன் கையில் தன் கையை ஓங்கி அறைந்து சத்தியம் செய்து கொடுத்தான்.

துரியோதனன் கர்ணனை சிம்மாசனத்தில் வைத்து அபிஷேகம் செய்து கையில் வாள் கொடுத்து, செங்கோல் கொடுத்து, குடை கொடுத்து விசிறி வீச சேடிகள் கொடுத்து, பாதத்திற்கு தனித்து பாதுகை கொடுத்து நெஞ்சிலே ஹாரம் கொடுத்து, தலைக்குக் கீரிடம் கொடுத்து அங்க தேசத்து அரசனாக அங்கீகரித்தான்.

கர்ணன் அரசனாக எழுந்திருப்பதைப் பார்த்து அவன் தந்தை நடுங்கி கீழே விழுந்தான். அவன் கூட்டம் சந்தோஷமாகக் கைதட்டியது. ஆரவாரம் செய்தது. அவன் கூட்டத்தை நோக்கிக் கைவிரித்தான். நான் உங்களுடையவன் என்று சைகை செய்தான். கூட்டம் மீண்டும் குதித்தது. ஆரவாரம் செய்தது.

மிகப்பெரிய குலப்பகை அங்கு எழுந்தது. யுத்தம் நிச்சயம் என்று தேவர்கள் நினைத்துக் கொண்டார்கள். சான்றோர்கள் புரிந்து கொண்டார்கள்.

இது விதியின் மாயச் சதி என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அரச குலம் அழியப் போகிறது, இவனால் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். க்ஷத்திரியர்களின் கர்வம் அடிபடப் போகிறது என்பதை பண்டிதர்கள் சைகையால் சொன்னார்கள்.

கர்ணன் பதவியேற்ற அந்த அந்தி வேளையை ஜோதிடர்கள் குறித்துக் கொண்டார்கள். க்ஷத்திரிய குலம் சர்வ நாசம் என்று பலன் எழுதினார்கள்.

கர்ணன் துரியோதனனை வணங்கிவிட்டு சகல அந்தஸ்து களோடும், ஆபரணங்களோடும் தன் கூட்டம் நோக்கிப் போனான். கூட்டம் அவனைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டது.

இதுவரை அவர்கள் ஒரு மன்னரைத் தொட்டுப் பார்த்ததேயில்லை. அவர்கள் எல்லாரும் கர்ணனைத் தொட்டார்கள். கர்ணனும் அவர்கள் எல்லாரையும் தழுவிக் கொண்டான்.

அவன் குலத்துப் பெண்கள் அவனைப் பார்த்து விம்மி விம்மி ஆனந்தத்தோடு அழுதார்கள். அவர்களையெல்லாம் பார்த்துக் கைகூப்பினான். ஆறுதல் மொழிகள் சொன்னான். அவன் குலத்துப் பெரியோர்கள் அவனுக்கு அருகே வந்து வியந்து பார்த்தார்கள். தலைதொட்டு ஆசிர்வதிக்கலாமா என்று தயங்கினார்கள். கர்ணனே அவர்கள் கையைப் பற்றித் தன் தலையில் வைத்துக் கொண்டான். அவர்கள் பாதம் பணிந்து கன்னங்களில் முத்தமிட்டான்.

முடிசூடிய ஒரு மன்னன் தங்கள் கால்களைத் தொடுவதைப் பார்த்துப் பதறினார்கள். ஆனால் சந்தோஷத்தோடு கர்ணனை இறுக்கத் தழுவிக் கொண்டார்கள்.

அந்த நதிக்கரையிலிருந்த மிகப் பெரிய அந்த குதிரைக்காரக் கூட்டம் அன்றிரவு முழுவதும் ஆனந்தக் கூத்தாடியது. மறுநாள் காலை அங்க தேசத்திற்கு கர்ணனோடு இடம் பெயர்ந்தது.

## 5

**அ**ங்க தேசம் வளமான பூமியல்ல. வானம் பார்த்த பூமி. மழை நீரைத் தேக்கி வைக்கக் குளங்கள் இல்லை. கிணறுகள் தோண்டப்பட வில்லை. நதி எதுவும் பெரிதாகப் பாயாததால் பெரிய பாசனம் ஏதுமில்லை. பெரிய ஜீவநதியின் சிறிய கிளை நதிகள் இருந்தன. ஜீவநதிகள் பொங்கிப் பெருகும்போது கிளைநதிகளில் தண்ணீர் வந்தது. மழைக்காலத்தில் மண் சேராத புதர்கள் முளைத்தன. ஒட்டகங்களும், ஆநிரைகளும் அவற்றைத் தின்று வளைய வந்தன.

அங்கதேசத்திற்குள் கர்ணன் தன்னுடைய குடி படைகளுடன் நுழைந்ததும் அங்குள்ள ஜனங்கள் கைகூப்பி வரவேற்றார்கள்.

''இது கௌரவர்களுக்குச் சொந்தமான பூமி. இருந்தாலும் இதுவரை அரசர் எவரும் இங்கு வந்ததில்லை. எங்களை விசாரித்ததில்லை. நாங்கள் என்ன செய்கிறோம் என்று அக்கறைப் பட்டதில்லை. போவதற்கும், வருவதற்கும் இந்த வழி பயன்பட்டதே தவிர, அப்பொழுதுதான் எங்கள் ஊரில் சுபிட்சம் நிலவுமே தவிர, மற்றபடி எங்கள் வாழ்க்கையில் எந்த மாறுதலும் இல்லை. எந்த வளமும் இல்லை. இந்த ஓர் இடத்திற்கு எங்களுக்கென்று மன்னனாக நீங்கள் நியமிக்கப்பட்டது மிகுந்த சந்தோஷம். உங்கள் குடிபடைகள் அத்தனைக்கும் இங்கு இடம் இருக்கும். ஆறு மாதம் கடும் வெப்பமான காலமாதலால் அந்தக் காலத்தில் உயிர் வாழ்வதற்கென்று நாங்கள் தானியங்கள் சேமித்து வைத்திருக்கிறோம். அந்த தானியங்களை இப்பொழுது உங்களுக்குக் கொடுக்கிறோம்.''

அந்த ஏழை எளிய மக்கள் வந்திருந்த மன்னனையும் அவனது குடிமக்களையும் வணங்கி வாழ்த்தி விருந்தளித்தார்கள்.

கர்ணனின் தகப்பன் அதிரதன் அவர்களை நோக்கி கைகூப்பினான்.

மிகப்பெரிய ஆலமரத்தின் நிழலில் கர்ணனின் சபை கூடியது ஆண்களும், பெண்களும் இரண்டு பிரிவாக உட்கார்ந்தார்கள். வயது முதிர்ந்த மூதாட்டிகளும், கிழவர்களும் அரசனுக்கு அருகிலும், பிறகு குழந்தைகளும், இளம் பெண்களும் அதற்குப் பிறகு முதிர்ந் ஆண்களுமாய் இருந்தார்கள்.

''நாள், நட்சத்திரம் எதுவும் பார்க்காமல் எவர் உத்தரவையு கேட்காமல் எந்த பூஜையும் செய்யாமல் நாம் இந்த தேசம் நோக்கி வந் விட்டோம். இங்கு குடியேறிவிட்டோம். இது சரியா என் தெரியவில்லை. எல்லா அரசர்களும் தங்களுடைய ஒவ்வொர அசைவிற்கும் ஜோசியர்களைக் கலந்து பேசுகிறார்கள். பெரியவ களைக் கேட்டு அதற்குப் பிறகே செய்கிறார்கள். நாம் இப்படிச் செய்தது நமக்கு ஏதும் கெடுதலை உண்டாக்கி விடுமோ என்ற கவலை எனக்கு இருக்கிறது.''

அதிரதன் பேசினான். கர்ணன் அதற்கு வாய்விட்டுச் சிரித்தான்

''நாம் இங்கு குடியேறுதலுக்கு மட்டுமல்ல. எனக்கு மணிமு சூட்டப்பட்ட நேரமும், என்ன என்று எனக்குத் தெரியாது. நல்லதே கெட்டதோ என்று நான் அறியேன். நாம் அப்பொழுது எந் ஜோசியர்களையும் கேட்கவில்லை, கொண்டு வா... கொண்டு வா என்று மணிமுடியை வாங்கித் தரித்துக் கொண்டோம் மன்னனானோம். எனவே மன்னனானதே நேரம், காலம் தெரியா விதத்திலே இருக்க குடிபுகுந்தது பற்றி நாம் கவலைப்படுவானேன்? என்று சொல்ல மற்றவர்களும் ஆமோதித்தார்கள்.

''ஆனாலும், நேரம், காலம் பார்க்காமல், நாள், நட்சத்திர கேட்காமல் இவ்விதம் வந்தது சரியா என்ற கேள்வி எல்லா மனத்திலும் இருந்தது. இதற்கு ஏதேனும் பரிகாரம் செய்

வேண்டுமா?'' என்று இன்னொருவர் கேட்க கர்ணன் அவர்களை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''பரிகாரம் என்றால் என்ன?'' என்று கேட்டான்.

''யாகம் செய்தல், பலியிடுதல்.''

''யாரை?''

''மிருகங்களை.''

''ஓ...வாயில்லாத ஜீவன்களைப் பலியிட்டால் நமக்கு எல்லா வசதிகளும் வந்துவிடுமோ? கடவுளுடைய அனுக்கிரகம் கிடைத்து விடுமோ?'' என்று கேட்டான்.

''அப்படிச் சொல்வது வழக்கம்.'' குடிமக்களில் ஒருவர் சொல்ல, இல்லையென்று உதடு பிதுக்கினான்.

''இங்கே யார் யாகம் செய்ய வேண்டும்?''

''அரசனே.''

''அரசனுக்கு யாகம் செய்ய யார் உதவ வேண்டும்?''

''குடிமக்கள் அனைவருமே.''

''நான் யாகம் செய்யப்போகிறேன்.''

கூட்டம் ஆரவாரம் செய்தது.

''மிகப்பெரிய யாகம் செய்யப் போகிறேன்.''

கூட்டம் எகிறிக் குதித்தது.

''இதுவரை எந்த மன்னரும் செய்யாத மிகப்பெரிய யாகத்தை அஸ்வமேத யாகத்தைவிட மிக உன்னதமான ஒரு யாகத்தை நான் முன் நின்று நடத்தப்போகிறேன்.''

கூட்டம் பயந்து அமைதியாயிற்று.

ஒன்றுமே அறியாத நாம் அப்படியெல்லாம் யாகம் செய்ய முடியுமா என்ன என்று திகைத்தது.

''மகனே... சற்று யோசித்துப் பேசு. பெரியவர்களைக் கலந்து ஆலோசித்துவிட்டு அதற்குப் பிறகு சபையில் சொல்லலாமே. உன் மனத்தில் என்ன இருக்கிறது என்று எவரிடமும் சொல்லாமல் திடீரென்று யாகம் செய்யப் போகிறேன் என்று அவையில் சொல்வது ஆரவாரத்தைத் தருகிறதே தவிர, இது அறிவுப் பூர்வமான விஷயமாக எனக்குப் படவில்லை.''

''அப்பா... என்ன யாகம் என்று கேட்டுக் கொண்டீர்களென்றால் நீங்களும் சந்தோஷத்தில் குதிப்பீர்கள். இதைவிட உன்னதமான விஷயம் எதுவுமே இல்லையென்று நீங்கள் இறைவனை நோக்கி கைகூப்புவீர்கள். எனக்கு இந்தவித புத்தியைக் கொடுத்தற்காக அவருக்கு நன்றி சொல்வீர்கள். நீங்களும் என்னைப் போலவே யாகம் செய்ய முயற்சி செய்வீர்கள்'' என்று உரத்துச் சொன்னதும், சபை அவனை அமைதியாகப் பார்த்தது.

''என்ன என்று சொல்லுங்கள் ஐயா'' இன்னோர் இளைஞன் கைகூப்பினான்.

''இந்த அங்க தேச அரசனான கர்ணன், உங்களுடைய சேவகனான இந்தக் கர்ணன், வாழ்வின் இறுதி மூச்சுவரை ஓர் உன்னதமான செயலைச் செய்துகொண்டே இருக்கப் போகிறான். யார் எது கேட்டாலும் எப்பொழுது கேட்டாலும் என்னிடம் அந்தப் பொருள் இருக்குமாயின் வெகு நிச்சயமாக அதை அவனுக்குக் கொடுத்து விடுவேன். இல்லை என்ற வார்த்தை இந்தக் கர்ணனிடம் இல்லை. இனி ஒரு பொழுதும் தரமாட்டேன், எனக்குத் தெரியாது என்கிற வார்த்தையை நான் சொல்லமாட்டேன். தினம் தினம் தானம் செய்வதுதான் என் யாகம். எல்லாருக்கும் வாரி வழங்குவதுதான் என்னுடைய ஹோமம். அதுதான் என் பூஜை. எந்த எதிர்பார்ப்புமில்லாமல், அவர் பதிலுக்கு என்ன செய்கிறார் என்று

கேட்காமல், அவர் என் எதிரியாயினும், நண்பராயினும், எதிரியும், நண்பரும் இல்லாமல் நடுநிலையாய் இருப்பவராயினும் அவருக்கு வழங்குவதை என் கடமையாகக் கொள்வேன். இந்த அங்க தேசத்தில் அடியெடுத்து எனக்கு உணவு வேண்டும் என்று எவர் கேட்டாலும் அவருக்குத் தரவேண்டியது உங்கள் பொறுப்பு. மாட்டேன் என்று எவர் சொன்னாலும் அவரைத் தண்டிக்க எனக்கு உரிமையுண்டு. மாட்டேன் என்று சொல்லுகின்ற வகையில் உங்களை வைக்காமல் உங்களுக்கு அள்ளித் தருவதும் என் பொறுப்பு.''

கூட்டம் திகைத்து நின்றது.

முடியுமா? எது கேட்டாலும் கொடுத்துவிட முடியுமா? எதிரி கேட்டாலும் கொடுத்துவிட முடியுமா? எதிரி வந்து உன் உயிரைக் கேட்டால் முடியாது என்று சொல்லாமல் எடுத்துக் கொள் என்று சொல்வீர்களா?

ஓர் இளைஞனின் மனத்திற்குள் கேள்வி எழுந்தது.

''ஐயா. ஒரு கேள்வி'' என்று கை தூக்கினான்.

''எனக்கு உன் கேள்வி தெரியும். உன் வயதிற்கு என்ன விதமான கேள்வியை நீ கேட்பாய் என்று எனக்குப் புரிகிறது. எதிரி உள்ளே நுழைந்து உன் உயிரைக் கொடு என்று கேட்டால் தருவாயா என்று தானே கேட்கிறாய்? அப்படித்தானே ஒரு நினைப்பு இருக்கிறது?''

''ஆமாம் ஐயா''

''தருவேன்'' கர்ணன் சத்யம் போல கை உயர்த்தினான்.

மேலே இடி இடித்தது. பூமி மிக லேசாய் அதிர்ந்தது. காற்று சுழன்று அடித்தது.

''திடீரென்று இயற்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே, இது நல்ல சகுனமா? கெட்ட சகுனமா?''

''எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. இதற்கு ஏதேனும் அர்த்தம் கற்பித்து அதை வைத்துக் கொண்டு புளகாங்கிதம் அடைய நான் தயாராக இல்லை. நான் இயற்கையைப் பற்றி எந்தக் கவலையும் படவில்லை. என்னால் என்ன முடியும் என்று என்னை ஆழ்ந்து உற்றுப் பார்க்கிறேன். உங்களால் என்ன முடியும் என்று ஆழ்ந்து உற்றுப் பாருங்கள். அப்போது இயற்கை என்ன சொன்னாலும், இயற்கை எப்படி இருந்தாலும் அந்த இயற்கையை வென்று நாம் என்ன நினைக்கிறோமோ அதைச் செய்ய முடியும்.''

''ஐயா. நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.''

''கடவுள் என்று யாரையும் பூஜிக்க வேண்டிய அவசியமில்லை. இயற்கை என்று எதையும் கண்டு பயப்பட வேண்டிய தேவை நமக்கு இல்லை. நம்முடைய வலு. நம்முடைய உறுதி. நம்முடைய திடம். நம்முடைய தெளிவு. இவைதான் முக்கியம்.''

''இது ஏற்பட கடவுள் காரணமில்லையா?''

''எனக்குத் தெரியாது. இது எதனால் ஏற்பட்டதென்று எனக்குப் புரியவில்லை. இதற்குப் பிறகு நானே முக்கியம் என்பது முழுவதுமாகப் புரிந்து போகிறது. நம்மில் மனஉறுதியும், தெளிவும் இருந்தால் எத்தகைய வாழ்வும் வாழமுடியும் என்று எனக்குப் புரிகிறது. வேள்வியும், பூஜையும் இத்தகைய உறுதியை ஏற்படுத்தத்தான் உதவி செய்கின்றன. அந்த உறுதியை முன்கூட்டியே ஆராய்ந்து பெற்று விட்டால் வேள்விகள் வேறு விதமாகப் போகும்.''

''தானம் செய்வேன் என்று உடனடியாக நீங்கள் கைதூக்கி விட்டீர்கள். நாங்கள் தானம் செய்வதற்கு ஒரு மாத அவகாசம் கொடுங்கள்.''

''ஏன்?''

''இப்பொழுதுதான் வந்திருக்கிறோம். எது கேட்டாலும் கொடுக்கின்ற நிலைமை எங்களுக்கு வரவில்லை.''

''உங்களுடையது என்று பற்றிக் கொண்டால்தானே தானம் வதில் தகராறு வரும். உங்களுடையது எதுவுமில்லை. போன ளர்ணமியில் இது உங்களுடைய தேசமா? இது உங்களுடைய றா? இது உங்களுடைய விளை நிலமா? இன்று கிடைத்துவிட்டது. வே, நீங்கள் கிடைத்ததைப் பங்கு போட்டுக் கொள்ளுங்கள். ங்களுடையது என்று ஒருபொழுதும் எதையும் பற்றிக் கொள்ள ண்டாம். எனக்கு இந்த அரச பதவி கிடைத்திருக்கிறது. இந்த அரச வி எனக்குக் கிடைத்திருப்பது உங்களுக்கு உதவி செய்யவே என்று னைக்கிறேன். உங்களுக்குக் கிடைத்த உதவிகள், மற்றவருக்குக் யவே என்று நினைத்துக் கொள்ளுங்கள். எதையும் என்னுடையது று இறுக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். நாளைக்கு என்று ரிக்காதீர்கள். வெகு நிச்சயமாய்... வெகு நிச்சயமாய் நமக்குக் டைக்க வேண்டியவை நிச்சயமாகக் கிடைத்துக் கொண்டே ருக்கும்.''

''அப்பொழுது தானம்தான் பூஜையா?''

''வெகு நிச்சயமாக.''

''பூஜையைத் தொடங்கி விடுவோமா?''

''நன்றாகத் தொடங்கலாம்.''

''ஐயா. என்னிடம் இருக்கின்ற கலப்பைகளை, ஆறு ஆடுகளை நண்பனுக்கு கொடுக்க விழைகிறேன்.''

''ஆஹா... அற்புதம்.''

''ஐயா. என்னுடைய மாடுகளையும், அந்த மாடுகளுக்குண்டான வுப்பொருள்களையும் என் நண்பனுக்குக் கொடுக்க ரும்புகிறேன்.''

சபையில் எழுந்து நின்று மாறி மாறி ஜனங்கள் சொன்னார்கள்.

மன்னன் சந்தோஷப்பட்டான்.

''கர்ணா...'' அதிரதன் அருகே அழைத்தான்.

''சொல்லுங்கள் அப்பா?''

''வரும்பொழுது துரியோதனனிடம் ஏதேனும் வாங்கி வந்திருந்தால் நமக்கும் கொடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். கொடுப்பதற்கு உன்னிடம் ஒன்றுமே இல்லையே. உன் உடைவாளைத் தவிர. உன் உடைவாளைக் கொடு என்று யாரும் கேட்க மாட்டார்களே. கேட்க முன் வரமாட்டார்களே. முதன் முதலில் தானம் கொடுக்க நீ முயற்சி செய்ய வேண்டாமா? நல்லது தானம் தர வேண்டாமா?'' என்று சொன்னபோது, தொலைவில் சங்கொலி கேட்டது. எக்காளம் எழும்பியது. முரசுகள் தெரிந்தன. ஜனங்கள் அமைதியானார்கள்.

ஒரு சிறிய படை மிகப்பெரிய ஆநிரைக் கூட்டத்தோடு அங்க தேசத்திற்குள் நுழைந்து அரண்மனை வாசலில் நின்றது. கண்ணுக்கு எட்டும் வரையில் மாடுகள்...மாடுகள்...மாடுகள் என்று விதம் விதமான லட்சணமுள்ள எருதுகளும், பசுக்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தன. நிறைய ஆடுகள் இருந்தன. குதிரைகள் இருந்தன.

ஒரு வீரன் முன் வந்து ''நீங்கள் அங்க தேசத்துக்குக் கிளம்பியதைத் துரியோதனன் அறிந்தார். அங்க தேசம் வறண்ட பிரதேசம். அங்கு உடனடியாக உணவுக்கு என்ன செய்வீர்கள் என்று கவலையோடு தன்னிடமிருந்த ஆநிரையின் ஒரு பகுதியைப் பிரித்து உங்களுக்குக் கொடுத்தார். இன்னும் என்ன தேவையோ எதையெல்லாம் கொடுப்பதற்குச் சித்தமாக இருப்பதாகவும் சொன்னார். அவரது நட்பாய்க் கிடைத்திருக்கின்ற இந்தப் பரிசை தயவு செய்து நீங்கள் ஏற்க வேண்டும்'' பணிவோடும், பண்போடும் முதிய வீரன் சொல்ல மக்கள் திகைத்து நின்றார்கள்.

''எப்பொழுது நாம் கொடுத்தோமோ, அப்பொழுது நமக்குக் கிடைத்துவிட்டது. இதுதான் கொடுப்பதன் தாத்பர்யம். இது என்னுடைய நண்பன் துரியோதனன் எனக்குக் கொடுத்த இந்த ஆநிரைச் செல்வம் முழுவதையும் உங்களுக்குத் தருகிறேன். இந்தப்

பசுக்களில் ஒன்று கூட என் கொட்டடியில் இருக்காது. சகலமும் உங்களுக்கே. அத்தனை ஆடுகளும், எருதுகளும், பசுக்களும் உங்களுக்கே'' என்று சொன்னான். மக்கள் மிகுந்த சந்தோஷத்தோடு அந்த ஆநிரைக் கூட்டத்தைச் சுற்றிக் கொண்டார்கள்.

நீண்ட கயிறுகளையும் வீரர்கள் எடுத்துவந்து அவற்றைச் சுற்றிப் போட்டு ஆநிரைகளை தங்கள் வீட்டுக்கு இழுத்துப் போனார்கள்.

வறண்ட வெறுமையாய் இருந்த அந்தப் பிரதேசம் மிகச்சில மாதங்களில் அழுத்தமான நகரமாகவும், உயர்ந்த கோட்டையாகவும் உருவாயிற்று.

அந்த வருடம் பருவ மழை தவறாது பெய்தது. பகலெல்லாம் வெயிலும், இரவெல்லாம் நல்ல மழையும் இருந்த காரணத்தால் தாவரங்கள் தழைத்தன. கிளர்ந்து எழுந்தன. பூக்களும், காய்களும், கனிகளும், செடிகள் முழுதும் நிறைந்தன. ஆநிரைகள் அதையெல்லாம் அவசரமாகத் தின்று ஒதுங்கி நின்று அசை போட்டு உரமேற்றிக் கொண்டு ஏராளமான பால் கொடுக்க மக்கள் அவற்றிலிருந்து வெண்ணெயும், நெய்யும் எடுத்து உண்டு கொழுத்து வளர்ந்தார்கள்.

நீர் வருணனால் வேண்டுமென்ற அளவு தரப்பட்டது. காற்று மிதமாக வாயுவால் வீசப்பட்டது. சூரியன் தன்னுடைய மிகச்சிறந்த கிரணங்களை அங்க தேசத்தில் பரவிவிட எவை வளர வேண்டுமோ அவை நன்கு வளர்ந்தன.

மக்கள் மிக உற்சாகமாக வலம் வந்தார்கள். மிக அழகாக விளங்கினார்கள்.

தேர் செலுத்துவதற்கு விதம்விதமாக முயன்றார்கள். நல்ல தேரோட்டிகள் இளைஞர்களைத் தயார் செய்தார்கள். இன்னும் விரைவாகத் தேரோட்டப் பயிற்சி தரப்பட்டது. அதற்காக போட்டிகள் ஏற்பட்டன.

''இவ்வளவு விரைவாகத் தேரோட்ட வேண்டிய அவசியமென்ன?'' அதிரதன் பயத்தோட வினவினான்.

''அப்பா. உங்களுக்கு வயதாகிவிட்டது. இளைஞர்கள் விரைவாகத் தேர் ஓட்டுவதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். அந்த உற்சாகத்தை ஒருவரையொருவர் முந்தத் துடிக்கிறார்கள். தங்களுடைய வீரத்தைக் காண்பிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். தன் உயிரைத் துச்சமாக மதித்து அவன் எவ்வளவு விரைவாகத் தேர் ஓட்டுகிறான். அதில் மக்கள் எவ்வளவு சந்தோஷமடைகிறார்கள் பாருங்கள். அது மட்டுமில்லை யப்பா. விரைவாகத் தேர் ஓட்டுவதற்கு லகுவான தேர்கள் செய்யப்படுகின்றன. தச்சர்களும், குதிரைக்காரர்களும், தேரையும், குதிரையையும் தேர்ந்தெடுப்பதில் மிகக் கவனமாக இருக்கிறார்கள். புதிய புதிய நுணுக்கங்களைச் செய்கிறார்கள்.

இரண்டு குதிரைகளுக்கு நடுவே நல்ல இடைவெளி கொடுக்கிறார்கள்.

சக்கரங்களுக்குள் உருளைகள் வைக்கிறார்கள். இரும்புத் தகடு பதிக்கிறார்கள். ஒரு முறை சுழற்றி விட்டால் அது ஆயிரத்திற்கும் மேலான முறையில் சுழல வேண்டுமென்று எண்ணெயில் ஊற வைத்த இரும்புப் பந்துகளை நடுவே பொருத்துகிறார்கள். இத்தனை வேகத்துக்கு உள்ளே எகிறி விழாமல் இருக்க வளைந்த மூங்கிலால் குலுக்கல் ஏற்படாமல் இருக்க வசதிகள் செய்கிறார்கள். உறுதியாக இருக்கிறது. அதே சமயம் லேசாக இருக்கிறது. அங்க தேசத்துத் தேர் என்றால் அரசகுமாரர்கள் விரும்பி வாங்கிப் போகிறார்கள்.''

''இது நல்லதல்ல...''

''ஏனப்பா?''

''அரசகுமாரர்கள் அங்கதேசத்துத் தேர்களுக்கு ஆசைப்பட்டால், அங்க தேசத்துக் குதிரை வீரர்களுக்கு ஆசைப்பட்டால், அங்க தேசத்துத் தேரோட்டிகளுக்கு ஆசைப்பட்டால் அவர்களுக்கு ஆத்திரம் அதிகமாகும். அவர்களுக்குள் போட்டி வரும்.''

''வரட்டுமே அப்பா?''

''அப்பொழுது போர் வரும்.''

''போர் வருவது தவறா?''

''ஆமாம். தேவையில்லாமல் உயிர்கள் மரணமடைய நேருமே.''

''போரில் மரணமடைவது சொர்க்கம் போலத்தானே?''

''மரணமடைபவனைக் கேட்டால் வேறுவிதமாகச் சொல்வான்.''

''புரியவில்லை அப்பா''

''ஒரு வாலிபன் எந்தச் சுகமும் இல்லாமல் இறந்துபோகச் சம்மதிப்பானா?

எதற்காக அவன் இறந்துபோக வேண்டும்? என்னைப்போல் வயோதிகனாகி நன்கு வாழ்ந்து நல்ல நிலைக்கு வந்து இறந்து போகலாமல்லவா? எதற்குப் போர்? ஒரு தேசத்தில் போர் தேவையேயில்லை.''

''இல்லையப்பா. வாழ்தல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் மரணமும். மரணம் இல்லை என்று தீர்மானித்து விட்டால் அபத்தமான கலகங்களும், அசிங்கமான வழிமுறைகளும் தோன்றிவிடும். எந்த தேசத்தில் மரணமடைவது பற்றிக் கவலை யில்லாமல் இருக்கிறார்களோ, அதைச் சந்திக்க கம்பீரமாக மக்கள் இருக்கிறார்களோ அந்த தேசம் வலுவாக இருக்கும். மரணத்தைக் கண்டு அஞ்சி வீரச் செயல்கள் செய்யாமல், விவேகமில்லாமல் வாழ்பவர்கள் வெறும் புழுக்களாய் நெளிவார்கள். கிடைத்ததை உண்டு, பார்த்ததில் சந்தோஷப்பட்டு வெறும் பேச்சில் மதிமயங்கி எந்த விதக் குறிக்கோளும் இல்லாமல் இருப்பார்கள்.

''யுத்தம் அவசியம். மக்களுக்கு மரணத்தைக் குறித்த பாடத்தை யுத்தம் நடத்தும். மரணம் என்பது நிலையாமையைக் குறிக்கும். நிலையாமையை ஒருவன் புரிந்து கொண்டால்தான் வாரி வழங்க

முடியும். வாரி வழங்கினால்தான் உங்களுக்கு அடுத்தவரோடு தொடர்பு ஏற்படும். அடுத்தவரோடு நல்ல தொடர்பு ஏற்பட்டால்தான் உங்களை அவரும், அவரை நீங்களும் புரிந்துகொள்ள முடியும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை. ஒருவரையொருவர் தொடர்புகொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை. எனவே வாழ்க்கைக்குப் போர் அவசியம். மிகப் பெரிய போர் மிக நிச்சயமாக வருமப்பா. இங்கே தேர், ஓட்டிக் கொண்டு போகிற எல்லா இளைஞர்களும் சிறிது காலம் பொறுத்து வரப்போகிற போரிலே இறக்கப் போகிறவர்கள்தான். இந்த இளைஞர்களெல்லாம் இன்னும் பதினைந்து வருடம் பொறுத்து வாழ்ந்து சுகப்பட்டு நீங்கள் சொல்வதுபோல முதுமைக்கு காலடி எடுத்து வைக்கும்பொழுது போருக்குள் புகுவார்கள். அடிபட்டுச் சாவார்கள். வீர சொர்க்கம் புகுவார்கள். இது நடக்கப் போகிறது.''

''உன் கதி என்ன ஆகும் கர்ணா?''

''நானும் இறக்கத்தான் போகிறேன். மனிதனாகப் பிறந்தவர் அத்தனை பேரும் சாகத்தான் வேண்டும். ஆனால் சாகும் வரையில் நான் வாரிவாரிக் கொடுத்துக் கொண்டிருப்பேன். எந்த வஞ்சனை யுமில்லாமல் கொடுத்துக் கொண்டிருப்பேன்.''

''ஒருநாள்கூட இல்லை என்று சொல்ல மாட்டாயா?''

''மறந்தும்கூட இல்லையென்று சொல்லமாட்டேன். கனவில் கூட முடியாது என்று சொல்ல மாட்டேன்.''

கர்ணன் உரக்கப் பேசினான். அன்று மழை பெய்தது.

இந்திரன் கவலையானான்.

''சூரியரே. இங்கு வாரும்.'' இந்திரன் சூரியனை அழைத்தான்.

''என்ன வேண்டும்?'' சூரியன் தேவர் தலைவனுக்கு அருகே வந்தான்.

''மற்றவருக்குத் தானம் வழங்குவது ஒரு யாகம்தானா?''

''ஆமாம். வெகு நிச்சயமாய் யாகம்தான்.''

''அக்னியில் பொருள்களைச் சமர்ப்பிக்காமல், அந்தணர்களை வைத்துச் செய்யாமல், வெறும் தானம் கொடுப்பதை யாகமென்றா சொல்கிறீர்?''

''இங்கே உண்ண உணவு கொடுத்தால் வயிறுதான் அக்னி. மனம்தான் அந்தணன். மனம் நிறைய வாழ்த்துகளைச் சொல்ல அக்னியில் உணவு போடப்பட அந்த அக்னி கொழுந்துவிட்டு எரிந்து அந்த உணவைப் பஸ்பமாக்குகிறபொழுது, அதனால் ஏற்படுகின்ற புண்ணியம் மொத்தமும் யார் தந்தானோ அவனுக்குப் போகிறது. எந்த மனிதன் உண்கிறானோ அந்த மனிதனுடைய மனம் என்கிற அந்தணன் உரக்க வாழ்த்துச் சொல்கிறது. ஒவ்வொரு பிடி உணவு போகும்பொழுதும் நன்றாக இரு, வளமாக இரு தீர்க்காயுசாக இரு, தெளிவாக இரு என்று வாழ்த்துகிறது. இந்த வாழ்த்துகள் உடனடியாக யார் வாரி வழங்கினானோ அவனுக்குப் போய்ச் சேருகின்றன.''

''நீ சொல்வது அன்னதானம் மட்டும்தானே? மற்ற வகைகளுக்கும் இவை உண்டா?''

''நான் ஓர் உதாரணமாகச் சொன்னேன். அன்னதானம் மிகப் பெரிய யாகம். அந்த யாகத்தை எவர் செய்தாலும் உடனடியாகப் புண்ணியம் கிடைக்கும். அதே போல குளிருக்கு விறகு தருவதும், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், உடை தருவதும், வசிக்க வீடு தருவதும், மருத்துவ உதவி செய்வதும் மிகப்பெரிய யாகங்கள். கொடுக்கின்ற மனம் ஓர் அந்தணனாகவும், வாங்குகின்ற மனம் இன்னோர் அந்தணனாகவும் நின்று வாழ்த்துகள் சொல்லிப் பரிமாறி, கொடுப்பவனை உயர்த்துகின்றன. கர்ணன் வெகு சீக்கிரத்தில் மிகப்பெரிய பலசாலி ஆவான் என்பதில் எனக்கு ஐயமேயில்லை.''

''இல்லையென்று கர்ணன் சொல்லவே மாட்டானா?''

''அவன் தெளிவாக முடிவெடுக்கக் கூடியவன். அவன் திடமாக முடிவெடுக்கக் கூடியவன். அவன் யோசித்துச் செயல்படக் கூடியவன்.

அவன் ஒரு விஷயத்தை பிரக்ஞையில் ஏற்றிவிட்டால் ஒரு காலும் மாற்றமாட்டான்.''

''வருணரே''

''என்ன?''

''இன்று அங்க தேசத்தில் மழை பெய்யுமா?''

''பெய்யும்.''

''நன்றாகப் பெய்யுமா?''

''பெய்துவிட்டால் போயிற்று.''

''நல்ல பலமான மழை மூன்று நாள் அங்க தேசத்தில் பெய்தால் எனக்கொரு விஷயத்திற்குச் சௌகரியமாக இருக்கும்.''

''உங்கள் ஆணைப்படி செய்கிறேன்.''

வருணன் அங்க தேசத்தைத் தாக்கத் தொடங்கினான். வாயுவை இந்திரன் நோக்க, வாயுவும் புரிந்து கொண்டு காற்றை வேகமாகச் செலுத்தத் தொடங்கினான். மழைக்கு நடுவே காற்று புகுந்தது. மக்களைக் குளிரில் நடுங்க வைத்தது. மழை... மழை... மழை... எங்கும் மழை. எப்பொழுதும் தண்ணீர். எல்லா இடங்களிலும் நதி நீர்போல வாய்க்கால்கள் கிளைவிட்டு ஓடிக் கொண்டிருந்தன. வீட்டின் முன்னும், பின்னும் மண்ணை அரித்துக் கொண்டிருந்தன.

நகரமெங்கும் நீரில் மிதந்து கொண்டிருந்தது. ஆநிரைகள் மேடுகளில் நின்று கொண்டு உணவுக்காகக் கத்திக் கொண்டிருந்தன. வயலிலுள்ள நெற்கதிர்களை அறுத்து அதைக் கொண்டு போய் அங்கே நின்ற ஆநிரைகளுக்கு மக்கள் வாரி வழங்கினார்கள். தேடித் தேடிக் கொண்டு போய் உணவு போட்டார்கள். மழையில் நனைந்தபடியே வீடு திரும்பினார்கள். வாயில் கை பொத்தி உட்கார்ந்திருந்தார்கள்.

"ஏன் இப்படி அதீதமாகி விட்டது?" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

"ஏதோ சோதனை."

"யாருக்குச் சோதனை?"

"கர்ண மகாராஜாவுக்கு இருக்கலாம்" பேசிக் கொண்டார்கள்.

ஓர் அந்தணன் இரவு நேரம் வாசற் கதவைத் தட்டினான். கர்ணனின் பணியாட்கள் கதவைத் திறந்தார்கள்.

"என்ன வேண்டும்?"

"அரசரைப் பார்க்க வேண்டும்."

"எதற்காக?"

"அவரிடம்தான் சொல்ல வேண்டும்."

"அரசர் பெற்றோருடன் பேசிக் கொண்டிருக்கிறார்."

"அப்படியா? சந்தோஷம். ஆனாலும் நீங்கள் அவரைத் தொந்தரவு செய்வதில் தவறில்லை. ஓர் அந்தணன் மிக அவசரமான விஷயமாகக் காத்திருப்பதாகச் சொல்லுங்கள்."

அந்த அந்தணர் ஈரத் துணியோடு கண்மூடிக் காத்திருந்தார். அவரது கால்கள் மழையில் நனைந்து நனைந்து வெளுத்துப் போயிருந்தன.

காவலர்கள் சிறிது நேரம் தயங்கினார்கள். பிறகு உள்ளே ஓடிப்போய் "ஓர் அந்தணர் மழையில் நனைந்து வந்திருக்கிறார். அவசரமாக உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார்" என்று கர்ணனிடம் சொன்னார்கள்.

கர்ணன் உடனே சால்வையை மேலே போர்த்திக் கொண்டு நடந்தான். அந்தணனை நோக்கி வந்தான். கை கூப்பினான்.

''வருக, வருக. என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

''என் குழந்தைக்குக் கடும் ஜுரம். என் மனைவிக்கும் முடியவில்லை. வீட்டில் தானியங்கள் இருந்தும் சமைப்பதற்கு விறகு இல்லை. எல்லா விறகும் ஈரமாக இருக்கின்றன. எந்தக் கடையில் கேட்டாலும் விறகு இல்லை என்று சொல்கிறார்கள். எரிப்பதற்கு ஆகாது என்று சொல்கிறார்கள். எனவே நான் நல்ல விறகுகள் தேடி உன்னிடம் வந்திருக்கிறேன்'' என்று சொல்ல கர்ணன் கைதட்டினான். வேலையாட்களை அழைத்தான்.

''விறகு கொடு'' என்று சொன்னான். ''வீட்டிற்குள் வைத்த விறகுகள் கூடத் தீர்ந்து விட்டன. எல்லா விறகுகளும் நனைந்திருக் கின்றன. காய்ந்த விறகாக ஒன்று கூட இல்லை'' என்று கவலையோடு சொன்னார்கள்.

''என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? நமது வீட்டில்கூட காய்ந்த விறகு இல்லையென்றால் இது தவறல்லவா? மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை இந்த அந்தணரல்லவா உணர்த்தினார்? இந்தச் சிந்தனையே இல்லாமல் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறேனே. மழை என்று மயங்கிக் கொண்டிருக்கிறேனே. இந்த மழையில் குதிரை ஏறிப் புறப்பட்டிருக்க வேண்டுமே. நான் இங்கு இருந்தது தவறாயிற்றே. மழையில் மக்களுக்கு என்ன தொல்லைகள் என்று பார்க்காதவன் அரசனா?''

அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான். இடதும், வலதும் பரபரத்தான். சிந்தனையோடு மேலே நோக்கினான்.

மேலே கட்டடத்தின் உத்திரம். அழகான சிற்பங்களோடு பொறிக்கப்பட்டிருந்தது. துரியோதனன் அனுப்பிய அன்புப் பரிசு. அது அவனுடைய கட்டடக் கலைஞர்கள் வந்து கட்டிய அரண்மனைக் கூடம்.

''அட விறகு இருக்கிறது'' என்று சொல்லி கதையை எடுத்தான். எகிறி உத்திரத்தை அடித்துப் பிளந்தான். உத்திரம் சரிந்து விழுந்தது.

கூடத்தில் மழை பெய்தது. ஓலைப்பாய் கொண்டு வரச் சொல்ல ''உத்திரத்தை அடித்துப் பிளந்து பல துண்டுகளாக்கி அவற்றை ஓலைப் பாயில் போட்டு அதன் மீது கம்பளி சுற்றி ஆட்களின் தலையில் வைத்து அந்தணர் வீட்டுக்குக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வா'' என்று கட்டளையிட, தெருவில் அந்தணர் இறங்க பின் தொடர்ந்த வேலையாள் வந்து, ''அந்த அந்தணர் இருட்டில் மறைந்து போனார். எங்கு போனார்'' என்று தெரியவில்லை என்று தயங்கியபடி சொன்னதும் அரண்மனைக் காவலர்கள் அந்த நகர் முழுவதும் தேடினார்கள்.

விடியல் நேரம் சூரியன் முதல் கதிர் விரிந்தது. வந்தது இந்திரன் என்று சூட்சுமமாய் கர்ணனுக்குச் சொல்லப்பட்டது.

''தன் வீட்டை இடித்து, வந்தவருக்கு விறகு கொடுக்க ஒருவனால் முடியுமென்றால் அவனைவிட மிகப்பெரிய தபஸ்வி எவனும் இருக்க முடியாது. அவனை விட மிகப் பெரிய பக்தன் எவரும் இருக்க முடியாது. அதைவிட மிகப்பெரிய பூஜை எதுவும் இருக்க முடியாது'' என்று இந்திரன் ஏற்றுக் கொண்டதாக சூரியன் சொல்ல, ''இது உங்களுடைய ஆசிர்வாதமப்பா'' என்று கர்ணன் சூரியனை வணங்கினான்.

மழை நின்றது. காற்று தவழ்ந்தது. சூரியன் பிரகாசமாக வெளிவந்தான். அங்க தேசம் முழுவதும் அணைத்துக் கொண்டான். மறுபடியும் வீரியமுள்ள செடிகள் விளைந்தன.

மக்கள் கர்ணனைக் கொண்டாடினார்கள்.

## 6

**து**ரியோதனனின் அமைச்சரவையில் சுறுசுறுப்பாகவும், தெளிவாகவும், கொடுக்கின்ற மனம் உடையவர்களாகவும் இருக்கின்ற அதிகாரிகளை கர்ணன் தேர்ந்தெடுத்தான். இவர்களைத் தன் தேசத்திற்கு அழைத்துப் போகிறேன் என்று துரியோதனனிடம் அனுமதி பெற்றான்.

தன்னுடைய மக்களிலிருந்து நல்லவர்களையும், வல்லவர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களை துரியோதனனுடைய அரசவை அதிகாரிகளோடு பழகவிட்டனர்.

நேற்றுவரை இவர்கள் தேர்ப்பாகர்கள். புரவியைப் பற்றியும் வண்டியைப் பற்றியும், புரவியைச் செலுத்துவது பற்றியும் தவிர வேறெதுவும் தெரியாதவர்கள். இவர்கள் குதிரையின் கனைப்புச் சத்தம் கேட்டால் மனிதர்களின் பேச்சு சப்தம் மறந்து போவார்கள். சுற்றி நடக்கின்ற அத்தனை விஷயங்களையும் விலக்கிவிட்டு குதிரையின் அசைவையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இந்தக் குதிரையோடு பழகின அளவுக்கு மனிதர்களோடு பழகவில்லை. எனவே இந்த நண்பர்களுக்கு நீங்கள் அரசாங்க விதிமுறைகளையும், அரசு நடத்தும் விதங்களையும் தயவு செய்து சொல்லித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

யார் எது கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுக்கின்ற விதிமுறையை நாட்டில் உருவாக்கினான். பட்டினியாலோ, நோயாலோ மனிதர்கள் இறக்கக்கூடாது என்று விரும்பினான். அதற்குண்டான எல்லா வசதிகளையும் செய்தான்.

''துரியோதனனுக்குத் தேர் ஓட்டுவதே நம்முடைய வேலை. அதற்காகவே இந்த ராஜ்ஜியம் உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. எனவே தேர் செய்வதும், தேர் ஓட்டுவதும், புரவிகளை வளர்ப்பதும், துரியோதனனுக்குச் சேவை செய்வதுமே உங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். நமக்குக் கிடைத்த இந்த சந்தோஷத்தை, சொந்த நிலத்தை முழுவதும் பயன்படுத்திக் கொண்டு துரியோதனனோடு நட்பாக, நன்றியாக இருக்க வேண்டும். துரியோதனன் தவிர வேறு எவர்பற்றியும் சிந்திக்காத புத்தி நமக்கு வேண்டும்.

அங்க தேசம் முழுவதும் துரியோதனனுடைய நலத்தையே சிந்திக்கின்ற தேசமாக இருக்க வேண்டும். துரியோதனனுக்கு எதிரி,

நமக்கு எதிரி. துரியோதனனுடைய நண்பன், நம்முடைய நண்பன். துரியோதனனுடைய உறவுகள் நமது உறவுகள் என்று அங்க தேசம் துரியோதனாதிகளை மேம்படுத்தவே வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று உரத்த குரலில் சொன்னான்.

மக்கள் அவ்விதமே பழகினார்கள். தங்கள் திறமைகளை இன்னும் அதிகமாக வளர்த்துக் கொண்டார்கள்.

''போர் வரப்போகிறதென்று ஜோசியர் சொல்லுகிறார்கள். சகுனங்களும் அப்படித்தான் தெரிவிக்கின்றன. அதற்கேற்றாற்போல் அரசியல் சூழ்நிலையும் நன்றாக இல்லை. பஞ்ச பாண்டவர்களைக் கண்டால் கௌரவர்களுக்குப் பிடிக்கவில்லை. கௌரவர்களைக் கண்டால் பஞ்சபாண்டவர்களுக்குப் பிடிக்கவில்லை. எந்த நேரமும் இவர்கள் முறைப்பாக இருப்பதால் சண்டை ஏற்படுகின்ற ஒரு கால கட்டம் நிச்சயம் வரும் என்று தோன்றுகிறது. மிக உக்கிரமாக யார் உயிரோடு இருப்பது, யார் மரணமடைவது என்பதை இவர்கள் வாள்முனையில் தீர்மானம் செய்வார்கள் என்று தோன்றுகிறது. அப்படியொரு நிலைமை ஏற்பட்டு யுத்தம் வருகிறபொழுது அதற்கு அங்கதேசம் தயாராக இருக்க வேண்டும். அங்க தேசத்தைத் தன் சொந்த தேசமாகக் கருதுகின்ற தேர்ப்பாகர்கள் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்தக் குலத்தில் தோன்றிய ஒவ்வோர் ஆண் மகனையும் மிகச் சிறந்த தேரோட்டியாக அவர்கள் உருவாக்க வேண்டும். விதம் விதமான தேர்கள் செய்ய வேண்டும். இரண்டு சக்கரத் தேர், நான்கு சக்கரத் தேர், ஆறு சக்கரத் தேர் என்று பல்வேறு விதமான தேர்களை ஓட்டிப் பழக வேண்டும். ஏன், ஒற்றைச் சக்கரத் தேர்கூட உருவாக்க வேண்டும். ஒற்றைச் சக்கரத் தேரில் ஆறு குதிரைகள் பூட்டி ஓட்டிப் பழக வேண்டும்.

ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் போக என்னவெல்லாம் தேவையோ அத்தனையும் நாம் செய்தாக வேண்டும். நல்ல புரவிகளை வளர்க்க வேண்டும். அப்படி வளர்த்த புரவிகளை எப்பொழுது துரியோதனன் கேட்டாலும் வாரி வழங்கத்

தயாராயிருக்க வேண்டும். கௌரவருக்கு அல்லாமல் இந்த அங்க தேசத்தில் எதுவுமில்லை. இது அனைத்தும் கௌரவர்களுடைய சொத்தே.''

''ஆனால், தர்மம் ஒன்று இருக்கிறதல்லவா? நாம் தர்மத்தின் பக்கமும் நின்றாக வேண்டுமே'' வயதான கிழவர் கர்ணனை நோக்கிக் கேட்டார்.

''எது தர்மம்? செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதே தர்மம். எனக்கு அரச பதவியும், உங்களுக்கு ஆறுவேளை சோறும் கொடுத்தானே, அவனுக்கு ஆதரவாக இருப்பதுதான் தர்மம். அவன் இல்லையெனில் நீங்கள் அடிமைகளாய், அடையாளம் இல்லாதவர்களாய் ஓர் ஆற்றோரத்தின் சேற்றுப் பகுதியில் வெள்ளத்துக்கு நடுவே வாழ்ந்து கொண்டிருந்தீர்கள். குதிரைகளோடு படுத்துத் தூங்கிக் கொண்டிருந் தீர்கள். உங்களுக்கு மாடமாளிகையும், மரம், செடி, கொடிகளோடு கூடிய தெருக்களும், அரண்மனையின் நாட்டிய நாடகங்களும் அறுசுவை உணவும் கிடைத்தது கௌரவர்களால். ஒன்றுமே இல்லாத உங்களை அடையாளமுள்ளவர்களாக்கியது துரியோதனன்தான். எனவே, என்னைப் பொறுத்தவரையில் தர்மம், துரியோதனனின் அருகேயிருப்பது. துரியோதனன் என்ன செய்தாலும், அவனுக்கு ஆதரவாக இருப்பது. துரியோதனன் செய்வது சரியா, தவறா என்று கேள்வி கேட்காமல் இருப்பது. துரியோதனன் எத்தகைய செயல்களைச் செய்தாலும் அதற்கு வாய்பேசாமல் துணை போவது.''

''இது தவறில்லையா?''

''இல்லை. ஒரு காலும் இல்லை. இதனால் நரகம் வரும் எனினும் நான் அந்த நரகத்தை சந்தோஷமாகத் தழுவிக் கொள்வேன். இது உத்தமமான விஷயம். இதற்கு சொர்க்கம் என்றாலும் இது துரியோதனன் கொடுத்த கொடை என்று நினைத்துக் கொள்வேன். நான் எப்படியிருக்கிறேனோ அப்படியே என் மக்களும் இருக்க வேண்டும். எனக்கு எதிராக என் மக்கள் பேசினால் நான் அவர்களை விலக்கி

விடுவேன். இந்த தேசத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுவேன். எனவே என்னுடைய குடிமக்கள் அத்தனை பேரும் கௌரவர்களுக்குக் குறிப்பாய் துரியோதனனுக்கு எழுதப்படாத அடிமை சாசனத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க துரியோதனன். வளர்க கௌரவர்கள்'' என்று சொல்லிவிட்டு சபையைக் கலைத்தான்.

இந்தச் செய்தி துரியோதனனுக்குப் போயிற்று. துரியோதனன் ஆடிப்போனான். அயர்ந்துபோய் உட்கார்ந்தான். அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

''இப்படிப்பட்ட ஓர் அன்புக்குத்தானே நான் ஏங்கியிருந்தேன்? வல்லமைமிக்க ஒருவன் எனக்கு நண்பனாகக் கூடாதா என்றுதானே நான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன்? அர்ஜுனனைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் எனக்கு ஸ்நேகிதனா இருக்கக்கூடாதா? எனக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடாதா எனக்கு நண்பனாக, என்னை எந்நேரமும் காப்பாற்றுகின்ற திறனுள்ளவனாக, அதற்கு உண்டான மனம் உள்ளவனாக இருக்கக்கூடாதா என்றுதானே ஆசைப் பட்டேன்? ஆனால் பீமனும், அர்ஜுனனும் தருமனும் எப்படி என்னிடமிருந்து பிரிந்தார்கள்? அவர்கள் மனதில் எவ்வளவு விஷவிதையைத் தூவினார்கள்?

துரியோதனன் நல்லவன் இல்லை. துரியோதனனுடைய சகோதரர்கள் நல்லவர்கள் இல்லை என்று எப்படி ஒதுக்கினார்கள்? இதோ எனக்கு இன்னோர் அர்ஜுனன் கிடைத்து விட்டான். என் வேண்டுதல் பலித்து விட்டது. என் மீது உயிரையே வைத்திருக்கின்ற ஒரு வில் வீரன் வந்து விட்டான். என்னுடைய நல்லது கெட்டதில் என்னோடு சமமாக நின்று பங்கெடுத்து கொள்கின்ற ஒரு தியாக புருஷன் எனக்கு அருகே வந்து விட்டான். இனி எனக்கு எந்தக் கவலையும் இல்லை.

கர்ணன் ஏன் இன்னும் அங்க தேசத்திலேயே இருக்க வேண்டும்? அங்க தேசத்தை அரசாங்க அதிகாரிகளே ஆட்சி செய்யட்டும். கர்ணன்

எப்பொழுதும் எனக்கருகே இருக்கட்டும். வருடப் பிறப்பு அன்றும், தன்னுடைய பிறந்த நாள் நட்சத்திரத்தன்றும் கர்ணன் அங்க தேசத்திற்குப் போய்வரட்டும். மற்ற நாள்களில் என் அரண்மனையில் எனக்கருகே அவன் இருக்கவே விரும்புகின்றேன். அவனோடு பேசி, சிரித்திருக்க விரும்புகின்றேன். ஓர் அரசனுக்குண்டான வேலைகளை அவனோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கடமைகளுக்கு அவன் துணையாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். கர்ணனை இங்கே வரவழையுங்கள்.''

செய்தி கர்ணனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கர்ணன் குடிமக்களிடம் விடைபெற்று, குதிரை ஏறி துரியோதனனிடம் வந்து சேர்ந்தான்.

துரியோதனனும் கர்ணனும் அந்தச் சிறிய பிரிவைக்கூடத் தாங்க முடியாமல் ஆரத் தழுவிக் கொண்டார்கள். கை கோத்துக் கொண்டார்கள். சிரித்தார்கள். பேசினார்கள். ஒன்றாக உணவுண் டார்கள், ஒரே கட்டிலில் அருகருகே படுத்துத் தூங்கினார்கள்.

துரியோதனனின் மனைவி பானுமதி மிக அருமையான பெண்மணி. கணவனின் கோபமும், வேகமும் புரிந்து அதற்கேற்றபடி அவனைச் சமாதானப்படுத்தும் வல்லமையுடையவள்.

அரசு என்று சொன்னால் அதற்குப் பகைவர்கள் என்று நிச்சயம் இருப்பார்கள். அநேகமாக ஓர் அரசனுக்குப் பகைவர்கள் அவனது பங்காளிகளாகத்தான் இருப்பார்கள். சிற்றப்பன் மகன்களும், பெரியப்பன் மகன்களும் தான் ஓர் அரசனுக்கு எப்பொழுதும் எதிரிகளாக இருப்பார்கள். இந்த அரச சபை என்னுடையது. இந்தச் சிம்மாசனம் என்னுடையது. இந்தக் கிரீடம் என்னுடையது என்று தவித்துக் கொண்டிருக்கிறவர்களால்தான் அரசனுக்குத் துன்பம் நேரும்.

கௌரவர்களுக்கு பாண்டவர்கள் பங்காளிகள். எனவே அந்தப் பங்காளிகளுக்குள் சண்டை மூட்டிவிடப் பலபேர் காத்திருக்கிறார்கள்.

பாண்டவர்கள் நல்லவர்கள், கௌரவர்கள் கெட்டவர்கள் என்று செய்தி பரப்பி வருகிறார்கள். நூறு சகோதரர்கள் ஓர் அண்ணனின் கீழ் ஒற்றுமையாக இருப்பதைக் காணச் சகிக்காதவர்கள், ஐந்து சகோதரர்களை வைத்து கௌரவர்களைப் பிரிக்க எண்ணுகிறார்கள். நூறு சகோதரர்கள் உள்ள ஆட்சி மிக வன்மையாகத் திகழும். அப்படி நூறு சகோதரர்கள் ஒற்றுமையாக இருப்பின் அங்கு மந்திரிகளுக்கும், மகா மந்திரிகளுக்கும், புரோகிதர்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் வேலையில்லை. அவர்கள் இரண்டாம் தரக் குடிமகன்களாக மாறிவிடுவார்கள். சகோதரர்களே இதை நிர்வகித்துக் கொள்வார்கள்.

அரண்மனை நிர்வாகத்தை ஒரு சகோதரரும், அடுக்களை நிர்வாகத்தை ஒரு சகோதரரும், புரவியை ஒரு சகோதரரும். யானையை ஒரு சகோதரரும், தேர்களை ஒரு சகோதரரும், அந்தப்புரக் காவலராக ஒரு சகோதரரும், கோட்டைக் காவல் பாதுகாப்பாக ஒரு சகோதரரும் துரியோதனனை இடைவிடாது காவல் காத்து வருகின்ற துச்சாதனனும், பல படையில் பல சகோதரர்களும் இருப்பதால் இங்கு அதிகாரிகளுக்கு எந்த வேலையும் இல்லாமல் போகிறது. எந்த அதிகாரமும் இல்லாமல் போகிறது. ஒவ்வொரு கட்டளைக்கும் சகோதரர்களிடமே வருவதால் அதிகாரிகள் வெறும் மரபொம்மையாகவே இருக்கிறார்கள். எனவே மக்களும் அவர்களை மதிப்பதில்லை.

மக்களால் மதிக்கப்படாத அதிகாரிகள் சகோதரர்களை எதிர்க்க மெல்ல மக்களிடையே தூபம் போட்டு வருகிறார்கள்.

கண்ணிழந்த திருதராஷ்டிரன் அரசனாக வெறுமே சிம்மாசனத்தில் இருக்க அவருக்கருகே அவருக்காகவே தன் கண்களைக் கட்டிக் கொண்ட காந்தாரி இருக்க இளவரசராகத்தான் துரியோதனனால் செயல்பட முடிகிறது. ஓர் அரசனாக ஆட்சி செய்ய முடியாமல் இருக்கிறது. தகப்பனார் இருக்கிறபொழுது தானே முதன்மையாக நின்று எந்த மரியாதையையும் ஏற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. அது மட்டுமல்லாது வயது முதிர்ந்த பீஷ்மருக்கு வணக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. கிருபரை துருபதரை மதித்து

எழுந்து நிற்க வேண்டியிருக்கிறது. துரோணர் ஆச்சார்யார் என்பதால் தரையில் விழுந்து நமஸ்கரிக்க வேண்டியிருக்கிறது. அஸ்வத்தாமன் ஆச்சார்யரின் புத்திரன் என்பதால் கைகூப்பி அவனை வணங்க வேண்டியிருக்கிறது. இத்தனைக்குப் பிறகுதான் இளவரசன் என்கிற கர்வம் துரியோதனனுக்கு இருக்கிறது.

தன் அண்ணன் முதன்மையான இடத்தில் இல்லையே என்ற ஏக்கம் தம்பிமாருக்கு இருக்கிறது. அதை அவ்வப்போது வெளிப்படுத்துகிறார்கள். முதன்மையான பதவி வகிக்காவிட்டால் பரவாயில்லை. முதன்மையான வீரன் என்றாவது துரியோதனன் நிரூபித்திருக்க வேண்டும். பீமனுடைய கதைக்கு முன்னால் துரியோதனனுடைய கதை சற்று பலவீனமாகத்தான் இருக்கிறது. ஆச்சார்யரின் அனுக்கிரகமா பீமனின் இடையறாத பயிற்சியா அல்லது வேறெதாவது தேவதையின் வரமா என்று தெரியவில்லை.

மனித முயற்சிகளோடு, துரியோதனன் போராடிக் கொண்டிருக்க பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான பீமன் அந்த யாதவ மன்னன் கிருஷ்ணனால் போஷிக்கப்பட்டு, பல வழிகள் காட்டப்பட்டு இன்னும் பெரிய வீரனாக வளர்ந்து வந்தான். இதைச் செய்ய வேண்டிய பீஷ்மரும், விதுரரும், கிருபரும் ஆச்சார்யர் துரோணரும். அஸ்வத்தாமரும் மௌனமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு பஞ்ச பாண்டவர்கள் மீதும் பிரியம் இருக்கின்றது.

கிருஷ்ணனுக்கு கௌரவர்கள் மீது பிரியமில்லை. பஞ்ச பாண்டவர்களே தன்னுடைய உயிர் என்று முழுவதுமாய் அவர்களை சுவீகரித்துக் கொண்டிருக்கிறார். அப்படி கௌரவர்களை சுவீகரித்துக் கொள்ள யாருமில்லை. இந்தக் கர்ணனை விட்டால் அவர்களுக்கு வேறெந்தத் துணையும் இல்லை. எனவே இந்தக் கர்ணன் போதும். வாரி வாரி வழங்குகின்ற இந்தக் கொடைத்தன்மையால் முகமும், கண்களும், உதடும், மார்பும், கைகளும், சிவந்து விளங்குகின்ற இந்த சத்திய புருஷன் போதும். இந்த தர்ம தாதா போதும். இந்த வள்ளல்

பெருமான் போதும். இவன் ஒருவனே துரியோதனனையும், கௌரவர்களையும் காப்பாற்ற முடியும்.

பானுமதி, கர்ணன் நலமாக இருக்க வேண்டுமென்று பூப்போட்டு வணங்கினாள்.

கர்ணன் வீட்டுக்கு வந்ததும் தன் புருஷனைக் காப்பாற்றுகிறவன், தன் புருஷனுடைய தோழன், தன் புருஷனுக்கு எல்லா வகையிலும் துணையாக இருக்கிறவன், தன் புருஷனைச் சந்தோஷப்படுத்து கிறவன், தன் புருஷன் அமைதியாக இருக்கக் காரணமானவன், தன் புருஷன் ஆழ்ந்து நிம்மதியாகத் தூங்க மிக்க துணையாக இருப்பவன் என்று நினைத்துக் கர்ணனை வரவேற்றாள்.

கால்கழுவ நீரும், குடிக்கப் பானகமும் வழங்கி உபசரித்தாள். தாதிகளைவிட்டு விசிறச் சொன்னாள். மாற்றுடைகள் கொடுத்தாள். கர்ணனுக்கென்று தனி அறை ஒதுக்கிக் கொடுத்தாள்.

கர்ணனை என்னவென்று அழைப்பது? அண்ணா என்றா? அப்பொழுது மைத்துனன் என்றும் உறவாகிறது. மாமனும் மைத்துனனும் சண்டையிட்டுக் கொண்டதில்லையா? சண்டை வரும். ஆனால் நண்பர்கள் சண்டையிட்டுக் கொள்வார்களா? நண்பர்கள் என்று அவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்ற இந்த அன்பான ஒன்றை மாற்றி நான் உறவாக எதற்குக் கூப்பிட வேண்டும். நான் கர்ணனை கர்ணா என்றே அழைக்கிறேன். எப்படி துரியோதனன் கூப்பிடு கிறாரோ அப்படியே நானும் கூப்பிடுகிறேன். எப்படி துரியோதனனுக்கு கர்ணன் நட்பாக இருக்கிறாரோ என்னுடனும் கர்ணன் நட்பாக இருக்கட்டும். என் குழந்தைகளுக்கும் கர்ணன் நட்பாக இருக்கட்டும்.

பானுமதி கர்ணனை 'கர்ணா- என்று வாய் நிறைய அழைத்தாள்.

கர்ணன் வணங்கி அந்த விளிப்பை ஏற்றான். அவன் எப்படிக் கூப்பிடுவது என்று தடுமாறினான்.

''நான் உன்னை வயது பாராமல் கர்ணா- என்றழைக்கிறபோது நீ எதற்கு கூச்சப்பட்டு வேறேதேனும் உறவுமுறை பெயர் சொல்லி

அழைக்க வேண்டும்? என்னை பானுமதி என்றே கூப்பிடு'' என்று சொன்னாள்.

இருவரும் திரும்பி துரியோதனனைப் பார்த்தார்கள். துரியோதனன் வாய்விட்டுச் சிரித்தான்.

''நாம் மூவரும் நண்பர்கள். நல்ல நண்பர்கள். ஒருவருக் கொருவர் எந்த நேரமும் உதவி செய்யத் தயாராக இருக்கிற நண்பர்கள். ஒருவர் மீது ஒருவர் உண்மையாக அக்கறை காட்டுகின்ற நண்பர்கள்'' என்று கை நீட்டினான். நீட்டிய அந்த இரண்டு கைகளையும் பானுமதியும், கர்ணனும் பிடித்துக் கொண்டார்கள். தங்கள் கைகளையும் கோத்துக் கொண்டார்கள்.

அந்த மூவரும் வட்டமாய் நின்று ஒருவரையொருவர் ஆசை தீரப் பார்த்துக் கொண்டார்கள்.

நட்பு என்கிற அற்புதமான விஷயம் அங்கே பாற்கடல் அலைபோலப் பொங்கியது.

அவர்கள் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். ஒன்றாக விலகினார்கள். எதிரெதிரே அமர்ந்து பாடினார்கள். பேசினார்கள். விவாதம் செய்தார்கள். எதிர்காலம் குறித்து துரியோதனன் கவலைப்பட அதற்கு பானுமதியும், கர்ணனும் சேர்ந்து சமாதானப்படுத்தினார்கள்.

''ஏதாவதொரு காரணத்தைக் காட்டி நீ பாண்டவர்களுடன் சேர்ந்து விடுவாயா? கிருஷ்ணனை நினைத்தால் பயமாக இருக்கிறது. அவன் எதற்கும் துணிந்தவன். என்ன செய்கிறான் என்றே அறிய முடியாத அளவுக்கு அதிசயமானவன். திடீர் திடீரென்று புதிய திட்டங்கள் கொண்டு வந்து திணறடிப்பவன். மனிதர்கள் மனத்தைப் படித்து வேறு திசைக்கு மாற்றக்கூடிய வல்லமை உடையவன்.

பாண்டவர்களை அவன் எவ்வளவு அருமையாக வழிநடத்திச் செல்கின்றான். எனக்கும் கிருஷ்ணனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. எனக்கும் கிருஷ்ணன் உதவி செய்ய மாட்டானா

என்ற ஏக்கம் இருக்கிறது. ஆனால் ஏனோ கிருஷ்ணன் என்னை வெறுக்கிறான்.

நான் அரசனாக இருக்கத் தகுதியற்றவன் என்று பலரிடம் பேசி வருகிறான். என்னிடமிருக்கின்ற தவறு என்ன தெரியுமா? என்னுடைய சகோதரர்கள். என் சகோதரர்கள் என் பேச்சுக்குக் கட்டுப்பட்டு என்னிடம் ஒற்றுமையாய் இருப்பதைப் பார்த்து மற்றவர்கள் வயிறெரிகிறார்கள். அவர்கள் ஐந்து பேராய் இருப்பதால் அவர்களை அரவணைத்துக் கொள்ள எல்லாருக்குமே எளிதான விருப்பம் இருக்கிறது. என் சகோதரர்களை விட்டுவிட்டு நான் எங்கு போவேன்? இவர்களைப் பிரித்து வெளி தேசம் அனுப்பிவிட்டு எப்படி உயிர் வாழ்வேன்? நான் இங்கு வாழ்ந்து கொண்டிருப்பது என் சகோதரர்களுக்காக மட்டுமே. நான் மறுபடியும் கேட்கிறேன் கர்ணா ஏதேனும் காரணம் சொல்லிவிட்டு என்னை விட்டு விலகிப் போவாயா? கிருஷ்ணன் ஏதும் மாயம் செய்தால் என்னைவிட்டுப் பிரிந்து போவாயா? என்று ஒரு நாள் உணவுக்குப்பிறகு அரைத் தூக்கத்தில் கேட்க கர்ணன் எழுந்து நின்று பூமியின் மீது ஓங்கி அடித்துச் சத்தியம் செய்தான்.

''குந்திதேவி எனக்குத் தாயாராகவே இருந்தாலும், தருமன் எனக்குத் தம்பியாகவே இருந்தாலும், அர்ஜுனனைக் கொல்லுகின்ற முயற்சியிலிருந்து நான் சிறிதும் பின் வாங்க மாட்டேன். பீமனைக் கதறடிப்பேன். அர்ஜுனனின் நெஞ்சைத் துளைப்பேன். இது உறுதி. உன் பக்கம் எந்த நாளும் நான் இருப்பேன். யார் என்ன சொன்னாலும், நீ நல்லது செய்தாலும், கெடுதல் செய்தாலும், எனக்கும் என் மக்களுக்கும் தீங்கு செய்தாலும்கூட நான் உனக்கருகே உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன். இது சத்தியம். இது சத்தியம். இது சத்தியம்'' என்று சொன்னான் கர்ணன்.

பானுமதி முகம் பொத்திக் கொண்டு கர்ணனுடைய அன்பு தாங்காமல் அழுதாள். துரியோதனன், துவண்டு போய் பானுமதியின்

மடியில் படுத்துக் கொண்டான். பானுமதியின் மடியில் படுத்துக் கொண்டிருக்கிற துரியோதனனுக்கு கர்ணன் விசிறியால் விசிறினான்.

மறுபடியும் இன்னொரு நட்பு என்கிற பாற்கடல் பேரலை அங்கு பொங்கியது. அவர்களை நனைத்தது.

''பானுமதி. துரியோதனன் எங்கே?'' கர்ணன் கேட்டான்.

''அப்பாவைப் பார்க்கப் போயிருக்கிறார்.''

''அட. என்னை விட்டுவிட்டு ஏன் போய் விட்டான்?''

''தனித்து வரும்படியாக கட்டளை. எனவே போயிருக்கிறார். கர்ணன் தவறாக நினைத்துக் கொள்ளப் போகிறான். அவனைத் தனியே விடாதே. தனியாக இருந்தால் அங்கதேசம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பான். எனவே நீ கர்ணனுக்குத் துணையாக இரு. என்று என்னிடம் சொல்லிவிட்டு அவசரமாகப் போயிருக்கிறார்.''

''ஆஹா... நீங்கள் எனக்குத் துணையா? எதற்குத் துணை?'' என்று கர்ணன் கேட்க ''பொழுதுபோக வேண்டுமல்லவா? வெளியே நல்ல வெயில். இந்த வெயிலில் எங்கு போகப் போகிறீர்கள்? எனவே உணவு முடித்துவிட்டு உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கலாம் வாருங்கள்.''

பெரிய அரண்மனையில் காற்று நுழைந்தது. வெயிலின் கொடுமையைத் தணித்தது. சுற்றிலும் ஈரமாக்கிய திரைச் சீலைகளைத் தொங்கவிட்டு காற்றை குளுமைப்படுத்தி வேலையாட்கள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

உணவு முடித்ததும் வெற்றிலை, பாக்கு போட்டுக் கொண்டு எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டிருந்தவர்களின் நடுவே வேலையாட்கள் சொக்கட்டான் கொண்டு வந்து வைத்தார்கள்.

''கர்ணனுக்கு தூக்கம் வருகிறதோ என்னவோ? எதற்கு எடுத்துக் கொண்டு போ'' என்று பானுமதி சொல்ல, ''சிறிது நேரம் விளையாடலாம். சொக்கட்டான் விளையாடினால் நன்கு தூக்கம்

வரும்'' என்று கர்ணன் சொல்ல பானுமதி காய்களை அடுக்கினாள். பாய்ச்சிகைகள் உருட்டப்பட்டன.

தங்கத்தால் செய்த பாய்ச்சிகைகள் உருளும் சத்தம் தொலைதூரம் கேட்டது. அரச குடும்பத்தினர் சொக்கட்டான் ஆடும் போது தங்களுக்கு அதிகம் வேலை இருக்காது என்பதால் வேலையாட்கள் சமையல் அறை நோக்கி ஓட்டம் எடுத்தார்கள். தட்டுகளில் உணவை எடுத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கினார்கள். காவலுக்கு ஒரேயொரு பெண்மணியை மட்டும் நிறுத்திவிட்டு மற்றவர்கள் எல்லாரும் அவரவர் வேலையைப் பார்க்கப் போனார்கள்.

காய்கள் நகர்ந்தன. உள்ளுக்குள் போயின. வெளியே வந்தன. மறுபடியும் தாயம் போட உள்ளுக்குள் போயின.

கர்ணன் பலமுறை வெட்டுப் பட்டான். பானுமதி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தாள். பானுமதி காய்கள் நகர்த்தும் வேகத்தைப் பார்த்து விட்டு கர்ணன் திகைத்துப் போனான்.

பானுமதியின் ஒவ்வொரு காய்களும் உச்ச கட்டத்தை அடைந்தன. கர்ணனுடைய காய்களும் அதே போல உச்ச கட்டத்தை நோக்கி நகர்ந்தன. கடைசியில் ஒரு காய் மிச்சமிருந்தது. பானுமதி கைகுவித்து பாய்ச்சிகையை உருட்டி பாயில் போட்டாள். தாயம் என்று வந்தது. அந்த ஒரு காயும் உச்சகட்டத்தை அடைந்தது.

அவள் துள்ளியெழுந்திருந்தாள்.

''இருங்கள். நன்றாக இருக்கிறதே நீங்கள் செய்வது? முதலில் ஆடத்தொடங்கியது நீங்கள். அடுத்தபடி ஆடத் தொடங்கியது நான். ஆக இந்த முறை எனக்கும் தாயம் உருட்ட நீங்கள் வாய்ப்பு தர வேண்டும். வாய்ப்பு தந்து என்னுடைய காயும் உள்ளே போய் விட்டால் நாம் சமம் என்கிற இடத்திற்கு வருவோம். எனவே அமருங்கள். தயவு செய்து அமருங்கள். இப்பொழுது என்னுடைய முறை. நான் தாயம் போட்டு விட்டால் நானும் ஜெயித்தேன் என்றுதான் அர்த்தம்'' என்று கர்ணன் சொல்ல பானுமதி மறுத்தாள்.

பின்னே படிகளில் புருஷன் ஏறி வருவதைப் பார்த்தாள். 'அட புருஷன் வந்து விட்டாரே. அவருக்கு உணவு போட வேண்டுமே' என்ற பதற்றத்தில் எழுந்து நின்றாள். ஆனால் பானுமதி விளையாட்டை நிறுத்திவிட்டு விலகி ஓடுகிறாள் என்று கர்ணன் நினைத்தான். அமருங்கள் என்று சொல்வதற்காக கை நீட்டினான். அவன். கங்கணத்தில் பானுமதியின் முத்துச் சரம் மாட்டியது. வேகமாக பானுமதி எழுந்திருக்க 'அட மார்பு முத்துமாலையை தொடுகிறோமோ' என்று கர்ணன் கையை விலக்கி, இழுக்க, பளிச்சென்று முத்து கோத்த நூல் அறுபட முத்துகள் தரையில் சிதறி நாலா பக்கமும் வழுவழுப்பான தரையில் பரவின.

கர்ணன் பயந்து போனான். ஒரு பெண்மணியின் மார்பை மறைக்கின்ற முத்துச்சரத்தை அறுத்து விட்டோமே என்று கலவரமானான்.

தன் புருஷன் எதிரிலேயே இப்படி இன்னோர் ஆடவனால் தன்னுடைய முத்துமாலை அறுக்கப்பட்டது பார்த்து பானுமதியும் கலங்கினாள். கலவரத்தோடு துரியோதனன் நோக்கினாள்.

துரியோதனன், பானுமதி பார்ப்பதைப் பார்த்து கர்ணன் திரும்பினான். துரியோதனனைப் பார்த்தான். முகம் வெளிறினான். தான் வேண்டுமென்றே செய்யவில்லை என்று சொல்ல வார்த்தை எடுத்தான்.

துரியோதனன் முன்னேறினான். முத்துகளைப் பொறுக்கினான்.

''எடுக்கவோ கோர்க்கவோ என்ன செய்யட்டும்?'' என்று கர்ணனை வினவினான்.

''முத்துமாலை அறுந்ததும் கைநீட்டி அவளை அமர வைத்ததும், நீங்கள் உட்கார்ந்து பாய்ச்சிகை போட்டு தாயத்துக் கட்டம் ஆடியதும் எனக்கு விஷயமே இல்லை. நான் உன்னை நம்புகின்றேன். என் மனைவியை நம்புகின்றேன். இங்கு எதுவும் அறுந்துவிடவில்லை.

எதுவும் அறாது. அப்படி அறுந்தாலும் நான் எடுப்பேன். மறுபடியும் கோப்பேன். கர்ணா... நீ எனக்கு முக்கியம். நீ என் நண்பன். நான் உன் நண்பன். நம் இருவருக்கும் பானுமதி ஸ்நேகிதி. இந்த நட்பு ஒரு போதும் அறாது'' என்று சொல்லாமல் சொன்னான்.

கர்ணனின் கண்களில் நீர் கட்டியது. துரியோதனனை நோக்கிக் கைகூப்பினான்.

''என்னைப் பற்றி நெல்முனையளவும் உனக்கு சந்தேகமில்லை யல்லவா? என் நட்பு பற்றி நெல்முளையளவும் உனக்குக் கேள்வியில்லை அல்லவா? அதேபோல நானும் உன்னைப் பற்றி எந்தக் கேள்வியும் இல்லாமல் உனக்கெதிரே நெல் முனையளவும் எதிர்ப்பு இல்லாமல் நான் நடந்து கொள்வேன். இது சத்தியம்'' என்று மனத்துக்குள் சங்கல்பம் செய்து கொண்டான்.

கர்ணனுடைய உணர்வு வெறும் செஞ்சோற்றுக் கடன் மட்டுமன்று. நட்பினுடைய ஆணிவேர். பருத்து நின்ற பலாமரம் நின்ற வேர். வெட்டிச் சாய்க்க முடியாத கற்பாறை.

இந்தியப் புராணத்தில் இப்படிப்பட்ட ஒரு நட்பு வேறெங்கும் சொல்லப்படவேயில்லை. தான் மட்டும் இல்லாமல், தன் மனைவியையும் நட்பாகக் கொடுத்த துரியோதனன் சாதாரணன் அல்லன்.

துரியோதனன் நட்பின் இலக்கணம். அந்த மூவரும் நட்பு சொல்லும் புதிய இலக்கியம்.

# 7

''அடுத்த தலைமுறையினரைப் பேசவிட்டு கேட்பது இளைய தலைமுறைக்கு நல்லது. அவருடைய அறிவும், அனுபவமும் வேகமாய் உள் வாங்கப்பட்டு உங்களுடைய அனுபவத்தோடு சேர்ந்து உங்கள் வாழ்க்கையை அது செம்மையாக்கும். எனவே

இளைய தலைமுறையினரான நீங்கள் மற்றவர்களிடம் அணுகி வாழ்க்கையைப் பற்றிய அபிப்பிராயங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். ராஜகுமாரர்களாகிய நீங்கள் எப்படி ராஜ்ஜிய பரிபாலனம் செய்வது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அரசனுக்குப் பிறந்தவர்கள் என்ற தகுதியே மட்டுமில்லாமல் வேறு சில தகுதிகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

பாண்டவர்கள் பிரகாசமாக இருக்கக் காரணம் அவர்கள் நன்கு சிந்திக்கிறார்கள். அவர்கள் நன்கு சிந்திக்கக் காரணம் மற்றவர் பேசுவதை உன்னிப்பாக கவனிக்கிறார்கள். தர்ம புத்திரன் இதை அழகாகச் செய்கிறான். தான் அறிந்ததை தன் தம்பிகளோடு பகிர்ந்து கொள்கிறான். உனக்கு அப்படி ஒரு நல்ல சங்கம் அமையவில்லை. அதனால் துரியோதனா. உன்னுடைய தம்பிகளோடும், நண்பர் களோடும் கணிகர் என்கிற பிராமணரை அழைத்து வந்து அவரைப் பேசச் சொல்லி ராஜ்ஜிய பரிபாலனம் என்றால் என்ன என்பதைக் கேட்டுக் கொள். ஓர் அரசன் எப்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் வாயால் சொல்லக் கேள். அது பற்றி யோசி. உங்கள் கூட்டங்களுக்குள் விவாதம் நடக்கட்டும். அங்கும் பிறர் பேசுவதை முழுவதுமாகக் கேட்டு உன் அபிப்பிராயத்தை உருவாக்கிக்கொள்'' என்று திருதராஷ்டிரன் தன் மகன் மீதுள்ள பாசத்தால் அக்கறையினால் தேசம் செழிப்படைய வேண்டுமே, நல்ல அரசன் இங்கு வேண்டுமே என்ற கவலையினால் சொன்னான்.

துரியோதனன் திரும்பி கர்ணனைப் பார்க்க கர்ணன் சரியென்று சொல்ல துரியோதனனும் சரியென்று சொன்னான்.

தன் தம்பிகளைப் பின்னால் உட்கார வைத்துவிட்டு தனக்கு அருகே கர்ணனை உட்கார வைத்துக் கொண்டான். ராஜ நீதி அறிந்த கணிகர் என்கிற அந்த பிராமணர் ஓர் அரசன் கொள்ள வேண்டிய குணங்கள் பற்றிப் பேசத் தொடங்கினார்.

''அரசன் மிக சுயநலக்காரனாக இருக்க வேண்டும். எதிரிகளிடம் எந்நேரமும் விழிப்போடு இருக்க வேண்டும். சாம, தான, பேத, தண்டம்

என்ற நால்வகைக் குணங்களால் எப்பொழுதும் செயல் நடத்திக் கொண்டிருக்கவேண்டும். விழிப்போடும் தந்திரத்தோடும் வாழ்க்கை நடத்தவேண்டும். அவனுடைய கருணையோ, கோபமோ, நட்போ, எதிர்ப்போ, அரசியல் நடத்துவதற்காகத்தானே தவிர, வேறு எதற்காகவும் இல்லை. அரசு, அரசுக் கட்டில், அரசியல் வாழ்க்கை வேறு எதையும் சிந்தித்து விடக்கூடாது. விழிப்பும், தந்திரமும் உள்ள அரசனிடம் பொருள் தானாக வந்து சேரும்.

பொருள் சேர்ந்த இடத்தில் எல்லாவிதமான இன்பங்களையும் அனுபவிக்க முடியும். எனவே அரசுக் கட்டிலும் அரசியல் வாழ்க்கையும்தான் முக்கியமானவை. இதுவே அரசனை முழுமையாக்குகின்றன. இன்பங்களுக்காக அரசுக் கட்டிலை விட்டுவிடக்கூடாது. பொருள் சேர்ப்பதற்கான வணிகத்தில் ஈடுபட்டுவிடக்கூடாது.

அரசனுடைய குணம் அதிகாரம். அதிகாரம் என்பது புஜ பலத்தின் அடிப்படையில் எழுகிறது. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளச் சிறந்த கோட்டையும், எதிரியைத் தாக்கக்கூடிய ஆயுதங்களையும் உடையவன் எது சொன்னாலும் மக்கள் ஏற்பார்கள். அவனைக் கொண்டாடுவார்கள். அவனுக்குப் பரிசளித்து கௌரவிப்பார்கள். எனவே புஜபலத்தையே அடிப்படையாகக் கொண்டு அரசியல் நடத்த வேண்டும். அதே நேரம் புஜபலத்தால்தான் அரசியல் நடக்கிறது என்பதை வெளியே சொல்லிக் கொள்ளாமல் மிகுந்த கருணை யுள்ளவனாய், எல்லாவற்றிலும் ஈடுபாடு உள்ளவனாய் ஓர் அரசன் நடந்து கொள்ள வேண்டும்.''

கணிகர் என்ற அந்த அந்தணர் உடனே ஒரு நரிக்கதையைச் சொன்னார். துரியோதனனும், கர்ணனும் அருகருகில் இருந்து அந்தக் கதையை உற்றுக் கேட்டார்கள். உவமையாய்ச் சொல்லப்பட்ட அந்தக் கதையைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தார்கள்.

''அடர்ந்த ஒரு வனப் பிரதேசத்தில் ஒரு கொழுத்த மான் இருந்தது. ஒரு பெரிய மான் கூட்டத்திற்கு அது தலைவனாக இருந்தது.

நதிக்கரையோரம் உள்ள புல்வெளிகளில் அந்த மான் கூட்டம் வசித்து வந்தது. அந்த மானை வேட்டையாட ஒரு நரி ஆசைப்பட்டது. ஆனால் அந்த மானை வேட்டையாட தன்னால் முடியாது என்பதைப் புரிந்து கொண்டது. உடனே அந்த நரி ஓர் எலியோடும், புலியோடும், கீரியோடும், ஒநாயோடும் இனிய வார்த்தைப் பேசி ஸ்நேகம் கொண்டது.

பசியால் தவித்துக் கொண்டிருந்த அந்தப் பிராணிகளுக்கு கொழுத்த மான் இருப்பதை காட்டிக் கொடுத்தது. எப்படி வேட்டையாடுவது அந்த மான் மிகவும் வேகமுள்ளதாக இருக்கிறதே என்று புலி சொல்ல நரி உடனே ஒரு தந்திரம் சொல்லியது.

''மான் அயர்ந்திருக்கும் நேரத்தில் எலி உள்ளே புகுந்து மானின் காலைக் கடித்துவிடவேண்டும். அதனால் மான் ஓட முடியாமல் தவிக்கும். பிறகு ஓட முடியாத மானை புலி துரத்திக் கொண்டு போய்க் கொன்று விடலாம்'' என்று நரி யோசனை கூறிற்று. உடனே அவ்விதமே மான் அயர்ந்திருக்கும்பொழுது எலி மானுக்கு அருகே சென்று அதன் காலை பலமாகக் கடித்தது. மான் மிரண்டு, நாலாபக்கமும் அலைந்து. மான் வேகமாக ஓட முயன்றாலும் எலி கடித்ததன் விளைவாக புலியிடம் சிக்கிக்கொண்டு அடிப்பட்டு இறந்து போனது. புலி இறைச்சியைத் தூக்கிக்கொண்டு வந்தது.

''நீங்கள் எல்லாரும் போய்க் குளித்துவிட்டு வாருங்கள் பசியோடு இருக்கிறீர்கள். நான் அது வரை இறைச்சியைக் காவல் காக்கிறேன்'' என்று நரி சொல்ல நரியைத்தவிர மற்ற மிருகங்கள் ஆற்றங்கரைக்குப் போயின.

குளித்துவிட்டு புலி முதலில் வந்தது. வந்த புலியைப் பார்த்த நரி முகத்தைத் திருப்பிக் கொண்டது. பார்க்க விரும்பாததுபோல் நடித்தது. என்ன என்று புலி கேட்க ''இந்த எலிக்கு வந்த திமிரைப் பார்த்தாயா? நான் கடித்ததால்தானே புலி வேட்டையாடியது, நான் கடிக்காத மானைப் புலி வேட்டையாடி இருக்குமா? எனவே புலி என்னுடைய

எச்சிலைத்தான் சாப்பிடுகிறது என்று பேசுகிறது'' என்று சொன்னதும் புலி கோபமாகியது.

''எனக்கு ஒன்றும் அப்படிப்பட்ட மாமிசம் தேவையில்லை. நான் எவர் துணையுமில்லாமல் வேட்டையாடி மிருகங்களைக் கொன்று புசிக்கிற வம்சத்தில் வந்தவன். ஓர் எலியினுடைய எச்சிலைத் தின்னுவதற்கு எனக்கு சம்மதமில்லை. நான் விலகிக் கொள்கிறேன்'' என்று சொல்லி மாமிசத்தை விட்டு வெகு விரைவாய் வெளியே போயிற்று. பிறகு எலி வந்ததும், ''ஏன் முன்பே வரவில்லை? குளித்துவிட்டு முன்பே வரவேண்டியதுதானே? இதோ இந்த மாமிசத்தில் புலியின் நகங்கள் பட்டுவிட்டன. அதனால் மாமிசம் விஷமாகி விட்டது. நான் அந்த மாமிசத்தை சாப்பிடப் போவதில்லை'' என்று நரிவிலகி விட்டது. அப்படி விலகிய நரி, ''தன்னுடைய பசிக்கு உன்னைத்தான் உணவாகக் கொள்ள நினைத்திருக்கிறது. எனவே சற்றும் தாமதியாமல் இங்கேயிருந்து ஓடு'' என்று சொல்ல, எலி நரிக்குப் பயந்து வெகு வேகமாக ஓடிவிட்டது.

பிறகு ஓநாய் வர ஓநாயைப் பார்த்து நீ ''அதிகம் பங்கு கேட்பாய் என்றும் உனக்கு பங்கு அதிகம் கொடுக்க வேண்டும் என்றும் பசி அதிகமுள்ளவனென்றும், எனவே உனக்கு பங்கு கொடுக்காமலிருக்க புலி தன் மனைவியை அழைத்து வந்து உன்னை இரண்டு பேருமாகச் சேர்ந்து கொல்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். புலி தன் மனைவியை அழைத்து வரப் போகிறது. எனவே நீ சீக்கிரம் மாமிசத்தை தின்று விட்டுப் போ'' என்று சொல்ல ஓநாய் பயந்துபோய் மாமிசத்தை தின்ன முடியாமல் அந்த இடத்தை விட்டு ஓடிப்போயிற்று. கடைசியாக கீரி வர, கீரியை நரி முறைத்துப் பார்த்தது. மற்றவர்களெல்லாம் எங்கே? என்று ஆவலாகக் கீரி கேட்க எல்லாரையும் கடித்துக் குதறி துரத்திவிட்டேன். நீ ஒருவன்தான் பாக்கி. வா; உன்னை ஒரு வழி செய்து விடுகிறேன்'' என்று ஆங்காரத்தோடு கீரிமேல் பாய கீரி பயந்து மானை விட்டு ஓடிப்போயிற்று.

எந்த வேட்டையும் செய்யாமல் வெறும் பேச்சினாலேயே, அந்த மாமிசத்தை அடைந்து நரி சுகமாக தனியாக உண்டது.

அரசியல் என்பது தந்திரமானது. புத்தி பூர்வமானது. நிதானமாகவும், பேச்சுத்திறனோடும் மற்றவரை எடைபோடுகின்ற சாமர்த்தியத்தோடும் இருக்கின்ற தலைவன் வெற்றி பெறுகிறான். வெறும் பேச்சு சாமர்த்தியமில்லாமல் முக்கியமான நேரத்தில் தகுதி பார்த்து, நேரம் பார்த்து, நேரடியான பலப்பரிட்சைக்கும் அரசன் இறங்கத் தயாராக இருக்க வேண்டும். புலியுடன் மோதாமல் எலியோடு சண்டையிடாமல் தன்னைவிடப் பலசாலியான ஓநாயோடு மோதாமல், நரி கீரியை மிரட்டியது தந்திரத்தின் உச்சகட்டம்.

ஒரு தலைவன் எப்பொழுது சமாதானம் செய்துகொள்ள வேண்டும். எப்பொழுது சண்டையிட வேண்டும் என்று தெரிந்து கொள்ளவேண்டும். யாரோடு சமாதானம் செய்து கொள்ள வேண்டும். யாரோடு எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டவனாக இருக்க வேண்டும்.

நல்ல அரசனுக்குத் தூக்கமில்லை. அதனால் எந்த விஷயங் களிலும், இன்பங்களிலும், ஈடுபட முடியாது. எந்த நேரமும் அவனுக்கு எதிரியின் ஞாபகமும் தன் வளர்ச்சியைப் பற்றிய, இருப்பு தன் இருமாப்பு பற்றிய கேள்வியுமே பலமாக இருக்கும்.''

கணிகர் சொன்ன கதையை துரியோதனனும், கர்ணனும் ஆவலாகக் கேட்டார்கள். பிறகு தனியே போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

''கணிகருடைய கதை எவ்வளவு உண்மையானது என்பது இப்பொழுது எனக்குப் புரிகிறது. நான் இடைவிடாமல் பஞ்ச பாண்டவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வளர்ச்சியைப் பற்றியே எண்ணியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வளர்ச்சியைப் பற்றி எண்ணியே நான் உணவு உண்ணாமலும், உறக்கம் கொள்ளாமலும், பெண்களோடு

சுகிக்காமலும் இருக்கிறேன். அப்படி என்னையும் மீறி நல்ல உணவு, நல்ல பெண்களோடு நான் உறவு வைத்துக் கொண்டால் அப்பொழுதும் எனக்கு அவர்கள் ஞாபகம் தான் இருக்கிறதே தவிர வேறு எதுவும் இல்லை. எனவே நான் இப்பொழுது என்ன செய்வது என்பதை எனக்கு யோசனை கூறுவாயாக'' என்று துரியோதனன் கேட்டான்.

கர்ணன் அவன் தோளில் கை வைத்து ''நீ என்ன செய்தாலும் எது செய்தாலும் அது நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந் தாலும், நான் உன் பக்கம் இருக்கிறேன். கணிகருடைய தந்திரங்கள் எனக்கு ஏற்புடையனவாக இல்லை. ஒரு போர் வீரன் நேரடியாக ஓர் அரசனை போருக்கு அழைத்து வலிமையைக் காட்டி அவனை ஜெயிக்க வேண்டுமேயல்லாது இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பேசி, உள்ளொன்றும் புறமொன்றுமாய் வைத்து சமாளிப்பது எனக்கு உடன்பாடான விஷயம் அல்ல. ஆனாலும் இதில் எல்லா முடிவுகளும் நீ எடுப்பவையே நன்றாக இருக்கும். நீ என்ன முடிவு எடுத்தாலும் அதை ஆதரிப்பதை என்னுடைய கடமையாகக் கொண்டிருக்கிறேன். அது தவிர தந்திரத்தால் பஞ்ச பாண்டவர்களை ஜெயிக்கலாம் என்று நினைப்பதும் சரியென்று எனக்குத் தோன்றவில்லை. கணிகருடைய இந்தக் கதைகளெல்லாம் சாதாரண மக்களுக்குப் பொருந்தும். வலிமை பொருந்திய பஞ்ச பாண்டவர்களை இப்படி ஏமாற்றி விடமுடியாது என்று நான் நினைக்கிறேன். என்னைவிட இந்த ராஜ்ஜிய விவகாரங்களில் திறமையுள்ள சகுனியையும் மற்றவர்களையும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வா'' என்று பதில் சொன்னார்.

துரியோதனன் அந்த பதிலில் சந்தோஷமானான். நண்பனை ஆரத்தழுவி சகுனியைத் தேடிக் கொண்டு போனான்.

சகுனியின் ஆலோசனையின்படி அரக்கு மாளிகை ஒன்று தயார் செய்து அதில் பஞ்ச பாண்டவர்களைக் குடியேற வைத்து அவர்கள் அயர்ந்திருக்கும் நேரத்தில் தீயிட்டான்.

அரக்கு மாளிகை பற்றியெறிந்தது. ஆனால் பஞ்ச பாண்டவர்கள் தப்பி சுரங்கம் வழியே வெளியே போனார்கள். துரியோதனனுடைய சூழ்ச்சி புரிந்து அந்தணர்கள் போல் உருமாறி ஒவ்வொரு ஊராக நடந்து போனார்கள்.

துருபத தேசத்தில் துருபதனுடைய மகள் திரௌபதிக்கு சுயம்வரம் நிச்சயம் செய்யப்பட்டது.

இயந்திரத்துக்கு நடுவே சுழன்று கொண்டிருக்கின்ற மீனை அம்பால் அடிப்பவருக்கு தன் மகளைத் திருமணம் செய்து வைப்பதாக துருபதன் அறிவித்திருந்தான்.

திரௌபதியின் பேரழகை கேள்விப்பட்டு பல அரசர்கள் துருபத தேசத்திற்குப் போய்த் தங்கியிருந்தார்கள். சுயம்வர தினத்திற்காகக் காத்திருந்தார்கள். வேடிக்கை பார்ப்பதற்காகவும் ஜனங்கள் அங்கு வர அந்தணர்களுக்கான இடத்தில் பஞ்ச பாண்டவர்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டார்கள்.

துரியோதனனும், கர்ணனும் சுயம்வரத்தில் பங்குபெற எண்ணினார்கள். துரியோதனன் வில் வளைத்து நாண் அடிக்க அம்பு தெறித்து வெளியே வந்து விழுந்தது. மேலும் பல அரசர்கள் முயற்சி செய்ய அம்புகள் மீன் அருகே கூட அம்புகள் போக முடியாமல் வந்தன.

கர்ணன் போய் நாணேற்றினான். வில் வளைத்தான். அம்பு தொடுத்தான். கூர்மையாய் குறியைப் பார்க்கும்பொழுது திரௌபதி எழுந்து ''நான் தேரோட்டி மகனைத் திருமணம் செய்து கொள்ள இயலாது'' என்று உரக்கக் கூறினாள். எந்தப் பெண் திருமணம் செய்ய வேண்டுமோ அவளே மறுத்துவிட்ட பிறகு அந்தப் போட்டியில் கலந்து கொள்வது அழகல்ல என்று கர்ணன் வளைத்த வில்லைத் தளர விட்டு மனம் சோர்ந்து தன் இருப்பிடத்திற்கு வந்து தலை குனிந்து உட்கார்ந்து கொண்டான்.

நடுச் சபையில் ஓர் அரசகுமாரி தன்னை இனத்தின் பெயரைக் கூறி வெறுத்து ஒதுக்கியது அவனுக்குள் ஆழ்ந்த வலியையும், வடுவையும் ஏற்படுத்தியது. பிறகு அந்தணர் பகுதியிலிருந்து அர்ச்சுனன் எழுந்திருந்து போக, கிருஷ்ணர் அவனைப் புரிந்து கொண்டதாய் சைகை செய்ய அவற்றைக் கர்ணன் உற்றுப் பார்த்தான். அந்த அந்தண வீரன் அர்ச்சுனன் போல இருப்பதையும் துரியோதனனிடம் தெரிவித்தான். அந்த அந்தண் உருவில் இருந்த அர்ச்சுனன் அந்த வில்லை வளைக்க முயன்றபோது சபையில் இருந்த அந்தணர்கள் கூவினார்கள்.

''வேண்டாம் விஷப்பரிட்சை. இதனால் அந்தணர்களுக்குத் தீங்கு நேரும். அவமானம் நேரும்'' என்றார்கள். சிலர் ''பரவாயில்லை. செய். அந்தணர்களுக்குப் பெருமை உண்டாகட்டும்'' என்று சொன்னார்கள்.

வில் வளைத்து நாணேற்றி அர்ச்சுனன் அந்த மீன் உருவத்தைச் சிதறடித்தான். சபை உரக்க வாழ்த்தொலி எழும்பியது. திரௌபதி ஓடிவந்து மாலையிட்டாள்.

அரசர்கள் கோபமானார்கள். அந்தணர்களையெல்லாம் இந்தச் சபைக்கு வரவழைத்தாயே என்று துருபதனிடம் சண்டையிட்டார்கள்.

துருபதன் மீனை அடித்த அர்ச்சுனனிடம் சரணடைந்தான். அர்ச்சுனன் துருபதனிடம் காப்பாக நின்றான். அடிக்க வந்த அவர்களைத் தாக்கி விரட்டினான். கர்ணன் வில் வளைத்து அப்படித் தாக்குகின்ற பிராமண இளைஞனை பதிலுக்குத் தாக்க அந்த அம்புகளைத் திறமையாகத் தடுத்து கர்ணனை அர்ச்சுனன் நிலை குலையச் செய்தான்.

''இவ்வளவு திறமையாகப் போராடும் நீ யார்? அர்ச்சுனனைத் தவிர என் அம்புகளை வேறு யாரும் தடுத்து நிறுத்த முடியாது. உன்னால் தடுத்து நிறுத்த முடிகிறதே. நீ உண்மையில் அந்தணன் தானா?'' என்று அர்ச்சுனனை உரத்துக் கேட்க அர்ச்சுனன் நான் அந்தணன்தான் என்று பதில் சொன்னான்.

''நான் சூரியனுடைய அம்சம். அந்தணர்கள் சூரியனை வழிபடுபவர்கள். பிரம்மதேஜஸ் உடையவர்கள் சூரியனை வழிபடும் பிரம்மதேஜஸ் உடையவர்களோடு நான் சண்டையிடுவதற்கில்லை. அது என் தகப்பனாரோடு சண்டையிடுவதற்குச் சமம். எனவே, நீ அந்தணன் என்று உறுதியாகச் சொல்வதால் உன்னோடு சண்டையிடாமல் பின் வாங்குகிறேன்'' என்று துருபதன் சபையிலிருந்து கர்ணன் வெளியேறினான்.

பஞ்ச பாண்டவர்கள் அழிவே இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று தெரிந்த துரியோதனன் மனம் குமைந்து போனான். நண்பனின் வேதனையைக் கர்ணனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பல்வேறு விதங்களில் ஆறுதல் சொல்லி வந்தாலும் துரியோதனன் அதைச் செவிமடுக்காது தன்னுடைய எதிரியை நினைத்தே வருந்திக் கொண்டிருந்தான்.

மறுபடியும் சபை கூட்டப்பட்டது.

துரியோதனனுடைய கலக்கம் நீங்குவதற்கு என்ன வழி என்று பல்வேறு வழிகள் விவாதிக்கப்பட்டன. கர்ணனுடைய முறை வந்தபோது ''மறுபடியும் சொல்கிறேன். தந்திர சாஸ்திரங்கள் எனக்கு நம்பிக்கையில்லை. மறைமுகமாகப் போர் செய்வதில் எனக்கு விருப்பமில்லை, அரசர்களைத் தூண்டிவிட்டு பாண்டவர்களை அழிப்பது என்பதும் ஆகாத செயல். எனவே நேரடியாய்த் தாக்கி வெற்றி அல்லது வீர மரணம் என்பதை முடிவு செய்து கொள்வோம். இதைத் தவிர பஞ்ச பாண்டவர்களுடைய பலம் பற்றிய அதீத கற்பனை நமக்கு இருக்கிறது. இது என்ன என்று நேரடியாய் மோதிப் பார்ப்பதுதான் சிறந்தது'' என்று சொல்ல கர்ணனுடைய ஆசைப் படியே போர் நடந்தது.

துருபதனின் நகரத்தைச் சுற்றிக் கொண்டு பாண்டவர்களை விடுவிக்கச் சொல்லி துரியோதனன் வற்புறுத்தினான். துருபதன் விட மறுக்கவே போர் தொடங்கியது.

அர்ச்சுனன் மிகக் கடுமையாக கர்ணனைத் தேடி வந்து தாக்கினான். மூன்று அம்புகளால் அர்ச்சுனன் அடித்தான். நிலை குலைந்து தேரில் உட்கார்ந்த கர்ணனைப் பார்த்து தேரோட்டி யுத்த களத்திலிருந்து விலகிக் கொண்டு வந்தான். மறுபடியும் கண் விழித்துப் பார்த்தபோது தேர் யுத்த களத்திலிருந்து வெகு தூரம் விலகி யிருப்பதைப் பார்த்து மறுபடியும் போர்க்களத்திற்குப் போகுமாறு தேரோட்டியை கர்ணன் கோபித்துக் கொண்டான்.

தேர் மறுபடியும் யுத்தத்திற்கு வருவதற்குள் துரியோதனனுடைய படைகள் பயந்து போய் பின்னடைந்து விட்டன. அர்ச்சுனன் வெற்றி பெற்றதாக சங்குகள் முழங்கின.

துரியோதனன் கர்ணனுடன் தோற்றுப்போய் அஸ்தினாபுரம் திரும்பினான். மறுபடியும் வேதனையால் பொருமினான்.

என்ன செய்தால் பாண்டவர்களை ஜெயிக்கலாம் என்று இடைவிடாது யோசித்தான்.

''அழகிய பெண்களை அனுப்பி பாண்டவர்களுக்கிடையே கலகத்தை உண்டாக்கலாமா?

திரௌபதி பாண்டவர்களை வெறுக்கும்படி செய்யலாமா? இதனால் பாண்டவர்களுக்குள் சண்டை ஏற்படாதா? திரௌபதி பாண்டவர்களை வெறுத்தால் துருபதன் திரௌபதியின் பக்கம் சேர்ந்து பாண்டவர்களை எதிர்க்கத் துணிய மாட்டானா?'' என்றெல்லாம் உளறிக் கொட்டினான். கர்ணன் அவனை அணைத்துக் கொண்டு சமாதானம் செய்தான்.

''உலகத்தில் பெண்கள் பல புருஷர்களை மணக்கவே உள்ளூர ஆசைப்படுகிறார்கள். ஆனால் வெளியே சொல்ல வெட்கப்படு கிறார்கள். திரௌபதி உண்மையிலேயே நேரடியாகவே பல பேர் அங்கீகரிப்புடன் ஐந்து வீரர்களை மணந்திருக்கிறாள். அவள் ஒரு போதும் கணவர்களிடையே வேற்றுமையை உண்டு பண்ண

மாட்டாள். அவர்களுடைய ஒற்றுமைக்கு காவலாக இருப்பாளே தவிர, அவர்களைத் தன்னுடைய அன்பாலும், பண்பாலும் கட்டுக்கோப்பாக வைத்திருப்பாளே தவிர, ஒரு பொழுதும் அவர்களைப் பிரித்துப்போட எண்ணமாட்டாள். தன் மகள் திரௌபதிக்குத் துணையாக துருபதன் காலபரியந்தமும் நிற்பான். அவன் பாண்டவர்கள் மீது உயிரையே வைத்திருக்கிறான். எனவே நீ சொல்லுகிற இந்த தந்திரமான விஷயங்கள் எனக்கு உடன்பாடானவை அல்ல. நேரடியான யுத்தம் தவிர சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை. ஆனால் நீயும், நானும் மட்டும் பாண்டவர்களோடு போரிட்டால் ஜெயித்துவிட முடியும் என்று நினைக்கவில்லை.

அவர்கள் ஐந்து வீரர்கள். அவர்களுக்கு இணையாக நாமும் சேனையைத் திரட்ட வேண்டும். நம்மிடையேயும் நல்ல வீரர்கள் உண்டு. ஆனால் அவர்கள் நமக்காகப் போரிட வேண்டுமே என்று கவலையோடு சொல்ல மற்றோருடைய ஆலோசனையும் கேட்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பீஷ்மர் "சண்டையில்லாமல் சாமாதானமாகப் போங்கள். உன் ராஜ்ஜியத்தில் பாதியைப் பாண்டவர்களுக்கு உரிமையாக்கிக்கொடு அவர்களுக்கு அதில் பாத்யதை இருக்கிறது. சண்டையைத் தவிர்த்து விடு" என்று சொல்ல துரியோதனன் முகம் சுருங்கிப் போனான்.

துரோணரும் பீஷ்மர் சொன்னதை ஆமோதித்துப் பேசினார்.

"அவர்களுக்கு உண்டான ராஜ்ஜியத்தை அவர்களுக்கு கொடுப்பதுதான் நல்லது. அதுதானே உத்தமமான வழி? உன் பக்கம் தர்மம் இருக்க வேண்டுமென்றால் உன் ராஜ்ஜியத்தில் பாதியை பிரித்து அவர்களுக்குக் கொடு. பிறகு நீ சண்டையிட்டாலும், சமாதானமாகப் போனாலும் அது உனக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்" என்று சொன்னார்கள்.

எதையும் கேட்கப் பிடிக்காமல் துரியோதனன் தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க கர்ணன் துரியோதனனை அணைத்துக் கொண்டு பேசினான்.

‘‘உன்னுடைய சோற்றைத் தின்றுவிட்டு உன் செல்வத்தில் வாழ்ந்துவிட்டு உனக்கு எதிராக இவர்கள் பேசிவதை என்னதால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இங்கு பிரச்சினை என்ன? உன்னுடைய துக்கம்தான் பிரச்சனை. உன்னுடைய துக்கம் எதனால் நேர்ந்தது? பஞ்ச பாண்டவர்களுடைய வளர்ச்சியைப் பார்த்து உனக்கு ஏற்படுகின்ற தாபமும், பயமும்தான் பிரச்சினை. இதை நீக்கத்தானே உன்னுடைய செல்வத்தை தின்பவர்கள் பாடுபட வேண்டும்? அதைத் தவிர்த்து தரும நியாயம் என்று எதிரிக்கு ஆதரவாகப் பேசுகிறார்களே. இதை எப்படி என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியும்? இவர்கள் ஏன் இப்படி பொய்யாக இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. தருமத்தைக் காப்பதுபோல் அரசனுடைய எதிரியுடன் ரகசிய உறவுகள் வைத்துக் கொண்டிருப்பவர்களை நான் மனிதர்களாகவே மதிப்பதில்லை.

‘‘துரியோதனா. நான் இந்த விஷயத்தை உன்னை மையமாக வைத்து பார்க்கவில்லை. வேறொரு விதமாகப் பார்க்கிறேன். உண்மையில் உன்னுடைய தாபம் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்று தான் நான் ஆலோசிக்கிறேன். உன்னுடைய தாபம் தீர்க்கக் கூடிய தாபமாக இருந்தால் அதற்கு விதியினுடைய ஆதரவு இருந்தால் அது வெகு நிச்சயமாகத் தீரும். யார் வாழப் போகிறார்கள் பஞ்ச பாண்டவர்களா, கெளரவர்களா என்பது விதியின் கையில் இருக்கிறது. எனவே, விதியின் கையிலே இருக்கின்ற இந்த விஷயத்தைத் தனக்குத் தெரிந்ததுபோல் இவர்கள் சொல்வது எவ்வளவு முட்டாள்தனமானது என்று யோசிக்கிறேன். நான் முயற்சி செய்து பார்க்கப் போகிறேன். என் அரசனுடைய தாபத்தைத் தீர்ப்பதற்காக எதிரிகளுடன் முட்டிப் பார்க்கப் போகிறேன். மோதிப் பார்க்கப் போகிறேன். அவர்களை அழிக்க நினைக்கப் போகிறேன்.

ஆனால், விதி உன் பக்கம் வலுவாக இருந்தால் என் கையால் அர்ச்சுனன் சாவான். பீமன் அழிவான், தருமபுத்திரன் நிலை குலைவான். நீ நிம்மதியாவாய்.

இந்தச் செயலைச் செய்கிற பொழுது நான் உனக்காகச் செய்கிறேன் என்று சொன்னாலும் விதியின் கைப்பாவையாக இருந்து செய்கிறேன் என்பதையும் நான் ஞாபகம் வைத்துக் கொள்கிறேன். மாறாக என் எதிரிக்கு ஆதரவாக உனக்கு எதிராக நினைக்கவும் என்னால் முடியாது.

நல்ல விவேகி விதியிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு தான் இருக்கின்ற இடத்திற்கேற்ப தன்னுடைய வேலையைச் செய்தாக வேண்டும். நான் உன்னுடைய சோறு தின்று வாழ்பவன். உன்னால் வளமானவன். உன்னால் அரசனானவன். உனக்காக உழைப்பதற் காகவே இருக்கிறவன். நீ வெற்றி பெறுவாயா. தோல்வி பெறுவாயா, என்பது என் கையில் இல்லை. விதியின் கையில் இருக்கிறது. ஆனால் அதே சமயம் விதியின் கையில் இருக்கிற விஷயத்தை விலக்கிப் பார்த்து விடுவதற்காக நான் எப்பொழுதும் உனக்காகப் போர் செய்ய சித்தமாக இருக்கிறேன். ஒரு பொழுதும் எதிரியோடு பணிந்து போ என்று நான் சொல்லமாட்டேன்'' என்று உரக்கப் பேசினான்.

கர்ணனுடைய பேச்சால் துரோணர் கோபமானார்.

''விதியிருந்தால் நான் பிழைத்துக் கொள்வேன் என்று யாரேனும் நெருப்பில் குதிப்பார்களா? சிங்கத்தின் வாயில் தலையை விடுவார்களா? பாம்பை எடுத்து தோளில் போட்டுக் கொள்வார்களா? பிறகு விஷமேறி தவிக்கிற போது இது விதியினுடைய விளையாட்டு என்று சொல்வார்களா? தர்மம் தெரிந்தவன் நியாயம் தெரிந்தவன் பாம்பிடமிருந்தும், சிங்கத்திடமிருந்தும், நெருப்பிடமிருந்தும் ஒதுங்கியிருப்பான். முட்டாள்தனமான காரியங்கள் செய்துவிட்டு விதி என்று சொல்வது பிழை. அரசனுக்கு தர்ம நியாயத்தை சொல்ல வேண்டியது என் கடமை. என் பேச்சைக் கேட்காமல் போனால் துரியோதனன் அதற்குண்டான பலனை நிச்சயம் அனுபவிப்பான். அவன் வம்சம் அழிவுறும்'' என்று உரத்துச் சொல்ல துரியோதனன் பீஷ்மருடைய ஆலோசனையை, துரோணருடைய ஆலோசனையை

ஏற்று பாண்டவர்களுக்கு தன் ராஜ்ஜியத்தில் சரி பாதியைப் பிரித்துக் கொடுத்தான்.

காண்டவப் பிரஸ்த நகரத்தில் பாண்டவர்கள் தங்களுக்கென்று பெரிய மாளிகை கட்டிக்கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அதற்கு இந்திரப் பிரஸ்தம் என்று புதிய பெயரிட்டார்கள். தேவ கட்டடக் கலைஞரான விஸ்வகர்மா இந்திரப் பிரஸ்தம் என்கிற அந்த அழகிய நகரத்தை நிர்மாணித்துக் கொடுத்தார்.

பாண்டவர்கள் புகழ் மேலும் பெருகியது. துரியோதனன் இன்னும் கவலையானான். அவன் கவலையைத் தீர்க்க முடியாமல் கர்ணன் அவஸ்தைப்பட்டான்.

கர்ணன் இங்கு பேசிய வார்த்தைகள் மிக உயர்ந்தவை. வாழ்க்கையை யாரும் திசைதிருப்பி வேறு விதமாக வடித்து விட முடியாது. என்ன நடக்குமோ அது நடந்தே தீரும். இந்த நிலைமைக்கு ஒருவன் தள்ளப்பட்டு விட்டால், இந்த நிலைமையை ஒருவன் புரிந்து கொண்டுவிட்டால், தான் செய்கின்ற காரியத்தில் மிகத் தெளிவுடையவனாக இருப்பான். துரியோதனன் ஜெயிப்பது தோற்பது என்கிற விஷயம் முக்கியமே அல்ல. துரியோதனனோடு நீங்கள் நட்பாக இருக்கிறீர்களா இல்லையா என்றுதான் பீஷ்மரையும், துரோணரையும் கேட்டான்.

அவர்களால் அதற்கு பதில் சொல்ல முடியவில்லை. துரியோதனன் தர்மத்தின் பால் நிற்க வேண்டுமென்ற சாக்கில் துரியோதனனை விட்டு அவர்கள் விலகி நின்று பேசினார்கள்.

கர்ணன் ஒரு போதும் தர்மத்தை விட்டு விலகவில்லை. துரியோதனன் தனக்குக் கொடுத்த செல்வத்தை உணருகிற பொழுதெல்லாம் மிகுந்த நன்றியுடையவனாய் ‘உன்னுடைய வெற்றி தோல்வி பற்றிக் கவலையில்லாமல் உனக்கருகே இருப்பேன் என்ற உறுதியோடு நின்றான்.

மகா பாரதத்தில் கர்ணனுடைய இந்தச் செய்கை அதிகம் போற்றப்படாமல் போய்விட்டது. கர்ணன் அதிர்ஷ்டமில்லாதவன். அவனுடைய ஆற்றலும், அன்பான குணமும் கடைசிவரை பாராட்டுப் பெறாமலே போய் விட்டன.

## 8

**ச**ம்பவங்கள் வெகுவேகமாக நடந்து மேலும், மேலும் பகைமையைக் கிளறின. துரியோதனனின் பொறாமையை அதிகமாகச் செய்தன.

''சிசுபாலன் கேட்டதில் என்ன தவறு. 'முதல் மரியாதை கிருஷ்ணனுக்கா? இது எந்தவிதத்தில் நியாயம்?' என்று கேட்டதற்காக கோபக்காரனான சிசுபாலன் கிருஷ்ணனால் துரத்தித் துரத்திக் கொல்லப்படுகிறான். இது அராஜகமில்லையா? மிகப்பெரிய அநீதி இல்லையா? அந்த உளறுவாயன் சிசுபாலனை மேலும் மேலும் பேச வைத்து அவனைக் கோபமடைய வைத்து அவன் கோபம் அடைந்த பிறகு கொலையும் செய்கிறான் கிருஷ்ணன். நயவஞ்சகத்தின் உச்சாணிக் கொம்பு. இது மறைமுகமாக எனக்கு விடுக்கப்பட்ட மிரட்டல். எங்களிடம் சிசுபாலனே அடிபணிகிறான். நீ எந்த மூலைக்கு என்கிற அலட்டல். கண்ணன் நமக்கும் உறவுதானே? நமக்கும் நண்பன்தானே? ஆனால் நம்மை ஏன் கொண்டாட மறுக்கிறான்? நம்மிடம் ஏன் நெருக்கமாக இல்லாமல் விலகிப் போகிறான்? அந்த விதத்தில் பாண்டவர்கள் அவனைக் கௌரவப்படுத்துகிறார்கள். அதை நான் செய்ய மாட்டேனா? தர்மத்தின் பக்கம்தான் நிற்கிறேன் என்றானே, நான் அதர்மனா? எந்த அரசனாவது தனக்கு உரிமையான நிலத்தை விட்டுக் கொடுப்பானா? விட்டுக் கொடுப்பவன் அரசன் ஆவானா?

கர்ணா. நான் இந்த பூமியில் சபிக்கப்பட்டு வந்து விட்டேனோ, கண்ணில்லாத தகப்பன். புருஷனுக்குக் கண் இல்லை என்பதால் எங்களை முற்றிலும் மறந்துவிட்டு தானும் கண்ணைக் கட்டிக்கொண்டு

ஒரு தாய். வாழ்க்கையை ருசிக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கின்ற ஒரு பிரம்மச்சாரி தாத்தா. ஏதோ ஒரு வகையில் பிறந்து, மிக உன்னதமான அறிவாளி என்று தன்னைக்காட்டிக் கொள்கிற விதுரன். கோபமான தந்திரமான ஆச்சாரியார். நூறு பேரை வரிசையாக உட்கார வைத்துப் பாடம் சொல்வதைவிட, ஐந்து பேரை வட்டமாக நிற்க வைத்து பாடம் சொல்லிக் கொடுக்கலாம் என்று நினைக்கின்ற ஆச்சார்ய துரோணர். அவருடைய துரோக மனப்பான்மை.

எனக்கு இருக்கும் தம்பிகள் எவரையும் என்னால் நம்ப முடியவில்லை. அவர்களை அடக்கி வைக்க முடியவில்லை. ஜெயித்துக் காட்டினால் அல்லவா அவர்களுக்கு என் மீது நம்பிக்கை வரும்? நான் இடையறாது பீமனிடம் தோற்றுக் கொண்டிருக்கிறேன். அர்ஜுனன் பெயரைக் கேட்டால் மரண பயம் போல் நடுங்குகிறேன். தருமரைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன். நகுல சகோதரர்களைக் கண்டாலும் நான் வெறித்துப் பார்க்கிறேன். இவையெல்லாம் என் காதுபட என் தம்பிகள் இதைக் குறித்துப் பேசுகிறார்கள். கேலி செய்கிறார்கள்.

ஒரு தம்பி சொல்கிறான். நான் தலையில் நீர் விட்டுக் குளிக்கும் போது அர்ஜுனா... என்று யாரேனும் கத்தினால் போதும் என் தலையிலிருந்து வழிகின்ற நீர் அப்படியே நின்று விடுமாம். தோளில் பட்டு முதுகில் வடிந்து கீழே விழாதாம். அத்தனை பயமாம். ஒருவன் சொல்ல மீதியுள்ள அத்தனை பேரும் சிரிக்கிறார்கள்.''

'' யார்... யார் சொன்னது?'' கர்ணன் கோபத்தோடு கேட்டான்.

''யாராக இருந்தால் என்ன? உடன்பிறந்தே கொல்லும் வியாதி தான் பேசிற்று.''

''விகர்ணனா...?'' கர்ணன் மறுபடியும் கோபமாகக் கேட்டான்.

'ஆமாம்' என்று துரியோதனன் தலையசைத்தான்.

துரியோதனனுடைய கடைசித் தம்பியான விகர்ணன் துரியோதனனைக் கடுமையாக எதிர்த்து வந்தான். இதுவும் துரியோதனனைக் காயப்படுத்தியது. வேதனைப்படுத்தியது.

மந்திரிமார்களையும், சேனைத்தலைவர்களையும், உறவு என்று சொல்லித் திரிந்து கொண்டிருக்கின்ற சிற்றரசர்களையும் நான் நம்புவதேயில்லை. அவர்கள் எந்த நேரமும் பாண்டவர்கள் பக்கம் சேரத் தயாராக இருப்பவர்கள். பாண்டவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நாம் பலவீனமாக இருக்கிறோமோ? அவர்களுக்கு எதிரே நிற்கின்ற தகுதிகூட இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறதோ என்ற பயம் ஏற்படுகிறது. தன்னுடைய எதிரி பலமாகிக் கொண்டே வருவதைப் பார்த்த ஓர் அரசனால் தூங்க முடியுமா?

கர்ணா. நீ மட்டும் இல்லையெனில் என்னுடைய வாழ்வு எப்பொழுதோ முடிந்திருக்கும். நீ என்னைக் காப்பாற்றுவாய் என்ற நம்பிக்கை இல்லையெனில் நான் எப்பொழுதோ சிதறி இறந்து போயிருப்பேன். என் மனத்தாலேயே வெந்து மடிந்து போயிருப்பேன். உன்னைப் பார்க்கிறபொழுது ஏற்படுகிற அமைதி, உன் தோளில் சாய்ந்து கொண்டிருக்கும்பொழுது ஏற்படுகின்ற நிம்மதி, வேறெப்பொழுதும் எனக்கு ஏற்படவில்லை கர்ணா.

கர்ணா நான் தவறானவனா? என்னிடம் உள்ள தவறு என்ன சொல். தயவு செய்து சொல்'' துரியோதனன் கைகூப்பிக் கேட்டான். கூப்பிய கையைக் கர்ணன் விலக்கினான். ஆரத்தழுவிக் கொண்டான். காதுகளைத் தடவினான். தலையை தடவி விட்டான். கன்னங்களில் முத்தமிட்டான். தோளை அணைத்துக் கொண்டு மெல்ல நடந்தான்.

துரியோதனனிடம் ஒரு தவறு இருக்கிறது. என்ன என்று சொல்லலாமா, யோசித்தான். மனம் குவித்து துரியோதனனோடு நடந்து கொண்டே தன் தந்தையை நோக்கி வணங்கினான்.

உள்ளே கைகூப்பி அவரை அழைத்தான். ''என்ன கேட்கப் போகிறாய்...? கேள் கர்ணா.'' உள்ளுக்குள் குரல் கேட்டது. கூர்மையான மெல்லியதான குரல் அது. சூரிய பகவானின் அழைப்பு அது.

''துரியோதனனிடம் என்ன பதில் சொல்வது?''

''உனக்கு ஏற்ற பதில் சொல்.''

''ஏன், உண்மையைச் சொல்ல வேண்டாமா?''

''புரியாது. கர்ணா. துரியோதனனுக்கு அவனைவிட வலுவாக யாரும் இருக்கக்கூடாது.''

''நான் இருக்கிறேனே.''

''இல்லை. நீ அவனுக்கு உதவியாக, அவனுக்குக் கீழே அடிமையாக இருக்கிறாய் என்று தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறான். நீயும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறாய். ஒருவேளை உன்னால் பஞ்ச பாண்டவர்கள் அழிய நேர்ந்தால், பஞ்ச பாண்டவர்கள் என்ற எதிரி துரியோதனனுக்கு இல்லாது போனால் அடுத்தபடி அவன் உன்னைத்தான் பார்ப்பான். அப்பொழுது வெகு எளிதில் உன்னோடும் பகைமை பாராட்டுவான்.''

''என்னோடு பகைமை பாராட்டுபவனா எனக்கு வாரிக் கொடுத்திருக்கிறான்.''

''உனக்கு அது கொடுக்கப்பட்டதில்லை. அவன் எதிரியை அழிக்க அவன் எடுத்துக்கொண்ட ஆயுதம் நீ. அவனுடைய ஒரே நம்பிக்கை நீ.''

''புரிகிறது அப்பா. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? இவனுக்கு என்ன புத்தி சொல்ல வேண்டும்?''

''இல்லை. இவனுக்கு புத்தி சொல்லாதே. நான் இருக்கிறேன் என்ற நம்பிக்கையைக் கொடு. அவனை அணைத்து ஆறுதல் சொல்லு. குதூகலப்படுத்து.''

''ஏனப்பா, ஏன் அவ்விதம் என்னை செய்யச் சொல்கிறீர்கள்? எதற்குப் பொய்யாய் ஒரு நண்பனை உற்சாகப்படுத்தச் சொல்கிறீர்கள். எங்களைவிட பஞ்ச பாண்டவர்கள் அதிக வலுவுள்ளவர்கள்தானே?''

''பாண்டவர்கள், கௌரவர்கள் என்று பார்க்காதே. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்று இந்த பரதகண்டம் மாறி விட்டது. க்ஷத்திரியர்களின் அட்டகாசம் உச்ச நிலைக்கு வந்துவிட்டது. க்ஷத்திரியர்களின் கொடுமையிலிருந்து மூன்றாவது வருணத்தினரும், நான்காவது வருணத்தினரும் தப்பித்துக் கொள்ள வேண்டுமெனில் க்ஷத்திரியர்களை ஒரு நிலைக்கு அடித்து உட்கார வைக்க வேண்டும். மிகப்பெரிய போர் ஒன்று வரப்போகிறது கர்ணா. அது பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் உண்டான போர் அல்ல. இது அரசர்களுக்குள் நடக்கின்ற யுத்தம். பத்மாசுரன் தன்கையாலேயே தன் தலையில் கை வைத்து இறந்ததுபோல க்ஷத்திரியர்களே க்ஷத்திரியர்களை மாய்த்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த க்ஷத்திரியக் கூட்டம் இப்படி அடங்கி கீழிறங்கினால்தான், இப்படி கும்பல் கும்பலாய் நொறுக்கப்பட்டால் தான் உலகம் நிம்மதியாக இருக்கும்.

பரத கண்டத்தின் இந்தப் பகுதி செழிப்பாக இருக்கும். இல்லையெனில், இவர்கள் ஆட்டத்தால் நான்காவது வருணத்தினரை முற்றிலும் அழித்து விடுவார்கள். மனிதர்களின் ஒரு பகுதியினரை மிகக் கேவலமாக நடத்தி முனை மழுங்கச் செய்து விடுவார்கள். பூமித்தாய் தன்னை சரி செய்து கொள்கிறாள் கர்ணா. இந்தப் பிரபஞ்சம் நல்ல முறையில் சுழல்வதற்காக, நல்ல மழை பொழிவதற்காக, நன்கு வெயில் காய்வதற்காக அவள் சில தந்திரங்கள் செய்கிறாள். இன்னும் கண்ணுக்குத் தெரியாத பல்வேறு விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன கர்ணா.

தருமபுத்திரருக்கு துரியோதனன் கொடுத்த பூமி மிக மோசமானது. எந்த வளமுமில்லாத அந்தப் பகுதியில், பூமித்தாய் வளம் பெற வைக்கிறாள். ஒவ்வொரு துளிரும், ஒவ்வோர் இலையும், ஒவ்வொரு கனியும் அர்த்தத்தோடு அங்கே மலர்கின்றன. மக்களை மகிழ்விக்கவேண்டும். பலப்படுத்த வேண்டும் என்று வெளியே வருகின்றன. இடையறாது அங்கு மழை பொழிகிறது. சுகமான காற்று

வீசுகிறது. பூமியிலிருந்து நீர் பொங்கி நாலாபுறமும் வழிகிறது. வெயிற் காலத்தில் நல்ல படியாக வெயில் காய்ந்து பூமி வெடித்து, மழை நீர் அந்த பூமிக்குள் அடி ஆழம் வரை போய்த் தேங்கி நிற்கிறது. எல்லாவிதத் தாவரங்களுக்கும், எல்லாவிதமான சத்துகளும் கிடைக்கின்றன. ஆநிரைகள் கொழுத்து வளர்கின்றன. தாவரங்களைத் தின்ற ஆநிரைகள் மூலம் நல்ல பால் கிடைக்கிறது. நல்ல பாலாலும், நல்ல மாமிசத்தாலும், மக்கள் திமிராகவும், அழகாகவும், கர்வத்தோடும் வளைய வருகிறார்கள்.

தருமபுத்திரனை எல்லா விதமாகவும் பூமித்தாய் உற்சாகப்படுத்தி வருகிறாள். அதற்கு மாறாக துரியோதனனிடத்தில் மழையின்மை இருக்கிறது. இயற்கைச் சீற்றம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் துரியோதனன் அல்லன். இது மிகப்பெரிய எடை... மிக உயர்ந்த தராசு. அரசர்களை அழிக்க பூமித்தாய் துரியோதனனைப் பகடைக்காயாகவும். தருமபுத்திரனை இன்னொரு பகடைக்காயாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறாள். இதில் துரியோதனன் வெட்டுப்படப்போவது நிச்சயம்.''

''தந்தையே. நீங்கள் என்ன சொன்னாலும் துரியோதனன் என்னுடைய நல்ல ஸ்நேகிதன். நான் இப்பொழுது அவனுக்கு என்ன சொல்ல வேண்டும்? எப்படி நடந்துகொள்ள வேண்டியதையும் எனக்கு உபதேசிக்க வேண்டும்.''

''கர்ணா. தானம் தருகிறாயே... ஏதேனும் எதிர்பார்த்துத் தருகிறாயா?''

''இல்லை தந்தையே. எதையும் எதிர்பார்ப்பதில்லை.''

''அதேபோல உன் கடமையைச் செய். எதையும் எதிர் பார்க்காதே. துரியோதனனுக்கு நன்றி உடையவனாய் இருக்க வேண்டுமென்று தீர்மானித்தாய். அதில் நெல்முனையளவும் குறை வைக்காதே. உள்ளுக்குள் எந்த சந்தேகமும் உனக்கு எழ வேண்டாம். இங்குள்ளவர்கள் அனைவரும் துரியோதனன் வாழ்வானா. சாவானா

எந்தப் பக்கம் நியாயம், எந்தப் பக்கம் தர்மம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாவற்றையும் எடுத்துவிட்டு உனக்கு உதவி செய்த துரியோதனனுக்கு நீ உதவி செய்.''

''தர்மம் முக்கியமில்லையா? தந்தையே. ஒரு மனிதன் தந்தையைப் பகைத்துக் கொண்டாவது தர்மத்தின் பக்கம் நிற்கலாம் என்று சாத்திரங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றனவே. நீங்கள் என்னை அவ்விதம் நடக்கச் சொல்லவில்லையே.''

கர்ணன் சந்தேகத்தோடு சூரிய பகவானைக் கேட்டான்.

''உன் தர்மம் செஞ்சோற்றுக் கடன். அதைச் செய் போதும்.''

''ஏன் தந்தையே? ஏன் என்னை சிறிய வட்டத்தில் சிக்க வைத்து விட்டீர்கள்?''

''சிறிய வட்டமா? என்ன சொல்கிறாய் கர்ணா. உனக்கு மட்டுமா உயர்வு கிடைத்தது? உனக்கு மட்டுமா மரியாதை கிடைத்தது? உனக்கு மட்டுமா சிம்மாசனம் கிடைத்தது? உனக்கு மட்டுமா அரச பதவியும், செல்வமும் கிடைத்தன? உன்னைச் சார்ந்த பல லட்சம் பேருக்கும் மரியாதை கிடைத்ததே. சவுக்கடியும், சாணமும் நிறைந்த வாழ்க்கையிலிருந்து விடுபட்ட அவர்கள் எல்லாரும் உன் பின்னால் வந்து, அவரவர்க்கு வீடு கட்டிக் கொண்டு, அவரவர் தங்கள் குதிரைகளைப் பராமரித்துக் கொண்டு, யாருக்கும் அடிமை இல்லாமல் உனக்குத் தோழனாய் ஒரு மிகப்பெரிய குதிரைச் சேவகர் கூட்டம் மலர்ந்து நிற்கிறதே. அதற்கு யார் காரணம்? துரியோதனன் அல்லவா?

சேனாதிபதிகளின் சுகத்திற்காகவே உங்கள் குதிரைக்காரர் பெண்டுகள் எத்தனை முறை நாசமாகி இருக்கிறார்கள்? அரசர்களுக்கு முதுகு தேய்த்துவிடவே, மேல் துணியின்றி உங்கள் பெண்கள் எத்தனை நேரம் நின்றிருக்கிறார்கள்? இந்த அவமானங்களெல்லாம் முடிந்து விட்டதே. இதற்குக் காரணம் துரியோதனன் அல்லவா?

'நீ நான்காவது வருணத்தினன் தானே?' உனக்கு எதற்கு தேசம் என்று ஏளனம் பேசிய இடத்திலிருந்து விடுபட்டு, நான் இந்த

தேசத்தைச் சேர்ந்தவன். இந்த அரசருக்குச் சொந்தமானவன் என்று குடியுரிமை வழங்கி கௌரவிக்கப்பட்டார்களே அதற்குக் காரணம் துரியோதனனல்லவா?

நான்காக மனிதர்கள் பிரிந்தது பூமியை இயக்குவதற்காகவே. அவரவர்கள் உண்டான தொழிலைச் செய்வதற்காகவே. இதில் இழிவு படுத்துவது என்பது இல்லை. இழிவு படுத்தத் தொடங்கிய காலகட்டத்திலிருந்து இதோ நூறு வருடம் கொதிக்கத் தொடங்கி விட்டது. இனி இழிவு படுத்தியவரை இயற்கை தண்டிக்காமல் விடாது. க்ஷத்திரியர்களுடைய அட்டகாசம் நான்காவது வருணத்தினரை நசுக்கிய பாவம். இப்பொழுது கைமேல் பலன் தரக் காத்திருக்கிறது.

தான் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் துரியோதனன் நான்காவது வருணத்திலிருந்து வந்த உன்னை தனக்கு அருகே வைத்து தனக்கு பாதுகாப்பாக ஏற்படுத்திக் கொண்டான். அந்த நான்காவது வருணம் இதற்கு மேல் வேதனைப்படக்கூடாது என்பதற்காகவே நீ ஆற்றில் தள்ளி விடப்பட்டு அங்கு போய்ச் சேர்ந்தாய்.

இயற்கைக்குத் தெரியும். யாரை எப்போது, எங்கே தண்டிப்பது என்று இயற்கைக்கு வெகு நிச்சயமாய்த் தெரியும். வன்முறை தலைவிரித்து ஆடியபோதெல்லாம் இயற்கை அதை மடக்க தண்டித்திருக்கிறது. அநீதி தலைவிரித்து ஆடிய போதெல்லாம் இயற்கை கன்னத்தில் அறைந்து கேட்டிருக்கிறது. பூமியையும், பூமியைச் சுற்றியுள்ள சக்தியையும் சாதாரணமாக நினைக்காதே. பூமி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எவரையும் அழிப்பாள். எவரையும் உற்பத்தி செய்வாள். உங்களையெல்லாம் விட இந்த பூமி மிக முக்கியம். அண்ட சராசரத்தின் செல்லப்பிள்ளை இந்த பூமி. இந்த பூமியில் எந்தக் கெடுதல் ஏற்பட்டாலும் அண்ட சராசரத்தில் உள்ள கிரகங்களும், சக்திகளும் அதைப் பாதுகாக்க வெகுவேகமாக வருவார்கள். உன்னை அரசன் என்றும், துரியோதனனை என் தலைவன் என்றும் கொள்ளாதே.

இதெல்லாம் சிறிய மிகமிகச் சிறிய விஷயங்கள். இவற்றையெல்லாம் தாண்டி உங்களையெல்லாம் விட மிகப்பெரிய சக்தி ஒன்று உங்களை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். கிரகங்களையெல்லாம் ஆட்டி வைக்கிற அந்த சக்தி, அண்ட பேரண்டத்தை அசைத்து வைக்கிற அந்த சக்தி. உங்களையும் அசைத்துக் கொண்டிருக்கிறது. பூமியைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

பூமியில் சிறு புழுக்களைப் போலுள்ள உங்களைவிட பூமி முக்கியம். நான், எனது, என் தேசம், என் மக்கள் என்கிற விஷயங்களையெல்லாம் விட்டு விட்டு எந்தப் பற்றுமற்று உன் வேலையைச் செய்து கொண்டு இரு. ஏன் அந்தப் பற்றுமற்று இரு என்று சொல்கிறேன் தெரியுமா? எந்தப் பற்று வைத்தாலும் அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. நீ எதன் மீது நாட்டம் வைத்தாலும் அது உன்னைக் காப்பாற்றப் போவதில்லை. இடையறாது இயற்கை தன்னை சரி செய்து கொண்டிருக்கின்ற வேகத்தில் நீங்கள் உயர்வதும், தாழ்வதும் நடக்கிறது. உங்களால் ஆவது இங்கு ஏதுமில்லை. காட்டாற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகிற சருகாக நீ இருக்கிறாய். உனக்கருகே இன்னொரு சருகு துரியோதனன். வேறொரு சருகு அர்ஜுனன், தருமன், பீமன் என்பதைப் புரிந்துகொள்.''

''கிருஷ்ணன் யார்'' கர்ணன் வேகமாகக் கேட்டான்.

''உங்களைப்போல் சருகாக மாறி இங்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கின்ற அண்ட பேரண்டத்தின் சக்தி. அது சக்தியாகவும் இருக்கிறது. சூரியனாகவும் இருக்கிறது. சந்திரனாகவும் இருக்கிறது. சருகாகவும் இருக்கிறது. முழு ஞானத்துடன், முக்கால உணர்வுடன் கிருஷ்ணன் இருக்கிறான்.''

''அப்படியானால், கிருஷ்ணன் சொல்வதுதானே சரியாக இருக்கும்? கிருஷ்ணன் நினைப்பது தானே நடக்கும்?''

''நிச்சயம். கிருஷ்ணன் சொல்வதுதான் சரி. கிருஷ்ணன் நடத்தி வைப்பதுதான் முடிவு.''

‘‘அப்படியானால் நானும் துரியோதனனும் பஞ்ச பாண்டவர் கையால் மரணமடையப் போகிறோமா?’’

‘‘எல்லாரும் மரணமடையப் போகிறார்கள். பஞ்ச பாண்டவர் உயிருடன் இருப்பார்கள் என்று யார் சொன்னார்கள்? அவரவர்க்கு விதி முடியும்போது வாழ்க்கை முடியும்.’’

‘‘நான் என்ன செய்வது தந்தையே. மீண்டும் தெளிவாகச் சொல்லுங்கள்.’’

‘‘செஞ்சோற்றுக் கடன். அதைத் தீர்ப்பதற்காக துரியோதனனுக்கு அருகே இரு. நீ துரியோதனனுக்கு அருகே இருந்தால்தான் போர் நடக்கும். இல்லையெனில் போரே நடக்காது. போர் நடந்தால்தான் பூபாரம் குறையும். நீயும் விலகினால் நிச்சயம் துரியோதனனும் உதிர்ந்து போவான். அவன் உரமாக நின்றால்தான் இங்கு மிகப்பெரிய யுத்தம் நடக்க வாய்ப்பிருக்கிறது. நான் இருக்கிறேன் என்று சொல். தைரியமூட்டு. போருக்குத் தயாராய் இரு.’’

‘‘எல்லாரும் அழிவதற்குத்தான் பிறப்பு என்றால் எதற்குப் பிறப்பு?’’

‘‘இது மிகப்பெரிய கேள்வி. அண்ட பேரண்டத்தின் லீலை. இதற்கு நான் பதில் சொல்ல முடியாது.’’

‘‘யார் பதில் சொல்வார்கள்?’’

‘‘ஒருவேளை கிருஷ்ணன் பதில் சொல்லக்கூடும். வாழ்வின் சூட்சுமத்தை உனக்கு அவன் சொல்லித் தரக்கூடும்.’’

‘‘தந்தையே... நல்வழிப்படுத்தினீர்கள். மிக்க நன்றி.’’

‘‘என்னுடைய மனப்பூர்வமான ஆசிர்வாதம்.’’

‘‘தந்தையே. நான் தப்பித்துக்கொள்ள வழியே இல்லையா?’’

‘‘இருக்கிறது கர்ணா’’

"என்ன?"

"உன் கவசகுண்டலங்கள் உன்னிடம் இருக்கும்வரை உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. உன்னை யாரும், எதுவும் செய்ய முடியாது. நான் உன்னைக் காப்பேன். கவசகுண்டலமாய் இருந்து காப்பேன்."

"நன்றி, தந்தையே"

மனத்திற்குள் கர்ணன் கைகூப்பினான்.

துரியோதனனை இறுக்க அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் உஷ்ணம் இருந்தது. துரியோதனன் தலைநிமிர்ந்து, முகம் திருப்பி கர்ணனைப் பார்த்தான்.

"நான் இருக்கும்வரை உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம். அர்ஜுனனை, பீமனை, தருமனைப் பதறடிப்பது என்னுடைய வேலை. உன்னை யார் துன்புறுத்தினார்களோ அவர்களைக் கலவரப்படுத்துவது என் கடமை. உனக்கு யார் உறக்கம் வராமல் செய்தார்களோ அவர்களை ஒழிப்பதே என்னுடைய குறிக்கோள். நீ யாரை சுட்டு விரல் நீட்டி தாக்கு என்று சொல்கிறாயோ, அவர்களைத் தாக்கி பொடிப் பொடியாக்குவதே என்னுடைய எண்ணம்.

"நாம் பலவீனமானவர்கள் அல்லர். என்னுடைய இதே மனோநிலையில் பீஷ்மரும், விதுரரும், கிருபரும், அஸ்வத்தாமரும் துரோணரும் இருந்து விட்டால் பஞ்ச பாண்டவர்களின் அழிவு நிச்சயம். அவர்களை உற்சாகப்படுத்து. ஓர் அரசருடைய வேலைகள் தன்னுடைய மந்திரிப் பிரதானிகளை, சேனாதிபதிகளை நல்ல நிலையில் வைத்துக் கொள்வது. நீ தனியே சுருண்டு, சுருண்டு படுத்துக் கொண்டால் அவர்களும் மௌனமாக இருப்பார்கள். வெறுத்துப் போய் முன்னும் பின்னும் அலைவார்கள். நீ உற்சாகமானால் அவர்களும் உற்சாகமாவார்கள். நீ உற்சாகமாக இரு. உன் சேனாதிபதிகளை, உறவுக்காரர்களை, மாவீரர்களை கொண்டாடு. பரிசளி. கௌரவம் செய். போற்றிப் பாராட்டிப் பேசு. போற்றுதலைப்

போல் கௌரவம் உலகத்தில் உண்டா? அதைப் போல் சந்துஷ்டிக்குரிய விஷயம் உலகத்தில் உண்டா? நீ தனக்குத் தானே புலம்பிக் கொண்டிருந்தால், மற்றவர்கள் உன்னை இழிவாக நினைப்பார்களே தவிர உனக்கு எப்படி உதவி செய்வார்கள்?''

''நீ அரசன் என்பதை முற்றிலும் மறந்துவிட்டு அடிமையைப் போல ஏன் புலம்பிக் கொண்டிருக்கிறாய்? தைரியமாக இரு துரியோதனா.''

கர்ணன் துரியோதனனுக்கு தைரியம் சொன்னான். துரியோதனன் கர்ணனை இறுகத் தழுவிக் கொண்டான்.

கர்ணன் சொன்னதுபோல தன்னுடைய உறவுக்காரர்களை, மாவீரர்களை உற்சாகப்படுத்த அரண்மனைக்குப் போனான். அவர்களைத் தேடினான்.

கர்ணன் தனியே அமர்ந்து கொண்டான். கிருஷ்ணன் அண்ட பேரண்டத்தின் அதிபதியா. அந்த சக்திதான் கிருஷ்ணனாக வந்திருக்கிறதா. அதாவது கடவுள் மனித ரூபம் எடுத்திருக்கிறாரா இடையனாக, யாதவ குலத்தலைவனாக வந்திருக்கிறாரா? என்ன அற்புதம். ஆனால் எல்லாருக்கும் உண்டான கடவுள் ஏன் அங்கு போய் நின்று கொண்டார்? அர்ஜுனனும், பீமனும், தருமரும் தினமும் கடவுளோடு பேசுகிறார்கள். எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்க வில்லையே. கிருஷ்ணனைப் பற்றிப் பல கதைகள் உலவுகின்றன. விசித்திர சம்பவங்களை கதைபோல் சொல்லுகிறார்கள். அந்த கிருஷ்ணனைப் பார்க்க வேண்டும். தொலைவிலிருந்து, அருகே யிருந்து, மிக நெருக்கமாய்ப் பார்க்க வேண்டும். நீயா, நீதானா என்று ஊடுருவிப் பார்க்க வேண்டும்.

கர்ணன் மனத்துக்குள் கிருஷ்ணனை நோக்கிக் கைகூப்பினான். எழுந்து துரியோதனனுடைய அரண்மனை நோக்கி நடந்தான்.

தருமர் ஜராசந்தனுடன் போர் அறிவித்து விட்டார். ஜராசந்தனை அரண்மனைக்குள் கிருஷ்ணனும், அர்ஜுனனும், பீமனும் உள்ளே

புகுந்து ஜராசந்தனை வலியப் போருக்கு அழைத்து அடித்துக் கொன்று விட்டார்கள். கிருஷ்ணன் வழிகாட்ட ஜராசந்தனைக் கிழித்து இரண்டாகப் போட்டு அதையும் கால்மாற்றி, தலைமாற்றிப் போட ஜராசந்தன் உடல் சேர முடியாமல் போயிற்று. ஜராசந்தன் மரணம் நிகழ்ந்து விட்டது.

மரணமே இல்லாதவன் மரணமடைந்தான் எனில் அதற்கு பீமன் காரணமன்று. கிருஷ்ணன்தான் காரணம். மிகப்பெரிய க்ஷத்திரிய குலத்தின் அழிவிற்கு சிசுபாலன் தொடக்கம். ஜராசந்தனின் தொடர்ச்சி, இனி ஒவ்வொன்றாக மடியும் என்பது நன்றாகத் தெரிந்தது.

ராஜசூய யாகம் தர்மர் நடத்தத் தொடங்கிவிட்டார். தெற்கேயும், வடக்கேயும், மேற்கேயும், கிழக்கேயும் அவருடைய சகோதரர்கள் போயிருக்கிறார்கள். எல்லா ஊர்களையும் ஜெயித்து கொண்டு மறுபடியும் திரும்பியிருக்கிறார்கள்.

லட்சம் பேர் உணவு உண்ட பின் ஊதப்படும் சங்கும் பலமுறை ஒலித்துக் கொண்டிருக்கிறது. எல்லா ஊர்களிலிருந்தும் அரசர்கள் வந்து கோட்டை வாசலில் பல நாட்கள் காத்துக் கிடக்கிறார்கள். நகரம் முழுவதும் நெரிசலாக இருக்கிறது. அரசர்கள் கூட்டமாகக் கூடியுள்ளனர். எல்லா வகைப் பண்டங்களும் அங்கு கிடைக்கின்றன. பரிசுகளாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. தனக்குக் கிடைத்த வற்றை தருமபுத்திரர் மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

மக்கள் மிகுந்த திமிரோடும், சிரிப்போடும் உலவிக் கொண்டிருக் கிறார்கள். செல்வச் செழிப்பில் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ராஜசூய யாகம் முடிந்த பிறகு விருந்துக்காக துரியோதனனுக்கு அழைப்பு வந்தது. துரியோதனன் அழைப்பை ஏற்பதா, வேண்டாமா என்று திண்டாடினான். உறவுகள் வற்புறுத்தவே பார்க்க வேண்டுமென்ற ஆசை அதிகமாக இருக்கவே கர்ணனை அழைத்துக் கொண்டு தருமபுத்திரனின் ராஜ்ஜியத்தை நோக்கிப் போனான்.

இந்திரப் பிரஸ்தத்தின் எல்லையைப் பார்த்து திகைத்துப் போனான். மந்திரிகளின் வீடே துரியோதனன் வீட்டைவிட மிகப் பெரியதாக இருந்தது. மிக நேர்த்தியாக இருந்தது. காவலர் வழி விட்டார்கள். மந்திரிகள் வரவேற்றார்கள். சேனாதிபதிகள் மரியாதை செய்தார்கள். அரண்மனை வாயிலில் அர்ஜுனன் இறங்கி கைகூப்பி வரவேற்றான். பீமன் தொலைவிலிருந்து வணக்கம் சொன்னான். தருமபுத்திரர் வேகமாக ஓடி வந்து தழுவிக் கொண்டார். கர்ணனைக் கைப்பிடித்தார். வாருங்கள் வாருங்கள் என்று இரண்டு பக்கமும் அணைத்துக் கொண்டு படியேறினார். விருந்து மண்டபத்திற்கு அழைத்துப்போய் உட்கார வைத்தார்.

துரியோதனன் இமைக்கவேயில்லை. வாய் திறந்து எதுவும் பேசவில்லை. அந்தச் சபா மண்டபத்தைப் பார்த்து அதிசயித்துக் கொண்டிருந்தான். ஒவ்வோர் அங்குலமும் விசித்திரமான பொம்மை களாலும், ரத்தினக் கற்களாலும், தங்க இழைகளாலும் அலங்கரிக்கப் பட்டதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான்.

இப்படியெல்லாம் மாளிகை கட்ட முடியுமா என்று திகைத்துப் போயிருந்தான். அருகே இருக்கின்ற கர்ணனையும் மறந்துவிட்டு தான் பார்த்தவற்றிலும், கேட்டவற்றிலும் மனத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்தான்.

இதுவல்லவோ அரச போகம், இதுவல்லவோ வாழ்க்கை என்று பொருமிக் கொண்டிருந்தான்.

விருந்து முடிந்து, ஓய்வெடுக்க தனி அறை கொடுத்தபோது துரியோதனனால் ஓய்வெடுக்க முடியவில்லை.

கர்ணனை எழுப்பினான். கை கோத்துக் கொண்டான். மெல்ல அரண்மனையை சுற்றிப் பார்க்க முயன்றான். காவலர்கள் இருவர் துணைக்கு வர இது என்ன இடம், இது என்ன இடம் என்று கேட்டுக் கொண்டு வந்தான்.

பெரிய முற்றம். அதன் முழுவதும் தண்ணீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது.

''என்ன ஜலம்?'' என்று கேட்க ''அது நீரில்லை அரசே. நீர் போல் தோற்றமளிக்கக்கூடிய பளிங்குக்கல்'' என்று ஒரு வீரன் இறங்கிக் காட்ட துரியோதனனும் இறங்கி நின்றான். கால்களில் தண்ணீர் தழுவுவதுபோல ஓர் உணர்வு இருந்தது. ஆனால் தண்ணீர் அல்ல. பளிங்குக் கல்லில் வெயில் பட்டு தண்ணீர் அலைபோல் ஓடியது. அப்படி ஒளி அலை போல் சிதறுவதற்கு மேலே ஏதோ கருவிகள் வைக்கப்பட்டிருந்தன.

அடுத்த முற்றத்திற்குப் போனார்கள். அங்கும் தண்ணீர் இருந்தது.

''அடேய்... இந்த இடத்தில் அலை இல்லை. தண்ணீர்போல பளிங்குக் கற்கள் இருக்கிறதே'' என்று கால்வைத்தான். அது நான்கு முழு ஆழமுள்ள தண்ணீர்த் தொட்டி. இடுப்புவரை நனைந்து குப்புற விழுந்து தலையெல்லாம் ஈரமாகி திகைத்துப் போய் துரியோதனன் எழுந்து நின்றான்.

கர்ணன் அவனைக் கைபிடித்து மேலே இழுத்தான். இறுக்கி அணைத்துக் கொண்டான்.

தூரத்திலிருந்து பெண்கள் சிரிக்கும் சிரிப்பொலி கேட்டது. அதில் ஒரு சிரிப்பு மிக வேகமாக இருந்தது. மிக சிருங்காரமாக இருந்தது.

கர்ணனும், துரியோதனனும் திரும்பிப் பார்த்தார்கள். திரௌபதி அங்கு குனிந்து, நிமிர்ந்து தூணைப் பிடித்துக்கொண்டு இடையறாது சிரித்துக் கொண்டிருந்தாள்.

துரியோதனன் திகைத்துப் போயிருந்தான். கர்ணனுடைய கண்களில் கனல் பறந்தது.

என்ன பெண்மணி இவள். ஏன் இப்படி கேவலமாக நடந்து கொள்கிறாள்? ஒருவர் கீழே விழுந்து அடிபட்டால் சிரிக்கின்றவள்

நல்ல ஜாதியா. உத்தமியா, பண்பாடு மிக்கவளா என்று கோபம் அவனுள் கிளர்ந்தது. ஆனால் அந்த கோபத்தைச் சுட்டிக்காட்டியும் திரௌபதி சிரித்துக் கொண்டிருந்தாள்.

கர்ணன் மனம் இறுகியது. கோபம் எரிமலையாய்ப் பொங்கிற்று.

# 9

**தி**ருதராஷ்டிரனால் மகனின் புலம்பலைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. அவன் தர்ம நியாயம் அறிந்தவனாக இருப்பினும், மகன் வேதனைப்படுகிறான் என அறிந்தபோது அவனால் பாசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. மகனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு தர்ம சிந்தனையைவிட மேலோங்கியிருந்தது. பல்வேறு விதமாக புத்திகள் சொன்னபோதும். மகன் பாண்டவர்களை எதிர்ப்பதிலேயே முழு முனைப்போடு இருக்கிறான். போருக்கு உண்டான வெறியோடு அலைகிறான். அவர்களை அழிப்பதற்கே வாழ்க்கையென்று நினைக்கிறான், பொறாமைப்படுகிறான் என்று தெரிந்துபோக துரியோதனனின் வேகத்தைத் தணிக்க விரும்பினான்.

''போய் வேறேதாவது செய்ய வேண்டுமென்றால் செய்'' என்று அலுப்போடு சொல்ல, சகுனி இடைமறித்து ''தருமருக்கு சூது ஆடுவதில் சபலம் உண்டு. என்னைப் பலமுறை சூதாட அழைத்திருக்கிறான். நானும் போயிருக்கிறேன். எனவே நான் அழைத்தால் அவன் வரவேண்டிய கட்டாயம் உண்டு. புதிதாய் ஒரு மண்டபம் கட்டி, தருமரைச் சூதாடலாம் என்று அழைத்து வா. இந்த மண்டபத்திற்குள் வந்தவுடன் நான் அவனை உரக்கக் கூவி சூதாடுவதற்கு அழைக்கிறேன். என்னால் சூதில் ஜெயிக்க முடியும். சூதில் ஜெயித்து தருமபுத்திரரை அவமானப்படுத்துவோம்'' என்று சகுனி சொல்ல துரியோதனன் மிகுந்த சந்தோஷமானான். தந்தையை இதற்கு அனுமதி கேட்டான். விதுரர் வேகமாக இதை மறுத்தார்.

''இதனால் குலநாசம் ஏற்படும். எதற்கு வீண் பழி?'' என்று சமாதானம் சொல்ல முற்பட்டார்.

ஆனால் திருராஷ்டிரன் ''இதைத் தடுத்து நிறுத்தினால் துரியோதனன் இன்னும் மோசமான செயல்களில் இறங்குவான். அரக்கு மாளிகையைத் தந்திரமாகச் செய்து பாண்டவர்களை அழிக்க நினைத்ததுபோல இன்னும் பல்வேறு உபாயங்களைத் தேடுவான். சூது என்பது மோசமான விஷயமன்று.

போரைப்போல கேவலமானதுமன்று. ரத்தமும் வலியும் நிறைந்ததில்லை. அளவு மீறினால் தான் சமாதானம் செய்து வைக்கலாம் என்ற நம்பிக்கையோடு விதுரரிடம் ''சூதாட தருமரை அழைத்து வா'' என்று பணித்தான். விதுரனின் யோசனைகளை நிராகரித்தான்.

''நாரதர் ஒருமுறை என்னால் க்ஷத்திரிய குலம் அழியும் என்று சொல்லியிருக்கிறார். இது உண்மைதானா?'' என்று கவலையோடு தருமபுத்திரர் வியாசரைக் கேட்க ''சூலம் ஏந்திய சிவன் தெற்கு நோக்கிப் போவது போன்று உனக்கு எப்பொழுது கனவு வருகிறதோ, அந்தக் கனவிலிருந்து பதிமூன்றாம் ஆண்டு க்ஷத்திரியர்கள் உன் செய்கையால் அழிந்து போவார்கள். உன் தலைமையின் கீழ் நடக்கும் போரால் மடிந்து போவார்கள்'' என்று வியாசர் பதில் சொன்னார்.

சாந்தமே உருவான தருமபுத்திரர் வருத்தமடைந்தார்.

'சண்டைக்கு என்று எவர் அழைத்தாலும், எதன் பொருட்டு அழைத்தாலும் நான் போகமாட்டேன். எந்த வம்பு வந்தாலும் நான் அதிலிருந்து விலகியிருப்பேன். என் மனைவியை இழுத்துப் பேசினாலும், ஏன் கைபிடித்து இழுத்தாலும் நான் பதிலுக்குக் கோபப்படப் போவதில்லை. நான் கோபப்பட்டால்தானே கடும் விளைவுகள் ஏற்படும்? நான் கோபப்படுவதை நிறுத்தி விட்டால்?' என்று தர்மபுத்திரர் யோசித்தார். அவ்விதமே நடக்கவும் சங்கல்பம் செய்து கொண்டார்.

விதி தன் வேலையை எவ்வாறேனும் நடத்திக் கொள்ளும். எதைச் செய்தால் தவறாகி விடும் என்று தர்மபுத்திரர் பயந்தாரோ, அதைச் செய்யாமல் இருப்பதே தவறாகி விட்டது. அவருடைய மென்மையே, அவருடைய சாத்வீகமே பாரதப் போரை வரவழைத்து விட்டது.

அஸ்தினாபுரத்தில் மண்டபம் கட்டப்பட்டது. தருமபுத்திரர் அழைக்கப்பட்டார். போக வேண்டாமென்று தருமபுத்திரரிடம் பல பேர் சொன்னார்கள். ஆனால், தருமபுத்திரரோ, ''அழைத்தால் மறுப்பது கௌவரமாகாது. யார் என்ன செய்தாலும் நான் கோபப்பட மாட்டேன் என்று சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறேன். எனவே மற்றவர் கோபத்திற்குத் தூண்டுதலாய் நான் நிற்கமாட்டேன். நானாகச் சூதாடவில்லை. சூதாடக் கூப்பிடுகிறபொழுது என்னால், போகாமல் இருக்க முடியாது'' என்று கூறி துரியோதனன் கட்டிய புதிய மண்டபத்திற்குள் நுழைந்தார்.

சகுனி அவரைச் சூதாட உரக்க அழைத்தான்.

கர்ணனுக்கு இந்த விஷயங்கள் பிடிக்கவில்லை. ஆனால் துரியோதனனுக்குப் பிடித்தது. போருக்குத் தன்னுடைய தாயும், தந்தையும் சம்மதிக்க மாட்டார்கள். ஆச்சாரியாரும், தாத்தாவும் ஒத்துழைக்க மாட்டார்கள். எனவே பாண்டவரை அவமானப்படுத்து வது என்பது போரால் முடியாதபோது, சூதால் முடியும். சூதாடி தருமபுத்திரரை ஜெயிக்க முடியும். போர் வந்தால் ஜெயிப்பதற்குக் கர்ணன் இருக்கிறான். சூது என்றால் ஜெயிப்பதற்குச் சகுனி இருக்கிறான். கர்ணனுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்த்தோம். அது பலிதமாகவில்லை. இப்பொழுது சகுனிக்கு ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்று சகுனியின் பக்கம் அதிகம் சாய்ந்து, சகுனியைக் கட்டித் தழுவிக் கொண்டாடி சகுனியினுடைய அசைவுகளுக் கெல்லாம் ஆரவாரித்து கர்ணனை விட்டுச் சற்று விலகியிருந்தான்.

கர்ணனுக்கு இது பிடிக்கவில்லை.

ஒரு க்ஷத்திரியன் இப்படி இருக்கக்கூடாது. ஏதாவது செய்து எதிரியை அழிக்க வேண்டுமென்ற ஆவேசம் குரூரமானது. புஜபலத்தைப் பெருக்கிக் கொண்டு தன்னுடைய வீரத்தால்தான் எதிரியை ஜெயிக்க வேண்டுமே தவிர, அப்படி ஜெயிக்க முடியாவிட்டால் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டுமே தவிர, சகல வழிகளையும் பயன்படுத்தி ஜெயிப்பேன் என்பது, மிகக் கேவலமான விஷயம். ஆனால் இதைச் செய்பவன் துரியோதனன். எனவே, அதில் கேவலம் ஏதுமில்லை. நண்பன் எது செய்தாலும் சரி. இது தர்மமா, அதர்மமா என்று எவர் கேட்டாலும் எனக்கு அக்கறையில்லை. நான் தர்மத்தின் பக்கம் நிற்கிறேன் என்று சொல்லவில்லை. நான் துரியோதனன் பக்கம் நிற்கிறேன். துரியோதனன் எந்தப் பக்கம் நின்றாலும் நான் அந்தப் பக்கம் நிற்பேன். அதுதான் எனக்கு தர்மம். ஆனால் தர்மத்தின் பக்கம் நிற்பதாகச் சொல்கின்ற, எல்லாம் தெரிந்த மாதிரிக் காட்டிக் கொள்கின்ற இந்த மடையன் வலிமையுள்ள நான்கு சகோதரர்களின் தமையன் தர்மபுத்திரன் எவ்வளவு முட்டாள்தனமாக, சூதாடுவது சரியென்று உட்காருகின்றான்? இவன் தர்மம் அறிந்தவனா? இவன் தர்மத்தின் பக்கம் நிற்பவனா? காலம் என்ன விதமான கோலங்களையெல்லாம் செய்கிறது.

சூதாடுதல் தவறு. ஆனால் அரசர்கள் சூதாடலாம். நான் சூதாட மாட்டேன். நீ அழைத்தால் சூதாடுகிறேன் என்றெல்லாம் எத்தனை விதமான சாக்குப் போக்குகள். பாம்பின் வாயை நோக்கி தத்தித் தத்தி தவளை போவது போல் வெகு எளிதாக அந்த மாலையில் சம்பவங்கள் நடந்தன.

முதலில் தன் கழுத்து மாலையைப் பந்தயமாக்கிவிட்டு தருமபுத்திரர் சூதாடத் தொடங்கினார். தோற்றுப்போனார்.

குதிரைகளையும், யானைகளையும், வைர, வைடூரியங்களை யும், தங்கப் பாளங்களையும், பந்தயம் வைத்தார். தோற்றுப்போனார்.

தருமபுத்திரர் வேலையாட்களையும், தேர்ப் பாகர்களையும், படைவீரர்களையும், மாளிகைகளையும், தேசத்தையும், பிறகு நகுல,

சகோதேவர்களையும், பிறகு அர்ச்சுனனையும், பிறகு பீமனையும், பிறகு தன்னையும், வைத்துச் சூதாடி இழந்தார்.

சபை கண்கொட்டாமல் பேய்த்தனமாய் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது. அடிக்கடி துரியோதனனுடைய ஆரவாரக் குரல், சந்தோஷக் கர்ஜனை ஒலித்துக் கொண்டிருந்தது.

கர்ணன் துரியோதனனின் சந்தோஷக் கூச்சலை ரசித்துக் கொண்டிருந்தான்.

''எப்படி?'' என்று சகுனி கர்ணனைக் கண்ணால் கேட்க, ''துரியோதனனைப் பரவசத்தில் ஆழ்த்தியிருக்கிறீர்கள். இதற்காக என் நன்றி'' என்று சகுனியைத் தழுவிக் கொண்டு கர்ணன் பதில் சொன்னான். ''இனிச் சூதாட ஒன்றுமில்லை'' என்று தருமபுத்திரர் சொன்னபோது. ''உன்னுடைய மனைவி திரௌபதி இருக்கிறாளே. அவளை வைத்துச் சூதாடு. திரௌபதியின் அதிர்ஷ்டத்தால் இழந்தவை அனைத்தையும் மீண்டும் பெற்று விடலாம்'' என்று சகுனி உற்சாக மூட்டினான்.

தருமர் திரௌபதியையும் சூதாட்டத்தில் வைத்து இழந்தார்.

துரியோதனன் ஆரவாரித்தான். சகுனி கொக்கரித்தான். துச்சாதனனும் மற்ற சகோதரர்களும் எழுந்து ஆடிப்பாடினார்கள்.

அந்த மண்டபம் மிகப்பெரிய சந்தோஷக்கலவரத்தைச் சந்தித்தது.

திருதராஷ்டிரனுக்கு நடப்பவை அனைத்தும் சொல்லப்பட்டன. அவன் என்ன செய்வதென்று தெரியாமல் உட்கார்ந்திருந்தான். பீஷ்மரும், விதுரரும், துரோணரும், அஸ்வத்தாமரும் தங்களுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதுபோல் மௌனமாக சாட்சிகளாக வேடிக்கை பார்தார்கள்.

பீமன் தர்மபுத்திரரை நோக்கி உரத்த குரலில் குறை சொல்லத் தொடங்கினான்.

கர்ணனுக்கு அது சிரிப்பாக இருந்தது.

இது தவறு... இது தவறு... என்று பொறுக்காமல் விதுரர் கத்தினார்.

துரியோதனன் அவரை அலட்சியம் செய்தான்.

பிரதிகாமி என்கிற தேர்ப்பாகனைப் பார்த்து திரௌபதியை சபைக்கு அழைத்து வரச் சொன்னான்.

திரௌபதி அந்தத் தேர்ப்பாகனைத் திருப்பி அனுப்பி விட்டாள். மறுபடியும் அந்தத் தேர்ப்பாகனைத் துரியோதனன் வற்புறுத்த, அந்தத் தேர்ப்பாகன் திரௌபதியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று உரத்துப்பேச, தேர்ப்பாகனைப் புறந்தள்ளிவிட்டு தன் தம்பி துச்சாதனனிடம், திரௌபதியை இங்கு இழுத்து வருமாறு துரியோதனன் சொன்னான்.

பிரதிகாமி என்ற தேர்ப்பாகன் அவனுடைய எல்லையை மீறவில்லை. ஆனால் துச்சாதனன் எல்லை மீறினான். திரௌபதியைத் தன் புஜபலத்தால் கவர்ந்து தலைமுடியைப் பற்றித் 'தரதர'வென்று தெரு நடுவே இழுத்து வந்து சபையில் கொண்டு வந்து தள்ளினான்.

திரௌபதி தரையில் அறுத்த கொடிபோல துவண்டு கிடந்தாள்.

சபை சலசலத்தது. தலையில் அடித்துக் கொண்டது. நெட்டுயிர்த்தது. 'ஐயோ..' என்று அலறியது.

கர்ணன் அங்குள்ள உயர்ந்த மனிதர்கள் அத்தனை பேரையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தணர்களும், க்ஷத்திரியர்களும் இருந்த அந்தச் சபையில் ஒருவர்கூட எழுந்து நின்று இதைத் தடுப்பேன் என்று வீராவேசம் செய்யவில்லை. விதுரர் மட்டுமே புலம்பிக் கொண்டிருந்தார். இங்கு சூதையும், சூதில் தோற்றத்தையும் ஒப்புக் கொண்டு விட்டார்கள். அவருக்கும் எழுந்து துரியோதனனை உதைப்பேன் என்று சொல்ல மனம் வரவில்லை. இந்த அநியாயத்தைத் தடுக்க முடியவில்லை.

என்னால் தடுக்க முடியும். போதும். வேண்டாம் விடு என்று சொன்னால் நிச்சயம் இந்தத் துரியோதனன் விட்டு விடுவான். இத்தோடு நிறுத்திக் கொள் என்று சகுனியைப் பார்த்து முறைத்தால் சகுனி வேறு பக்கம் போய் விடுவான். துச்சாதனனை இழுத்து மாளிகையை விட்டு வெளியே தள்ள முடியும்.

மற்ற கௌரவர்களை ஒரு முறைப்பில் அடக்கி விட முடியும். நமக்குச் சண்டை பாண்டவர்களோடுதான். இந்தப் பெண் என்ன பாவம் செய்தாள்? இவளை எதற்கு இப்படி அலங்கோலப்படுத்து கிறாய் என்று சொல்ல முடியும். ஏன் இவர்களெல்லாம் மௌனமாக இருக்கிறார்கள்? இவர்கள் ஏன் இதை எதிர்க்க மறுக்கிறார்கள்? உன்னை நல்வழிப்படுத்த இங்கு யாருமே இல்லையே என்று இந்தப் பிராமணர்களை, அலட்டிக் கொள்ளும் மகாசேனாதிபதிகளைக் கேலி செய்ய முடியும்.

ஆனால், எதற்குச் செய்ய வேண்டும்? தேரோட்டியைத் திருமணம் செய்துகொள்ள எனக்குப் பிரியமில்லை என்று திரௌபதி சொன்னாளே. இன்று ஒரு தேரோட்டி தானே அவளைச் 'சபைக்கு வா' என்று சொல்லியிருக்கிறான்? அந்தத் தேரோட்டியிடம்தானே அவள்... என் புருஷன் தன்னைத் தோற்ற பிறகு என்னைத் தோற்றாரா? என்னைத் தோற்ற பிறகு தன்னைத் தோற்றாரா என்று கேட்க முடிந்தது? என்னை அழைக்க தேரோட்டியா உள்ளே வருவது? வெளியே போ என்று கர்ஜிக்கவில்லையே. அவனுக்குப் பதில் சொல்லி அனுப்பினாயே எந்தத் தேரோட்டியைப் புறக்கணித்தாயோ அதே தேரோட்டி குலத்திலிருந்து ஒருவன் உன்னை சபைக்கு இழுத்து வரமாட்டேனென்று சொல்லியிருக்கிறான். உங்களைவிட நாங்கள் இந்தத் தேரோட்டிகள் மிகவும் உன்னதமானவர்கள்.

உள்ளுக்குள் பேசிக் கொண்டான்.

என்ன சிரிப்பு. என்ன அகங்காரம். ஒருவர் கீழே விழுவதைப் பார்த்து கலகலவென்று வாய்விட்டுச் சிரித்த பெண்மணி அல்லவா? உன்னைப் பார்த்து இங்கு நூறு பேர் சிரிக்கிறார்கள். என்ன செய்யப் போகிறாய்?

எனக்கு ஐந்து கணவர்கள். ஐந்து பேரும் வீரர்கள். ஐந்து பேரும் என் மேல் உயிரை வைத்திருக்கிறார்கள். ஐந்து பேரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று எத்தனை பெண்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறாய். எத்தனை பேர் மனம் எரிந்து அடியே... உனக்கா இந்த வாழ்வு என்று சொல்லியிருப்பார்கள்?

ஒரே புருஷனுக்குப் பல நூறு பேர் வாழ்க்கைப்பட்டு புருஷன் தன்னுடைய கட்டிலுக்கு என்று வருவான் என்று ஒவ்வொருத்தியும் எப்படி ஏங்கியிருப்பார்கள்?

அப்படி ஏக்கமுள்ளவர்களெல்லாரும் உன்னைப் பார்த்து எப்படி மனம் புழுங்கியிருப்பார்கள்? எப்போது அதீதம் நடக்கிறதோ அப்பொழுது அதீதம் நடந்தவருக்கு அவலமும் நடக்கிறது. இது உன்னுடைய அவலமான காலகட்டம். அனுபவி' என்றெல்லாம் எண்ணினான். ஆனால் அவளிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அப்பொழுது சபையில் துரியோதனனுடைய கடைசித் தம்பியான விகர்ணன் எழுந்தான்.

''மிகப்பெரிய தவறு ஒன்று இங்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சபை எப்படி இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. திரௌபதி ஒரு கேள்வி கேட்டிருந்தாள். அதற்கு இங்குள்ள யாருமே பதில் சொல்லவில்லையே.

''அவள் 'தருமபுத்திரர் தன்னைத் தோற்ற பிறகு தன் மனைவியைத் தோற்றார். இது நியாயம்தானா? மனைவியை யாராவது சூதில் பணயம் வைப்பதுண்டா? நல்ல குலத்தில் பிறந்தவர்கள் இதைச் செய்வார்களா?' என்று கேட்கிறாள். இந்தக் கேள்விக்கு இங்கு யாரும் பதில் சொல்லவில்லை. ஏதோ ஒப்புக்கு கணவனில் பாதி மனைவி என்றால் அவன் தன்னைச் சூதில் வைத்த பிறகும், தன்னை இழந்த பிறகும் தன் மனைவியை வைத்துச் சூதாடலாம் என்று பீஷ்மர் சொல்கிறார். அபத்தமாக இருக்கிறது; அநியாயமாக இருக்கிறது. எந்தத்

தர்மத்திற்கும் கட்டுப்படாததாக இருக்கிறது. இது ஒரு குலம் முழுவதையும் நாசமாக்கும். இது மிகப்பெரிய தவறு. அவள் ஐவருக்குரியவள். அப்பொழுது ஐந்து பேரல்லாவா சூதாடித் தோற்றிருக்க வேண்டும்? தருமபுத்திரருக்கு மட்டும் அவள் மனைவியா? அவருக்கு மட்டும் அவள் பாதியா? அப்படியில்லையே. மற்ற நான்கு பேரும் சம்மதித்தாலன்றி எப்படி அவளை வைத்துச் சூதாட முடியும்? துரியோதனன் செய்வது மிகப்பெரிய தவறு'' என்று கர்ஜித்தான்.

கர்ணனுக்கு அசாத்தியக் கோபம் வந்தது. துரியோதனனை எதிர்க்க அவன் தம்பியே ஒருவன் கிளம்பி விட்டான் என்று கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

''விகர்ணா... முட்டாள் தனமாகப் பேசாதே. அரளிக் கட்டை நெருப்பை உண்டாக்கி, அந்த நெருப்பிலே காய்ந்து போவதைப் போல உன் தமையனுக்கு எதிராக நெருப்பு போன்ற வார்த்தைகளைப் பேசி அதில் அழிந்து போகாதே. இந்தச் சபை ஏன் மௌனமாக இருக்கிறது என்று உனக்குப் புரியவில்லையா? இங்கு நடந்தது நியாயம் என்று தெரிந்தனால்தான் சபை மௌனமாக இருக்கிறது. சூதாட அழைக்க எவருக்கும் உரிமை உண்டு. தருமபுத்திரர் பலமுறை, பல பேரைச் சூதாட அழைத்திருக்கிறார். சூதாட அழைப்பது என்பது இன்று நிகழ்ந்த விஷயமில்லை. இங்கு வந்ததும் சகுனி சூதாட அழைத்தார். தருமபுத்திரர் சுயபுத்தியுள்ளவர். ஆனாலும் அவர் சூதாடச் சம்மதித்தார். இந்தச் சூதாட்டம் ஏமாற்றி நடைபெறவில்லை. இந்தச் சூதாட்டம் எந்தக் கபட நாடகமும் நடைபெறவில்லை. எந்த வஞ்சனையும் இல்லை. நேரடியாய், தெளிவாய் சகுனி ஜெயித்திருக் கிறார். எனவேதான் இந்தச் சபை மௌனமாக இருக்கிறது.''

கர்ணன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது துரியோதனன் எழுந்தான்.

''நல்லது. இதில் ஒரு கேள்வி மிகச் சிறப்பாக இருக்கிறது. ஐந்து பேருக்கு மனைவி, ஆக ஐந்து பேரும் சூதில் தோற்றால்தான் அவர்

வேறொருவருக்கு மனைவியாக முடியும். ஆனால் சூது வைத்தவரோ தருமபுத்திரர். ஆக இந்த மற்ற நால்வரும், தருமபுத்திரர் எங்களுக்குத் தலைவர் அல்லர். தருமபுத்திரர் எங்களுக்கு அதிகாரி அல்லர். தருமபுத்திரர் எங்கள் தமையனார் அல்லர். அவர் சொல்படி நாங்கள் கேட்க வேண்டியதில்லை. எங்கள் சொத்து எங்கள் வசம். அவர் சொத்து அவர் வசம் என்று சொல்வீர்கள் என்றால் நான் இப்பொழுதே திரௌபதியை விட்டு விடுகிறேன். மிக மரியாதையாக அவளை வீட்டிற்கு அனுப்பி விடுகிறேன்'' என்று சொன்னான்.

அர்ஜுனனும், பீமனும், நகுல, சகாதேவரும் எழுந்து நின்று ''தருமபுத்திரரே எங்கள் தலைவர். அவரே எங்களுக்கெல்லாம் அதிகாரி. எங்கள் சொத்தெல்லாம் அவருடைய சொத்து'' என்று சொல்லி அமர்ந்தார்கள்.

துரியோதனன் வாய்விட்டுச் சிரித்தான். கர்ணனுக்கும் சிரிப்பு வந்தது.

''ஆஹா... இந்த ஐவருமே ஒப்புக்கொண்டு விட்டார்கள். எங்கள் சார்பாகத்தான் தருமபுத்திரர் சூதாடினார் என்று சொல்லி விட்டார்கள். திரௌபதி அடிமை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டது. அடிமைகளுக்கு நெஞ்சுத் துணியில்லை. எனவே அடிமைகள் மேலே போர்த்திக் கொண்டிருக்கிற துணிகளைக் கீழே வீசி எறியலாம்'' என்று கர்ணன் உரக்கச் சொன்னான்.

பஞ்ச பாண்டவர்கள் தங்கள் மேலாடைகளை உருவிக் கீழே எறிந்தார்கள்.

திரௌபதியை நோக்கி கர்ணன் வாய்விட்டுச் சிரித்தான். கர்ணன் திரௌபதியை அடிமை என்று சொல்லவில்லை. மேலாடையை அவிழ்த்துப்போடு என்று சொல்லவில்லை. வெறுமே சிரித்தான்.

துச்சாதனனும் தொடை தட்டி ஆர்ப்பரிக்க ''துச்சாதனா. திரௌபதி பயப்படுகிறாள். அவளுடைய துணியையும் எடுத்துப் போடு'' என்று கர்ணன் சொல்ல, துச்சாதனன் திரௌபதிக்கு அருகே நெருங்கினான்.

அவள் மேலாடையை உருவினான். திரௌபதி கதறினாள். பாண்டவர்கள் தலைகுனிந்து நின்றார்கள்.

திரௌபதி கைகூப்பி, தன்னுடைய வலிமையான கணவர்களை யெல்லாம் புறக்கணித்துவிட்டு, தெய்வமே... என்று கிருஷ்ணனை நோக்கிக் கதறினாள்.

அவள் புடைவை வளர்ந்தது. துச்சாதனன் கைசோர்ந்து கீழே விழுந்தான்.

மாயமாய் நடந்த இந்த விஷயத்தைப் பார்த்து எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

கர்ணன் துரியோதனனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

துரியோனன் செய்வதறியாது கிருதராஷ்டிரனைப் பார்த்தான். அப்போது திருதிராஷ்டிரன்.

''போதும் இந்த விளையாட்டு. இது ஓர் உச்சகட்டத்திற்கு வந்துவிட்டது. திரௌபதியை உங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. அவள் மானபங்கப் படுத்த முடியாத தெய்வப் பெண்ணாக விளங்குகிறாள். இத்தோடு இந்த ஆட்டத்தை நிறுத்திக் கொள்ளுங்கள்'' என்று அவனிடம் சொல்லிவிட்டுத் திரௌபதியிடம்.

''திரௌபதி. உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்று திருதராஷ்டிரன் கேட்க, ''தருமபுத்திரரை விடுவிக்க வேண்டும். மற்ற நால்வரையும் விடுதலை செய்ய வேண்டும் இது போதும்'' என்று திரௌபதி சொன்னாள்.

தன்னுடைய கணவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாள்.

துரியோதனன் அவர்கள் தோற்ற எல்லாச் சொத்துக்களையும் அவர்களிடமே கொடுத்தான். அவர்கள் தங்கள் தேசம் நோக்கித் தலைகுனிந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

துரியோதனன் ஆத்திரத்தில் புலம்பினான்.

“என் தகப்பன் கெடுத்து விட்டானே. எனக்கு மறுபடியும் நெஞ்சு வலிக்கிறதே. என்னால் உறங்க முடியாதே. நான் சூதில் ஜெயித்தவர் களை என் தகப்பன் விட்டுவிட்டானே எனக்கு மரணம் போன்ற வேதனை ஏற்படுகிறதே” என்று புலம்ப, இந்திரப் பிரஸ்தம் நோக்கி வெகுதூரம் சென்று விட்ட பாண்டவர்களை மறுபடியும் திருப்பி வரவழைக்க ஒரு தேரோட்டி அனுப்பப்பட்டான். அந்தத் தேரோட்டியின் அழைப்பின் பேரில் பஞ்ச பாண்டவர்கள் மறுபடியும் அஸ்தினாபுரத்துக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் வந்ததும் சகுனி சொன்னான்: “ஒரேயொரு பந்தயம். ஒரேயொரு முறை நடக்கின்ற பந்தயம். இந்தப் பந்தயத்தில் நாங்கள் தோற்றால், பன்னிரண்டு வருடம் வனவாசம் மேற்கொள்வோம். பதிமூன்றாம் வருடம் சுற்றத்தார் எவராலும் அறியப்படாமல், மறைந்திருந்து வாழ்வோம். நீங்கள் தோற்றால் நீங்கள் அவ்விதமே பன்னிரண்டு வருடம் தோலாடை உடுத்தி வனவாசம் மேற்கொள்ள வேண்டும். பதிமூன்றாம் வருடம் நாங்கள் அறியா வண்ணம் எங்கேயாவது மறைந்திருந்து வாழ வேண்டும். அப்படி கண்டுபிடித்து விட்டால் நீங்கள் மறுபடியும் பன்னிரண்டு வருடம் வனவாசம் மேற்கொள்ள வேண்டும். சரியா?” என்று வினவ, தருமபுத்திரர் ‘சரி’ என்று சொன்னார்.

எவர் எதற்கு அழைத்தாலும் மறுப்பதில்லை என்று சங்கல்பத்தின்பால் தருமபுத்திரர் சூதாட அமர்ந்தார்.

பாய்ச்சிகை உருண்டது.

தருமர் தோற்றார்.

துரியோதனன் வாய்விட்டுச் சிரித்தான். கௌரவர்கள் குதித்தார்கள். சகுனியின் சிரிப்பு தனியாகக் கேட்டது.

**கர்ணன் சகலரையும் வேடிக்கை பார்த்து நின்றிருந்தான்.**

க்ஷத்திரியர்களுடைய குலநாசம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று தெரிந்து புன்னகை செய்தான். அந்தப் புன்னகை துரியோதனனின் வெற்றிக்காக கர்ணன் முகத்தில் தோன்றிய புன்னகையாய் சகலருக்கும் தோன்றியது.

# 10

திடீரென்று எல்லாம் முடிந்ததுபோல் தோன்றியது. ஒரு வெறுமை ஏற்பட்டது. பாண்டவர்கள் வனவாசம் போனதும், அஸ்தினாபுரத்தில் ஒரு பேரமைதி ஏற்பட்டது. மக்கள் ஒருவருக் கொருவர் பேச மறுத்தார்கள். எந்தவிவாதத்திலும் ஈடுபடாமல் கலகலப்பை ஒதுக்கி வைத்துவிட்டு மௌனமாக இருந்தார்கள். எந்தப்பக்கம் நியாயம் இருக்கிறதென்பதை மக்கள் புரிந்து கொண்டாலும், எந்தப்பக்கம் சேருவது என்பது பற்றி தெளிவாக இருந்தாலும். அதை வெளியே சொல்லப் பயந்தார்கள். எந்த அபிப்ராயமும் இல்லாதவர் போல மௌனமாக வாழ்ந்தார்கள்.

அரண்மனையிலுள்ள வேலைக்காரர்களும், படை வீரர்களும் துரியோதனன் வீட்டுப் பெண்டுகளும் அதிகம் பேசாமல் மௌனமாக இருந்தார்கள். பேசினால் பாண்டவர்களைப் பற்றியும், கௌரவர் களைப் பற்றியும் விவாதம் நடத்த வேண்டுமென்பதால் நலன் விசாரிப்பைக் கூடக் கேட்காமல் இருந்தார்கள். விளையாட்டுகளில் ஈடுபடாமல் தனித்து உட்கார்ந்திருந்தார்கள்.

துரியோதனன் இந்த நிலையை மாற்ற விரும்பினான். மக்களையும், அரண்மனை சேவகர்களையும் தன்வீட்டுப் பெண்டுகளையும் உற்சாகப்படுத்த நினைத்தான். அவர்களோடு வேறெங்கேனும் குடிபெயர்ந்து சிறிதுகாலம் வாழ வேண்டுமென ஆசைப்பட்டான். அப்போது அவர்களுக்குள் உற்சாகம் வரும்; புதிய இடங்களைப் பார்க்கும்பொழுது மக்கள் சந்தோஷமடைவார்கள் என எண்ணினான்.

கானகத்தில் வேதங்களை ஓதிக்கொண்டும், ஒருவருக்கொருவர் பேசிச் சிரித்துக் கொண்டும், கேலி செய்து கொண்டும் உற்சாகமாக வாழ்ந்த பாண்டவர்கள், வழியில் சந்தித்த அந்தணர்களை வணங்கி, அவர்களுடன் உரையாடி, தாங்கள் நலமாக இருப்பதாக அஸ்தினாபுரத்திற்குச் செய்தி அனுப்பினார்கள்.

பாண்டவர்கள் உற்சாகமாக இருப்பதைக்கேட்டு திருதராஷ்டிரன் மனம் மயங்கினான்.

பீமன் ஆஞ்சனேயருடைய அருளைப் பெற்றிருக்கிறான். குபேரனுடைய நட்பைப் பெற்றிருக்கிறான். இந்திரலோகம் சென்று அர்ஜுனன் புதிய அஸ்திரங்களைப் பெற்று வந்திருக்கிறான் என்றெல்லாம் பிராமணர்கள் சொல்ல, திருதராஷ்டிரன், அதைக் கேட்டுத் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

'அழிந்து விடுவார்கள் என்று நினைத்துத்தானே வனவாசம் செய்யத் துரியோதனன் அவர்களை அனுப்பினான்? ஆனால், வனத்தில் போயும் அவர்கள் வலிவு குன்றவேயில்லையே? மாறாக, இன்னும் அதிக வலிமையல்லவா பெற்றிருக்கிறார்கள்? இத்தனை வலிவு பெற்றவர்களோடு என் பிள்ளை பகைமை பாராட்டியிருக் கிறான். வெகு நிச்சயமாக துரியோதனனும் அவன் சகோதரர்களும் மரணமடையப் போவது நிச்சயம். அந்த வெறியிலிருந்து இவர்களை மாற்றவே முடியாதா? இந்த விஷயத்தைத் திசை திருப்பவே முடியாதா?' என்றெல்லாம் எண்ணி திருதராஷ்டிரன் புலம்ப அந்தப் புலம்பல் அரண்மனை முழுவதும் எதிரொலித்தது. அந்தக் கவலை துரியோதனனையும் பற்றிக் கொண்டது.

சகுனி துரியோதனனைச் சமாதானம் செய்ய விரும்பினான்.

"இடம் மாறினாலும் மனம் மாறும். மனம் உற்சாகம் பெறும் என்பது உண்மைதான். நீ இதை சற்றுத் தாமதமாக யோசித்திருக்கிறாய். பாண்டவர்கள் அந்த இடமாற்றத்தை நன்றாக அனுபவித்து சந்தோஷமாக வாழ்கிறார்கள். இதற்காக திருதராஷ்டிரர் புலம்புகிறார்.

பாண்டவர்களுடைய சந்தோஷத்தைக் குறைக்க ஒரு யோசனை சொல்கிறேன் கேள்.

துவைத வனத்தில் வாழும் பாண்டவர்களை நோக்கி நாம் போவோம். அங்கு நாம் மட்டும் செல்லாமல் நம் வீட்டுப் பெண்டுகளையும் அழைத்துக் கொண்டு போவோம்.

அவர்களை நன்றாக உடுத்திக் கொண்டு வரும்படி சொல்வோம். நம் வேலைக்காரர்கள், ஆட்டம் பாட்டம் தெரிந்தவர்கள், விதூஷகர்கள் போன்றவர்களும் நம்மோடு வரட்டும். பாண்டவர்கள் இருக்கும் இடத்திற்குப் போய் அவர்களுக்கு அருகே நின்று நாம் சுகமாக வாழ்வதை அவர்களுக்குத் தெரிவிப்போம். நம்முடைய அறுசுவை உணவுகளிலிருந்து வரும் வாசனையை அவர்கள் முகர்ந்து பார்க்கட்டும்''

சகுனியின் பேச்சைக் கேட்ட மாத்திரத்திலேயே துரியோதனன் சந்தோஷமானான்.

மிக வேகமாகத் தன் வீட்டுப் பெண்டிருக்கும், வேலையாட்களுக்கும் அரண்மனையில் வசிக்கும் கலைஞர்களுக்கும் உத்தரவு பிறப்பித்து உடனே துவைதவனம் நோக்கிக் கிள்ம்ப ஆயத்தமாகச் சொன்னான்.

மக்கள் மருண்டார்கள்.

''அந்த வனத்தில்தானே பாண்டவர்கள் இருக்கிறார்கள்? அங்கே போனால் சண்டை வந்துவிடுமே. சண்டையால் பாதிக்கப்படுவோமே'' என்று பெண்களும், கலைஞர்களும் கவலைப்பட்டார்கள்.

ஆனால், உரத்த குரலில் அதிகாரமாக துரியோதனன் கட்டளையிட்டு அவர்களைக் கண்டிப்பாகக் கிளம்ப வேண்டுமென்று உத்தரவிட்டான்.

அவர்கள் மேலும் முகம் மாறியபடி கிளம்பினார்கள். துரியோதனன் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருப்பதாக நடித்தார்கள்.

திருதராஷ்டிரனும் இதைத் தடுத்தான்.

''எதற்குக் கானகம் போவது? அதுவும் பாண்டவர்கள் வசிக்கின்ற துவைத வனம் போவது? வேண்டாம், பேசாமல் இங்கேயே இருங்கள்'' என்று தடுத்துப் பார்த்தான்.

''பசுக்களுக்கு நல்ல தாவரங்கள் தேவைப்படுகின்றன. பசுக்களின் நன்மைக்காக நாங்கள் அந்த வனங்களுக்குப் போக விரும்புகிறோம்'' என்று துரியோதனன் சொல்ல, ''பாண்டவர்கள் அங்கு இருக்கிறார்கள்'' என்று திருதராஷ்டிரன் சொல்ல. ''பாண்டவர்களோடு எங்களுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்கள் பக்கம் திரும்பவே மாட்டோம்'' என்று துரியோதனன் வாக்குக் கொடுத்தான்.

கர்ணனால் இந்தக் கூத்தைப் பொறுக்க முடியவில்லை.

''பிறகு, அங்கே போவதில் அர்த்தமென்ன? வெறுமே போய் உடுத்திக் கொண்டு நடப்பதற்கா? இதைப் பார்த்துவிட்டு பாண்டவர்கள் பொறாமைப்படுவார்கள் என்று நினைக்கிறாயா? யுத்தத்திற்கு என்றால் அது சரியாக இருக்கும். போரே இல்லாத ஒரு வேலைக்கு நாம் இத்தனை முஸ்தீபுகள் செய்து போவானேன்?'' என்று கர்ணன் மெல்லக் கூற அவன் பேச்சை யாரும் கேட்கவில்லை.

குடிபடைகளோடு துவைத வனத்திற்குள் துரியோதனன் புகுந்தான்.

படை வருவதைப் பார்த்துவிட்டு பாண்டவர்கள் ஆயுதங் களோடு தயாரானார்கள்.

அவர்கள் வசிக்கின்ற நதியின் எதிர்க்கரையில் கௌரவர்கள் இறங்குவதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.

'அதோ துரியோதனன்.... அதோ துச்சாதனன்... அதோ துரியோதனின் மனைவி...' என்றெல்லாம் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டார்கள்; ஆவலாகப் பார்த்தார்கள்.

அந்த நதிக்கரையில் ஒவ்வோர் இரவும், கந்தவர்கள் தங்குவது வாடிக்கையாக இருந்தது. கந்தவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளோடு வந்து நீராட்டம் செய்வதற்காக அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

கௌரவர்கள் குடிவருவதைப் பார்த்து. "இது எங்களுடைய இடம். இங்கு வரவேண்டாம்" என்று அவர்களை எச்சரித்தார்கள்.

ஆனால், கௌரவர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்ள வில்லை. ஏற்கனவே கந்தர்வர்கள் உருவாக்கியிருந்த கூடாரங்களை எட்டி உதைத்துக் கலைத்தார்கள். கந்தர்வர்கள் இதை மூர்க்கமாகத் தடுக்க, துரியோதனனும், கர்ணனும் கோபமானார்கள்.

பெண்டு பிள்ளைகளெல்லாம் இருக்கும் பொழுதே சட்டென்று அங்கு ஒரு யுத்தம் மூண்டுவிட்டது. கந்தர்வர்களுக்கும், கௌரவர்களுக்கும் கடுமையான போர் நடந்தது.

கர்ணன் கந்தர்வர்களைத் துன்புறுத்தினான். பலபேரைக் கொன்றான். கந்தர்வர்களுடைய அரசன் சித்திரசேனன் வெகுண் டெழுந்து கர்ணனுடைய தேரைப் பொடிப் பொடியாக்கினான். கௌரவர்கள் சிதறி ஓடும்படி பல அஸ்திரங்களை விட்டுத் துன்புறுத்தினான். காட்டின் பல பகுதிகளில் கௌரவர்கள் தனித்து ஓட, கந்தர்வர்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். கூட்டமாக வந்த கௌரவர்கள் சிதறிப் போனார்கள்.

கர்ணனால் கந்தர்வர்களின் தாக்குதலைத் தாங்கமுடியவில்லை. உடம்பெல்லாம் அடிபட்டுப் புண்ணாகிவிடவே அந்தக் காயங்களுக்கு மருந்து போட்டதும் மயங்கி விழுந்தான்.

கந்தர்வர்கள் துரியோதனனைக் கட்டி இழுத்துக் கொண்டு போய், சித்திரசேனனின் முன் நிறுத்தினார்கள். போகும் போது அடித்தார்கள்.

எதிர்க்கரையில் நின்றிருந்த பாண்டவர்களைப் பார்த்து துரியோதனன் வாய்விட்டு அழுதான். தன்னைக் காப்பாற்றும்படி சைகைசெய்தான்.

பீமனும், அர்ஜுனனும் துரியோதனனைக் காப்பாற்ற விருப்பமில்லாமல் போனாலும், தருமபுத்திரரின் கட்டளைப்படி யுத்தத்தில் இறங்கினார்கள். கந்தர்வர்களை வதைத்து, அடித்து நொறுக்கி துரியோதனனை விடுதலை செய்தார்கள். அவனை இறுகக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்து அவனை விடுவித்தார்கள். அவன் பெண்டு பிள்ளைகளைப் பார்த்து நலம் விசாரித்து, பத்திரமாக ஊர்போய்ச் சேருங்கள் என்று சொல்லிவிட்டு மறுபடியும் எதிர்க்கரைக்கு நீந்திப் போனார்கள்.

துரியோதனன் அவமானம் தாங்காமல் புலம்பத் தொடங்கினான். மயக்கம் தெளிந்த கர்ணன் ஓடி வந்து துரியோதனனைப் பார்த்து ''எங்கே கந்தர்வர்கள்? எல்லாரையும் அடித்துத் துரத்தி விட்டீர்களா? நீங்கள் ஒருவனாகவே போரிட்டீர்களா? உங்கள் வீரம் எனக்குத் தெரியும்'' என்று புகழ்ந்து பேசியபோது, துரியோதனன் பலமாகத் தலையசைத்தான்.

''இல்லை. நான் தோற்றேன். பாண்டவர்களால் காப்பாற்றப் பட்டேன். மனிதர்களைவிட வலிமை மிக்க வேறுவகை உடம்போடு வாழ்கின்ற கந்தர்வர்களிடம் தோற்றதுகூட எனக்குப் பெரிதாகப் படவில்லை. பாண்டவர்களால் காப்பாற்றப்பட்டதை, அதுவும் என் மனைவி மக்கள் முன்பு காப்பாற்றப்பட்டதை நான் அவமானமாக எண்ணுகிறேன். என்னை விட்டு விடு கர்ணா. எனக்கு உதவி செய்ய யாரும் இல்லை. இதே இடத்தில் நான் வடக்கிருந்து உயிர் துறக்கப் போகிறேன்'' என்று சம்மணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்தான்.

''நீ இல்லாவிட்டால் அஸ்தினாபுரம் என்னவாகும்? ஏன் இப்படிச் செய்கிறாய்?'' என்று கர்ணன் கேட்க ''துச்சாதனனை அரசானாக்கி விடு. நீ அவனுக்கு துணையிரு'' என்று வெறுப்போடு சொன்னான் துரியோதனன்.

'துரியோதனா. தவறு செய்கிறாய். தோல்வியும், வெற்றியும் அரசனுக்கு மாறிமாறி வரும். பாண்டவர்கள் தோல்வியடைய வில்லையா? தோற்றுப் போய் எல்லாச் சுகங்களையும் விட்டுவிட்டு கானகத்தில் தனியே இருக்கவில்லையா? அவர்களுக்குத் தோல்வி வந்தபோது தாங்கிக் கொள்ளவில்லையா? உனக்குத் தோல்வி வரும் போது ஏன் தாங்கிக் கொள்ள மறுக்கிறாய்? எப்பொழுதுமே வெற்றி வரவேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்? அஸ்தினாபுரத்திற்கு வா. நாம் மறுபடியும் பலம் சேர்த்துக்கொண்டு மீண்டும் போரில் இறங்குவோம். கந்தர்வர்கள் நமக்குப் பகைவர்கள் அல்லர். பாண்டவர்களைக் கொல்வதே நம் வாழ்க்கையின் லட்சியம். இதைச் செய்வதற்கு நடுவே வேறெந்த விஷயம் குறுக்கிட்டாலும் அதை லட்சியம் செய்யலாகாது'' என்று சமாதானம் சொல்லி அவனை உலுக்கி எழுப்பினான்.

ஆனால், துரியோதனனுக்கு எழுந்திருக்க மனம் வரவில்லை. உயிர்த் தியாகம் செய்வதே நல்லது என்ற எண்ணத்தில் இருந்தான்.

பாதாளத்தில் வசிக்கும் அசுரர்கள் கூட்டம் இதை அறிந்து ஒரு பெண் பேயைத் துரியோதனனிடம் அனுப்பியது. அந்தப் பெண் பேய் துரியோதனனைத் தூக்கிக் கொண்டு போய் அசுரர்களிடம் சேர்த்தது. பாதாளத்திலுள்ள அசுரர்கள் துரியோதனனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''துரியோதனா. உன்னுடைய உடம்பின் அமைப்பைத் தெரிந்து கொள். உன்னுடைய இடுப்பிற்குக் கீழ் உள்ள கீழ்ப்பாகம் மலர் போல மென்மையானது. இடுப்பிற்கு மேலுள்ள பாகம் வஜ்ஜிரம்போல் உறுதியானது. யுத்தத்திற்குப் போகும்போது ஒருவன் தன் உடம்பினுடைய வலுவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். தெரியாமல் போரிட்டால் தோல்வி நிச்சயம். இனிமேல் உன்னுடைய உடம்பு எத்தகையது, நீ எந்தப்பக்கம் மறைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு போர் செய்'' என்று அறிவுரை சொன்னார்கள்.

''இனி நடக்கப் போகும் பெரும் போரில் நீதான் வெற்றி பெறுவாய். பாண்டவர்களை நீ வெற்றி பெறுவது உறுதி'' என்று தேற்றினார்கள்.

துரியோதனனுடைய உடம்பில் பல அசுரர்களுடைய ஆவிகள் புகுந்து கொண்டன.

கர்ணனுடைய உடம்பில் நரகன் என்ற ஆவி நுழைந்தது.

அன்று விடியற்காலையில் கோபமானவனாய் கர்ணன் எழுந்து தன் ஆயுதத்தை எடுத்து ''துரியோதனா. நான் அர்ஜுனனைக் கொல்வேன். இது சத்தியம். என் ஆயுதத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். வெகுநிச்சயமாக நான் அர்ஜுனனைக் கொல்வேன்'' என்று முழங்கினான்.

இதனால் துரியோதனன் சமாதானமானான். ஊர் திரும்பினான்.

ஊர் திரும்பியதும் பீஷ்மருக்கு சகல விஷயங்களும் சொல்லப் பட்டன. பீஷ்மர் வேதனைப்பட்டார். துரியோதனனிடம் வந்தார்.

''இந்தக் கர்ணனை நம்பி நீ எதற்கு யுத்தத்தில் பிரவேசிக்கிறாய்? எப்படி சண்டை செய்து ஜெயிக்கமுடியும் என்று நினைக்கிறாய்? சாதாரண கந்தர்வர்களின் வேகத்தையே கர்ணனால் தாங்க முடிய வில்லையே. அடிபட்டு ஓடி ஒளிந்து கொண்டானே? அவனா உன்னை அர்ஜுனனிடமிருந்து காப்பாற்றுவான்? அர்ஜுனனுக்கு ஒருக்காலும் கர்ணன் ஈடாக மாட்டான்'' என்று உரத்த குரலில் சொல்ல, கர்ணனுக்கு துரியோதனனைச் சமாதானப்படுத்தும் கட்டாயம் ஏற்பட்டது.

''துரியோதனா. சமயம் கிடைக்கிற போதெல்லாம் பீஷ்மர் என்னை எள்ளி நகையாடுகிறார். ஆகவே, நான் தனி ஒருவனாகவே சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அர்ஜுனன் எந்தத் தேசத்தை எல்லாம் ஜெயித்து ராஜசூய யாகம் செய்தானோ, அதே விதமாக நீ செய்வதற்கு நான் திக்விஜயம் மேற்கொள்ளப் போகிறேன்.

அந்தத் தேசங்களுக்குப்போய், அந்த மன்னர்களை நான் வெற்றி கொள்ளப்போகிறேன்'' என்று சொல்லி, அவன் படைகளோடு தனி ஒருவனாக பரதகண்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்றான்.

அங்கம், வங்கம், கலிங்கம், மதிலை, மகதம் என்று பல தேசங்களோடு போரிட்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு திசைகளிலும் உள்ள மன்னர்களோடு போர் புரிந்து அவர்களை ஜெயித்து நாடு திரும்பினான்.

துரியோதனனுக்கு கர்ணன் மீது நம்பிக்கை அதிகமாயிற்று. அவனைக் கட்டித் தழுவி வரவேற்றான். ''ராஜசூயயாகம் செய்வோம்'' என்று கொக்கரித்தான்.

''இல்லை. தருமபுத்திரர் இருக்கும் வரை நீங்கள் ராஜசூயயாகம் செய்யமுடியாது. தருமபுத்திரரை ஜெயிக்கும் வரை உங்களுக்குத் திக்விஜயத்தில் முழுமை ஏற்படாது. எனவே நீங்கள் வைஷ்ணவம் என்கிற யாகத்தைச் செய்யுங்கள்'' என்று சொல்லப்பட்டது.

துரியோதனன் பொன்னால் செய்யப்பட்ட ஏரைக் கொண்டு சந்தோஷமாக நிலத்தை உழுது வைஷ்ணவம் என்கிற யாகத்தைச் செய்தான். கர்ணனைக் கொண்டாடினான்.

காலம் மெல்ல நகர்ந்தது.

துரியோதனன் தன்னை மிகப் பெரிய அரசனாகவே பாவித்துக் கொண்டு அதிகம் பேசி, சிரித்துக் கொண்டிருந்தான். பாண்டவர்களை மறக்க முயற்சி செய்துகொண்டிருந்தான். ஆனால், ஒற்றர்கள் மூலம் பாண்டவர்களுடைய நடவடிக்கைகள் தினந்தோறும் துரியோ தனனுக்கு வந்து கொண்டிருந்தன. அவனுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தன.

விராட தேசத்தில் நடந்த கீசகவதம் பற்றி ஒற்றர்களால் துரியோதனனுக்குச் சொல்லப்பட்டது. 'பாண்டவர்கள் அங்கு மறைந்திருக்கலாம், வேறு வேடத்தில் தங்கியிருக்கலாம்'' என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

''கீசகனைப்போன்ற வீரர்களை பீமன் போன்ற வலிவுள்ளவன் தான் கொல்ல முடியும். எனவே பாண்டவர்கள் அங்கே இருக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, விராடதேசம் நோக்கிப் போவோம்'' என்று துரியோதனன் கட்டளையிட கர்ணன் துரியோதனனோடு சேர்ந்து கொண்டான். பீஷ்மரும், கிருபரும், துரோணரும், அஸ்வத்தாமனும் வேண்டா வெறுப்பாக அந்தப் படையில் கலந்து கொண்டார்கள். அரசனுக்குக் கட்டுப்பட்டு அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

விராட தேசத்து அரசனின் பசுக்களை மடக்கி அஸ்தினாபுரம் நோக்கித் திரும்பினார்கள்.

பஞ்சபாண்டவர்கள் அங்கே இருந்தால் நிச்சயம் வெளிப்படு வார்கள். பசுக்களை மீட்க ஓடிவருவார்கள் என்று நினைத்து இதைச் செய்தார்கள்.

பிருகன்னளை என்கிற பெயரில் ஆணும் இல்லாமல், பெண்ணும் இல்லாமல் பேடி வடிவம் தாங்கி அந்தப்புரப் பெண்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்த அர்ஜுனன், உத்திரன் என்கிற விராட தேசத்து இளவரசனோடு தேரேறி வந்து கௌரவர்களைத் தடுத்தான். ஒளித்து வைக்கப்பட்ட காண்டீபத்தையும், அஸ்திரங் களையும் எடுத்து வந்து அவர்களை மடக்கி, பாணங்களை எய்தான்.

பாணங்கள் பீஷ்மருடைய காலைத்தொட்டு நின்றன. வந்தவன் அர்ஜுனன் என்பது எல்லாருக்கும் புரிந்து விட்டது.

'துரியோதனா. கவலைப்படாதே. அர்ஜுனனை நான் கொல்வேன்' என்று கர்ணன் வேகமான எழுந்திருக்க, கிருபர் அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''கர்ணா... நீதான் சுயம்வரத்தின்போது லட்சியத்தை அடித்து ஜெயித்தாய். கந்தர்வர்களிடமிருந்து நீதான் துரியோதனனை மீட்டாய். இப்போது நீதான் அர்ஜுனனையும் ஜெயிக்கப் போகிறாய். போ.. போய் ஜெயித்துக் காட்டு..'' என்று ஏளனமாகக் கூறினார்.

பயமுள்ளவர்கள் என்னை பின் தொடராது இருக்கட்டும். அவர்கள் துரியோதனனுடைய படையிலிருந்து விலகி, கைகட்டி ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கட்டும்'' என்று பதிலுக்குக் கர்ணன் சீறிப் பேசினான்.

அஸ்வத்தாமனுக்குக் கோபம் வந்தது.

''என்ன கேவலமான அரசியல் செய்து கொண்டிருக்கிறீர்கள்? பாண்டவர்களின் இராஜ்ஜியத்தை அபகரித்து விட்டு, இப்பொழுது போரில் நான் ஜெயிப்பேன், நீ ஜெயிப்பேன் என்று ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களால் அர்ஜுனனை ஜெயிக்க முடியாது. அவன் தவம் செய்து இன்னும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறான். நீங்கள் தோற்கப்போவது நிச்சயம்'' என்று சொல்ல, கர்ணன் ''நன்றி கெட்டவர்கள்'' என்று உரக்கக் கூறி விட்டு அர்ஜுனனை நோக்கிப் போனான். பலமாகத் தாக்கப்பட்டான்.

துரியோதனன் புறங்காட்டி ஓடினான். ஆநிரைகள் அர்ஜுன னால் மீட்கப்பட்டன. கௌரவர்கள் தப்பினால் போதுமென்று அஸ்தினா புரத்தை அடைந்தார்கள்.

''வந்தவன் அர்ஜுனன்தானா'' என்று பீஷ்மரிடம் துரியோதனன் கேட்டான்.

''ஆம்'' என்று பீஷ்மர் சொன்னார்.

''அப்படியானால். பதிமூன்று வருடம் இன்னும் முடியவில்லை. மறுபடியும் அவர்கள் பதிமூன்று வருடம் கானகத்திற்குப் போக வேண்டும் என்று சொல்லி விடுங்கள்'' என்று சொல்ல, ''இல்லை. உனக்கு கணக்குத் தெரியவில்லை. பஞ்சபாண்டவர்கள் கணக்கிலே வல்லவர்கள். சகாதேவன் அங்கே இருக்கிறான். ஐந்துவருடங்களுக்கு ஒருமுறை இரண்டு மாதங்கள் ஒன்று கூடும். பகற்பொழுது அதிகமாகும். ஒரு நாள் கூடுதலாகும். நீ புரியாமல் பேசாதே. பாண்டவர்கள் வெளியே வரும் காலம் வந்து விட்டது. அவர்கள் வெளியே வருவார்கள்.

கண்ணனைத் துணையாக அழைத்து, இந்தச் சபைக்குள் படியேறுவார்கள். ஏதாவது கொடு'' என்று உங்களைக் கேட்பார்கள். அப்பொழுது நீ கொடுத்துத்தான் ஆக வேண்டும்'' என்று பீஷ்மர் சொல்ல துரியோதனன் ''முடியாது, எதுவும் தரமுடியாது'' என்று உரக்கக் கூறினான்.

பீஷ்மர் சொன்னது போல வேடம் கலைத்துவிட்டு வெளியே நகரத்திற்கு வந்த பஞ்ச பாண்டவர்களுக்குத் துணையாக கிருஷ்ணர் அஸ்தினாபுரம் வந்தார். விதுரர் வீட்டில் தங்கினார்.

நம் தேசத்திற்கு வந்து விட்டு, தன் வீட்டிற்கு வராத கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்து துரியோதனன் கோபத்தில் பொங்கினான்.

''ஏன் வரவில்லை?'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான்.

''நான் உன்னுடைய எதிரிகளான பஞ்ச பாண்டவர்களுக்குத் தூதனாக வந்திருக்கிறேன். அப்படி இருக்கும்பொழுது உன்னுடைய அகத்திலே நான் எதுவும் எடுத்துக் கொள்ள முடியாது. எனக்கு நீ எதிரியாகும் பட்சத்திலே நான் நீர்கூட அருந்த முடியாது. அதனால்தான் தான் விதுரர் வீட்டில் தங்கினேன். சொல். பஞ்ச பாண்டவர்களுக்கு என்ன தருவாய்?'' என்று கேட்க, சபையிலே அறிவிப்பதாக துரியோதனன் சொன்னான்.

பெரிய குழி தோண்டி அதன்மீது பாய் விரித்து அதன் மீது சிம்மாசனத்தைப் போட்டு வைத்து கிருஷ்ணரைக் கொல்வதற்காக ஏற்பாடுகள் செய்தான். ''கையில் விலங்கிட்டு நடக்க முடியாமல் தள்ளாடும் போது அடித்துக் கொன்றுவிடுங்கள்'' என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

தூதுவனைக் கொல்வது முறையன்று என்று பலர் சொல்லியும் துரியோதனன் கேட்கவில்லை.

பாய் நகர்ந்து சிம்மாசனம் பள்ளத்தில் விழுந்தது. கிருஷ்ணர் தன்னுடைய விஸ்வரூபத்தைக் காண்பித்தார். பிரம்மாண்டமான

வடிவமெடுத்து வானுயர பூமியின் அடியாழம் வரை காலிருக்க, உயர்ந்து நின்றார்.

துரியோதனன் அதைப் பார்க்காமல் கண்மூடிக் கொண்டான். கர்ணன் சிறிதளவு அவருடைய விஸ்வரூப தரிசனத்தைப் பார்த்தான். கை கூப்பினான்.

''கடவுளே பஞ்ச பாண்டவர்களின் பக்கம் நிற்கிறதே. என்ன செய்வது?'' என்று மனம் கலங்கினான். அவன் மனக்கலக்கத்தைக் கிருஷ்ணன் புரிந்து கொண்டார்.

''கர்ணா... உண்மையில் நீ குந்தியின் மகன். பஞ்ச பாண்டவர் களுக்கு அண்ணன். தருமருக்குத் தமையன். துரியோதனனை உதறி விட்டு பஞ்சபாண்டவர்கள் பக்கம் வந்துவிடு. இந்தத் தேசம் முழுவதும் உனக்கு உடைமையாகும். நீ அவர்களுக்கு அண்ணனாக இருந்து சிம்மாசனம் ஏறி மணிமகுடம் தரித்து பரதகண்டம் முழுவதையும் ஆட்சி செய்யலாம்'' என்று சொன்னார்.

கர்ணன் கைகூப்பினான். மறுத்தான்.

''உண்மையில் என்னுடைய தாய் குந்தியா? வேண்டாமென்று உதறி என்னை நீரில் விட்டாளா..?'' என்று வேதனைப்பட்டு தனியிடம் போய் அமர்ந்து கொண்டான். அவன் வேதனையை எவரும் புரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை.

# 11

**வா**ழ்க்கையே முடிந்து விட்டது போன்ற ஒரு வலி கர்ணனுக்கு ஏற்பட்டது. அவன் தனிமையில் அமர்ந்திருந்தான். தலை உயர்த்தி வானத்தில் நிதானமாய் நகருகின்ற சூரியனைப் பார்த்தான். மறுபடியும் பூமியை நோக்கித் தலைகுனிந்து கொண்டான்.

சூரியருக்கு அவன் தனிமையும் அவன் படும் துயரமும் பார்க்க சிரமமாக இருந்தது. நெருங்கி வந்து ஆறுதல் சொல்லவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஆனால், கர்ணன் அழைக்கும்போது போகலாம் என்று பார்த்துக் கொண்டே நகர்ந்து கொண்டிருந்தார்.

யோசிக்க யோசிக்க கர்ணனுக்கு இவை அனைத்துமே குலத் திமிர் என்ற எண்ணம் வந்தது. யாராவது நான்காவது வர்ணத்துப் பெண், தன் குழந்தையை ஆற்றில் எறிந்துவிட்டு அல்லது கூடையில் வைத்து காட்டுக்கு நடுவில் போட்டு விட்டுப் போயிருக்கிறாளா? உயர் ஜாதியினரின் திமிர் இது. குறிப்பாய் க்ஷத்திரியர்களின் திமிர் இது. காசு, புகழ் இரண்டும் கொடுத்த மமதை. தனக்குக் கீழே லட்சக்கணக்கான ஆட்கள் இருக்கிறார்கள் என்கிற கொண்டாட்டம். மற்றவர்களின் உணர்வை நெல் முனையளவுகூட மதிக்காத மமதை. ஒரு முனிவர் வரம் கொடுத்தால் அதைப் பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும் என்று ஓர் அரசிளங்குமரிக்குத் தோன்றுகிறதென்றால் அது மமதையின் உச்சகட்டம். உலகத்தில் அவள் எதையுமே மதிக்க வில்லை என்று அர்த்தம். அரசிளங்குமரிக்கு இந்த மமதை இருக்குமெனில் இந்த க்ஷத்திரிய வம்சத்து அரசர்களுக்கும், அதற்குக் கீழே இருக்கின்ற சேனாதிபதிகளுக்கும் என்ன மமதை இருக்கும்? மமதை உள்ளவன் மற்ற மனிதர்களை எப்படி மரியாதையாக நடத்துவான்? ஆட்சி செய்யவே பிறந்திருக்கிறோம் என்ற அகங்காரம். மனிதனை மனிதனாகவே நினைக்கப் பிடிக்காத குணம். தான் மட்டுமே நல்ல ஆட்சி தர முடியும் என்கிற திமிர் மனிதர்களிடம் மரியாதையாகப் பேசாது.

தன்னால் சகலமும் முடியும் என்கிற இறுமாப்பு, இன்னொருவனுக்கு எந்த நன்மையும் செய்து விடாது. அதுவும் எளியவர்களான ஏழைகளை மனிதர்களாகவே மதிக்காது, ஆடு, மாடுகளாய், மிருகங்களாய், தொலைதூரம் நிற்க வைத்து வேடிக்கை பார்க்கும் மிருகங்களாகத்தான் கற்பனை செய்து கொள்ள அவர்களால் முடியும். அரச குடும்பத்தினரின் உச்சத் திமிர் இந்த ஆட்சி. அறிவு

கெட்டத்தனமாய் நூறு பிள்ளைகளைப் பெற்றுப் போட்டிருக்கிறாள் காந்தாரி. நூறு முரடர்கள். நூறு அயோக்கியர்கள். அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு தலைவனை நியமித்து இந்த தேசத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள். நல்லவர்கள் அத்தனை பேரையும் நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வல்லமை படைத்தவர்களை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பீஷ்மரும், துரோணரும், அஸ்வத்தாமரும் வல்லமை படைத்தவர்கள்தான். ஆனால், இந்தத் தீயவர்களுக்கு எதிரே கைகட்டிச் கொண்டிருக்கிறார்கள்.

அர்ச்சுனன் இன்னோர் அயோக்கியன். வலிவு இருக்கிறது என்பதாலேயே விதவிதமான பெண்களை போகிக்கின்ற முட்டாள். பீமன் தீனிப் பிரியன். மனித வெறியுள்ள ராட்சசன். நகுலனும், சகாதேவனும் விஷப் பாம்புகள். இந்தத் தருமர் மட்டுமே எங்கோ மெல்லிய நியாயத்துடன் நடந்து கொண்டிருக்கிறார். தங்களுக்குள் ஒற்றுமை வேண்டும் என்பதற்காக, தங்களுக்குள் ஒற்றுமை இருக்கிறது என்று காட்டுவதற்காக ஒரே பெண்ணை ஐவர் மணந்திருக்கிறார்கள். அப்படி மணந்த பிறகும் அவர்களுக்குள் பிரிவு வரவில்லையாம். என்ன கூத்தடா இது?

கர்ணன் கோபமானான். எழுந்து நின்று முன்னும் பின்னும் உலவினான்.

இப்பொழுது என்ன செய்வது? நான் எந்தப் பக்கம் நிற்பது? நான் இவர்கள் இரண்டு பக்கமுமில்லை. நான் ஏழைகள் பக்கம். நான்காவது வர்ணத்துப் பக்கம். இவர்கள் அழிந்தால்தான் நான்காவது வர்ணம் மலரும். உயர்ந்து நிற்கும். நிம்மதியாக வாழும்.

அரசர்கள் ஒருவரையொருவர் அழித்துக் கொண்டு நாய்போல் செத்தார்கள் என்றால்தான், ஏழைகளுக்கு நிம்மதி பிறக்கும். வாழ்க்கை பயமில்லாமல், நடுக்கமில்லாமல் இருக்கும்.

தந்தை யார் என்று தெரியாத ஓர் இழிபிறப்பு. தாய் மிக மோசமான நடத்தையுள்ளவள். தூக்கி ஆற்றில் போட்டவள். அப்பாவியான வளர்ப்புத் தாயும், தந்தையும் ஓர் அநாதையான தேரோட்டிக் கூட்டம்.

துரியோதனன் மிகப் பெரிய அயோக்கியன். கடும் கோபக்காரன். எல்லார் மீதும் அசூயை கொண்டவன். நான் தேரோட்டி மகனாக இருப்பதால் என்னிடம் அவனுக்கு அசூயை இல்லை. நானும் ஓர் அரசனாக இருந்தால், எனக்கும் மிகப் பெரிய ராஜ்ஜியம் இருந்தால் அது எனக்குப் பரம்பரையாக வந்த விஷயமென்றால் என் மீதும் துரியோதனன் அசூயை கொண்டிருப்பான். என்னையும் போருக்கு இழுத்திருப்பான். ஒரு தேசத்தைக் கொடுத்து, தலையில் மணிமுடி வைத்து என்னை அருகே வைத்துக் கொண்டு விட்டான். விலைக்கு வாங்கி விட்டான். வழிகாட்ட வந்த குருவோ, 'உனக்கு தக்க சமயத்தில் மந்திரம் ஞாபகத்திற்கு வராது' என்று சபித்து விட்டார். என்ன மோசமான பிறப்பு நான். எதற்கு இந்தப் பிறவி? கர்ணன் பிறந்து இந்த பூமியில் ஆக வேண்டியதென்ன?

ஒவ்வொருவரும் இதைச் செய்யவேண்டும், என்ற நினைப்போடு பூமியில் பிறக்க வேண்டும். என்ன செய்யவேண்டும் என்ற தெளிவு அவர்களுக்கு வரவேண்டும். எனக்கு ஏன் பிறந்தேன் என்றும் தெரியவில்லை. என்ன செய்யவேண்டும் என்பதும் புரியவில்லை.

கர்ணன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அவன் மரத்தைப் பற்றி நின்றுகொண்டு தலையைக் குனிந்து பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தச் சூரியனை நமஸ்கரிப்பது மட்டும் இல்லையென்றால் இந்த வாழ்க்கை எந்த அர்த்தமும் இல்லாது போயிருக்கும். உதயத்திலிருந்து உச்சி வேளை வரை சூரியனை வணங்குவதுதான், இங்கு பிறந்ததன் மிகப் பெரிய சந்தோஷம். அந்த நேரம்தான் அமைதியும், சந்துஷ்டியும் ஏற்படுகிறது. சூரியன் இல்லையெனில்

பூமி இல்லை. பூமி இல்லையெனில் எந்த உயிரினமும் இல்லை. எல்லாவற்றிற்கும் ஆதாரம் சூரியன். சூரியதேவா, என்று கைகூப்பினான்.

தேஜஸ்வாமி...

என்று தலைகுனிந்து வணங்கினான்.

சூரியன் மனம் குளிர்ந்தார். அவன் மீது கருணைப் பார்வையை வீசினார்.

கர்ணன் மெல்ல ஒரு துணியை மரத்தாலான மேடையின் மீது விரித்து அதன்மீது அமர்ந்து கொண்டான். சூரியன் இருக்கும் திசை நோக்கிக் கைகூப்பினான். இழுத்து மூச்சு விட்டான். பந்தப்படுத் தினான். தளர விட்டான். மனத்தை ஒருநிலைப்படுத்தினான். புத்தியை விறுவிறுப்பாக்கினான். குண்டலினி சக்தியை மேலே எழுப்பி நெற்றிக்கு வரச் செய்தான். ஆழ்ந்து ஆழ்ந்து உள்ளே இறங்கினான்.

உலகத்தின் ரட்சகரே. எல்லா உயிரையும் காப்பவரே. பூமியின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பவரே. சூரிய தேவரே. உமக்கு நமஸ்காரம்.

அவன் அவரைத் துதி செய்யத் தொடங்கினான்.

எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் எந்தக் கேள்வியும் கேட்காமல், எந்த யாசிப்பும் இல்லாமல் வணங்குவதற்காகவே பிறந்தவன் போல அவன் உள்ளுக்குள் கைகூப்பி வணங்கத் தொடங்கினான்.

சூரிய தேவர் அகம் குளிர்ந்தார்.

''என்மகனே''என்று விம்மினார்.

இவனைப் பற்றி இவனுக்குச் சொல்லும் நேரம் வந்து விட்டது என்று நினைத்தார்.

கிருஷ்ண பரமாத்மா குந்தியின் அரண்மனை நோக்கி விரைவாகப் போனார். குந்தி எழுந்து நின்று கைகூப்பி கிருஷ்ண பரமாத்மாவை வரவேற்றாள்.

''என்ன கிருஷ்ணா. நீ தடுக்க எத்தனை முயற்சி செய்தும் போர் வரும் போல் இருக்கிறதே.''

''ஆமாம். போர் வரும். வேறு வழியில்லை'' கிருஷ்ணர் பதில் சொன்னார்.

''ஒரு வகையில் அதற்கு நீயும் காரணம் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.''

''என் ஜாதகம் அப்படி குந்திதேவி. என்னைக் கடவுள் என்று கும்பிடுகிறவரும் உண்டு. கயவன் என்று எதிர்க்கிறவர்களும் உண்டு. நான் எப்பொழுதும் இரண்டு விதமான தோற்றங்களை எல்லாருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். ஏன் என்று எனக்கே தெரியவில்லை.

கிருஷ்ணர் வாய்விட்டுச் சிரித்தபடி சொன்னார்.

அந்தப் பேச்சு பொருள்மிகுந்ததாக இருந்தது.

''போரை நிறுத்த முடியாதா?''

''இல்லை. இனி நிறுத்த முடியாது, ஆனால் உயிர்ச் சேதத்தை ஓரளவு குறைக்கலாம். எல்லாரும் மாண்டு போவதைத் தடுக்கலாம். சிலரையாவது பிழைக்க வைக்கலாம்.''

''எப்படி...? எப்படி...?'' குந்திதேவி ஆவலோடு கேட்டாள்.

''எல்லாம் உன் கையில் இருக்கிறது.''

''நானா? எனக்கென்ன அத்தனை பெரிய பதவி? நான் ஒரு சாதாரண அரச குடும்பத்துப் பெண்.''

''சாதாரண அரச குடும்பத்துப் பெண்ணா...? நீ செய்த வினைதான் எல்லாவற்றிற்கும் காரணமாகி விட்டது.''

''என்ன, நான் என்ன செய்தேன்? எதற்காக என்னைக் குற்றம் சுமத்துகிறாய்? உனக்குப் பொழுது போகவில்லையென்றால் குந்தியின் தலையை உருட்ட வந்து விட்டாயா...?'' குந்தி கோபத்துடன் கேட்டாள்.

''ஆஹா.. முதலில் நீ கைகூப்பி வரவேற்றபோது.. கடவுளை வரவேற்றது போல் இருந்தது. இப்போது கைவீசிப் பேசுகிற பொழுது கயவனே என்று சொல்வது போல் இருக்கிறது. பார், நீயே இரண்டு விதமாக என்னைப் பார்க்கிறாய்'' கிருஷ்ணர் சிரித்தார்.

குந்திதேவி நாணினாள்.

''சொல் கிருஷ்ணா. நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்'' கைகூப்பினாள்.

''உனக்கு அதிர்ச்சி தரக் கூடிய ஒரு விஷயத்தை நான் இப்பொழுது சொல்லப் போகிறேன். அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல், அமைதியாக அதைக் கேட்க வேண்டும்.''

''சகலமும் உன் விளையாட்டு என்று பெரியவர்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கிறது. இப்பொழுது என்னிடம் விளையாட வந்திருக்கிறாய். உன் இஷ்டம் போல் எது வேண்டுமானாலும் செய்து கொள். என்ன செய்தி எனக்குச் சொல்.''

''துரியோதனனுடைய நண்பன் கர்ணனை உனக்குத் தெரியுமல்லவா?''

''ஆம், பார்த்திருக்கிறேன். அர்ச்சுனனுக்கு எதிராக வில் வளைத்து ஒரு சபையில் அவன் வித்தை செய்த விதம் எனக்கு இன்னமும் மறக்க வில்லை. பசுமையாக இருக்கிறது. வாலிபனாய் இளம் மீசையோடு தேஜஸ்வியாய் வில்லுடன் வந்து நின்ற காட்சி இன்னமும் நெஞ்சில் இருக்கிறது.''

''ஏன், எல்லாரையும் விட்டு விட்டு கர்ணன் மீது அத்தனை ஈடுபாடு?''

''தெரியவில்லை கண்ணா. ஏதோ அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்கிறது. அவன் தலையைத் தடவி உச்சி முகரவேண்டுமென்று மனம் சொல்கிறது. வா உனக்கு உணவிடுகிறேன் என்று எழுந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவனைப் பார்த்தாலே ஒரு பரபரப்பு ஒட்டிக் கொள்கிறது. மேலாடையால் அவன் முகத்தைத் துடைக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது.''

''அட... எதிரியின் நண்பன் மீது இத்தனை பாசமா?''

''யார் எதிரி? யார் நண்பன்? மனிதர்கள் தேவையில்லாமல் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு சாகிறார்கள். இந்த பூமியில் மனிதர்கள் வாழ்வதற்கு ஏகப்பட்ட இடங்கள் இருக்கின்றன. எங்கேனும் போய் எவரேனும் ஒரு ராஜ்ஜியம் தோற்றுவித்தால், கூடாது என்று யார் சொல்லப் போகிறார்கள்? இது என் ராஜ்ஜியம், அது என் ராஜ்ஜியம் என்று பிரித்து வைத்துக் கொள்கிறார்கள். யார் இதைக் கொண்டு போகப் போகிறார்கள்? இங்கு எல்லாமே தற்காலிகம். இது புரியாமல் இவர்கள் பிதற்றுவதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது.''

''ஆஹா... ஆஹா... ஒரு முனிவரின் மனைவி பேசுவதைப் போலல்லவா பேசுகிறாய்? அற்புதமாக இருக்கிறது அத்தை'' கண்ணன் குழைவாகச் சொன்னார்.

''பாண்டு ஒரு முனிவரைப்போல் தானே வாழ்ந்தார்? எத்தனை பேசியிருப்பார்? கூடல் இல்லை என்ற காரணத்தாலேயே நாங்கள் விலகியிருக்கவில்லை. இன்னும் நெருக்கமாக இருக்க வேண்டுமென் பதற்காக நாங்கள் பேசினோம். விடாது பேசினோம், எப்பொழுது நினைத்தாலும், ஒருவரையொருவர் எழுப்பி நான் என்ன சொல்ல நினைக்கிறேன் தெரியுமா, என்று தத்துவங்கள் பேசுவது எங்களுக்கு வழக்கமாகவே இருந்தது. அற்புதமான நாட்கள் அவை கண்ணா...''

''அதற்கு முன்னால் உள்ள நாட்கள் எப்படிப்பட்டவை குந்தி தேவி?'' கண்ணன் மெதுவாகக் கேட்டார்.

''அதற்கும் முன்னால் என்றால்...''

''நீ அரசிளங்குமரியாக கன்னிகையாக இருந்தபோது என்ன நடந்தது? ஏதேனும் முக்கிய நிகழ்ச்சி நடந்ததுண்டா..?''

குந்திதேவி திகைத்தாள். தலைகுனிந்தாள். சேடிகளை விலகிப் போகச் சொன்னாள்.

கண்ணனை நோக்கி குந்தி மறுபடியும் கைகூப்பினாள்.

''உனக்குத் தெரிந்து விட்டதா? சரி, நீ எல்லாம் அறிந்தவன். மாயாஜாலக்காரன். உன்னை கடவுளின் அவதாரம் என்றுகூட முனிவர்களும், சாதுக்களும் சொல்கிறார்கள். ஆகவே, உன்னிடம் பொய் சொல்ல, உண்மையை மறைக்க என்னால் இயலவில்லை. கொடுத்த மந்திரத்தை நான் பரீட்சித்துப் பார்க்க விரும்பினேன். தேவதைகளை அழைத்து அவர்கள் ஆசிர்வாதத்தின் மூலம் நல்ல குழந்தைகளை நீ பெற்றுக்கொள்ள முடியும் என்று வரம் கொடுத்தார்.

வரம் பெற்றுக் கொண்ட நான், அளவு கடந்த சந்தோஷ மடைந்தேன். உண்மையிலேயே அது வரம்தானா என்று பரீட்சித்துப் பார்க்க விரும்பினேன். மந்திரங்களால் பலன் உண்டா என்று சோதித்துப் பார்க்க விரும்பினேன்.

சூரியனை அழைக்கும் மூல மந்திரத்தை மேல் மாடியில் நின்று உரக்கச் சொன்னேன். சூரியன் வந்து எனக்குள் கருவை ஏற்படுத்தினார். நான் பயந்து போனேன். அழுதேன். குறிப்பிட்ட காலத்தில் குழந்தை பிறந்தவுடன் உனக்குக் கன்னித்தன்மை மறுபடியும் வந்துவிடும் என்று ஆசிர்வதித்தார். நான் சேடிகளோடு தனியே போனேன். குழந்தை பெற்றெடுத்தேன். அந்தக் குழந்தையைக் கூடையில் வைத்து ஆற்றில் விட்டேன். எனக்கு மறுபடியும் கன்னித்தன்மை ஏற்பட்டது. ஏன் கண்ணா... ஏன் கேட்கிறாய்?''

‘‘அந்தக் குழந்தைதான் கர்ணன். துரியோதனன் நண்பன். அர்ச்சுனனைக் கொல்லுவேன் என்று சபதம் செய்திருக்கிற கர்ணன். பாண்டவர்களை எதிர்ப்பேன் என்று சூளுரைக்கின்ற கர்ணன். அவன் இருப்பதாலேயே துரியோதனன் போருக்கு ஆயத்தமாகிறான். அவனுடைய வீரம் மிகுந்த துணையினாலேயே பாண்டவர்களை அழித்துவிட முடியும் என்று நினைக்கிறான்.’’

குந்தி மயக்கமானாள். சேடிகள் ஓடி வந்து அவளைத் தாங்கிக் கொண்டார்கள். கிருஷ்ண பரமாத்மா குந்தியை அமைதிப் படுத்தினார். மயக்கம் தெளிவித்தார்.

‘‘குந்திதேவியே. நடந்ததற்கெல்லாம் வருத்தப்பட்டு இனி அடிக்கடி மயக்கமாவதில் அர்த்தமில்லை. இது போர்க்காலம். விரைவாக காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய காலம். நீ அரச குடும்பத்துப் பெண். துணிச்சல் எங்கே போயிற்று? போர் நடப்பதும், உயிர்ச் சேதம் ஏற்படுவதும் நிச்சயமாகிவிட்டது. விதியின் வேகத்தை மதியால் குறைக்கலாம். நீ எழுந்து கர்ணனிடம் போய் உன்னை அறிமுகப்படுத்திக்கொள். நீதான் அவனுக்குத் தாய் என்று சொல். அவனை துரியோதனனை விட்டு விட்டு பாண்டவர்களிடம் போய்ச் சேரச் சொல். பாண்டவர்களின் படைக்குத் தலைமையேற்கச் சொல். கர்ணன் அரச பதவி ஏற்கட்டும். தர்மர் இளவரசனாக இருக்கட்டும். இவர்களின் துணையோடு கர்ணன் அஸ்தினாபுரத்தை அலங்கரித்து அரசாளட்டும். கர்ணன் பாண்டவர்கள் பக்கம் போய்விட்டான் என்றால் இந்தப் போர் நின்று விடும். துரியோதனன் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போவான். மனம் வெறுத்து அரச பதவி துறந்து காட்டுக்கு ஓடிப்போவான். அவனுடைய சகோதரர்கள் சிதறிப் போவார்கள். போரை நிறுத்த ஏதும் வழியில்லையா என்று கேட்டாய் அல்லவா? இதுவே போரை நிறுத்த வழி. ஆனால், கர்ணன் மிக நல்லவன். நன்றிமிக்கவன். ஒருபொழுதும் துரியோதனனை விட்டு பாண்டவர்கள் பக்கம் வரமாட்டான். எத்தனை கதறினாலும், உன்னைத் தாயாக ஏற்கமாட்டான். அவன் உன் மீதும், க்ஷத்திரியர்கள் மீதும்

கோபமாக இருக்கிறவன். தன்னை மையமாக வைத்தே இந்தப் பாரதப் போர் நடக்கப் போகிறது என்பதைப் புரிந்து கொண்டிருப்பவன். இடைவிடாது சூரியனை உபாசித்துத் தன்னுடைய பலத்தை அதிகமாக்கிக் கொண்டிருப்பவன்.

பாண்டவர் பக்கம் வரும்படி கேள் அவனிடம். அப்படி அவன் பாண்டவர் பக்கம் வரவில்லையென்றால், கர்ணனிடம் இரண்டு வரங்கள் கேள்.''

குந்திதேவி கண்ணனையே திகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

''முதல் வரம், நாகாஸ்திரத்தை ஒரு முறைக்கு மேல் விட வேண்டாம் என்று சொல். இரண்டாவது வரம், அர்ச்சுனனைத் தவிர மற்ற சகோதரர்களைக் கொல்ல வேண்டாம் என்று வேண்டுகோள் வை. கர்ணன் தயாளன். யார் கேட்டாலும் எது கேட்டாலும் கொடுக்கிறவன். தர்மத்தின் பக்கம் நிற்கிறவன். எதையும் ஆராய்ந்து செய்யும் மனப்பக்குவம் உடையவன். நீ கேட்ட இந்த வரங்களையும் நிச்சயம் தருவான். இந்த இரண்டு வரங்களை நீ பெற்று வந்தால் போதும். நாம் நிச்சயம் கௌரவர்களை ஜெயித்து விடலாம். அந்த இரண்டு வரங்களும் கர்ணனைப் பலவீனமாக்கி விடும். மற்ற விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கண் சிமிட்டினார்.

குந்திதேவி கண் மூடி யோசித்தாள். மெல்லக் கண் திறந்தாள்.

''கிருஷ்ணா... வாழ்க்கை மொத்தமும் விதிவசத்தில் இருக்கிறது என்பதும் எனக்குப் புரிந்து விட்டது. மனிதர்கள் அனைவரும் விதியின் கைப்பாவைகள். அந்த விதியை நீ ஆட்டிக் கொண்டிருக்கிறாய். கிருஷ்ணா... பரம்பொருளே.. எது நல்லதோ அதை எங்களுக்குச் செய்வாயாக. எது சரியான வழியோ அதை எங்களுக்குக் காட்டுவீராக. நல்லது கெட்டது என்ற விஷயத்தை தெளிவாகப் பார்க்கின்ற சிந்தனை மனிதருக்கு வரவில்லை. அப்போது மனிதர்களுக்கு அந்தக் குணம் குறையத்தான் போகிறது. கர்ணனிடம்

நான் வரம் கேட்பதே சரியென்ற நிலைக்கு என்னைத் தள்ளி விட்டாய். நீ என்ன சொல்கிறாயோ, அதைச் செய்கிறேன்.''

குந்திதேவி சுருண்டு கட்டிலில் படுத்துக் கொள்ள, சேடிகள் வேகமாக விசிறினார்கள்.

கிருஷ்ண பரமாத்மா மெல்லியதாய்ச் சிரித்துக்கொண்டே அவளை விட்டு அகன்றார்.

கர்ணன் அந்த மரமேடையில் அமர்ந்து இடைவிடாது சூரியனைத் துதித்துக் கொண்டிருந்தான்.

குந்தி தேவி தேரை விட்டு இறங்கினாள். அவனுக்கு அருகே போனாள்.

வெயில் அவன்மீது படாதிருக்க தன் மேல் துணியால் விரித்து அவனுக்கு நிழல் உண்டாக்கினாள்.

கர்ணன் எரிச்சலுற்றான். நான் வணங்கும் தேவதை என்னை இறுகத் தழுவிக் கொண்டிருக்க அதை வந்து தடுப்பது யார் என்று உள்ளுக்குள் கோபமானான். மெல்லக் கண் திறந்தான்.

அவனுக்கு மிகுந்த உதவி செய்வதுபோல் மறுபடியும் நெருங்கி நின்று துணியை இன்னும் அகலமாக விரித்துப் பிடிக்க 'விலகிப் போ பெண் மணியே' என்று அவன் மெல்லிய குரலில் கட்டளையிட்டான்.

அந்தக் குரலில் தோன்றிய உறுதியையும், அமைதியையும் பார்த்து, குந்தி தேவி வியந்தாள். தள்ளி நின்று கர்ணனைப் பார்த்தாள்.

மார்பிலே கவசம். காதுகளில் குண்டலம். கண்ணில் அபரிமிதமான ஒளி. உதட்டில் ஓர் இறுக்கம். மூக்கில் ஒரு கூர்மை. முகவாயில் ஓர் அழுத்தம். தோளில் ஓர் உறுதி. மார்பில் ஒரு வலிவு. முகத்தில் ஓர் அமைதி. மேல் துண்டு காற்றில் புரள அரைக்கண் விழித்து உறுத்துப் பார்க்கின்ற மகனைப் பார்த்து, குந்தி தேவி நெகிழ்ந்தாள்.

அவளுக்கு கால்களில் இருந்த வலு மெல்லக் கீழிறங்கியது. யாரையேனும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதுபோல் தடுமாறினாள். பிடித்துக் கொள்ள எதுவுமில்லாததால் கைகூப்பினாள்.

''அப்பா... என் பெயர் குந்திதேவி. நீ கர்ணன்தானே?''

கர்ணன் ஆம் என்று தலையசைத்தான்.

''நீங்கள் பாண்டவர்களின் தாயார்தானே? இங்கு என்னைத் தேடி வர என்ன காரணம்? உங்களுக்கு என்ன எதிர்பார்த்து என்னிடம் வந்தீர்கள்? உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' மெதுவாகக் கேட்டான்.

குந்தி தேவி மேலும் குழைந்து போனாள். இப்படி அவளிடம் யாரும் கேட்டதேயில்லை. அவள் சொன்னதைக் கேட்டிருக்கிறார் களே தவிர, அவளுக்கு என்ன வேண்டுமென்று எவரும் விசாரித்ததில்லை.

குந்தி தேவி நெஞ்சுக்குள் வேதனை புரண்டது. மிகச் சிறந்த மகனை இழந்து விட்டோம் என்ற துக்கம் பொங்கியது. அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

# 12

**உ**ச்சிப்பொழுது தாண்டி சூரியன் மேல்திசை நோக்கிச் சரிய, கர்ணன் மெல்லியதாய் சோர்வானான். பகற்பொழுது முழுவதும் உற்சாகமாக இருக்கின்ற கர்ணன், இரவில் அமைதியாகி விடுவான். பகலிலும் உச்சிவேளை வரைக்கும் உக்கிரமாக இருக்கின்ற கர்ணன், பிறகு சூரியன் சரியச் சரிய சோர்வாகிவிடுவான்.

தனக்கும், தான் விரும்பிப் பூஜை செய்கின்ற அதிதேவதையான சூரியனுக்கும், ஏதோ தொடர்பு இருக்கிறதென்று கர்ணன் நம்பினான். சூரியனை மறுபடியும் மனத்துக்குள் தியானம் செய்து, பேசுவதற்கு எனக்கு வலிவுகொடு என்று வேண்டினான்.

''சொல்லுங்கள் அம்மணி. உங்களுக்கு என் வேண்டும்?''

''நான் மிகப்பெரிய ரகசியத்தை உன்னிடம் சொல்லுவதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். நீ தேரோட்டி அதிரதன் மகன் அல்லன். அவன் மனைவி ராதை உன்னை ஈன்றெடுக்கவில்லை. மாறாய், உன்னுடைய தாய் நான். சூரியனை உபாசித்து, சூரியனின் மூலமந்திரம் சொல்லி, அவரை நேரே வரவழைத்து, அவரின் மூலம் நான் உன்னைக் கருவில் ஏற்றேன். தனியாக இருந்த நான் துருவாசர் கொடுத்த வரத்தைப் பரீட்சை செய்ய இவ்வாறு செய்துவிட்டேன். நான் கர்ப்பமானவுடன் பயந்து போனேன். சூரியனைத் தொழுதேன். சூரியன், 'பிள்ளை பிறந்த பிறகு உன் கன்னித்தன்மை மீண்டும் உனக்குக் கிடைக்கும்' என்று ஆசிர்வதித்தார். நான், நீ பிறந்த பிறகு எவரும் அறியாமல் உன்னைக் கூடையிலிட்டு ஆற்றில் விட்டு விட்டேன். எனக்கு மறுபடியும் கன்னித்தன்மை வந்துவிட்டது. யாருக்கும் தெரியாத இந்த ரகசியத்தை இப்போது உனக்குச் சொல்லுகிறேன்.

நீ பாண்டவர்களில் ஒருவன். தருமனுக்கு அண்ணன். நீ உடனடியாக பாண்டவர்கள் பக்கம் வந்துவிடு. துரியோதனனை விட்டுவிடு. பாண்டவர்கள் பக்கம் வந்து மணிமுடி தரித்து தருமனை இளவரசனாக வைத்து, மற்ற தம்பிகளைத் துணையாக வைத்து அஸ்தினாபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய். அப்படிச் செய்தால் துரியோதனன் தானாகவே ஒடுங்கிப்போவான். எனவே நான் சொல்கின்ற இந்தச் சத்தியத்தைக் கேட்டு அதன்படி பாண்டவர்கள் பக்கம் வந்துவிடு'' என்று கேட்டாள்.

கர்ணன் திகைத்தான். நிமிர்ந்து சூரியனைப் பார்த்தான்.

இது உண்மையா என்று மனசுக்குள் கேட்டான்.

''உலகத்தில் நடக்கின்ற சகலத்துக்கும் சாட்சியாக இருக்கின்ற நீ இதற்கு விளக்கம் சொல்'' என்று சொன்னான்.

''இது உண்மை. நீ குந்தி பெற்ற மைந்தன். என் மூலம்தான் அவளுக்குக் குழந்தை பிறந்தது. நீ வளர்ந்து வருவதை மிகக் கவனத்தோடும், ஆதுரத்தோடும் நான் கவனித்து வந்தேன். நீ என் மகன் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. உனக்கு எது விருப்பமோ அதையே செய்.''

''உங்கள் விருப்பம் என்ன?'' கர்ணன் தன் தந்தையிடம் பணிவோடு கேட்டான்.

''பாண்டவர் பக்கம் நீ சேரவேண்டும் என்பதே என் விருப்பம். தருமம் அவர்கள் பக்கம்தான் இருக்கிறது'' என்று சூரியன் மிருதுவாகப் பதில் சொன்னார்.

'முடியாது' என்று கர்ணன் தலையசைத்தான்.

சூரியதேவன் மெல்லப் பின் வாங்கி மறைந்து போனார்.

''எந்தப் பாபமும் செய்யாத, எந்தக் குற்றமும் செய்யாத என்னை எந்தச் சீராட்டலும் இல்லாமல் ஒரு கூடையில் வைத்து அதை நதியில் விட்டுவிட்டீர்கள். நான் உபயோகமில்லை என்று தூக்கியெறிந்து விட்டீர்கள். நான் ஓர் அவமானச் சின்னம் என்று என்னைப் பிரியத் துணிந்து விட்டீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இன்று வந்து உங்களுடைய மற்ற புதல்வர்களுக்காக இடம்மாறி உங்களிடம் வரச்சொல்கிறீர்கள். யார் எது கேட்டாலும் தரவேண்டிய ஒரு கடமை மகனுக்கு உண்டு. ஆனால், உங்களைத் தாய் என்று என் மனம் ஏற்க மறுக்கிறது. என்னுடைய தாய் ராதை. என் தந்தை அதிரதன். நான் ராதேயா... என்று மக்களால் அழைக்கப்படுவதை மிகவும் விரும்புகிறேன். என் தாயின் பெயரால் என்னைச் சுற்றியுள்ளவர்கள் அழைக்கும்போது நான் குதூகலமடைகிறேன். ஏனெனில், அல்லும், பகலும் என்னை அரவணைத்து அவர்கள்தான் காப்பாற்றினார்கள். வேறு யாரோ பெற்றபிள்ளை என்று தெரிந்தும்கூட என்னிடம் சிறிதளவும் முகமாற்றம் காட்டாது ஊட்டி வளர்த்தார்கள்.

குந்திதேவியாரே... உங்களுக்கு ஒன்று தெரியுமா? ராதை பிள்ளை பெறாதவள். அவள் என்னை வாரி எடுத்தபோது அவள் கொங்கைகளில் பால் வழிந்தது என்று சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவள் பாலைப் பருகி வளர்ந்திருக்கிறேன். எனவே, எனக்கு எந்தக் காலமும் ராதைதான் தாயே தவிர, நீங்கள் அல்ல. உங்களுக்கென்று எந்தக் கடமையும் நான் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

பாண்டவர்கள் பக்கம் நிச்சயமாக என்னால் வரமுடியாது. என்னை என் தாய் ராதை ஆற்றிலிருந்து எடுத்துக் காப்பாற்றினாள். என் நண்பன் துரியோதனன் எனக்கு அரசபதவியைக் கொடுத்து, மிகப்பெரிய கௌரவத்தைக் கொடுத்தான். உயிர் கொடுத்தவர் களுக்கும், உயிரைப் போன்ற கௌரவத்தைக் கொடுத்தவர்களுக்கும் நான் நன்றிக்கடன்பட்டிருக்கிறேனே தவிர, உங்களுக்கோ, உங்கள் புதல்வர்களுக்கோ நான் எந்த நன்றிக்கடனும் பட்டவனல்லன். பாண்டவர்கள் பக்கம் வரும்படி சொல்லுகின்ற கோரிக்கையைத் தயவுசெய்து மறந்துவிடுங்கள். அந்தக் கோரிக்கையை உடனே உங்கள் மனத்திலிருந்து விலக்கி விடுங்கள்.

துரியோதனன் மனைவியோடு நான் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த பொழுது துரியோதனனின் வருகை கண்டு அவள் எழுந்து நின்றாள். ஆட்டத்தை விட்டுத் தோற்றுப்போய் ஓடுகிறாள் என்று நான் அவள் மடியில் கைவைத்தேன். முத்துமாலை அறுந்தது. அங்கு எவனாக இருப்பினும் என்னை வெட்டிச் சாய்த்திருப்பான். தூக்கிலிட்டிருப்பான். ஆனால், துரியோதனன் நெல் முனையளவும் கோபம் காட்டாமல் அறுந்த முத்துகளைப் பொறுக்க முற்பட்டான். கோர்ப்பதற்கு நூல் எடுத்துவா என்று மனைவியிடம் சொன்னான். அப்படிப்பட்டவனுக்கு என்னால் மனத்தாலும்கூட வஞ்சனை செய்ய முடியாது. சிறிதளவும் சந்தேகமில்லாமல் நடந்து கொண்டவனுக்கு எதிராய் நான் எந்தச் செயலையும் செய்ய முடியாது. அவன் சந்தேகத்திற்கு நான் இரையாக முடியாது.

எனவே, இந்தக் கோரிக்கையை விட்டுவிட்டு நீங்கள் விலகிப் போவதே நல்லது.''

ஆனால் குந்திதேவி விலகவில்லை. கர்ணன் வரமாட்டான் என்று அவளுக்கு நன்கு தெரிந்திருந்தது.

அவளை அவன் புறக்கணித்த வேகத்தைப் பார்த்து வேதனைப்பட்டாள்.

'இது விதி. நான் செய்த பாவத்திற்குண்டான தண்டனை' என்று ஏற்றுக்கொண்டாள்.

''கர்ணா...'' ஓடிப்போய் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள். விரல்களில் முத்தமிட்டாள். கைகளை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

''என் மகனே. நீ மறுத்தாலும் என் வயிற்றிலிருந்து வந்த பிள்ளைதானே நீ? நீ உதறினாலும், என் உதிரத்திலிருந்து வந்த குழந்தைதானே நீ? இதை எப்படி மறுக்க முடியும்? சூரியனே வந்து சாட்சி சொன்ன பிறகும் இல்லை என்று நீ விலகிப்போவது எனக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. உன் கோபம் புரிகிறது. அதனால் இந்த வருத்தத்தை நான் தாங்கிக் கொள்கிறேன். தயவுசெய்து... தயவுசெய்து...நீ எனக்கு ஓர் உதவி செய்தேயாக வேண்டும் கர்ணா...''

குந்திதேவி அடிமனத்தில் லேசான வஞ்சனையோடு பேசினாள். அவளுக்கு அவள் பெற்று வளர்த்த ஐந்து குழந்தைகளும் ஞாபகத்திற்கு வந்திருந்தார்கள். அவர்களே அவள் மனத்தை ஆக்கிரமித்திருந்தார்கள்.

கர்ணன் மெல்லச் சிரித்தான்.

''என்ன வேண்டும் குந்திதேவி. சொல்லுங்கள்'' என்று பணிவோடு கேட்டான்.

''உன்னிடம் இருக்கின்ற அந்த நாகாஸ்திரத்தை நீ ஒருமுறைக்கு மேல் போரில் பயன்படுத்தக் கூடாது. அர்ச்சுனனைத் தவிர, உன் சகோதரர்கள் வேறு யாரையும் கொல்லக்கூடாது.''

கர்ணன் இதைக் கேட்டதும் வாய்விட்டுச் சிரித்தான்.

''யாருடைய தந்திரம் இது? ஸ்ரீ கிருஷ்ணனுடைய தந்திரமா? நல்லது. ஒரேயொரு முறை நாகாஸ்திரம் பிரயோகம் செய்தாலே பாண்டவர் கும்பல் மொத்தமும் எரிந்து சாம்பலாகிவிடும். இரண்டாவது முறை பிரயோகம் செய்ய வேண்டிய அவசியமே இருக்காது. அர்ச்சுனனைத் தவிர மற்றவர்களைக் கொல்ல வேண்டாம் என்று சொல்கிறீர்கள். அர்ச்சுனனைக் கொன்றுவிட்டால் மற்றவர்கள் எல்லாம் உயிரோடு இருப்பார்களா? நான் நிச்சயம் அர்ச்சுனனைக் கொல்லுவேன். மற்றவர்களைத் துன்புறுத்தக்கூட மாட்டேன். உங்களுக்கு இரண்டு வரங்களையும் தந்தேன். நாகாஸ்திரம் ஒரு முறைக்கு மேல் விடப்படமாட்டாது. அர்ச்சுனனைத் தவிர மற்ற சகோதரர்கள் என்னால் கொல்லப்படமாட்டார்கள்'' என்று கையடித்துச் சத்தியம் செய்தான்.

குந்திதேவி நிம்மதியானாள். பெருமூச்சு விட்டாள்.

கர்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

'என்ன வஞ்சனையான உலகமடா. பெற்ற தாய்கூட இப்படி இருக்கிறாளே' என்று வேதனைப்பட்டான்.

'ஜெயாய ஜெயபத்ராய ஹர்யச்வாய நமோ நமஹ. சூர்யதேவனே. இப்படி அநாதையாய் வளருவதற்காகவோ பூமிக்கு வந்து இவள் வயிற்றில் என்னை விதைத்தீர்? எந்தத் துணையுமின்றி தனிமையில் வாடவோ, என்னை இங்கு கொண்டு வந்து கொடுத்தீர்?' என்று கண்ணில் நீர் துளிர்க்க வேண்டினான்.

''வரம் கேள். வரம் கேள்'' உள்ளுக்குள் ஏதோ ஒரு குரல் கேட்டது. குனிந்து குந்திதேவியைப் பார்த்தான். குந்திதேவி முகம் முழுவதும் நிம்மதியாக விடைபெறத் தயாராக இருந்தாள்.

''குந்திதேவி... அர்ச்சுனனைப் பெற்றவளே. இப்பொழுது சந்தோஷம்தானே. பதிலுக்கு எனக்கு இரண்டு வரங்கள் தரவேண்டும்.'' அவளைக் கூர்ந்து பார்த்துப் பேசினான்.

குந்திதேவியின் முகம் இருண்டு போயிற்று. சட்டென்று மிரண்டாள். என்ன கேட்பானோ என்று தயங்கினாள்.

''முதல் வரம். நான் உன்னுடைய தாய் என்று உலகத்திற்கு இப்போது சொல்லவே கூடாது. சொன்னால் துரியோதனன் என் மீது அவநம்பிக்கை கொள்வான். இரண்டாவது நான் போரில் நிச்சயம் இறப்பேன். இறந்தபோது, அப்பொழுது அருகே வந்து என்னை மடியிலிட்டு மகனே என்று என்னை அழைக்க வேண்டும். அங்குள்ள அத்தனை பேருக்கும் நான் குந்திதேவியின் மகன். அரசகுலத்தைச் சேர்ந்தவன் என்று தெரியவேண்டும். குறிப்பாய் க்ஷத்திரியர்களுக்கு நான் யார் என்று தெரியவேண்டும். நீ செய்வாயா குந்திதேவியே?...'' என்று கேட்க அவள் சரியென்று சத்தியம் செய்தாள்.

அப்பொழுது கர்ணனின் முகம் மலர்ந்தது. மயங்கிச் சரிந்து கொண்டிருக்கின்ற சூரியனை நோக்கி அவன் கைகூப்பினான். அப்படியே உலாவியபடியே இனி என்னாகும் என்று யோசித்தான்.

'உலகத்தின் எல்லா ரகசியங்களையும் அறிந்த ஸ்ரீ கிருஷ்ணன் குந்தியை அனுப்பியிருக்கிறார். அவர்தான் இந்த ரகசியத்தைக் குந்திக்கும், குந்தியின் மூலம் எனக்கும் சொல்லியிருக்கக்கூடும். எதற்காக இதை ஸ்ரீ கிருஷ்ணன் சொல்ல வேண்டும்? ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இதில் என்ன லாபம்? கூர்மையாக யோசித்தான்.

ஸ்ரீ கிருஷ்ணன் யாதவகுலம். இடையர். இடையர்களுக்கு அரசன். துரியோதனனாலும் இன்னும் பல மன்னர்களாலும்

இடையனே என்று அழைக்கப்பட்டவர். க்ஷத்தியர்களால் அவமானப் படுத்தப்பட்டவர். எனவே, ஸ்ரீ கிருஷ்ணன் க்ஷத்திரியர்களை அழிப்பதன் மூலம் பூமியின் பாரத்தைக் குறைப்பதற்கு முடிவு செய்துவிட்டார். ஊரிலே பல பெண்களை மணந்து, பல பெண்கள் மூலம் பல பிள்ளைகள் பிறந்து, பல பிள்ளைகள் மூலம் பல பெண்கள் மணக்கப்பட்டு, பல பெண்கள் மூலம் பல பிள்ளைகள் பிறந்து, க்ஷத்திரியக்கூட்டம் பெருகி பிசாசாய்த் தவிக்கிறது. இடையறாது பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். வெறும் மூடர்களாகவும், மூர்க்கர்களாகவும் பிள்ளைகள் பிறந்து தேசத்தை வதைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உயிரினங்கள் துடித்துக் கொண்டிருக் கின்றன. ஆடுகளும், மாடுகளும் கண்ணீர்விட்டு அழுகின்றன.

புகழுக்காகவும், திமிருக்காகவும் இந்த உயிர்கள் வதை செய்யப்பட்டிருக்கின்றன. தேசத்தினுடைய அமைதியை இந்த முட்டாள்கள் கெடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். மக்களை இடையறாது அவமதித்துக் கொண்டேயிருக்கிறார்கள். திமிரோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் கொட்டத்தை அடக்க ஸ்ரீ கிருஷ்ணன் முடிவுசெய்து விட்டார். இந்தப் போரில் அதிகம் திமிர்பிடித்து துரியோதனன் அழியவேண்டுமென்று முடிவுசெய்து விட்டார். பெரிய போர் ஒன்றை ஏற்படுத்தி இரண்டு பக்கமும் க்ஷத்திரியர்கள் அதிகம்பேர் இறக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டார். உடல் வலிவே மிக முக்கியமானது என்று நினைக்கின்ற முட்டாள்களெல்லாம் மடியப் போகிறார்கள். ஆயுதங்களைக் கையில் ஏந்தி மிருகங்களைப் போல் திரிந்தவர்களெல்லாருமே மரணமடையப் போகிறார்கள். உலகத்தின் அவஸ்தை பெரும்பாலும் தீரப்போகிறது. நானும் இந்தக் கும்பலில் ஒருவனாக இறக்கப் போகிறேன். துரியோதனன் பக்கம் நின்றதால் இறக்கப்போகிறேன்.

நான் துரியோதனன் பக்கம் நின்றதால்தான் இந்தப் போர். என்றைக்கு நான் அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டேனோ, என்று எனக்கு அரச பதவி அளித்து, என்னை அவன் நண்பனாக ஏற்றுக் கொண்டானோ, அன்றிலிருந்து துரியோதனன் ஆடிக்கொண்டுதான் இருக்கிறான். துரியோதனன் ஆட்டம் நாளுக்கு நாள் அதிகமாகி, இன்று போருக்கு வந்து நிற்கிறது. போர் தொடங்குவது நிச்சயம். க்ஷத்திரியர்கள் மடிவது நிச்சயம். துரியோதனன் இறப்பது நிச்சயம். இந்தக் கர்ணனும் அடிபட்டுச் சாகப்போவது நிச்சயம்.

சூர்யதேவா... இதற்குத்தான் படைத்தீரா? இதற்காகத்தான் பிறந்தேனா? பூபாரத்தை ஸ்ரீ கிருஷ்ணன் குறைப்பதற்கு நானும் ஒரு கருவியா? ஒரு முறைக்கு மேல் நாகாஸ்திரம் விடவேண்டாமென்றால் என்ன அர்த்தம்? அந்த முறை நான் எப்படியாவது அர்ச்சுனனைத் காப்பாற்றிவிடுவேன் என்று அர்த்தம். அர்ச்சுனனைத் தவிர வேறு யார் மீது நான் நாகாஸ்திரத்தை எய்வேன்? அர்ச்சுனனைத் தவிர மற்றவர்களைக் கொல்வது எளிது. தருமரோ, பீமனோ, நகுலனோ, சகாதேவனோ இறந்து போனால் அர்ச்சுனன் போரைக் கைவிட்டு விடுவான். போரைக் கைவிட்டுவிட்டால் துரியோதனன் வென்று விடுவான்.

துரியோதனன் வென்று விட்டால் க்ஷத்திரியர் கூட்டம் அதிகமாகும். எனவே, க்ஷத்திரியர்களை மொத்தமாக வேரறுக்க அர்ச்சுனனைத் தவிர வேறு சகோதரர்களைக் கொல்லவேண்டாம் என்று வரம் வாங்கி விட்டாள். ஒரு போரில் எதிரியைக் கொல்ல வேண்டாம் என்று எவரேனும் வரம் கேட்பார்களா? எவரேனும் அப்படிக் கேட்ட வரத்தை அங்கீகரித்துக் கொடுப்பார்களா? கர்ணனைக் கொல்லாதே என்று குந்தி எவரையேனும் கேட்பாளா? விதி என்னிடம் கேள்வி கேட்க வைக்கிறது. நானும் கொடுத்துவிட்டேன். பாண்டவர்கள் பக்கம் வெற்றி நிச்சயம் என்பது இதிலிருந்து உறுதியாகிவிட்டது.

பாண்டவர்கள், தன் பேச்சைக் கேட்கிறார்களா என்று பல சோதனை வைத்து பாண்டவர்களை வனவாசம் போகவைத்து, மிருதுவாக்கி முழுமையாய், ஒரு வருடம் அவர்களை ஓர் அரச சபையில் ஏவலாட்களாக உட்காரவைத்து. ஏவலாட்களின் வேதனைகள் எத்தனை என்று புரியவைத்து, நான்காவது வருணத்தாரோடு வாழவைத்து அவர்களுடைய வாழ்க்கையின் துயரத்தைத் தெரிந்து கொள்ள வைத்து, எல்லா மனிதர்களும் சமம் என்று தெரியவைத்து ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்களைப் பக்குவப் படுத்திவிட்டார்.

கோபமாகப் பேசவோ, ஏளனமாகப் பேசவோ, எள்ளி நகையாடவோ நிச்சயம் இனி அவர்கள் முன்வர மாட்டார்கள். க்ஷத்திரிய குணங்களை அவர்களிடமிருந்து வெளியேற்றிவிட்டதால் அவர்கள் சாதாரண மனிதர்களாக, இதம் மிகுந்தவர்களாக மாறிவிட்டார்கள். துரியோதனனுக்கு மாறத்தெரியவில்லை. மாறவும் மாட்டான்.

ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாம் வல்லவர். கடவுள் அவதாரம் என்று பலமுறை சொல்லப்பட்ட போதும் அதை நம்பாமல் கொல்ல முயன்ற முட்டாள் துரியோதனன். அந்த முட்டாளின் நண்பன் நான். என் விதி முடிந்துவிட்டது. வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

பரம்பொருளே... அலகிலாத உன் விளையாட்டினுடைய ஒரு சாயலை நான் நேற்று அரசசபையில் பார்த்தேன். இந்த விளையாட்டில் என்னையும் ஓர் அங்கமாக வைத்திருப்பதில் எனக்குச் சந்தோஷம் அதிகம்.

'ஐயனே... நான் மட்டும் பார்க்க. உன்னை நன்றாகப் பார்க்க... கண்குளிரப் பார்க்க... மனம் குளிரப் பார்க்க... உன்னை நெஞ்சினில் நிறுத்திக் கொள்ள ஜென்மசாபல்யம் அடைய, இனி மறுபடியும். பிறவாதிருக்க, உன் விஸ்வரூப தரிசனத்தை எனக்குத்தா'. உள்ளுக்குள் கைகூப்பினான்.

சூரியன் மெல்லச் சரிந்து மலைகளுக்கு நடுவே விழுந்தான். இருள் சூழ்ந்தது.

கர்ணன் சோர்ந்துபோய் படுத்துக்கொண்டான். எங்கே...எங்கே என்று தேடினார்கள். அவர்கள் தேடுவது தெரிந்ததும் அவன் தன் இருப்பிடத்தை வெளியே தெரிவிக்கவில்லை. தூங்கவே விரும்பினான்.

# 13

**உ**லகிலுள்ள எல்லா உயிரினங்களையும் மயங்கச்செய்யும் இரவு வந்தது.

கர்ணன் ஆழ்ந்து தூங்கினான். எதன் மீதும் பற்றும் இல்லாமல், எதன் மீதும் பிடிப்பும் இல்லாமல், எந்தக் கொள்கையும் இல்லாமல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு குழந்தைபோல் தூங்கினான்.

தன் பிறப்பு பற்றியோ, வளர்ப்பு பற்றியோ, செய்தது பற்றியோ செய்யப்போவது பற்றியோ அக்கறை இல்லாமல் தூங்கவே பிறந்ததுபோல் தூங்கினான். கனவுகளின்றி சலனங்களின்றி தன் உடம்பைத் தளரவிட்டான். உள்ளும் புறமும் உள்ள எல்லா அங்கங்களையும் நிம்மதியாக ஓய்வெடுக்கச் செய்தான்.

கிழக்கே மெல்ல வெளிச்சம் பரவியது. விடிந்தது.

சூரியன் எழும்பியதும் கர்ணன் சுறுசுறுப்பானான். கிழக்கு நோக்கிக் கும்பிட்டான்.

ஓய்வெடுத்த அத்தனை அங்கங்களும் சுறுசுறுப்பாயின. உற்சாகமாயின. ஓடுகின்ற ஜலத்தில் குளித்து எழுந்ததும் கர்ணன் வேகமானான். மிக தேஜஸ்வியாய் நல்ல உடைகளோடு அரண்மனை நோக்கிப் போனான்.

எதுபற்றிப் பேசவேண்டும். எவரோடு பேச வேண்டும். என்ன மனோநிலையில் இருக்க வேண்டும் என்று எந்தத் திட்டமும் இல்லாமல் ஒரு சாதாரணச் சிறுவன் போலப் போனான்.

கொதிப்பில்லாத மனமும், குளுமையான முகமும் பிரகாசமான கண்களும் கொண்டவனாய் ஒரு யானையின் கம்பீரமான நடையைப் போலும் நடந்து சபைக்குள் புகுந்தான்.

துரியோதனனைப் பார்த்ததும் உள்ளுக்குள் பெரும் உவகை பொங்கியது.

'இவனல்லவா காரணம்? இவனல்லவா என் சகல மேன்மை களுக்கும் காரணம்? இவனால் அல்லவா இந்த சபைக்குள் இப்படிப்பட்ட உடைகளோடும், இந்த கம்பீரத்தோடும் நுழைகிறேன்? என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்துகொண்டு எனக்கு சம அந்தஸ்து அளித்தானே. இவன் நட்பல்லவா காரணம்? என்னிடம் காட்டியது போன்ற கருணையே இந்தத் துரியோதனனும் இவனைப் போன்ற க்ஷத்திரியனும் மற்ற உயிர்களிடம் காட்டினால் எப்படி இருக்கும்? உலகிலுள்ள அத்தனை க்ஷத்திரியர்களும் கர்வம் விட்டுவிட்டு மக்களுக்குச் சேவை செய்தே வாழ்ந்தால் எப்படியிருக்கும்?

துரியோதனா. மரணம் மனிதர்களுக்கு மிகப் பெரிய பாடம். இந்தப் போரினால் ஏற்படும் மரணம், வலி, வேதனை போன்றவை உன்னுடைய கர்வத்தை, உன் தம்பிகளினுடைய கர்வத்தை வெகு நிச்சயம் குறைக்கும்.

உயிருக்குப் பயந்து நடுங்குவது என்பது வசதியானவர்களுக்கு எல்லா நேரமும் ஏற்படுவதில்லை. வலுவுள்ளவர்களுக்கு வருவதில்லை. இம்மாதிரியான போர்க் காலங்களில் அவர்கள் உயிர்க்குலையும் ஆட்டப்படும். அப்பொழுதுதான் மற்ற உயிர்கள்

என்ன வேதனைப்பட்டிருக்கின்றன என்பது இவர்களுக்குத் தெரியும். எனவே, போர் செய். அடிவாங்கு. இழப்புகளை எதிர்கொள்.

துரியோதனா... இந்தப்போரில் உனக்காக நானும் இறப்பேன். அப்படி இறக்கையில் என்னை இழக்கையில் உன் மனம் மாறாதா? உன் க்ஷத்திரியக்கூட்டம் ஆயுதங்களைக் கீழே போடாதா? உண்மை யையும், சத்தியத்தையும் கையில் எடுத்துக்கொள்ளாதா? அன்பையும், அனுசரணையையும் தன்னுடைய இயல்பாகக் கொள்ளாதா?

துரியோதனா போர் செய். உலகத்தைப் புரிந்துகொள். வலியை அறிந்துகொள். வாழ்க்கையினுடைய நிலையாமையைப் புரிந்து கொள். வா. துரியோதனா. வா, என் சிநேகிதனே வா.

அவன் கைகள் விரித்து சபைக்கு நடுவே நடந்து போனான். தன்னுடைய ஆசனம் விட்டுக் கீழிறங்கி ஓடி வந்தான். கர்ணனுக்கு அருகே வந்து அவனை ஆரத்தழுவிக் கொண்டான். துரியோதனனுடைய தம்பிகளும், சகுனியும், சேனாதிபதிகளும், படைவீரர்களும் உரக்ககோஷம் செய்தார்கள். வாழ்த்தொலிகள் எழுப்பினார்கள்.

சபையில் முக்கியமானவர்கள் யுத்தத்தின் ஆலோசனைக்காக வேறிடத்திற்கு நகர்ந்தார்கள். சதுரவடிவமாக அமர்ந்து கொண்டார்கள். பீஷ்மர் யுத்தம் செய்வது எப்படி என்று விவரித்து அவருக்கு உண்டான தகுதி என்ன என்பதை விளக்கினார். பதவிகளைப் பிரித்துக் கொடுத்தார்.

''நம்முடைய சேனைக்கு நானும், துரோணரும், அஸ்வத் தாமனும், அதிரதர்கள், பூரிசிலபஸ், பகதத்தன், சோமதத்தன், மாரதர்கள், கிருபர், சல்லியன், சகுனி, ஜெயரதன் சமரதர்கள், கர்ணன் முதலியோர் அர்த்தரதர்கள்'' என்று கர்ணனைக் கடைசி வரிசைக்கு அனுப்பினார். எல்லாரும் திகைத்தார்கள். ஏன் என்பது போல் கர்ணனைப் பார்த்தார்கள். கர்ணன் வெகுண்டு எழுந்தான். துரியோதனனைத் திரும்பிப் பார்த்தான்.

''இது நியாயமா ஏன் இப்படிச் செய்கிறார் பீஷ்மர்? இதைக் கேட்கமாட்டாயா'' என்று உறுமலாகப் பேசினான்.

துரியோதனன் கர்ணனையும், பீஷ்மரையும் மாறி மாறிப் பார்த்தான். பேச வாய் எடுத்தான்.

பீஷ்மர் கை உயர்த்தினார்.

''நான்தான் சேனைக்குத் தலைவன் எனில், நான்தான் இந்தப் போரை நடத்த வேண்டுமெனில் நான் எப்படிச் சொல்கிறேனோ அப்படித்தான் இங்கு யுத்தம் நடக்க வேண்டும். நான் எப்படி விரும்புகின்றேனோ அப்படித்தான் சேனைகள் அணிவகுக்கப் படவேண்டும். உங்களுக்கு வெற்றி வேண்டுமெனில், பாண்டவ ர்களை ஜெயித்து வாகை சூட வேண்டுமெனில், என் பேச்சை நீங்கள் கேட்டே ஆகவேண்டும். மாற்றுக் கருத்து இருப்பவர்கள். என் சபையை விட்டு வெளியேறலாம் அல்லது இங்கே எல்லாருக்கும் மாற்றுக் கருத்து இருப்பின் நான் இந்தச் சபையைவிட்டு வெளியேறுவேன்'' என்று உரத்துச் சொன்னார்.

துரியோதனன் அடங்கிப் போனான்.

வெற்றி வேண்டும் என்கிற ஆசை பாண்டவர்களை ஜெயிக்க வேண்டும் என்ற பேராவல்-அவனை மௌனமாக இருக்கச் செய்தது.

கர்ணன் உள்ளே துவண்டான்.

ஆக, சரியான சந்தர்ப்பத்தில் நண்பனும் கைவிட்டு விடுகிறான். அவனும் என் அவமானம் துடைக்காமல் அப்படித்தான் என்பது போல் மௌனமாக இருந்து விடுகிறான்.

கர்ணனை இது வேதனைப்படுத்தியது. முகம் மாறியது. நெஞ்சு குமுறியது.

அவன் அமர்ந்தான். தலைகவிழ்த்துக் கொண்டான்.

சட்டென்று எழுந்தான். பீஷ்மரை நோக்கிப் போனான்.

‘‘நீர் இருக்கும் வரை இந்தச் சேனையில் நான் இருக்க விரும்பவில்லை. நீர் மரணமடைவீர். அப்போது நான் படையின் தலைமை வகிப்பேன். துரியோதனனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுப்பேன். உம்மைப் போன்ற வெறும் பேச்சு பேசுகின்ற கிழவர்களால் ஒருநாளும் துரியோதனன் வெற்றியடையப் போவதில்லை. இதைத் துரியோதனனும் மற்றவரும் வெகு சீக்கிரத்தில் உணர்வார்கள்'' என்று சொல்லி வெளியேறினான்.

பிரகாசமான ஒரு விளக்கு அறையைவிட்டு வெளியேறியது போல அந்தச் சபை இருந்த இடம் இருட்டாகியது.

துரியோதனன் மனம் துவண்டான். மிகப் பெரிய போரை எதிர்கொள்ள வேண்டிய அந்தக் கூட்டம் தொடக்கத்திலேயே பிணக்குற்று கோபமான வார்த்தைகள் பேசப் பயப்பட்டு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாமல் இருண்டு கிடந்தது.

துரியோதனன் தன் தம்பியர் சிலரை அழைத்து கர்ணனை மறுபடியும் சபைக்கு அழைத்து வரச் சொன்னான். அந்த இளைஞர்கள் ஓடி வந்து கர்ணனைப் பணிந்து மறுபடியும் சபைக்கு வருமாறு கெஞ்சினர்.

சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டியிருந்த படியால் கர்ணன் மறுபடியும் சபைக்குத் திரும்பினான். தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். பீஷ்மரின் முகம் பார்க்காமல் வேறு திசையில் திரும்பிக் கொண்டான்.

துரியோதனனுக்கு, கர்ணன் இழிவுபடுத்தப்படுவது அடி மனத்தில் வலித்துக் கொண்டே இருந்தது.

எதிர் அணியின் பலம் பற்றி எடை போடப்பட்டது. படை சேனாதிபதிகள் எதிர் அணியில் பலமுள்ளவர்கள் யார் யார் என்றும்,

அவர்கள் எப்படி அணிவகுப்பார்கள் என்றும் சொன்னார்கள், பெரிய பட்டியலாக மாவீரர்கள் பட்டியலை பாண்டவர்கள் பக்கம் இருப்போரின் பெயர்களைப் படித்தார்கள்.

துரியோதனன் சற்று மிரண்டு போனான்.

''எத்தனை மாவீரர்கள். அவரவர்களுக்கு எவ்வளவு சேனைகள். இவ்வளவு பெரிய படையைக் கொல்ல எத்தனை நாளாகும்?'' என்று பீஷ்மரைப் பார்த்துக் கேட்டான்.

பீஷ்மர் ''ஒரு மாத காலமாகும்'' என்றார்.

துரியோதனன் கிருபர் பக்கம் திரும்பினான்.

''இதை இரு மாத காலங்களில் அழிப்பேன்'' என்று கிருபர் சொன்னார்.

அஸ்வத்தாமனை நோக்கி, கேள்வியோடு பார்த்தான்.

''நான் பத்து தினங்களில் அழிப்பேன்'' என்று அஸ்வத்தாமன் உரக்கச் சொன்னான்.

கர்ணனை நோக்கி ''நீ சொல் கர்ணா'' என்று வினாவினான்.

''ஐந்தே தினத்தில் அந்தப் படைகள் முழுவதையும் நான் அழிப்பேன்'' என்று கர்ணன் உரக்கச் சொல்ல, துரியோதனன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான். பீஷ்மர் வாய்விட்டுச் சிரித்தார்.

''அது வெறும் பேச்சு. ஒரு நாளும் நடக்காத விஷயம்'' என்று பீஷ்மர் உரக்கச் சொல்ல, மறுபடியும் அங்கு விவாதம் எழும்பியது. ஆளாளுக்குப் பேசத் தொடங்கினார்கள்.

சபை கூச்சலாய் முடிந்தது.

துரியோதனனின் படை குருக்ஷேத்திரம் நோக்கி நகரத் தொடங்கியது.

கர்ணன் படைகளுக்கு தங்கும் இடத்தை ஏற்பாடு செய்தான். அணிவகுப்பின் பின்பகுதியில் நின்றான்.

பீஷ்மர் இருக்கும் வரை போர்புரிய எண்ணமில்லாததால் அவன் படைவீரர்களோடு கலந்து, உணவு சமைப்பவர்களுக்கு அருகே நின்று அவர்களுடன் பேசி உற்சாகப்படுத்தி, கொண்டாடினான்.

வைத்தியர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். அவர்கள் தயாராக இருக்கிறார்களா என்று சோதனை செய்தான். பெரிய காயங்களுக்குப் போடவேண்டிய களிம்புகளையும் ஊமைக் காயங்களுக்குப் போடவேண்டிய மருந்துகளையும் சோதனை செய்து பார்த்தான். எல்லா மருந்துகளும் தயார் நிலையில் இருக்கின்றனவா என்று பரிசோதனை செய்தான். வைத்தியர்களுடைய உதவியாளர் களோடு உட்கார்ந்து பேசினான். இன்னும் என்ன உதவிகள் வேண்டும். சுமக்கக் கொடுத்த கழுதைகள் சரியாக இருக்கின்றனவா என்று வினவினான். விவரம் தெரிந்து கொண்டான். வேண்டுமென்ற உதவிகளைச் செய்தான்.

வீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய நீராகாரங்களையும் மது வகைகளையும், அவர்கள் குளிப்பதற்கு உண்டான இடங்களையும் படுத்துத் தூங்குவதற்கு உண்டான அமைப்புகளையும் மேற்பார்வை யிட்டான். போர் தொடங்குகிறது என்று அறிவிக்கப்பட்டது. பெரிய பரண் மீது ஏறி அங்கு நின்று சேனைகளின் அணிவகுப்பைப் பார்த்தான்.

தருமர் பலவர்ணக் கொடியுடனும், பீஷ்மர் மிக தேஜஸ்வி யாகவும் சேனையின் முன் பாகத்தில் வளைந்த வில்லோடும், கையில் அம்போடும் யுத்தத்திற்குத் தயாராக நின்றார்.

போர்ப் படைகள் முழுங்கின. சங்குகள் ஒலிக்கத் தொடங்கின.

அர்ஜுனன் கையிலிருக்கிற வில்லைத் தரையில் எறிவதையும், தடேரேன்று ஆசனத்தில் உட்காருவதையும், தலையில் கைவைத்து அழுவதையும் கர்ணனால் பார்க்க முடிந்தது.

கிருஷ்ணர் திரும்பி அர்ஜுனனுக்கு சமாதானம் சொல்வதையும் கர்ணன் அங்கிருந்தே கவனித்தான்.

கிருஷ்ணர் மிகுந்த பிரியத்தோடு, அமைதியோடு அர்ஜுனனைச் சமாதானப்படுத்துவதும், உற்சாகப்படுத்துவதும் பரணிலிருந்து பார்க்கும்போது தெரிந்தன.

ஒரு வீரனை, போரிடுபவனை உற்சாகப்படுத்த பரமாத்மா நீ மனிதனாக அவதரித்து உபதேசம் செய்கிறாய். கிருஷ்ணா. இந்த உபதேசம் உலகம் முழுவதும் இருக்கிற எல்லாப் போராளிகளுக்கும் போய்ச் சேரட்டும். யாரெல்லாம் தர்மத்தின் வழியாக நின்று ஜெயிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ, அவர்களெல்லாம் நீ இப்பொழுது சொன்னதைச் செவிமடுக்கட்டும். அப்படி ஜெயிப்பதற்கு உன்னுடைய இந்த வாசகங்களே காரணமாக இருக்கட்டும்.

உலகிலுள்ள பல்வேறு மொழிகளில் இது சொல்லப்படட்டும். பேசப்படட்டும், படிக்கப்படட்டும். கிருஷ்ணா. நீ இதற்காகத்தானே யாதவனாக வளர்ந்திருக்கிறாய்? மாடுகள் மேய்ப்பதைப் போல கிருஷ்ணா. நீ மனிதர்களை இடையறாது மேய்த்துக் கொண்டிருப் பதை என்னால் உணரமுடிகிறது. உனக்கு அருகே இருந்திருந்தால் உன் அருமை தெரியாது போயிருக்கும். உனக்கு எதிராக இருப்பதால் நீ யார் என்பதை நான் நன்கு உணர்கிறேன். இங்கிருந்து பார்க்கும் பொழுது உன்னதத்திலும் உன்னதமான ஒரு விஷயத்தை நீ சொல்லிக் கொண்டிருக்கிறாய் என்பதை உணர்கிறேன்.

''கிருஷ்ணா. வர்ணபேதம் தாண்டி அந்தத் தொழில், ஜாதி வித்தியாசம் இல்லாமல் எல்லாருக்கும் உன் சொற்கள் பயன்படட்டும். உலக வாழ்க்கைக்கு மறையாக உன் பேச்சு விளங்கட்டும். இன்னொரு பிறவியில் அதை நான் செவிமடுப்பேன். இன்று உன்னை கவனித்ததை நான் அன்றும் நினைவு கூர்வேன்.''

கர்ணன் தொலைவிலிருந்து கிருஷ்ணரை நோக்கிக் கை நீட்டினான்.

கிருஷ்ணரிடமிருந்து கர்ணனுக்கு தூது வந்தது. அவனை பாண்டவர் பக்கம் சேரச் சொல்லி கிருஷ்ணர் கூறியதாக வந்த தூதுவன் கர்ணனிடம் பணிந்து கூறினான்.

கர்ணன் எழுந்து நின்றான். தலைகுனிந்து வணங்கினான்.

''எதன் பொருட்டும் எவர் பொருட்டும் எப்பொழுதும் துரியோதனனை நான் கைவிடமாட்டேன். அவன் பக்கம் நின்று போர் செய்வேன்'' என்று கிருஷ்ணரிடம் சொல்லிவிடு'' என்று உரக்கச் சொல்ல, அருகிலுள்ள வீரர்கள் அவனைக் கொண்டாடினார்கள்.

அச்செய்தி துரியோதனனுக்குப் போயிற்று. துரியோதனன் உற்சாகமானான். மறுபடியும் சங்கங்கள் முழங்கப்பட்டன. யுத்தம் தொடங்கலாம் என்று கொடி அசைக்கப்பட்டது. போர் வீரர்கள் பாய்ந்து ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்.

பீஷ்மர் மிகுந்த உக்கிரத்தோடு போர் செய்தார்.

பாண்டவர்கள் பக்கம் பல வீரர்கள் மடிந்தார்கள். பத்து நாள் போரிலும் கர்ணன் படைகளின் பின்பக்கமே நின்று சரிந்து கிடந்த வீரர்களை உற்சாகப்படுத்தி அவர்களை மருந்திட்டு சுகப்படுத்தி போர் முனைக்குத் திரும்ப அனுப்பிக் கொண்டிருந்தான். இறந்தவர்களுக்கு இறுதிக் கடன்கள் செய்தான்.

பத்தாம் நாள் போரில் அர்ஜுனனால் கடுமையாகத் தாக்கப்பட்டு பீஷ்மர் தேரிலிருந்து கீழே விழுந்தார்.

பூமியில் அவர் சாய முடியாதபடி அவர் உடல் முழுவதும் பாணங்கள் துளைத்து நின்றன.

தன்னுடைய மகன் சரிந்து விழுவதைப் பார்த்து கங்கை, ரிஷிகளை அவரிடம் அனுப்பினாள். அன்னப்பட்சியின் வடிவாக

அம்புப்படுக்கையில் கிடக்கும் பீஷ்மரை நோக்கி அவர்கள் பறந்து போனார்கள். ''இது தட்சிணாயனம், உத்தராயனம் வரட்டும்'' என்று கூறிவிட்டு தெற்கு நோக்கிப் பறந்தார்கள்.

பீஷ்மர் சரிந்ததைப் பார்த்து போர் அரைகுறையாக நின்றது. பெரும் வீரர்கள் அவரைச்சுற்றி நின்று கொண்டார்கள்.

அவர் தலை தொங்கியிருந்தது. தலையணை வேண்டும் என்று அவர் கேட்டபோது அர்ஜுனன் மூன்று அம்புகளை ஒன்றாக நிறுத்தி அவர் தலையைத் தூக்கி நிறுத்தினான். பீஷ்மர் அவனை வாழ்த்தினார். உடம்பிலுள்ள அம்புகளைப் பிடுங்கும் மருத்துவர்கள். நிறையக் களிம்புகளோடு, அவருக்கருகே அமர்ந்து கொண்டார்கள்.

''இல்லை துரியோதனா. இந்த மருத்துவர்களுக்கு உரிய மரியாதை செய்து திருப்பி அனுப்பி விடு. நான் அம்புகளோடே உத்தராயனம் வரை இருப்பதற்கு விரும்புகிறேன். உத்தராயனம் மரணமடைவதற்கு நல்ல காலம். உத்தராயனத்தின் போது என் உயிர்பிரியும். அன்றுவரை இந்த அம்புப் படுக்கையில்தான் இருப்பேன். இந்த அம்புகளுடனே என்னை நான் இறந்தபிறகு தகனம் செய்துவிடு'' என்று வேண்டிக் கொண்டார்.

இரவு மெல்லக் கவிழ்ந்தது. கர்ணன் பீஷ்மர் படுத்திருக்கிற இடம் நோக்கிப் போனார். தொலைவிலிருந்து அவரைப் பார்த்தான்.

அங்கே அவருக்கு நறுமணம் வீசக்கூடிய பூக்களையும், திரவியங்களையும் அவர் மீது ஊற்றி அவரைக் குளுமைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். உடல் முழுவதும் தைக்கின்ற பாணத்தின் வேதனையைப் பொறுத்துக் கொண்டு அவர் மௌனமாகப் படுத்திருந்தார். குடிக்க நீர் வேண்டும் என்ற போது அர்ஜுனன் பூமியை அம்பால் பிளந்து நீர் வரவழைத்தான்.

நீர் பொங்கி பீஷ்மரின் வாய்க்கு நேராய்த் திரும்பியது. அவர் வாயில் நீர் ஊற்றப்பட்டது. அர்ஜுனனால் வரவழைக்கப்பட்ட நீரை

அருந்தி பீஷ்மர் தாகசாந்தி செய்துகொண்டார். மறுபடியும் கண் மூடினார்.

கர்ணன் இரண்டடி முன் வைத்து அவரை நோக்கி நடந்தான். மெல்லக் கண்விழித்து கர்ணனை பீஷ்மர் பார்த்தார். அருகே வா என்று அழைத்தார்.

கர்ணன் பீஷ்மருக்கு அருகே போய் நின்றான். அவன் மனம் துக்கத்தால் தவித்தது.

# 14

**பீ**ஷ்மருக்கு அருகே கர்ணன் வந்து நின்றதைக் கண்டதும் பஞ்சபாண்டவர்கள் விலகிப் போனார்கள். தன்னைச்சுற்றி, காவல் காக்கும் வீரர்களையும் பீஷ்மர் தள்ளியிருக்கச் சொன்னார்.

பீஷ்மர் தன்னோடு பேசவிரும்புகிறார் என்று தெரிந்து கர்ணன் இன்னும் அருகே நெருங்கினான். மூச்சுக்காற்று படும் தூரத்தில் அவருக்கருகே மண்டியிட்டு அமர்ந்தான்.

''நான் கர்ணன். ராதையின் மகன். தேரோட்டியின் புதல்வன்'' என்று மிருதுவாகச் சொன்னான்.

''இல்லை கர்ணா. நீ தேரோட்டி அல்லன். தேரோட்டியின் மகனுமல்லன். நீ சூரியனின் அம்சம். சூர்யனின் குழந்தை. ஜெயிக்க முடியாத ஒப்பற்ற வீரன். நீ போரில் பராக்கிரமம் காட்டக் கூடாது என்று என்னுடைய ஆர்வத்தைக் குலைக்கவே நான் உன்னை அவதூறாகப் பேசினேன். உன் வேகத்தை குறைக்க முயற்சி செய்தேன். மற்றபடி உன்மீது என்க்கு எந்தக் கோபமும் இல்லை. எது வந்தாலும் நான் துரியோதனனின் பக்கம்தான் நிற்பேன் என்று அழுத்தமாக நீ பேசுகிறாயே, அது ஆச்சரியமாக இருக்கிறது. கர்ணா... உண்மையில்

நீ பாண்டவர் அம்சம். அவர்களுக்கு அண்ணன். இப்பொழுது கூட நீ பாண்டவர்களோடு போய்ச் சேர்ந்து கொள்ளலாம். இந்தப் போரே நின்று போகும். நீ அவர்கள் பக்கம் ஓர் அடி எடுத்து வைத்தால் துரியோதனன் படைகள் காணாமல் போகும். போ, போய்ப் பாண்டவர்களோடு சேர்ந்துகொள். அவர்கள் பக்கம்தான் தர்மம் இருக்கிறது. நீ பாண்டவர்கள் பக்கம் சேர்ந்தால் மிக்க மகிழ்ச்சி அடைவேன்'' என்று மெல்லிய குரலில் பீஷ்மர் சொன்னார்.

''உங்கள் அறிவுரைக்கு மிக்க நன்றி. ஆனால், அர்ஜுனன் பக்கம் கிருஷ்ணர் நிற்பது போல என்ன துன்பங்கள் வந்தாலும், என்ன நீதி. என்ன அநீதி ஏற்பட்டாலும் எனக்கு உதவி செய்த, என்னை அரசனாக்கிய துரியோதனன் பக்கம்தான் நான் நிற்பேன். இந்தப் போர் நடந்தாக வேண்டும் என்பதுதான் விதி. இந்தப் போர் நிகழ்ந்தால் தான் இந்த உலகத்தினுடைய பல்வேறு விஷயங்கள் சீர்படும் என்பது என்னுடைய எண்ணம். இந்தப் பரதகண்டம் ஜனக் கூட்டத்தால் நிரம்பியிருக்கிறது. ஒரே இடத்தில் இத்தனை பேர் குவிந்திருப்பது நல்லதில்லை. இதனால் போர்தான் ஏற்படும். அந்தப்போர் ஏற்பட்டிருக்கிறது.

க்ஷத்திரியர்களின் கூட்டத்தினால் இந்தப் பூமி படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, எது அதிகமாக வளைந்ததோ, எது அதிகமாக ஓடுகிறதோ அதனை அடக்கி வைக்கத்தான் இயற்கை முற்படும். அதுவே இங்கு நடந்துகொண்டிருக்கிறது. பிதாமகரே. நான் எந்தப்பக்கம் இருக்கிறேன் என்பது முக்கியமில்லை. இந்தப் போர் நடக்க வேண்டும் என்பதே முக்கியம்.''

கர்ணன் பணிவோடு அவர் காதருகே சொன்னான்.

''நல்லது. இந்தத் தெளிவு உனக்கு இருக்கிறதென்றால் இதைவிடச் சந்தோஷம் எனக்கு எதுவுமில்லை. முழு பலத்துடன் போராடு. எதிரிகளைத் துவம்சம் செய். உன்னுடைய ஆற்றல் முழுவதையும்

வெளிப்படுத்து. நீ என்ன விரும்புகிறாயோ அது உனக்குக் கிடைக்கும். உன்னுடைய வள்ளல் தன்மை உனக்கு மிகப்பெரிய கொடையைக் கொண்டு வந்து கொடுக்கும். இதில் எனக்குச் சந்தேகமே இல்லை. உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய உன்னதமான இடத்தை நீ வெகு எளிதாக அடைவாய். இது நிச்சயம். என் ஆசிர்வாதம்'' என்று சொல்லி கண் மூடினார்.

கர்ணன் அவரை வணங்கிவிட்டு பின்னால் நகர்ந்து தன் இடத்துக்கு வந்து சேர்ந்தான். மௌனமாக சிறிது நேரம் பிதாமகர் நினைவிலேயே உட்கார்ந்திருந்தார்.

அவனை ஆலோசனைக் கூட்டத்திற்கு அவசரமாக வரச்சொல்லி துரியோதனன் அழைத்ததாக அழைப்பு வந்தது.

பீஷ்மரின் இறப்பால் தவித்துக்கிடக்கும் படைகளை, பல மாவீரர்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஜெயிப்பது உறுதி என்று நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தார்கள்.

கர்ணனின் வரவு பார்த்து வீரர்கள் ஆரவாரம் செய்தார்கள். பிதாமகர் போய்விட்டாரே என்று புலம்பினார்கள்.

கர்ணன் அவர்களைச் சமாதானப்படுத்தினான். எல்லாரும் கர்ணனைத் தொட்டு உற்சாகப்படுத்த கர்ணன் பதிலுக்கு அவர்களைத் தொட்டு உற்சாகப்படுத்தினான். ஆலோசனைக் கூட்டத்திற்குள் நுழைந்தான்.

''இங்கு தலைமையேற்கப் பல அற்புதமான வீரர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், வயது காரணமாகவும், பதவி காரணமாகவும் துரோணரையே தலைமையேற்க வைப்பது நல்லதென்று நான் நினைக்கிறேன். துரோணரை மறுநாள் போருக்குத் தலைமையேற்க வருமாறு துரியோதனன் சார்பில் அழைக்கிறேன். துரியோதனனுக்கு இந்த வேண்டுகோளையும் வைக்கிறேன்'' என்று

கர்ணன் சொல்ல, துரியோதனன் மிகவும் ஆரவாரத்தோடு அதை வரவேற்றான். துரோணரைப் புகழ்ந்து பல வார்த்தைகள் சொன்னான்.

துரோணர் எழுந்து நின்று தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

''நீ சொன்ன புகழ்ச்சியான வார்த்தைகளின்படி நான் நடந்துகொள்வேன். என் முழு வீரத்தையும் காட்டுவேன்'' என்று சத்தியம் செய்தார்.

மறுபடியும் கௌரவசேனை குதூகலமடைந்தது. பல சங்குகள் முழங்கின.

''அர்ஜுனனை நகர்த்திக்கொண்டு போனால், நான் தருமபுத்திரைத் தாக்கி அவரைக் கைது செய்து கொண்டு வருவேன்'' என்று துரோணர் சொன்னார்.

அர்ஜுனனை எப்படி நகர்த்திக்கொண்டு போவது என்று ஆலோசனை செய்தார்கள். திட்டம் தீட்டினார்கள்.

கர்ணன் கூடாரத்தை விட்டு தனிமையில் போய் நின்று கொண்டான். வானத்தைப் பார்த்தான். அவனுக்கு ஏனோ உடனே தன் தந்தையான சூரியனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. அவர் சில நாள்களுக்கு முன்பு கோபித்துக் கொண்டது ஞாபகம் வந்தது. நெஞ்சையும், காதுகளையும் தடவிக் கொண்டான். தன்னைச் சந்திக்க விரும்புவதாய் ஓர் அந்தணன் செய்தி அனுப்பியதும், அந்த நேரம் பூஜையில் இருந்ததும் பூஜையில் இருக்கும்பொழுதே சூரியனுடைய ஒளிக்கிரணங்கள் அவன்மீது பட்டதும், 'கவனமாக இரு. இந்திரன் உன்னை ஏமாற்ற அந்தணனாக வருகிறான்' என்று அவனைக் கேட்க 'கேட்டதைத் தருவீர்களா? என்று பதிலுக்கு அவன் கேட்டதும். அவன் சிரித்தபடியே ''நீர் யார் என்பதை நான் அறிவேன். எனக்கு அது சொல்லப்பட்டுவிட்டது. ஆனாலும் வந்துவிட்டீர்கள்.

கையேந்துகிறீர்கள். கேளுங்கள். கேட்டால் நிச்சயம் இருப்பதைக் கொடுப்பேன்'' என்று கர்ணன் உரத்துச் சொல்ல. அந்தணராக வந்த இந்திரன் கைகூப்பி ''உங்களுடைய கவசம் காது குண்டலங்களும் எனக்கு வேண்டும்'' என்று சொல்ல ''அவ்வளவுதானே...'' என்று இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து கவசத்தையும் காது குண்டலங்களையும் அறுத்துக் கொடுத்தான், கர்ணன்.

ரத்தம் வழிந்தது. உடனிருந்த வீரர்கள் திகைத்தார்கள். சோர்ந்து போய் தான் தரையில் உட்கார, இந்திரன் அருகே வந்து தலை தொட்டதும், காயங்கள் ஆறியதும், வலி மறைந்ததும், சோர்வு நீங்கியதும் கர்ணனுக்கு ஞாபகம் வந்தது.

''என்ன அற்புதம். எவ்வளவு எளிதாகக் கொடுக்கிறாய்? எத்தனை திடமாகக் கொடுக்கிறாய்? சிறிதளவுகூட மன ஊசலாட்டமில்லாமல் கேட்டதும் கொடுக்க வேண்டுமென்று உனக்கு எப்படி தோன்றுகிறது? இங்குள்ளது எவையும் என்னுடையதில்லை என்ற திடமான ஒரு கொள்கையை உன்னால் எப்படி கடைப்பிடிக்க முடிகிறது? கர்ணா... நீ வாழ்க. நீ எனக்குக் கொடுத்ததால் நானும் உனக்கு ஒன்றைக் கொடுக்க விரும்புகிறேன். இதோ என் சக்தி ஆயுதத்தை வைத்துக்கொள். இது யுத்தத்தில் உனக்குப் பயன்படும்'' என்று தன் கையில் வைத்திருந்த ஆயுதத்தை அவனுக்குக் கொடுக்க, கர்ணன் அதை வாங்கி வைத்துக்கொண்டதும் அவனுக்கு ஞாபகம் வந்தது.

எப்பொழுது தன்னிடமிருந்த கவச, குண்டலங்கள் போய் விட்டனவோ அப்பொழுது போரின் முடிவு என்ன என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. எது பலவீனமோ அங்கு விதி நுழைந்து தன்னுடைய வேலையைத் தொடங்குகிறது.

கிருஷ்ணன் இங்கு அழிப்பதற்காகவே பிறந்திருக்கிறார். பூபாரத்தைக் குறைப்பதற்காகவே பிறந்திருக்கிறார். இத்தனை வீரர்கள்

இந்தப் பூமியில் தேவையில்லை என்று இந்தப் பூமியினுடைய வீரத்தை நொறுக்குவதற்காகவே பிறந்திருக்கிறார். இதுதான் முடிவு என்று தெரிந்துவிட்டதால் இனி தெளிவாக யுத்தத்தில் ஈடுபடலாம். மரணத்தால் புகழ் ஏற்படும்படி செய்து கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

விடிந்ததும் போருக்குக் கிளம்பினான். துரோணரோடு சேர்ந்து கொண்டு பலமாய்ச் சங்கு ஊதி, போரில் இறங்கி பாண்டவர் படைகளைச் சிதறடித்தான்.

சகாதேவனை மடக்கிப் பிடித்துத் துன்புறுத்தினான். அவன் பயந்து ஓட விரட்டி மடக்கிக் கொல்லுவதுபோல் வாளை ஓங்கினான். குந்தியின் ஞாபகம் வர அவனை 'தப்பித்துப்போ' என்று உதறினான்.

''உன் தாய் கேட்ட பிச்சையால் நீ உயிர் பிழைத்திருக்கிறாய். ஓடிப்போ'' என்று தேரை எட்டி உதைத்து விரட்டினான்.

சகாதேவன் மனம் நொந்து திரும்பினான்.

கர்ணனின் போர் வேகம் தாங்காமல் பாண்டவப் படைகள் படும் அவஸ்தையைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணன் மனம் கொதித்தார்.

அர்ஜுனனை விலகி அழைத்துப் போன பிறகும் துரோணரால் தருமபுத்திரரைப் பிடிக்க முடியவில்லை. மற்றவர்கள் துரோணரைச் சுற்றி நின்று பாதுகாத்தார்கள்.

அன்றைய போர் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

ஆனால், கர்ணனால் பாண்டவப் படைகள் பெரிதும் சேதமடைந்ததை எல்லாரும் உணர்ந்தார்கள்.

பதிமூன்றாம் நாள் போரின்போது துரோணர் பத்மவியூகம் வகுத்தார். பத்மவியூகத்தில் துரோணர் நடு இடத்தில் நின்றார். மற்ற வீரர்கள் அவருக்குப் பாதுகாப்பாகச் சுற்றி நின்றார்கள்.

இந்த வியூகத்தை பாண்டவர்களுடைய பெரிய வீரர்களால் உடைக்க முடியவில்லை. அபிமன்யு அந்த வியூகத்தை உடைப்பதாக சபதம் செய்தான். வியூகத்தை உடைத்துக் கொண்டு உள்ளே போனான். வியூகம் மறுபடியும் கூடிற்று. மிக வேகமாக அவன் போர் செய்ய கௌரவப் படைகள் சின்னாபின்னமாயின. பெரிய வீரர்களையும் அவன் கூசாமல் வதைத்தான்.

கர்ணன் அவனால் மிகக் கொடூரமாக அடிக்கப்பட்டான். அவனை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. அபிமன்யுவின் வீரத்தைப் பார்த்து துரோணரும் மற்றவர்களும் திகைத்துப் போனார்கள். "இவனை நேரே இருந்து கொல்ல முடியாது. எனவே, பின்னே போய் இவனுடைய வில்லை அறுத்து எறிந்துவிட்டால்தான் இவனை ஜெயிக்க முடியும்" என்று துரோணர் சொன்னார்.

கர்ணன் அதைக் காதில் வாங்கிக் கொண்டான்.

இவ்வளவு வீரமாகப் போரிடும் ஒரு க்ஷத்திரியனை உயிரோடு இருக்கவிடுவது தவறு. அது மற்ற எல்லா வர்ணத்தாருக்கும் துன்பத்தைக் கொடுக்கும் என்று தீர்மானித்து மிக வேகமாக அபிமன்யுவின் பின்பக்கம் போய் அவனுடைய வில்லை அறுத்து உடைத்தான். திரும்பிப் பார்த்த அபிமன்யுவின் மீது பாணங்களால் அடித்தான். மற்றவர்களும் சேர்ந்து கொண்டு அவன்மீது சரமழை பொழிந்தார்கள்.

அபிமன்யு நிலைகுலைந்து தரையில் விழுந்தான். அபிமன்யுவால் அடிபட்டு மயங்கிக் கிடந்த துச்சாதனனுடைய குமாரன் எழுந்து அபிமன்யுவின் தலையில் கதையால் அடித்தான்.

அபிமன்யு இறந்து போனான்.

பதினான்காம் நாள் போரில் பாண்டவர்கள் அபிமன்யுவின் மரணத்தைக் குறித்துத் துக்கப்பட்டு அந்தத் துக்கத்தால் கோபம் மேலிட, கடுமையாகப் போரிட்டார்கள்.

பீமன் வெறியோடு கர்ணனைத் தாக்கினான். பீமனை எதிர்க்க முடியாமல் கர்ணன் பின் வாங்கினான்.

அடுத்தநாள் போரில் பீமனின் மகன் கடோத்கஜனை அழைத்து ''இன்று இரவும் போர் நடக்கப் போகிறது. அந்த நேரம் உன்னுடைய பலம் பெருகும். அப்பொழுது கர்ணனை எதிர்த்துப் போர் செய். கர்ணனைக் கடுமையாகத் தாக்கித் துன்புறுத்து'' என்று ஸ்ரீ கிருஷ்ணன் உத்தரவிட்டார்.

அர்ஜுனனும் கடோத்கஜனை உற்சாகப்படுத்திப் பேசினான்.

'உங்கள் ஆணைப்படி நான் கர்ணனைத் திசை திருப்புவேன். கவலை வேண்டாம்'' என்று கடோத்கஜன் புரிந்துகொண்டு பேசினான்.

மறுநாள் மாலைநேரம் புதுவலிவோடு சோர்ந்திருந்த நேரத்தில் கர்ணனை நோக்கிப் பாய்ந்து அவனோடு கடோத்கஜன் போர் புரியத் தொடங்கினான்.

கர்ணனைச் சுற்றியிருக்கிற வீரர்களை அடித்து நாசம் செய்தான். வீரர்கள் படும் துன்பத்தைப் பார்த்து கர்ணன் மனம் கொதித்தான். தன் கையிலிருந்த சக்தி ஆயுதம் கடோத்கஜன் உயிரைப் பறித்தது. கடோத்கஜன் தரையில் விழுந்து இறந்தான்.

கௌரவ சேனை ஆரவாரம் செய்தது.

ஆனால், கர்ணன் துக்கத்தில் மூழ்கினான்.

மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்று தெரிந்தும் அதைத் தவிர்க்க முடியாமல் இன்னும் வேகமாக மரணத்தை நோக்கி நகருகின்ற மனிதர்களைப் பார்த்து வியந்தான்.

அஸ்வத்தாமா என்கிற யானையை அடித்துக் கொன்றுவிட்டு, தருமரை அஸ்வத்தாமன் இறந்து போனான் என்று சொல்லச் சொல்லிவிட்டு, அவர் யானை என்கிறபோது சங்கைப் பலமாக ஊதி

துரோணரை அவருடைய மகன் அஸ்வத்தாமன் இறந்துவிட்டான் என்று நினைக்க வைத்து, மனம் தளரவைத்து அவர் மனம் தளர்ந்திருக்கும்போதே பீமன் அவர் காதுக்கருகே போய் ''எதற்காக க்ஷத்திரியர்கள் பக்கம் வந்தீரோ, எதற்காக க்ஷத்திரியர்களுக்கு அஸ்திரவித்தை கற்றுக் கொடுத்தீரோ, அந்த மகன் இறந்து போனான். இன்னும் கையில் ஆயுதம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே உமக்கு வெட்கமாக இல்லையா? நீர் அந்தணர்தானா?'' என்று ஏச்சுப் பேச்சுகளால் கேலி செய்ய, துரோணர் வில்லை நழுவவிட்டு அமர்ந்திருக்க திருட்டத்துய்மனன் என்கிற அரசன் தேர் ஏறி அமர்ந்திருக்கின்ற துரோணரின் தலையைக் கொய்தான். துரோணர் இறந்தார்.

அஸ்வத்தாமன் பதறினான்.

பதினாலாம் நாள் இரவு துரோணர் இறந்ததும் கர்ணன் பதவியேற்றான். பதினைந்தாம் நாள் போர் தொடங்கிற்று. நகுலனை இம்சித்து கர்ணன் வாட்டியெடுத்தான். துரியோதனனுக்கு உதவி செய்ய முடியுமா முடியாதா என்ற பெரும் சந்தேகம் எழுந்தது.

அவன் துரியோதனனை அருகே அழைத்தான்.

''துரியோதனா. நான் வெகு நிச்சயமாய் அர்ஜுனனை விட மிகப்பெரும் வில்வீரன். ஆனால், அர்ஜுனனிடம் நல்ல வில்லும், தெய்வ சக்தி நிரம்பிய நாணும், எடுக்க எடுக்கக் குறையாத அம்பறாத்தூளிகள் இரண்டும் இருக்கின்றன. அதுவும் தவிர, தெய்வாம்சமான ஸ்ரீ கிருஷ்ணரே அவனுக்குச் சாரதியாக இருக்கிறார். இத்தகைய விஷயங்கள் கொண்ட அவனை வெல்வது அரிது. ஆனால், என் கையில் இந்திரனுடைய தனுசு இருக்கிறது. அது பரசுராமருக்கு இந்திரனால் தரப்பட்டது. பரசுராமர் எனக்குக் கொடுத்தார். அந்த வில்லால் நான் நிச்சயம் அர்ஜுனனை வதம் செய்வேன். ஆனால், எனக்கொரு நல்ல சாரதி வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு நிகரான சல்லியனை எனக்குச் சாரதியாக ஏற்பாடு செய். அவன் எனக்குத் தேரோட்டினால் வெகு நிச்சயமாக நான் அர்ஜுனனைக் கொல்வேன்'' என்று சொன்னான்.

துரியோதனன் சிறிதும் சிந்திக்காமல் சல்லியனை நோக்கி ஓடினான்.

''மந்திர வேந்தரே. சல்லியரே. உம்மை வணங்குகிறேன். நாளை அர்ஜுனனை கர்ணன் கொல்லப் போகிறான். அவனைத் தலைமையேற்கும்படி நான் சொல்லியிருக்கிறேன். நீர் கர்ணனுக்குத் தேர்ப்பாகனாக இருந்து உதவி செய்ய வேண்டும். நீர் ஸ்ரீ கிருஷ்ணருக்கு இணையானவர். தேரோட்டுவதில் மிகப்பெரிய வல்லமை பெற்றவர். உம்மால் எனக்கு ஜெயம் கிடைக்கட்டும்'' என்று பணிவோடு கேட்டான்.

சல்லியனுக்குக் கோபம் வந்தது.

''என்ன வார்த்தை சொன்னாய் துரியோதனா? உனக்கு ஒழுக்கத்தைப் பற்றி எதுவும் தெரியாதா? வாழ்க்கையின் விதிமுறைகள் பற்றி எதுவும் அறியாதவனா? நான் க்ஷத்திரிய குலத்தவன். கர்ணன் தேரோட்டியின் மகன். நான்காவது வருணத்தினனுக்கு நான் உட்கார்ந்து தேர் ஓட்ட வேண்டுமா? அவர் உயர் ஜாதியாகவும் நான் தாழ்ந்த ஜாதியாகவும் போகவேண்டுமா? நன்றாக இருக்கிறது கதை. இதை வெட்கமில்லாமல் என்னிடம் வந்து சொல்ல என்ன துணிச்சல்? உனக்கு வெற்றி வேண்டுமென்றால் எது வேண்டுமானாலும் செய்வாயோ? உன் வெற்றியைப் பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லை.''

துரியோதனனின் கையை உதறி, சல்லியன் வெளியே நடக்கத் தொடங்கினான்.

தன் ஊரை நோக்கிப் பயணப் படத் தொடங்கினான். அப்படி பயணப்படுகின்ற சல்லியனை துரியோதனன் மடக்கி பலவாறாக சமாதானம் செய்தான்.

''நீங்கள் யார் என்று எனக்குத் தெரியும். உங்களை நான் ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லை. ஸ்ரீ கிருஷ்ணனும், நீங்களும் சமம்தான். அவருக்கு இணையான ஏன் அவரைவிட அதிகம் பலம் பொருந்தியவர் நீங்கள். உங்களால் அர்ஜுனரையும் கிருஷ்ணரையும் வதம் செய்ய முடியுமென்று நான் அறிவேன். இருப்பினும், கர்ணனுடைய சபதம் நிறைவேற வேண்டுமே என்பதற்காகத்தான் உங்களை அம்மாதிரி தேரோட்டச் சொன்னேன். இதில் எந்த அவமரியாதையும் இல்லை, தயவுசெய்து என்னுடைய வேண்டுகோளைப் புரிந்து கொண்டு, எனக்காக இந்தக் காரியத்தைச் செய்து கொடுங்கள் . காலில் தைத்த முள்ளை எடுக்க அம்பை உபயோகப்படுத்துவதில்லையா? இதனால் அம்புக்கு ஏதேனும் கேவலம் உண்டா? உதவி செய்வது என்ற பெருமையைத் தவிர வேறு ஏதேனும் வருத்தமுண்டா? உறுத்திக் கொண்டிருந்த முள் நீங்க வேண்டுமென்றுதான் உங்களையும் கேட்டுக் கொண்டேன்'' என்று கைகூப்ப, சல்லியன் சம்மதித்தான்.

''பெரும் அரசனாகிய உன்னிடம் என் மனத்தில் பட்டதை எப்படி வேகமாகச் சொன்னேனோ அதேபோல கர்ணனிடமும் என் மனத்தில் பட்டதைச் சொல்வேன். என்னால் மறைத்து வைத்துப் பேசமுடியாது. பொறுத்துக் கொள்ளமுடியாது. நான் என்ன வேண்டுமானாலும் பேசுவேன். அதைக் கர்ணன் தான் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நான் தேரோட்டச் சம்மதிக்கிறேன். எதற்கும் கர்ணனை ஒரு வார்த்தை கேட்டுவிடு. அதையும் தவிர, கர்ணன் சம்பந்தமாக நான் சில வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறேன். அதுவும் நிறைவேறட்டும்'' என்று சொன்னான்.

சல்லியன் சகலத்திற்கும் சம்மதித்துவிட்டதாகச் சொல்வதற்காக துரியோதனன் கர்ணனை நோக்கி ஓடினான். சல்லியன் கர்ணனின் தேரை நோக்கி நகர்ந்தான். தேரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

''சல்லியரே. ஒருவேளை நீங்கள் கர்ணனுக்குத் தேர் ஓட்ட நேர்ந்தால் அப்போது அவனுடைய கர்வம் குலையும்படி, ஆற்றல் குறையும்படி நீங்கள் பேச வேண்டும். அவனை அதைரியப்படுத்த வேண்டும்'' என்று தருமபுத்திரர் வேண்டிக் கொண்டிருந்தார். சரியென்று தருமபுத்திரருக்கு சல்லியன் வாக்குக் கொடுத்திருந்தான். அதிகாலை வேளையில் தேரைச் சரிசெய்து, குதிரைகளை நன்கு பராமரித்து தேரை கர்ணனுடைய பாசறைக்கு அருகே கொண்டு வந்து நிறுத்தினான் சல்லியன்.

# 15

கர்ணனுடைய பாசறைக்கு அருகே சல்லியன் தேரை நிறுத்தியபோது கர்ணனின் மனம் பெருமிதத்தால் விம்மியது. எந்தத் தேரோட்டிக்குக் கிடைத்திருக்கும் இந்தப் பெருமை. எந்த நாலாவது வருணத்தினர் அனுபவித்திருப்பார் இந்த சுகத்தை. துரியோதனன் எல்லாவற்றையும் உதறி எனக்காக எவ்வளவு செய்கிறான் என்று பெருமிதப்பட்டான்.

துரியோதனனை நோக்கி மனம் கசிந்தான். ''உனக்காக எதையும் செய்வேனடா, தோழா'' என்று பூமியில் அடித்து சத்தியம் செய்தான். தேர் ஏறினான்.

தேர் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டது. போர்க்களத்தின் எல்லையில் நின்றது.

''சல்லியனே. இன்றைய போரில் என்னுடைய வீரத்தைப் பார்ப்பாய்'' என்று உரத்தகுரலில் கர்ணன் சொல்ல சல்லியன் சிரித்தான்.

''பேசியது போதும். செயலில் காட்டு. நீ எங்கு அடிவாங்கினாய், எப்படி வாங்கினாய், யாரிடம் தோற்று ஓடினாய் என்றெல்லாம் எனக்குத் தெரியும். என் ஊரிலுள்ள அத்தனை வீரர்களுக்கும் தெரியும்.

எனவே, அதிகம் பேசாமல் காரியத்தில் ஈடுபடு. பேசுபவன் காரியம் செய்ய ஆற்றல் இல்லாதவனாக இருக்கிறான்.'' என்று பதிலுக்குச் சொல்ல, கர்ணன் முகம் சிவந்தது.

''சல்லியா. வீண் வார்த்தை பேசாதே. என்னை எதிர்க்க எவராலும் முடியாது. அர்ஜுனனை வெகு நிச்சயமாய் இன்று கொல்லுவேன்'' அன்று கால் உதைத்துச் சொல்ல ''உன்னால் கொல்ல முடியாது. அர்ஜுனன் தெய்வத்தின் அருள் பெற்றவன். பாண்டவர்கள் அனைவருமே தர்மத்தின் பக்கம் நிற்பவர்கள். உனக்கும் எனக்கும் மரணம் நிச்சயம். அவர்கள் வெல்வது உறுதி'' என்று சொல்ல, கர்ணனுக்கு மேலும் கோபம் ஏற்பட்டது.

சல்லியனோடு பேசுவது வீண் என்று உரத்த குரலில் எதிரே இருக்கும் பாண்டவப் படைகளை நோக்கி ''அர்ஜுனன் இருக்கும் இடத்தை நீங்கள் யாரேனும் காட்டினால் உங்களுக்கு நவரத்தினக் குவியல்கள் தருவேன். வேண்டுமென்ற பொன் பொருள் தருவேன்'' என்று சொல்ல, சல்லியன் மறுபடியும் வாய்விட்டுச் சிரித்தான்.

''நீ யாரையும் கூப்பிட வேண்டிய அவசியமில்லை. உன்னைத் தேடி உன்னைக் கொல்ல அர்ஜுனன் வருவான். அப்பொழுது அவனைத் தடுத்து நிறுத்திட ஏதேனும் உபாயம் செய்துகொள். இப்பொழுது வீணாகப் பேசாதே. உனக்கு யாரும் காட்டிக் கொடுக்கவும் மாட்டார்கள். உன் பொன், பொருள்களை யாசிக்கவும் மாட்டார்கள். வாரிக் கொடுக்கின்ற விஷயத்தையெல்லாம் போர்க்களத்தின் அந்தப் பக்கம் வைத்துக்கொள். இது யுத்தபூமி. மரணம் மட்டுமே இங்கு வழங்கப்படும் கொடை. நீ வாங்கப்படும் விஷயம். நீ வழங்கப்போகிறாயா, வாங்கப்போகிறாயா என்பது இன்னும் சற்று நேரத்தில் தெரிந்துவிடும்.

கர்ணா... நீ உன் வீரத்தைப் பற்றி மிகவும் அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். தன்னால் பறக்க முடியும் என்று நினைத்த ஒரு

காகம் கடலைத் தாண்டிப் பறந்து கொண்டிருக்கிற அன்னப் பட்சியோடு சேர்ந்து வெகுதூரம் நடந்து திரும்பி வரவும் முடியாமல் கடலில் விழுந்து செத்ததைப் போல நீ மரணமடையப் போகிறாய். உனக்குப் போர் தெரியும். ஆனால் அர்ஜுனனோடு போரிட்டு ஜெயிக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்'' என்று சொல்ல கர்ணன் மனம் குமுறினான்.

அன்று தருமருக்கும், கர்ணனுக்கும் போர் நடந்தது. தருமர் முதலில் கர்ணனை வேகமாகத் தாக்கினார்.

கர்ணன் சற்று பின்வாங்கி, மறுபடியும் முன்னேறி தருமரைக் கடுமையாக அடித்தான். தருமர் உடம்பெல்லாம் உதிரம் வழிய நின்றார். நிலை தள்ளாடி தேரில் சாய்ந்தார்.

''போ. ஓடிப்போ. உயிர் பிழைத்துப்போ'' என்று தன் தாய்க்குத் தந்த வரத்தைப் பற்றி தருமரை கர்ணன் கொல்லாது விட்டான்.

தருமர் பாசறைக்குப் போய் மல்லாந்து படுத்துக்கொண்டார். வைத்தியர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு உதவி செய்தார்கள்.

அர்ஜுனனும், கிருஷ்ணரும் வந்தபோது தருமர் கோபத்தில் சீறினார்.

''கர்ணனைக் கொல்லாது விட்டது ஏன்? எதற்காக இன்னும் இருக்கிறீர்கள்? உனக்கு ஏன் காண்டீபம்?'' என்று பலவாறாக நிந்தித்தார்.

அர்ஜுனனும் தருமர் மீது கோபப்பட்டான்.

ஸ்ரீ கிருஷ்ணர் அவர்கள் இருவரையும் சமாதானம் செய்தார்.

''என் காண்டீபத்தைப் பழித்த அவரைக் கொல்லாமல் விடமாட்டேன்'' என்று சொல்லி வாளை உருவினான்.

''தருமரைக் கொன்றாயானால் யுத்தம் என்ன ஆகும்? உன் குரு போன்ற இவரை நீ எப்படிக் கொல்லலாம்? கொல்லுவது தவறு வாளை உறையில் போடு'' என்றார்.

''ஆனால், காண்டீபத்தை எவர் இழிவு செய்தாலும் நான் கொல்லுவதாக சபதம் செய்திருக்கிறேன். என் சபதம் வீணாகப் போகுமே'' என்று அர்ஜுனன் வருந்தினான்.

''உன் தமையனாரைப் பார்த்து மரியாதை இல்லாமல் பேசிவிடு. அப்பொழுது அது கொலைக்குச் சமம்'' என்று சொல்ல அர்ஜுனன் தருமரைப் பலமுறை ஒருமையில் அழைத்து அவரை ஏசினான்.

தருமர் மனம் வாடினார்.

தான் தருமரை இப்படிச் செய்துவிட்டோமே என்ற துக்கத்தில் மறுபடியும் வாள்உருவி நாக்கு துண்டித்துக் கொள்ள அர்ஜுனன் முயன்றபோது ''வேண்டாம். நீ உன்னைக் கொன்று கொள்வதற்கு பதிலாக உன்னைப் பற்றியே புகழ்ந்து பேசு. அது தற்கொலைக்குச் சமம்'' என்று சொல்ல அர்ஜுனன் தன்னை மிகப்பெரிய வீரன் என்றும் தன்னால் எல்லாவற்றையும் சாதிக்க முடியுமென்றும் உரத்த குரலில் முழங்கினான். மண்டியிட்டு தன்னைக் காப்பாற்றிய கிருஷ்ணரை வணங்கினான்.

''இன்று எப்படியும் கர்ணனைக் கொல்வேன்'' என்று தருமபுத்திரரின் பாதத்தின்மீது சத்தியம் செய்தான். தேர் ஏறி போர்க்களம் நோக்கிப் புறப்பட்டான்.

அர்ஜுனனுக்கு கர்ணனுக்கும் மிகப்பெரும் போர் நடந்தது.போர் மிகக் கடுமையாக இருந்தது.

அர்ஜுனன் கை ஓங்கியபோது சல்லியன் கர்ணனை உற்சாகப்படுத்தினான். கர்ணன் நாகாஸ்திரத்தை எடுத்தான்.

''கர்ணா. நெஞ்சுக்குக் குறிவைத்து நாகாஸ்திரம் வை'' என்று சல்லியன் பலமுறை சொன்னான்.

இதுவரை பல்வேறு விதமாக இழித்துப் பேசிய சல்லியன் இப்பொழுது ஆதரவாகப் பேசுவதைப் பார்த்து சின்ன இளக்காரம் கர்ணனுக்குள் தோன்றியது.

''நான் எப்படி குறிவைக்க வேண்டும், எங்கே குறிவைக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் போர் செய்து பழக்கப்பட்டவன். நீ தேர்மட்டும் ஓட்டுக'' என்று சொல்லி நாகாஸ்திரத்தை அர்ஜுனன் தலைக்குக் குறிவைத்தான்.

நாகாஸ்திரம் விரைந்து அர்ஜுனனை நோக்கிச் சென்றது. பூமிக்குள் தேரை ஐந்து அங்குலம் ஸ்ரீகிருஷ்ணர் அழுத்த நாகாஸ்திரம் அர்ஜுனனின் மணிமகுடத்தைக் கவ்விச் சென்றது. திரும்பி கர்ணனிடம் வந்தது.

''கர்ணா. நீ நெஞ்சுக்குக் குறிவைக்காமல் தலைக்குக் குறி வைத்தது தவறு. மறுபடியும் அம்பைத் தொடுத்து அர்ஜுனன் மீது குறி வை. இந்த முறை அவன் உயிரைக் கவர்ந்து வருகிறேன்'' என்று நாகாஸ்திரம் சொல்லிற்று.

''இல்லை. ஒருமுறைக்கு மேல் நாகாஸ்திரம் எய்யமாட்டேன் என்று என் தாய்க்கு வரம் கொடுத்திருக்கிறேன். எனவே, நீ திரும்பிப் போகலாம்'' என்று அதற்கு விடை கொடுத்தான். நாகாஸ்திரம் திரும்பிப் போயிற்று.

அர்ஜுனன் தலையில் வெள்ளைத் துணியைச் சுற்றிக் கொண்டு மிகக் கோபமாக கர்ணனைத் தாக்கத் தொடங்கினான். கர்ணன் அடிபட்டு நிலைகுலைந்து தேரில் சாய்ந்தான். தேர் சேற்றில் புதைந்து நகர முடியாமல் தவித்தது. சல்லியன் எவ்வளவு முயற்சி செய்தாலும் இன்னும் ஆழ ஆழப் புதைந்தது.

தேர்ச் சக்கரம் சேற்றில் புதைந்து கொள்ள கர்ணன் இறங்கி அதைத் தூக்க முயற்சி செய்ய அர்ஜுனன் தன் படைகளுடன் சூழ்ந்து கொண்டான். தேர்ச் சக்கரத்தை வெறுமே தூக்கினால் போதாது. குதிரைகள் வைத்து இழுக்க வேண்டும். இழுபட்ட நிலையில்

தேர்ச்சக்கரத்தைத் தூக்கினால்தான் தேர் சேற்றிலிருந்து விடுபடும். வெறுமே தேரை எடுத்து மறுபக்கம் வைக்க இயலாது.

எனவே, சல்லியன் மிகுந்த திறமையோடு குதிரைகளை விரட்டிக் கொண்டிருக்க கர்ணன் முழு பலத்தோடு தேரின் அச்சில் கைவைத்து தோள் கொடுத்து அதைத் தூக்கினான். தேரைத் தூக்க வொட்டாமல் பாணங்களால் அர்ஜுனன் கர்ணனைத் துன்புறுத்தினான்.

கர்ணனுக்குக் கோபம் வந்தது. திரும்பி தன் வில்லில் அஸ்திரம் தொடுத்து அர்ஜுனனை அடித்து படைகளைச் சிதறடித்தான். மறுபடியும் தேரைத் தூக்கினான். மீண்டும் படைகளைத் திரட்டி அர்ஜுனன் கர்ணனை நோக்கி நெருங்கி, எல்லாரும் அவனைச் சூழ்ந்து கொண்டு அவனை விதம் விதமாகத் தாக்க, கர்ணனுக்கு பலமான காயங்கள் ஏற்பட்டன. திரும்பி நின்று மறுபடியும் மிகப்பெரிய அஸ்திரம் ஒன்றைத் தொடுத்து வேகமாக கிருஷ்ணர் மீது செலுத்தினான்.

அர்ஜுனனுடைய படைகள் சிதறி ஓடின. அர்ஜுனனின் தேர் ஆட்டம் கண்டது. அர்ஜுனன் மிக சாமர்த்தியமாக அந்த அஸ்திரத்தைத் தடுத்து சின்னாபின்னப்படுத்தினான். மீண்டும் கர்ணனைத் தாக்கத் தொடங்கினான்.

''நில் அர்ஜுனா. கோழையைப் போல் போர் செய்யாதே. அந்தத் தேரைச் சேற்றிலிருந்து விடுவித்து விடுகிறேன். பிறகு என்னோடு போர் செய். உன்னை அடித்துக் கொல்லுவதற்காகவே நான் பிறந்திருக் கிறேன்'' என்று கர்ணன் முழக்கமிட, அர்ஜுனன் பதில் பேசாது பாணங்களால் அவனைத் துன்புறுத்தினான். தேரைத் தூக்கவிடாமல் அவனை அவஸ்தைக்கு உள்ளாக்கினான்.

''தர்மம் அறிந்தவரை நீ கையெடுத்துக் கும்பிடுபவனையும், தலைப்பாகை அழிந்து சிகை தொங்குபவனையும், போரை விட்டு

ஓடுபவனையும், சரண் அடைந்தவனையும், போரில் களைத்துப் போயிருக்கிறவனையும், கொல்லக்கூடாது என்று தர்மசாஸ்திரம் சொல்கிறது. எதுவும் தெரியாமல் உனக்கு முதுகு காட்டிக் கொண்டு தேரைத் தூக்கிக் கொண்டிருக்கின்ற என்மீது பாணங்களால் அடித்துத் துன்புறுத்துகிறாயே. உனக்கு யுத்தம் சொல்லிக் கொடுத்தது யார்? உன் ஆச்சார்யருக்கு கேவலத்தை ஏற்படுத்திவிடாதே. நகர்ந்து போ. சில நொடிகளில் இந்தத் தேரைத் தூக்கிவிடுவேன்'' என்று தேரைத் தூக்க முயன்றான்.

அர்ஜுனன் சுற்றியுள்ள இடத்தை இருட்டாக்கியிருக்கலாம். அல்லது அர்ஜுனனை மயக்கமுறச் செய்திருக்கலாம். ஆனால், அவன் பெற்ற சாபம், இப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவனுக்குத் தோன்றவில்லை. எந்த நேரத்தில் என்ன பிரயோகிக்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு இல்லை.

அவன் முடிவு நெருங்கிக் கொண்டிருப்பதால் அவன் பதற்றம் மிகுந்தவனாக, பயம் மிகுந்தவனாக, கலவரம் மிக்கவனாக தேரைத் தூக்குவதிலேயே முனைந்தானே தவிர, எதிரியை சமாளிக்கின்ற திறன், எதிரியை என்ன செய்ய வேண்டுமென்ற கூர்மையான புத்தி அவனை விட்டுப் போயிற்று.

ஸ்ரீ கிருஷ்ணன் இதைப் புரிந்து கொண்டார். இதுதான் சரியான தருணம். மகாவீரன் கர்ணன். மிகப் பலசாலியான அவன் திறமையும், தெளிவும் மிக்கவன். குழம்பிப்போய்த் தேரைத் தள்ளிக் கொண்டிருக்கிறான். சல்லியனை இறக்கி தேரைத் தூக்கச் சொல்லி கர்ணன் தேரோட்டி இடத்தில் அமர்ந்திருந்தால் இந்தக் காரியம் எளிதாக முடிந்திருக்கும். ஆனால் அதைச் செய்ய அவனுக்குத் தெரியவில்லை. இதுவே கர்ணனைக் கொல்லச் சரியான நேரம்.

அவன் சகலமும் மறந்து தேவையில்லாத ஒரு வேலையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறான். எவருக்கெல்லாம்

கேடுகாலம் வருகிறதோ அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். தான் என்ன செய்ய வேண்டுமென்று தெரியாது தேவையற்ற வேலையில் ஈடுபடுவார்கள். ஆத்திரப்படுவார்கள். தர்மம் பற்றிப் பேசுவார்கள்.

''ஆனால், இது தர்மமில்லையே. அவன் தேரைத் தூக்கிக் கொண்டிருக்க நான் அவனை அடித்துத் திசை திருப்புவது நியாயமில்லையே'' என்று அர்ஜுனன் கூற, ஸ்ரீகிருஷ்ணர் கோபமானார்.

கர்ணனை நோக்கித் தேரைச் செலுத்தினார்.

''யார் தர்மம் பற்றிப் பேசுவது என்று வரைமுறையே இல்லாது போயிற்று. நீயா கர்ணா, தர்மம் பற்றிப் பேசுகிறாய்? நீயா க்ஷத்திரியக் குல ஒழுக்கம் பற்றியும் அதன் மேன்மையைப் பற்றியும் சொல்கிறாய்? நீயா, ஒரு வீரன் எப்படியிருக்க வேண்டுமென்று வரையறை செய்கிறாய்? திரௌபதி என்ற ஒரு பெண்ணை, அவள் மாதவிலக்காக இருந்தபொழுது தலைமயிரைப் பிடித்து துச்சாதனன் இழுத்து வந்தானே அப்பொழுது? அதைத் தடுத்தாயா? அப்பொழுது உன் தர்மம் எங்கு போயிற்று? உன் க்ஷத்திரிய ஒழுக்கம் எங்கு போயிற்று? உன் ஆண்மை எங்கு போயிற்று? ஒரு பெண்ணை ஒருவன் துன்புறுத்தும்போது கையைக் கட்டிச் சிரித்துப் பார்த்துக் கொண்டிருப்பவன் உண்மையில் ஓர் ஆண்மகன்தானா? வீரன்தானா? அரக்கு மாளிகை ஒன்றை ஏற்படுத்தி அந்த அரக்கு மாளிகையில் ஐந்து பேரைக் குடியிருக்க வைத்து நெருப்பு வைத்துக் கொல்ல முயன்றீர்களே, இது எப்பேர்ப்பட்ட ஆண்மை? இது என்னவிதமான வீரம்? யார் வீரத்தைப் பற்றிப் பேசுவதென்று ஒரு வரைமுறை இல்லையா கர்ணா? சண்டையிட்டுக் கவரவேண்டிய தேசத்தைச் சூறையாடிக் கவர்ந்தீர்களே,அதற்கு ஒருவன் துணை போனான். நீயும் கூடவே இருந்து உற்சாகப்படுத்தினாய். அப்பொழுது சபையில் நின்று

இது தவறு, இதற்காக தேசத்தைப் பணயம் வைக்க வேண்டிய அவசியமில்லையென்று எழுந்து உன்னால் சொல்ல முடிந்ததா?

துரியோதனன் என்ன செய்தாலும் அது தர்மம் என்று நினைத்துக் கொண்டிருந்த உன்னுடைய தர்மம் விசித்திரமானது. கெட்டவர் களுக்குத் துணை போவதுதான் உன் தர்மமென்றால் இப்பொழுது உன் முதுகில் அடிப்பதும் தர்மம்தான். நீ தேரைத் தூக்கும்போது உன்னைச் சித்ரவதை செய்வதும் தர்மம்தான். ஓர் அரசருக்கு நண்பனாக இருக்கும் நீ அவன் செய்வதற்கெல்லாம் தலையசைத்து வாழ்த்துப் பாடிய உன்னைப்பற்றி உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். இல்லை கர்ணா. நீ உயர்வானவனே அல்லன். உனக்கு எதன் மீதோ கோபம். யார் மீதோ கோபம். இங்குள்ள தர்மத்தின் மீது கோபம். அதனால் அதர்மத்தின் பக்கம் நின்று தர்மத்தை எதிர்க்கத் துணிந்தாய். அதனுடைய பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறாய்.

இது சேறு அல்ல கர்ணா. நீ செய்த பாபங்கள். நீ செய்த தவறுகள்.

கர்ணன் வாய்விட்டுச் சிரித்தான்.

''நல்லது எது, தர்மம் எது, எது தர்மமில்லை என்பது ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது. என் தர்மம் என்னைக் காப்பாற்றும் அல்லது கைவிடட்டும். எனக்குச் சரியென்று பட்டதை நான் செய்தேன். எல்லாரும் இறக்கப் போகிறார்கள். நீ, அர்ஜுனன், தருமன், பீமன், நகுலன், சகாதேவன் அத்தனை பேரும் இறக்கப் போகிறார்கள். அவரவர்களுக்குச் சரி என்று தோன்றியதைத் தான் செய்து கொண்டிருக்கிறோம். யுத்தத்தில் வெற்றி தோல்வி என்பது முக்கியமில்லை. வீரம் என்பதே முக்கியம். கர்ணனை எதிர்க்க முடியாமல் அர்ஜுனன் அவனை முதுகுப்பக்கம் நின்று கொன்றான் என்று வரும். கர்ணன் வேறு வேலை செய்து கொண்டிருந்த போது அர்ஜுனன் தந்திரமாக அவனை வீழ்த்தினான் என்றுதான் வரும்.

ஸ்ரீகிருஷ்ணர் அதற்கு உதவி செய்தார் என்றுதான் வரும். என்னைக்கொல்ல அர்ஜுனனால் முடியவில்லை என்று தான் உலகம் பரிகாசம் செய்யும். நான் ஏமாந்தபோது என்னை வஞ்சனையாகக் கொன்றுவிட்டார்கள் என்று தான் எல்லாரும் சொல்வார்கள். எனவே நான் இப்போது மரணமடைந்தால் அது எனக்கு வீரமாகவும், அர்ஜுனனுக்கு இழுக்காகவும் தான் போகும். அர்ஜுனன் கடைசிவரையில் என்னைக் கொன்றதைப் பற்றி நொந்துகொண்டுதான் இருப்பான். அதற்குத் துணைபோனதற்காக நீயும் வருத்தப்பட்டுக் கொண்டுதான் இருப்பாய்.

ஆனால், ஒன்று கிருஷ்ணா. இந்த உலகத்தில் என்ன நடக்க வேண்டுமோ அது அற்புதமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் காரியத்தை நானும், அர்ஜுனனும், நீயும் மற்றோரும் திறம்பட செவ்வனே செய்து கொண்டிருக்கிறோம். இந்த யுத்தம் மிக அவசியம். இந்தப் பரத கண்டத்தில் க்ஷத்திரியர்களுடைய ஆட்டம் அதிகமாகிவிட்டது. க்ஷத்திரியர்களுடைய வன்முறையால் மக்கள் துவண்டுபோக ஆரம்பித்து விட்டார்கள். அதைத் தாங்காமல் அலற ஆரம்பித்துவிட்டார்கள். இதுவெறும் ஜனத்தொகைப் பெருக்கத்தை நிறுத்துகின்ற வேலையில்லை. வன்முறையாக ஒரு கும்பலை வலிமையால் உச்சநிலைக்கு வந்து ஆரவாரம் செய்கின்ற ஒரு கூட்டத்தை, தன்னைத் தவிர இந்த உலகத்தை ஆள எவருக்கும் தகுதியில்லை என்று நினைக்கிற ஒரு முரட்டு ஜாதியை, கேவலமான மிருகப்பிறவிகளை அழித்து ஒழிக்கும் வேலை. அந்த வேலையில் நானும் ஈடுபட்டேன் என்று நிறைவு கொள்வேன். இதனால் இந்தப் பூமிக்கு மிகப் பெரிய பாரம் குறைந்தது. பூபாரம் என்பது ஜனத்தொகை இல்லை கண்ணா. கொடியவர்களின் கூட்டம் குறைவதுதான் பூபாரம்.

உலகம் இப்பொழுது இருக்கிற ஜனத்தொகையைப் போல இன்னொரு மடங்கு ஜனத்தொகையையும் இந்த பூமி தாங்கும். ஆனால்

கெட்டவர்கள் இருந்தால் பூமாதேவி வேதனைப்படுகிறாள். நல்லவர்கள் இறக்கும் போது துடித்துப் போகிறாள். சாதுக்களும், ஏழைகளும் கதறும்போது அவளும் அல்லாடுகிறாள். எனவே, கெட்டவர்களை அழிப்பதற்கு நீ பிறந்திருக்கிறாய். கெட்டவர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அதற்கு உதவியாக இருந்தேன் என்றுதான் நினைக்கிறேன். நான் இல்லையெனில் இந்தச் சண்டை நடந்திருக்காது என்று எனகுத் தெரியும்.

ஸ்ரீ கிருஷ்ணா. இந்த உலகம் நிரந்தரம் இல்லாதது என்று சொல்கிறாய். இல்லை கிருஷ்ணா. இதில் வீரம் நிரந்தரம். காதல் நிரந்தரம். கருணை நிரந்தரம். நல்லவர்கள் சரித்திரம் நிரந்தரம். எனவே, நான் அழிந்துபோனாலும் நான் இருப்பேன் கிருஷ்ணா. இந்த அர்ஜுனனை அவனால் ஆனதைப் பார்த்துக் கொள்ளச் சொல்'' என்று சொல்லி மறுபடியும் பூமியிலிருந்து தேரை முழுபலத்தோடு தூக்கினான்.

தேர் நகர்ந்தது. திரும்பினான்.

அர்ஜுனன் அஞ்சலிகம் என்கிற அஸ்திரத்தை அவனைப் பார்த்துக் குறிவைத்தான்.

''நான் என் ஆசிரியர்களை மகிழ்வித்தது உண்மையெனில், நான் செய்வது தர்மகாரியமெனில், நாங்கள் அநியாயமாக வேதனைப் படுத்தப்பட்டோம் என்பது உண்மையெனில் இந்தச் சரம் அவன் சிரத்தை அறுக்கட்டும்' என்று நாணை இழுத்து கர்ணனை நோக்கி ஏவினான்.

அஞ்சலிகம் என்ற அந்தச் சரம் கர்ணனுடைய சிரத்தைக் கொய்து எறிந்தது.

கர்ணன் ஜோதி வடிவாக உடலிலிருந்து வெளியேறினான். சூரியனை நோக்கிக் கை குவித்தான்.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் ஒன்றாகப் பார்க்கும் பாவனை சட்டென்று அவனுக்கு வந்து விட்டது. எதிரி யார், நண்பர் யார், எது குதிரை, எது யானை, எது நாய், எது பூனை, எது தாவரம்? எல்லாம் ஒன்றே, எல்லாம் உயிர்களே என்கிற பரவசமான நிலைக்கு கர்ணன் நகர்த்தப்பட்டான்.

ஸ்ரீ கிருஷ்ணர் மானுட வடிவிலேயே உடம்பு எடுக்கும் பொழுதே உடல் ரூப்மாக வாழும் பொழுதே அந்த நிலையில்தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான். அவரை நோக்கிக் கைகூப்பினான்.

ஸ்ரீ கிருஷ்ணர் சூட்சுமமாகக் கர்ணனை ஆசிர்வதித்தார்.

எல்லாப் பிரிவும் அபத்தமானது. அற்பத்தனமானது. இங்குள்ள மனிதர்களின் கோபமும், குரோதமும் வேர் இல்லாதவை. வெறுமே மேல் புத்தியில் தளும்பி நிற்பவை. அண்டபேரண்டத்தின் பிரம்மாண்டத்தை உணரும் பொழுது இங்குள்ள மனிதர்கள் புழுக்களாக, புழுக்களின் புழுக்களாகத் தெரிகிறார்கள். அவர்களுக்கு கர்வம் இருப்பதும், காதல் இருப்பதும், காமம் இருப்பதும் சிரிப்பாய் இருக்கின்றன. அந்த நிலை தெரியவந்தால் எந்தப் பிரிவும் நிலையற்றது என்று தெரியும். கற்பிதமானது என்று புரியும் அப்படிப்புரிய மறுபடி மறுபடி பிறக்க வேண்டும்.

ஆனால், ஸ்ரீ கிருஷ்ணா. பிறவியில்லாது என்னைச் செய்து விட்டாய். இருக்கும்பொழுதே இதைப் புரியவைத்துவிட்டாய். நீ செய்கிற இந்த மகத்தான போரில் பூபாரம் குறைக்கும் வேலையில் உனக்கும் உதவியாக நான் இருந்தேன் என்பதில் எனக்கு மிகப்பெரிய நிறைவு உண்டு.

இங்கு சகலமும் காரணத்தோடே நடைபெறுகிறது. உன் ஒருவனாலேயே ஆட்டி வைக்கப்படுகிறது. நீ இன்றி இவ்வுலகம் இல்லை.

அண்டபேரண்டம் முழுவதும் கர்ணன் பரவினான். பிரபஞ்சத்தின் பிரம்மாண்டத்தை உணர்ந்தான்.

சூரியனை நோக்கி மறுபடியும் கைகூப்பினான். அதற்குள் மெல்லப் புகுந்து அமைதியானான்.

❋ ❋ ❋





மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா

# கர்ணனின் கதை




பாலகுமாரன்